சோதிடகிரக சிந்தாமணி என்னும்

# வீமேசுர உள்ளமுடையான்

(மூலமும் - உரையும்)



இஃது, திருமயிலை குழந்தையானந்த சுவாமியினது
மாணாக்கரில் ஒருவராகிய
பிட்சைபாக்கம் கணிதநூல் புலவர்
மார்க்கலிங்க ஜோதிஷரவர்களால்
பார்வையிட்டப் பிரதிக்கிணங்கியது.

---

இந்நூல் கிடைக்குமிடம்:

த்தின நாயகர் ஸன்ஸ்

வெங்கடராமய்யர் தெருவு,

ஜி. டி. சென்னை.

T12049
R003K01

≡ விமேசுர ≡

# உள்ளமுடையான்

மூலமும் - உரையும்

இஃது

திருமயிலை-குழந்தையானந்த சுவாமியினது

மாணாக்கரில் ஒருவராகிய

பிட்சைபாக்கம் கணித நூற் புலவர்

மார்க்கலிங்க ஜோதிஷர்

அவர்களால்

பார்வையிட்ட பிரதிக்கிணங்க,

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

இதன் விலை] 1935. [ரூபா 2-0

உ

முருகன் துணை.

# சோதிடகிரக சிந்தாமணி என்னும்

# வீமேசுர உள்ளமுடையான்

## மூலமும் - உரையும்.

### பாயிரம்

### விநாயகமூர்த்தி முருகக்கடள் சரஸ்வதி வணக்கம்

நேரிசை வெண்பா

ஐந்தாறு வானதொடுக் காடர்மறைக் கோன்கிரகச்
சிந்தா மணிமாலை செப்பவே—கொந்தார்
குழலுமையா டந்தக் குலக்குஞ் சாமுங்
கழலணிவேள் வாணியுமே காப்பு.

இ-ள். பஞ்சதருக்களாலும் சூழப்பெற்ற தொடுக்காடாகிய வீமேசுரர்பேரில் சோதிடகிரக சிந்தாமணி என்றொரு பாமாலை தொடுத்தற்கு வாசனை நிறைந்த அளகபாரத்தினையுடைய உமா மஹேஸ்வரியாள் பெற்ற மேலாகிய விநாயகமூர்த்தியும், வீரகண்டையைத் தரிக்கப்பெற்ற முருகக்கடவுளும் சரஸ்வதியும் காப்பாம் எ-று. [வீமேசுரர்க்கு வேதமூர்த்தி என்றும் பெயர். ஆகவே மறைக்கோன் என்றனர். இஃது வழிபடு கடவுள் வணக்கம்.] 1

### வீமேசுரர் வணக்கம்

எழுசீர்க் கழிநெடிலாசிரியச் சந்தவிருத்தம்

கதிரவனுமதியுமங்காரகன் புந்தியுங்
கருணையுளசுரர்குரவனுங்
காரவன்காரியுமிராகுவுங்கேதுவுங்
கருதும்வெகுசுபமாகநற்
பதினொராமிடமுவந்துச்சநிலையாய்நின்ற
பரிவினின்மகிழ்ந்தருள்செயப்
பங்கயன்செங்கண்மான்முதலானதேவரும்
பாரதிபரிந்துகாக்க
மதிநுதலிகுமரிசங்கரித்ரியம்பகிசூலி
மலையரையன்மகளென்னுமோர்

வடிவுடையகவுரிநகைமுகவல்லிபாகனே
மருமலர்ச்சடைமுடியனே
யதிகபெலனுடையமுயலகன்முதுகுனெறநெறன
வாடியபதத்தழகனே
யடியவருளத்தமுதமேவீமநாதநின்
னருளளித்திடவேண்டுமே.

இ-ள். இரவி மதி அங்காரகன் புதன் குரு சுக்கிரன் சனி இராகு கேது ஆகிய நவக்கிரகங்களும் சுபாதிகமாய் சுபகாமுற்ற பதினோராமிடத்தில் உற்று அத்துச்சமும் பெற்ற பலனில் மகிழ்ந்து அருள்செய்யவும், அயன் அரி முதலான தேவர்களும் சரஸ்வதியும் மனமகிழ்ந்து இரட்சிக்கவும், பிறைபோலும் புருவங்களையுடைய கௌமாரி சங்கரி திரியம்பகி திரிசூலி பருவதராஜகுமாரி என்று யாவராலும் ஸ்தோத்தரிக்கப்பெற்ற வடிவுடையம்மனும், கௌரியுமாகிய நகைமுகவல்லி சமேதனே! கடுக்கைமாலையையணிந்த ஜடாமுடியை உடையவனே! அதிகமும் பெலனுள்ள முயலகனது முதுகிலே நின்று திருநடனம் புரிந்த நடேசனே! அடியார்கள் உள்ளத்திலே பெருகுகின்ற தேவாமிர்தமே! வீமேசுர மூர்த்தியே! உனது திருவருள் கடாட்சிக்கவேண்டும் எ-று. [வீமேசுர மூர்த்தத்திற்கு அம்மன் நகைமுகவல்லியார், இஃது எற்புடைக்கடவுள் வணக்கம்.] 2

நவக்கிரகாதிய வணக்கம்

கட்டளைக் கலிப்பா

இரவிசங்கரனீசுரிதிங்கள்சேய்
இனியகந்தனிசைதிருமால்புதன்
குருவயன்சுரர்கோன்வெள்ளிசுன்னெமன்
குலவிராகுகுறிப்பத்திரகாளியா
மருவுசித்திராபுத்திரன்சேதுவாம்
வானவர்முனிவோரரசிமற்றுநா
ளரிமுதற்கிரகத்தாற்பரசிவ
னண்டபிண்டம்படைத்தளித்தாற்றுமே.

இ-ள். உருத்திரனை இரவியாகவும், உருத்திரியை மதியாகவும், குமாரக்கடவுளை அங்காரகனாகவும், திருமாலைப் புதனாகவும், பிரமதேவனைக் குருவாகவும், இந்திரனைச் சுக்கிரனாகவும், எமனைச் சனியாகவும், பத்திரகாளியை இராகுவாகவும், சித்திராபுத்திரனைக் கேது

வாகவும், தேவர்களையும் தேவரிஷிகளையும் இராசி நட்சத்திரம் முதலானவைகளாகவும் சிருட்டித்து, இந்த இரவி முதலான கிரகங்களாகவும் இராசிகளாகவும் நட்சத்திரங்களாகவும் அண்ட பிண்ட சராசரங்களையும், சிருஷ்டி திதி சம்ஹாரம் செய்துவருகின்றனர் வீமேசுராகிய பரமசிவன் எ-று. [பரமசிவன் நவக்கிரகாதிகளைச் சிருஷ்டித்து அவற்றால் முத்தொழில்களைச் செய்து வருகின்றனர் என்றமையால் நவக்கிரகாதிகளைப் புகழ்ந்ததாயிற்று. ஆகவே இஃது நவக்கிரகாதிய வணக்கம் என்பது பெற்றாம்.] 3

அருளிறை வணக்கம்.

திருமடந்தையர்வாழ் தொடுகாட்டில்வாழ்
 செல்வர்வீமேசுரரருள்சேரவே
யுரியநாள்ராசிகோட்பேர்நிகண்டுகன்
 குற்றதாகுங்கணிதபஞ்சாங்கமு
மருணன்சோமன்குசன்புதனந்தண
 னறைந்தசுங்கன்சனிராகுகேதுவுங்
கருதும்வட்டமுந்தூமம் வின்னுட்பமுங்
 கணிதசாரநிலை முதற்காட்டுமே.

இ-ள். அஷ்டலட்சுமிகளும் வாசம்பண்ணுநின்ற தொடுக்காட்டில் திருவீற்றிருக்கும் பெருஞ்செல்வத்தினையுடைய வீமேசுரமூர்த்தியின் திருவருளானது தம்மை இடைவிடாது தியானிக்கவே நட்சத்திர உரிச்சொல் இராசி உரிச்சொல் கிரக உரிச்சொல் பஞ்சாங்க கணிதம் இரவியாதி நவக்கிரகங்களுடையனவும், பரிவேடாதிய உபயக்கிரகங்களுடையனவும் ஆகிய கணிதசாரங்கள் இவை முதலான சகலமும் அடியேனுடைய இருதயத்தில் இருந்து கரதலாமலகம்போல விளங்கச்செய்யும் எ-று. 4

நூற்கு அதிகாரியை உணர்த்துகின்றது.

கார்வழங்கவிளங்கியவைநின்
 காட்சியாநவக்கோட்கணட்பாட்சியுஞ்
சாருமுச்சம்பகைநீசங்கேந்திரந்
 தக்கராசிக்கொடைநோக்குதயமுஞ்
சேருமாரூடத்தானுமுட்சிந்தனைத்
 தோர்ந்துரைப்போனயன்செகத்தோர்க்கெலாங்
கூருநல்லறிவாய வீமேசனிற்
 கூடநின்பதப்பூவைக் கொடுக்கவே.

இ-ள். கருணைமழை பொழிகின்ற ஐயனே! ஞானசொரூபியாகிய வீமேசுரமூர்த்தியே! உன்னை அடைதற்பொருட்டு நீ அனுக்கிரகிக்கும் பாதாரவிந்த மகிமையினால் உனது சித்விலாசத்தால் உண்டாகும் காட்சியாகிய இரவியாதி நவக்கிரகங்களும், அவற்றின் நட்பாட்சியுச்சம் பகை நீசங்களும், கேந்திர திரிகோணங்களும், இராசிகளும், கவிப்பு நோக்கு ஆருடங்களும் ஆகிய இவற்றால் மானிடர்கள் தங்களுக்குள் நினைத்திருந்த சிந்தனையை இன்னதின்னதென் றெடுத்துரைக்கவல்ல சோதி—வானை இவ்வுலகத்தோர்க்குப் பிரமனாகச் சொல்லப்படும் எ-று. 5

நூல்நுதலிய போருள்

கொடும்புலித்தோலுடையவீமேசர்தாட்
கொண்டிராசிநற்கோளின்குணங்களால்
வடிவுபெண்ணணலியொற்றையிரட்டையும்
வயதுகாதஞ்சுவையபிப்பிராயமு
மிடுமோர்தாதுமூலமுஞ்சீவனு
மிரவிசந்திரர்தந்தைதாய்மைந்தராய்
படுவர்பொன்வெள்ளிசெவ்வாய்புதன்சனிப்
பஞ்சபூதப்படலம்பகருவாம்.

இ-ள். தாருகாவனத்துமுனிகள் பண்ணப்பட்ட கொடிய யாகத்திலே அதிக கோபமும் பராக்கிரமுமாக வந்த புலியை உரித்து அதன்தோலை ஆடையாக அணிந்த வீமேசுரமூர்த்தியின் திருவடியை முடிமேற்கொண்டு இராசிகளின் இயல்களாகவும், கோட்களின் இயல்களாலும், அண்டபிண்ட சராசரங்கட்கும் உள்ளவடிவு ஆண்மை, பெண்மை, அலி ஒற்றை, இரட்டை, வயது, காதம், சுவை, சிந்தனையின் பேதாபேதங்கள், தாதுமூலசீவன்கள், இவை முதலாயுள்ள சகலமும் தெரியுமாறு இரவி தந்தையும், மதி தாயும், மற்றுள்ள கிரகங்கள் 5-ம் சந்ததிகளாய் ஷை சந்ததிகளில் குரு பிருதிவும், சுக்கிரன் அப்பும், அங்காரகன் தேயுவும், புதன் வாயுவும், சனி ஆகாசமுமாயுமுள்ள பஞ்சபூதப்படலமும் இந்நூலினுட் சொல்லுவோம் எ-று. 6

இதுவுமது

வேயைவென்றுயர் தோளிபாராபரை
மிக்கமுத்துநகைமுகவல்லியார்

நாயகன்றொடுக்காடர் தாளடியே
நயந்துபோற்றியநம்பர்களிக்கவே
தூயதேவப்பிரதிட்டைநன்மானிடஞ்
சுபமுகூர்த்தம் பொருத்தமுஞ்சோபனஞ்
தோயுமாதர்திரட்சியுஞ்சாந்தியுஞ்
சொல்லுவாமற்றுமுள்ளசீமந்தமே.

இ-ள். மூங்கிலை வென்று உயர்ந்த தோட்களையுடைய பாரசத்தியாகிய நகைமுகவல்லியார் சமேதராகிய தொடுக்காட்டில்வாழும் வீமேசுரமூர்த்தியின் திருவடிகளை நன்றாக ஸ்துதித்து தேவர்களுக்குப் பிரதிஷ்டை, மானிடர்களுக்கு விவாகம் பொருத்தம் சோபனம் ருது ருதுசாந்தி சீமந்தம் இவைகளெல்லாம் இந்நூலினுட் சொல்லு
வோம் எ-று. 7

இதுவுமது

மைந்தர்பேறுபுதல்வர்தரிசன
மன்னுசாதகம்யோகமகாதிசை
மைந்தர்சட்வர்க்குமட்டகவர்க்குபிர்
மருவுகாலசச்கரந்தறிக்காலுநீண்
மைந்தர்நாமகரணமுமன்னவூண்
வளருங்காதுகுத்தச்சவுளம்பண்ண
மைந்தர்வித்தையுபநயனம்மயிர்
வாங்கவீமேசுராருண்மண்ணுமே.

இ-ள். மகப்பேறு புத்திரதரிசனம் ஜாதகம் யோகாவயோகம் மகாதிசை ஷட்வர்க்கு அஷ்டகவர்க்கு காலசக்கரம் தறிக்கால் நாமகரணம் அன்னப்பிராசனம் காதுகுத்தல் சௌளம்பண்ணல் வித்தியாரம்பம் உபநயனம் திட்சைவாங்கல் இவைகளெல்லாம் வீமேசுரமூர்த்
தியின் திருவருளினால் இந்நூலினுட் சொல்லுவோம் எ-று. 8

இதுவுமது

மன்னுமாடைசர்வாபரணங்களு
மகிழ்ந்துபூணத்தயிலாபிடேகமு
மன்னவங்கிபரிகரிகிக்கவு
மரியசாந்திபவுடிகந்திட்சையும்
பொன்னின்முடிசூட்டத்தரிசனம்
பூமியையுழுவித்திடத்தோப்பிடச்

செந்நெல்கொய்யநவபோசனஞ்செய்யத்
தேசிகன்வீமசுரார்றேறுமே.

இ-ள். வஸ்திரம் அணிய, பூஷணம் பூண, அபிஷேகம்பண்ண, அக்கினிபரிகரிக்க, சாந்திபண்ண, பவுஷ்டிகம்பண்ண, தீட்சைபெற, முடிசூட்ட, பூமியைத் தரிசிக்க, பொன்னேர்பூட்ட, வித்திட, தோப்பு வைக்க, கதிரறுக்க, நவபோஜனம்பண்ண இவைகளெல்லாம் ஞான தேசிகராகிய வீமேசுரமூர்த்தியின் திருவருளினால் இந்நூலினுட் சொல்லுவோம் எ-று. 'செந்நெல்' சென்னெல் எனத் திரிந்தது. 9

இதுவுமது

தேறுதானியம்வைத்திடவிந்திடச்
செய்யவுண்கனுக்காமஞ்சுரிகைபோர்
கூறும்யாத்திரையாகுஞ்சகுனமும்
குலவுமாறகமோடஞ்சல்லியங்குள
மூறருத்தநலந்தீதுசிந்தனை
பொளித்தநட்டமுறுந்தூதுநண்டுவர்
வீறுமாடிமுழக்கஞ்சோதிமின்னல்
விரவுகொர்ப்பம்வீமேசராற்சாருமே.

இ-ள். தானியம்வைக்க செலவிட உண்டி கனுவுரைத்தல் க்ஷாமம் சுரிகை படைத்திறம் யாத்திரை சகுனம் ஆற்றுவரவு அஃகமலிவு மரக்கலம்வரவு பூமிசல்லியம் கீழ்நீர்ச்சல்லியம் குளம் வெட்டுதல் பொருட்பேறு நலந்தீது நட்டமுட்டிசிந்தனை தூது லட்சணம் ஆடியுவாக்தறி மிருகசீரிஷமுதல் 5-நாளிலும் சூரியன் நிற்கிறநாளில் மாறிதோற்றும் மகமுதல் 5-நாளிலும், ஆவணிமுழக்கம் சோதிமுதல் 5-களிலும் மின்னல் கெர்ப்போட்டம் இவைகளெல்லாம் வீமேசுரமூர்த்தியின் திரிவருளினால் இந்நூலினுட் சொல்லுவோம் எ-று. 10

இதுவுமது

சாரும்யோகஞ்சகடமுந்தக்கதாந்
தக்தயோகமமிர்தமரணமுஞ்
சேருஞ்சித்தயோசஞ்சுபயோகமுஞ்
செப்புநாசந்தினவாரயோகமும்
வாரசூனியமாதமாண்டந்தமு
மன்னுகன்னுள்ளநாட்கள்குருட்டுநா

ணேருமேதிதிசாமவூணிங்கிவை
    நிமலனூர்தொடுக்காடர்நிறைத்ததே.

இ-ள். சகடயோகம் தக்தயோகம் அமிர்தயோகம் மரண யோகம் சித்தயோகம் சுபயோகம் நாசயோகம் தினவாரயோகம் வாரசூனியம் மாதாந்தம் வருஷாந்தம் கண்ணுள்ளநாள் கண்ணில்லாதநாள் திதி சாமஊண் இவைகள் நிர்மலராகிய வீமேசுரமூர்த்தி படைத்தனவாம். ஆகவே அவருடைய திருவருளினால் இவைகளெல்லாம் இந்நூலினுட் சொல்லுவோம் எ-று. 11

இதுவுமது

நிரைத்ததோர்காணங்களுற்பாதமாய்
    நெருக்கபாதம்விபரீதபாதமு
முரைத்தகோட்களுதைக்கின்றநாட்களு
    மோங்குநந்தைமுதன் மூவைந்தாந்திதி
தரித்தயோகினியங்கக்கிரகங்கள்
    சரிதைகோசாரம்வக்கிராதிசாரமும்
விரித்தகோள்வெற்றித்தோல்விமனைதுகில்
    விரிதலெங்கள்வீமேசர்விளக்குமே.

இ-ள். காணங்கள் உற்பாதபாதம் விபரீதபாதம் உதைப்புநாள் நந்தை முதலிய திதிகள் யோகினி அங்கக்கிரகங்கள் கிரகங்களின் சரிதைகள் கோசாரம் வக்கிரம் அதிசாரம் கிரகவெற்றி தோல்வி மனையெடுத்தல் கோடிகிழிதல் இவைகளெல்லாம் இந்நூலினுட் சொல்லுமாறு வீமேசுரமூர்த்தி தமது திருவருளினால் விளங்கச்செய்குவார் எ-று. 12

இதுவுமது

விளங்குமெண்பத்துநால்வகைச்சக்கரம்
    விரும்புமாந்தர்திதிமந்திரச்சக்கரந்
தளங்கொள்சர்வதோபத்திரச்சக்கரஞ்
    சந்திரகொப்பமுங்கோட்டைகொள்சக்கரந்
துளங்கிலாங்கூலமாகியசக்கரந்
    துய்யகோசக்கரம்பதச்சக்கரங்
களங்கொளும்பணிசக்கரங்கூர்மச்சக்கரங்
    கருதுநந்தொடுக்காடர்திருத்துமே.

இ-ள். எண்பத்து நான்குவகைச் சக்கரங்களுள் நாசக்கரம் நிதிசக்கரம் மந்திரசக்கரம் சர்வதோபத்திரசக்கரம் சந்திரகெர்ப்ப சக்கரம் ஆணசக்கரம் இலாங்கூலசக்கரம் கோமுகசக்கரம் இரத சக்கரம் பணிசக்கரம் கூர்மசக்கரம் இவைகளெல்லாம் இந்நூலினுட் சொல்லுமாறு தொடுக்கடடாகிய வீமேசுரமூர்த்தி திருவருட் கடாட் சிப்பர் எ-று. 13

பாயிரம் முற்றிற்று.

---

# நூல்

## நட்சத்திர உரிச்சொல்

### அசுவினியின் பெயர்

திருந்துமூர்த்திகளைவருமாகிய
தேவனீசுரமூர்த்திமெய்த்தேசிகன்
பெருந்தவத்தருளத்தர்வீமேசர்தம்
பெருமைவாழ்த்திநாளின்பெயர்பேசுவாம்
பொருந்துமச்சுவினியயம்வாசிமா
புரவிகர்க்கிபபரிதேசிகோடகஞ்
தெரிந்தசென்னியிவுளிகுதிரையுந்
தேர்ந்தவைப்பசிநாட்பெயர்செப்புமே.

இ-ள். பஞ்சகர்த்தாக்களும் பஞ்சகர்த்தாக்களுக்கு ஞானதே சிகனுமாய் அடியவருள்ளத்திலே வாசம்பண்ணுநின்ற வீமேசுரமூர்த் தியை ஸ்தோத்தரித்து நட்சத்திர உரிச்சொல் சொல்லுவோம். அயம் வாசி மா புரவி கர்க்கி பரி தேசி கோடகம் சென்னி இவுளி குதிரை ஐப்பசி இவை அசுவினியின் பெயராம் எ-று. 1

### பரணி கிருத்திகை ரோகணி மிருகசீரிடம் இவற்றின் பெயர்

செப்புந்தாழிதராசடுப்புப்பூதஞ்
சேயகங்குல்கிழவன்சோறுபரணியே
யபட்டர்வீமேசர்மெய்யாரல்ங்கியே
யளகிருலழலாறுமீன்கார்த்திகை

யொப்பில்பண்டிதேருருளையம்மீன்வைய
மோருபாறுஞ்சகடுமுரோகணி
முப்பின்மான்றலைதேங்காயைந்தானமு
மூன்றுமீன்மிருகசிரமுமுரைப்பதே.

இ-ள். தாழி தாசு அடுப்பு பூகம் கங்குல் கிழவன் சோறு இவை பாணியின் பெயர்; ஆல் அங்கி அளகு இறல் அழல் அறுமீன் இவை வீமேசுரமூர்த்தியின் திருமேனியின் வடிவாகிய கிருத்திகையின் பெயர், பண்டி தேர் உருளை ஐம்மீன் வையம் பாறுசகடு இவை உரோகணியின் பெயர்; மான்றலை தேங்காய் ஐந்தானம் மும்மீன் இவை மிருகசீரிடத்தின் பெயராம் எ-று. 2

## திருவாதிரை புனர்பூசம் ஆயிலியம் மகம் பூரம் இவற்றின் பெயர்

உரைகொளாதிரைசெங்கையாழ்மார்கழி
யுண்கரும்புபுநர்பாலையாவணம்
புரைகொண்மூங்கில்புநர்பூசங்காற்குளம்
போதுதைகொடிறுகுருபூசமே
நிறைகொள்கவ்வைபணியாயில்கொடுநுக
ஞெமலிமாசிவாய்க்கால்வேட்டுவன்மகம்
விரையிடைச்சனிதுர்க்கையுநாவிதன்
மிக்கபூரம்வீமேசர்தாண்மெத்துமே.

இ-ள். செங்கை யாழ் மார்கழி இவை திருவாதிரையின் பெயர் கரும்பு புநர்தம் பாலை ஆவணம் மூங்கில் இவை புனர்பூசத்தின் பெயர். காற்குளம் போது தை கொடிறு குருநாள் இவை பூசத்தின் பெயர். கௌவை பணி இவை ஆயிலியத்தின் பெயர். கொடுநுகம் ஞெமலி மாசி வாய்க்கால் வேட்டுவன் என இவை மகத்தின் பெயர். இடைச்சனி துர்க்கை நாவிதன் இவை பூரததின் பெயர். 3

## உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி விசாகம் அனுஷம் இவற்றின் பெயர்.

மெத்தபானீர்கடைச்சனிபங்குனி
மேவுமுத்திரமங்கையைம்மீன்கைம்மீன்
உத்தமன்களிரத்தநொய்ம்மீன்பய
றன்னுமமபாஞ்செவ்விபொடாடையுஞ்
சித்திரைமரக்காற்றீபம்பதுமமே
தேர்ந்தமீசாதிவைகாசிமுற்றின்முற
மத்திசேரும்விசாகம்புற்றேள்பனை
யனுடம்வீமேசநாதான்புற்றதே.

இ-ள். பாற்குளம் கடைச்சனி பங்குனி இவை உத்திரத்தின் பெயர். அங்கை ஐம்மீன் கைம்மீன் உத்தமன் களிறு இவை அஸ்

தத்தின்பெயர். நொய்ம்மீன் பயறு அம்பான் செவ்வி ஆடை இவை சித்திரையின் பெயர். மாக்கால் தீபம் பதுமம் இவை சுவாதியின் பெயர். வைகாசி முற்றில் முறம் இவை விசாகத்தின் பெயர் புல் தேள் பனை இவை அனுஷத்தின் பெயர் எ-று. 4

## கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் திருவோணம் அவிட்டம் இவற்றின் பெயர்

உறுவல்லாரையொளிநாழிகேட்டைகொக்
குற்றதேட்கடையானியுமூலமே
செறிபொய்வாவியுடைத்தல்பூராடமே
செய்யகூவல்குளமாடியூர்மணி
பெறுதாரணமுடியுத்திராடமே
பெற்றல்சோணுலக்கைதிருவோணமே
பாவைகாக்கைபுள்ளாவணியவிட்டமே
பண்பர்வீமேசுராருள் பன்னுமே.

இ-ள். வல்லாரை ஒளி நாழி இவை கேட்டையின் பெயர். கொக்கு தேட்கடை ஆவணி இவை மூலத்தின்பெயர். பொய் வாவி உடை குளம் பூராடத்தின் பெயர். ஊர் தி மணி தானம் முடி இவை உத்திராடத்தின் பெயர். சோணம் உலக்கை இவை திருவோணத்தின் பெயர். பறவை காக்கை புள் ஆவணி இவை அவிட்டத்தின் பெயர். எ-று. 5

## சதையம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி இவற்றின் பெயரும் நட்சத்திரப் பொதுப்பெயரும்

பன்னுசுண்டிலுஞ்செக்குஞ்சதயமே
பாறுஞாளிகொழுங்கோல்புரட்டையு
முன்னுமீதுபுரட்டாதிசீரறி
முரசுவேந்துத்திரட்டாதிதாலமே
மன்னுதோன்றிக்கடைமீன்மரக்கல
மருவுநாவாயிரேவதியேதின
மென்னும்வைகல்பொதுத்தாரகைக்கெலா
மெங்கள்வீமேசுராபதமெல்லையே.

இ-ள். சுண்டில் செக்கு இவை சதயத்தின் பெயர். ஞாளி கொழுங்கோல் புரட்டை இவை பூரட்டாதியின் பெயர். சீர் அறிவன் முரசு வேந்தன் இவை உத்திரட்டாதியின் பெயர். தாலம் தோணி கடைமீன் மரக்கலம் நாவாய் இவை ரேவதியின் பெயர். தினம் வைகல் தாரகை இவை நாளின் பொதுப்பெயர். இவைகளெல்லாம் வீமேசுரர் திருவடியை எல்லையாக உதித்துத் தோன்றும் எ-று. 6

நக்ஷத்திர உரிச்சொல் முற்றிற்று.

## இராசி உரிச்சொல்

எல்லைப்பெல்வடிவார்வீமநாதர்தா
ளிறைஞ்சுமொத்தைமறிதகரேழக
மெல்லைகொஞ்சைமைகாடியுமேடமே
விடைநற்பாண்டிலெருதுமோர்குண்டைசே
புல்லமேறிடபந்தாரந்தண்டியாழ்
போதுவீணைகவிஞன்மிதுனமே
நல்லகொண்டல்குளிரளிசேக்கைநீர்
நண்டுகாரலவனற்கடகமே.

இ-ள் மொத்தை மறி தகர் ஏழகம் மெல்லை கொஞ்சை மைகாவி இவை மேஷத்தின் பெயர் விடை பாண்டில் எருது குண்டை சே புல்லம் ஏறு இது ரிஷபத்தின் பெயர். தாரம் தண்டு யாழ்வீணை கவிஞன் இவை மிதுனத்தின் பெயர். கொண்டல் குளிர் அளிசேக்கை நீர் நண்டு கார் அலவன் இவை கர்க்கடகத்தின் பெயர் எ-று. 7

### சிம்பம் கன்னி துலாம் விருச்சிகம் இவற்றின் பெயர்

நற்றுவார்வீமநாதரடியிணை
நாடுகான்மாமடங்கலரிபுலி
சிற்றில்கோண்மாகடுமலைச்சீயமே
சிங்கமாதுதெரிவைபெண்சேடிகை
யுற்றகன்னிகோல்கட்டளைவாணிப
னுப்பதூக்கனிறைசெட்டியோன்றுலாந்
தேற்றபுன்றேண்மணிதுடர்விட்டநீ
டுய்யதுட்டன்றெறுக்கால்விருச்சிகம்.

இ-ள். சர்வ சீவன்களும் நம்புகின்ற வீமேசார் திருவடியை நாடும் கான்மாமடங்கல் அரி புலி சிற்றில் கோண்மா கடுவன் சீயம் இவை சிங்கத்தின் பெயர். மாது தெரிவை பெண் சேடிகை இவை கன்னியின் பெயர், கோல் கட்டளை வாணிபன் தூக்கல் நிறை செட்டி இவை துலாத்தின் பெயர். தேள் மணி அவிட்டம் நீர்துட்டன் தெறுக்கால் இவை விருச்சிகத்தின் பெயர் எ-று. 8

### தனுசு மகரம் கும்பம் மீனம் இவற்றின் பெயரும் போதுப் பெயரும்

காலகாலன்வீமேசன் கனகவிற்
காண்டிகார்முகங்கைச்சிலைக்காண்டனுக்
கோலமான்றலைகேதுபுல்வாய்சுறு
கோதிலாமகரங்குடஞ்சாடிகூன்
சாலநாகுங்கலசமுஞ்சட்டுவஞ்
சாற்றுகும்பந்தருக்குயமீன்கயல்

சேலுங்கெண்டையுமீனத்தின்பேரோனச்
செய்யாசிபொதுவேோரைசெப்புமே.

இ-ள். காலகாலனாகிய வீமேசுரர் கைச்சிலையாகிய காண்டீபம் கார்முகம் சிலை இவை தனுசின் பெயர். மான்றலை சேது புல்வாய் சுறு இவை மகரத்தின்பெயர் குடம் சாடி கூன் சால் கலசம் சட்டுவம் இவை கும்பத்தின் பெயர். மீன் கயல் சேல் கெண்டை இவை மீனத்தின பெயர். இராசிக்கெல்லாம பொதுப்பெயர் ஓரை எ-று. 9

இராசி உரிச்சொல் முற்றிற்று.

## கிரக உரிச்சொல் இரவியின் பெயர்

செப்புமெங்கள்வீமேசர்கண்டிக்கெலாந்
தினகான்பகல்வெய்யோன்றிவாகர
னெப்பில்பானுமருக்கன்மார்த்தாண்டனல்
லுதயனென்றாழிரவிபருதிகோ
ளப்பனாதவன்சூரியன்ஞாயிறே
டருணவூர்தியரிபுண்டரீகமன்
முப்பில்வெங்கதிற்செங்கதிற்பார்க்கரன்
முதியனாதித்தனெங்செங்குமூர்த்தியே.

இ-ள். சர்வாத்மாக்களுக்கும் ஆதாரபூதரான வீமேசுரமூர்த்தியின் வலக்கண்ணான இரவியின் பெயர். திக்கறிவோன் தினகரன் பகலோன் வெய்யோன் திவாகரன் பானு மாரத்தாண்டன் அருக்கன் உதயன் என்றாழ் இரவி பருதி கோளரசன் ஆதவன் சூரியன் ஞாயிறு அருணவூர்தி அரி புண்டரீகன் வெங்கதிர் செங்கதிர பார்க்கரன் முதியன் சகல லோகமூர்த்தி எ-று. 1

### மதி அங்காரகன் இவர்கள் பெயர்

எங்களையர்வீமேசர்கண்பூச்சசி
யிரவன்சோமன்மதிபிறையிந்துதி
டிங்கள்வெண்ணிலவம்புலிமீன்பதி
செய்பநாளரசாலவன்சந்திரன்
பொங்குசேய்குசனங்காரகன்கனல்
பூமன்வக்கிரன்போதக்குருதியே
யங்கியானிலமகனாழ
லானசெவ்வாயின்பேரென்றறிகவே.

இ-ள். சசி இரவோன் சோமன் மதி பிறை இந்து திங்கள் வெண்ணிலா அம்புலி உடுபதி நாளரசன் அலவன் இவை எனது பிதாவாகிய வீமேசுரர் திருச்சடையில் முடிக்கப்பட்ட மதியின் பெயராம். சேய் குசன் அங்காரகன் கனல் பூமன் வக்கிரன் குருதி அங்கி ஆல் நிலமகன் அழல் இவை அங்காரகன பெயர் எ-று. 2

### புதன் குரு சுக்கிரன் இவர்கள் பேயர்

அரியுமன்பர்நெஞ்சானவீமேசர்நா
லாய்ங்கமால்புலவன்மேதைதூதுவன்
பொறையன்புந்தியருணன்மதிமகன்
போதுசாமன்கணக்கன்புகன்பெய
ரிறைவனந்தணன்மந்திரிபொன்குரு
வெய்துபீதகன்சீவன்வியாழமே
செறியுசுங்கன்மழைபவன்சுக்கிரன்
சிதனபார்க்கவன்சிர்புகர்வெள்ளியே.

இ-ள். அன்பர்கள் இருதயத்தோனாகிய வீமேசுரர்திருவடி யாக மங்களை ஆயும்படியான புலவன் மால் மேதை தூதுவன் பொறையன் புந்தி அருணன் மதிமகன் சாமன் கணக்கன இவை புதன் பெயர். இறைவன் அந்தணன் மந்திரி பொன் குரு பீதகன் சீவன் இவை குருவின்பெயர். சுங்கன் மழைக்கோள் சுக்கிரன் சிதன் பார்க்கவன் புகர் இவை சுக்கிரன் பெயர் எ-று. 'சிதன்' என்பது சீதன் என எழுத்துத் திரிபாயிற்று. 3

### சனி ராகு கேது இவர்களின் பேயர்

வெள்ளிமாமலைமீதுறுகித்தகன்
வீமநாதர்வெளிவடிவேபெறும்
வள்ளல்சேய்முடவன்சுன்முதுமகன்
மந்தன்காரிகரியவனீலனுந்
தெள்ளுமெய்ச்சநியேயரன்பூண்பணி
சேர்ந்தநாகமதிற்பாம்பிராகுவே
கொள்ளுஞ்செங்கோள்சிகியிவைகேதுவே
கோட்கணமெனப்பரிசித்ததே.

இ-ள். ஸ்ரீகயிலாசவாசராகிய வீமேசுரர் வெளிவடிவைப்பெற்ற இரவிமகன முடவன் சுன் முதுமகன் மந்தன்காரி கரியவன் நீலன் இவை சனியின்பெயர். வீமேசுரர் அணியும் ஆபரணமாகிய பாம்பின பெயரெல்லாம் இராகுவின் பெயர். செங்கோள் சிகி இவை கேதுவின் பெயர் எ-று. 4

கிரக உரிச்சொல் முற்றிற்று.

---

### பகல் நாழிகை அறியும்படி.

சித்திரைக்கைந்துமைந்தரையாறுமே
சேவுக்கோராறுமாறுமாரறையாறுமே
கூத்தும்யாழாறுமஞ்சரையஞ்சுமே
கடகமைந்தைந்தரையாறுசியமே

மெத்துமாறுமாறரையாறுங்கன்னியே
மேவுமாறரைந்தரையைந்துகோலினி
லொத்தவைந்துடனாலரைநாளுமே
ளுன்னுகான்மூன்றரைமூன்றுரைப்பரே.

இ-ள். அளந்து கண்ட அடியுடனே கூட்டும் இலக்கம் சித்திரை மாதம் முதற்பத்துநாளும் 5-கூட்டவும். நடுப்பத்து ஐந்தரை கூட்டவும். கடைப்பத்து 6-கூட்டவும். வைகாசிக்கு முதற்பத்து-6, நடுப்பத்து ஆறரை, கடைப்பத்து 6-கூட்டவும். ஆனிக்கு முதற்பத்து-6, நடுப்பத்து ஐந்தரை, கடைப்பத்து 5-கூட்டவும். ஆடிக்கு முதற்பத்து 5, நடுப்பத்து 5½, கடைப்பத்து 6-கூட்டவும். ஆவணி முதற்பத்து 6, நடுப்பத்து ஆறரை, கடைப்பத்து 6-கூட்டவும். புரட்டாசிக்கு முதற்பத்து 6, நடுப்பத்து ஐந்தரை, கடைப்பத்து-5 கூட்டவும். ஐப்பசிக்கு முதற்பத்து-5, நடுப்பத்துநாலரை, கடைப்பத்து 4-கூட்டவும் கார்த்திகைக்கு முதற்பத்து-4, நடுப்பத்து 3½, கடைப்பத்து 3-கூட்டவும். இந்தப்படி மாதங்கள்தோறும் முதற்பத்து நடுப்பத்து கடைப்பத்து இந்த அடைவே இலக்கங்களை அளந்த அடியுடன் கூட்டுவதென்று எங்கோன் வீமேசநாதருரைத்தது எ-று. 1

இதுவுமது

உரைத்தவின்மூன்றிரண்டரையிரண்டுமே
யுற்றமான்இரண்டிரண்டரைமூன்றுமே
விரித்தகூன்மூன்றுமூன்றரைநாலுமே
மிக்கமீனாலுநாலரையைந்துமே
கருத்துமுற்பத்திடைகண்டபத்துமுன்
கண்டபாதச்சாயையுடன்காண்பதா
மெருத்திலேறிவிளையாடுஞ்சங்கா
ரெந்தைவீமேசர்தாளையிறைஞ்சியே.

இ-ள். மார்கழிமாதம் முதற்பத்து-3, நடுப்பத்து-2½, கடைப்பத்து-2, தைமாதம் முதற்பத்து-2, நடுப்பத்து-2½, கடைப்பத்து-3, மாசிமாதம் முதற்பத்து-3, நடுப்பத்து-3½, கடைப்பத்து-4, பங்குனி மாதம் முதற்பத்து-4, நடுப்பத்து-4½, கடைப்பத்து-5, இப்படி சித்திரைமாதமுதல் பங்குனியீறாக அந்தந்த மாதங்களுக்கு முதற்பத்து நடுப்பத்து கடைப்பத்து இவ்வடைவிற்சொன்ன இலக்கங்களை அளந்த அடியுடனே எந்தையாகிய வீமநாதரைப் போற்றிக் கூட்டுவது எ-று. 2

இதுவுமது

மேவுமாடிக்குநூற்றொருபத்துக்கி
மிதுனங்கோளரிநூற்றொன்பதுக்குமீ
பாவையேறுநூற்றேழுக்கிகோன்மறி
பசருநூற்றஞ்சுக்கிமீன் விருச்சிகந்

தாவினூற்றிரண்டுத்தனுமான்குடந்
தக்கநூற்றுக்கீசாயைமுப்பத்தையுஞ்
சேவிலேறும்வீமீசரைப்போற்றியே
சித்திரைமுதற்றிங்களீராறுமே.

இ-ள். அளந்த அடியுடனே அந்தந்த மாதங்களுக்குக் கூட்டும் இலக்கங்கள்கூட்டிக் கண்டதுகைக்கு ஈயும் இலக்கம் ஆடிமாதம்-110, ஆனிக்கும் ஆவணிக்கும்-109, புரட்டாசிக்கும் வைகாசிக்கும்-107, அற்பசிக்கும் சித்திரைக்கும்-105, பங்குனிக்குங் கார்த்திகைக்கும் 102, மார்கழி தை மாசி இந்த மூன்றுமாதத்திற்கும்-110, இந்தப் படிக்குக் கழிக்க வந்த ஈவு நாழிகையாம். பாதச்சாயை மேற்கே நிற்கில சென்றநாழிகை இத்தனை என்றும் கிழக்கே நிற்கில் இனி செல்லவேண்டிய நாழிகை இந்தனையென்றும் சேவிலேறிய வீமேசரைப் போற்றிச் சொல்வது எ-று. 3

பகல் நாழிகை முற்றிற்று.

---

## இரவி நாழிகை அறியும்படி.

ஆறுமீன்முகனுள்குதிரைத்தலை
யமருமேகடகத்திருநாழிகை
கூறுமீன்மூன்றடுப்புப்பாணியேல்
கொண்டநாழிகை நாலேகாலாகுமே
வீறுகார்த்திகைமீன்பொதியேயனு
மிக்ககோளரியிலொருநாழிகை
தேறுரோகணியுற்றுலீராறுமீன்
சிங்கமூன்றும்வீமேசர்செப்புமே.

இ-ள். இரவு நாழிகை அறியும்படி அசுவினி ஆறுநட்சத்திரம் குதிரைத்தலைபோன்றிருக்கும்' இந்த அசுவனி உச்சமாகிற் கர்க்கடகனிடத்தில் 2-நாழிகைசெல்லும் பரணி அடுப்புக்கட்டி கூட்டினாற் போலிருக்கும். அந்தப்பாணி உச்சமாகில் கர்க்கடகத்தில் 4¼-நாழிகை செல்லும். கார்த்திகை ஆறுமீன் மீன் கோட்டையைப்போலிருக்கும். இந்தக் கார்த்திகை உச்சமாகில் சிங்கத்தில் 1-நாழிகை செல்லும் உரோகணி பன்னிரண்டு மீன் ஊற்றுல்போன்றிருக்கும் இந்த உரோகணி உச்சமாகில் சிங்கத்தில் 3-நாழிகை செல்லுமென்று ஐயராகிய வீமேசுரநாதர் அருளினது எ-று. 1

இதுவுமது

செப்புமான்றலைத்தேங்காய்முக்கண்ணதாஞ்
சிங்கநாழிகையைந்தேகாலாகுமே
யொப்புமாதிரையோர்மணிக்கன்னியி
லோங்குநாழிகையொன்றரையாகுமே

கப்பல்போன்றபுகர்பூசங்கோளினிற்
 கருதுமீரரைநாழிகைகாணுமே
யப்பர்வீமேசர்பூசம்புடலம்பூ
 வாகுமென்பர்கோலையரையாகுமே.

இ-ள். மிருகசீரிடம் தேங்காய்க் கண்போலிருக்கும். இந்த மிருகசீரிடம் உச்சமாகில் சிங்கத்தில் $5\frac{1}{4}$-நாழிகை செல்லும் திருவாதிரை ஒருமணிபோன்றிருக்கும். இந்தத்திருவாதிரை உச்சமாகில் கன்னியில் ஒண்ணரை நாழிகை செல்லும் புநர்பூசம் கப்பல் போன்றிருக்கும் இந்தப்புநர்பூசம் உச்சமாகில் துலாத்தில் அரை நாழிகை செல்லும். பூசம் புடலம்பூபோலிருக்கும். இந்தப் பூசம் உச்சமாகில் துலாத்தில் இரண்டரை நாழிகை செல்லுமென்று ஐயராகிய வீமேசுரநாதர் திருவுளம்பற்றினர். எ-று. 2

இதுவுமது

ஐயர்பூணுயிலியநான்கம்பிபோ
 லரியகோணன்குநாழிகையாகுமே
செய்யமாசிமுடநுகநான்குமீன்
 றேளிலொன்றரைநாழிகைசெல்லுமே
யுய்யபூரமுமுத்திரங்கட்டில்போ
 லுற்றதேண்மூன்றரைசிலைமேலரை
துய்யவத்தமொய்ம்மீன்சிலைமூன்றெனச்
 சொல்லுமாடையிருகண்விளைந்ததே.

இ-ள். வீமேசர் பூணாரமாகிய ஆயில்யம் நான்குமீன் அம்பிபோலிருக்கும். இந்த ஆயில்யம் உச்சமாகில் துலாத்தில் 4-நாழிகை செல்லும். மகம் நான்குமீன் முடநுகம்போலிருக்கும். இந்த மகம் உச்சமாகில் விருச்சிகத்தில் ஒண்ணரை நாழிகை செல்லும் பூரமும் உத்திரமும் பொற்கால்கட்டில்போன்றிருக்கும் இந்தப் பூரம் உச்சமாகில் விருச்சிகத்தில் மூணரைநாழிகை செல்லும் உத்திரம், தனுசில் அரைநாழிகை செல்லும் அஸ்தம் பொய்ம்மீன் போன்றிருக்கும். இந்த உஸ்தம் உச்சமாகில் தனுசில் 3-நாழிகை செல்லும் சித்திரை இரண்டு கண்கள் போன்றிருக்கும் இந்தச் சித்திரை உச்சமாகில் தனுசில் 5-நாழிகை செல்லும் எ-று. 3

இதுவுமது

தேறுசோதிவிளக்குமகரமே
 தெளியவொன்றரைநாழிகையாமுற
மேறுநீர்வாயிடிந்ததுறவென
 விலகுமேன்மகரத்திரைுநாழிகை
வீறுந்தாலமினுறுமுடப்பனை
 விளங்குகும்பந்தனிலரைநாழிகை

கூறுகேட்டைமும்மீனீட்டிபோலவே
குடத்திலொன்றரையெங்கோன்குறித்ததே.

இ-ள். சுவாதி ஒரு மீன் விளக்கு போன்றிருக்கும், இந்தச் சுவாதி உச்சமானால் மகரத்தில் ஒன்றரை நாழிகை செல்லும், விசாகம் இடிந்த பாழுந்துறவு போன்றிருக்கும், இந்த விசாகம் உச்சமாகில் மகரத்தில் 4-நாழிகை செல்லும், அனுஷம் முடப்பனை போன்றிருக்கும், இந்த அனுஷம் உச்சமானால் கும்பத்தில் அரை நாழிகை செல்லும், கேட்டை மூன்றுமீன் ஈட்டிபோன்றிருக்கும், இந்தக் கேட்டை உச்சமானால் கும்பத்தில் ஒன்றரை நாழிகை செல்லும் என்று எங்கோன் வீமேசர் குறித்தது எ-று.

இதுவுமது

குறித்தமூலநான்மீன்காளமமன்னவே
கும்பந்தன்னிற்கொளுநான்குநாழிகை
செறித்தபூராடமாடிநீள்கட்டில்போற்
செய்யமீனொன்றரைநான்குநாழிகை
யுறுத்தலோணமூன்றுமுழக்கோலென
வுற்றமேடத்துமூன்றுநாழிகை
யறுத்தசக்கரமாறுமீனுவன
வண்ணல்வாகனமேறரைசெல்லுமே.

இ-ள். மூலம் நாலுமீன் எக்காளம் போன்றிருக்கும், இந்த மூலம் உச்சமாகில் கும்பத்தில் 4-நாழிகை செல்லும், பூராடமும் உத்திராடமும் நீண்ட கட்டில் போன்றிருக்கும், இதுகள் உச்சமாகில் முறையே மீனத்தின் ஒன்றரை நாழிகையும் 4-நாழிகையும் செல்லும் திருவோணம் உழக்கோல் போன்றிருக்கும், இது உச்சமாகில் மேஷத்தில் 3-நாழிகை செல்லும், அவிட்டம் சக்கரம் போன்றிருக்கும். இது உச்சமாகில் ரிஷபத்தில் அரைநாழிகை செல்லும் எ-று. 5

இதுவுமது

செல்லுமேதவிட்டன்னச்சதயமுந்
தேசிகன்விடையிரண்டரைநாழிகை
வெல்லுமேபூரட்டாதியும்வேந்தனு
மிக்ககட்டில்யாழொன்றரைநாலதே
நல்லரேவதியாறுமீன்பாடாக
நயக்குமேகடகத்தொருநாழிகை
வில்வமாலையணிந்தவீமேசுரர்தாள்
விளங்கிரா நாழிகைகள்விளம்புதுமே.

இ-ள். சதயம் தவிட்டுமீன் போன்றிருக்கும், இது உச்சமாகில் ரிஷபத்திலே இரண்டரை நாழிகை செல்லும் பூரட்டாதியும் உத்திரட்டாதியும் நீண்ட கட்டிற்கால் போன்றிருக்கும், பூரட்டாதி உச்சமாகில் மிதுனத்தில் 1½-நாழிகை செல்லும் உத்திரட்டாதி உச்சமாகில் மிதுனத்தில் 4-நாழிகைசெல்லும், இரேவதி உச்சமாகில் கார்க்கடகத்தில் 1-நாழிகை செல்லும் என்று வில்வமாலையணிந்த வீமேசுரர் பாதத்தை நாடி இரவு நாழிகை சொல்லுவோம் எ-று. 6

இதுவுமது

விரும்புகேட்டைமுன்னொன்பதிடக்கணே
மிக்கதோணிமுன்னாறும்வலக்கணே
நிரம்புமாதிரைமுன்பனிரெண்டுமே
நெத்திரோகுமுச்சத்தெட்டாகுநாள்
வருமதன்முதற்பானுமட்டெண்ணியே
மன்னிரெட்டிப்பதுவருநாழிகை
பெரும்பொருடொடுக்காடர்தாள்போற்றியே
பேசுவாரிராநாழிகைப்பேரிதே.

இ-ள். கேட்டை நட்சத்திரமுதல் 9-நட்சத்திரம் இடக்கண் பார்வையி லுச்சமாம் அதிக வுச்சமென்றறிக இரேவதி முதல் 6-நட்சத்திரமும் வலக்கண் பார்வையி லுச்சமாம், இவை உச்சத்தில் உச்சமா மென்றறிக. திருவாதிரை முதல் 12-நட்சத்திரமும் நெத்திரோக உச்சமென்றறிக, இன்னமொரு அடைவு யாதொரு நட்சத்திரம் உச்சமாவதோ அந்த நட்சத்திரத்திற்கு 8 ஆம் நட்சத்திரம் உதயமென்றறிந்து உதயமான நட்சத்திரமுதல் அப்போது இரவி இருக்கிற நட்சத்திரமட்டும் எண்ணிக்கண்ட துகையை இரட்டித்து இரட்டித்த தொகை செல்லவேண்டிய நாழிகை யென்று சொல்வது எ-று. 7

இராசி நாழிகை அறியும்படி

பேறுமீனுடுநாலேகாலாகுமே
பெரியகால்விடைநாலேமுக்காலதாம்
வீறுதண்டரிதேள்சுறவோரைகண்
மிக்கநாழிகையைந்தேகாலாகுமே
தேறுகன்னிகொலும்மைந்துநாழிகை
சிலையுங்கொண்டலுமைந்தரைநாழிகை
மாறிலாதசிவன்றொடுக்காடர்தாள்
வணங்கராசியுதயமுன்கூறுமே.

இ-ள். மீனம் மேஷம் 4¼-நாழிகை, கும்பம் ரிஷபம் நாலேமுக் கால் நாழிகை மிதுனம் சிங்கம் விருச்சிகம் மகரம் 5¼-நாழிகை கன்னி துலாம் 5-நாழிகை தனுசு கர்க்கடகம் ஐந்தரைநாழிகை இப்படிமேஷ முதல்மீனமீறாக 12-இராசியும் இராப்பகல் 60-நாழிகையும் சித்திரை மாதமுதல் பங்குனி யீறாக அந்தந்த மாதத்திற்குச் சொன்ன இராசி களின நாழிகை உதயமுதல் 12-இராசியும் அடைவே நாழிகை 60-ம் அறும் அந்தந்த மாதங்களிலே சென்ற நாளைக்கு நாழிகை தள்ளும் அடைவு அந்தந்த மாதம் உதயராசி நாழிகையை இரட்டித்து இரட் டித்த தொகையை மாதத்திற் சென்ற நாளிலே பெருக்கிக் கண்ட தொகை விநாழியாம் அந்த விநாடி 60-கொண்டது ஒருநாழிகை விழுக்காடுநின்ற நாழிகை உதயமுதல் எ-று. 8

யுகவருடம் அரியும்படி

கூறுவேன்வீமநாதர்தாள்சென்னிமேற்
 கொண்டுசுவாசமிருபத்தோராயிரத்
தாறுநூறுகிரேதாயுகமெண்பதி
 னாற்பெருக்கத்திரேதமறுட
லேறுநாற்பதிலேற்றத்துவாபர
 மிருபதாலேபெருக்கக்கலியு
மீறிச்சென்றதுமூவாயிரதனொரு
 நூறுமேழ்பத்துமொன்பதாய்மேவுமே.

இ-ள். வீமேசுரர் திருவடியை சென்னிமேல் வைத்துக்கொண்டு சுத்தகணித பஞ்சாங்கம் பிறக்கும்படி அண்டநாயகனுக்குச் சாம் இரவி முதலான கிரகங்கள் இராசி நட்சத்திரங்கள் ஒரு சுவாசமாக விடுகிறது பகல் 30-நாழிகையாம் உள்ளே வாங்குகிற சுவாசம் இராத் திரி 30-நாழிகையாம் இவை 60-நாழிகையும் அண்டநாயகனுக்கு ஒரு சுவாச மென்றறிக இந்த ஒரு சுவாசம பூலோக நாயகனுக்கு ஒருதினமென்றறிக இப்படி அண்டநாயகனுக்கு 21600-சுவாசமும் ஒருதினமென்றறிக இந்த அண்டநாயகனிட சுவாசமே தேவர்களும் கிரகங்களும் ரிஷிமுனிசாரும் மற்றுமுள்ளவைகளெல்லாம் இப்படி நடக்குமென்றறிக இந்த அண்ட நாயகனிட சுவாசம் ஒன்றும் பூலோ கநாயகனுக்கு 21600-சுவாசமாய் நடக்கும் 21600-யும் 80-ல் பெருக்க 17-லட்சத்து 28000-வருஷம் கிரேதாயுக மென்றறிக இனி திரேதாயுகம் 60-ல் பெருக்க 12-லட்சத்து 96000-வருஷமென்றறிக இனி துவாபரயுகம் 40-ல் பெருக்க 8-லட்சத்து 64000-வருஷமென் றறிக இனி கலியுகம் 20-ல் பெருக்க 4-லட்சத்து 32000-வருஷ மென்றறிக. இப்போது கலியுகத்தில் சாலிவாகனன் ஆண்டதற்கு முன் சென்றது 3179-வருஷமாம் எ-று. 9

## கலியுகவருடம் சென்றதறியும்படி

மேவுமேசாலிவாகனன்தோன்றிய
　　மிக்கவாண்டுமுந்நூறுமேமேழுமே
தாவுவட்டமிருபதறுபதாற்
　　றக்கவாயிரமேலிருநூறதாம்
பாவுகாலாயிரத்தெழுநூற்றிரு
　　பத்தொடெட்டாண்டுசென்றகலியுகம்
தேவர்கோன்வீமநாதர்பஞ்சாங்கமாய்ச்
　　செப்புமிப்பிரபமுனவட்டமாகுமே.

இ-ள். சாலிவாகனன் ஆண்டவருஷம் 349-இதற்கு வாக்கியம் நைசிர்மீன் இதற்குமேல் 60-சென்றது ஒருவட்டம், அப்படி நாளது சென்றவட்டம் 20-சென்றது இந்த இருபதையும் 60-ல் பெருக்க 1200-வருஷம் சென்றதென்றறிந்து இதற்கு முன் சாலிவாகனன் தோன்றிய வருஷமும் அதற்குமுன் கலியுகவாக்கியம் வைப்பேன் கண்மின் என்கின்றதை அத்துடன கூட்டிக் கலியுகஞ்சென்றது வட்டம் இருபதறுதியாய் 4728-வருஷமென்றறிக. இதற்கு வாக்கியம் மேலாவென்றீரோ இந்த வாக்கியத்துக்குமேல் தேவர்கோன் தொடுக்காடுடை வீமநாதர் பஞ்சாங்கமாய் பவவருஷம்முதல் நாளது சென்றது கலியுக வாக்கியத்துடன் கூட்டிக் கலியுகஞ் சென்றது பிறக்கும் எ-று. 10

## சுத்ததினம் எடுக்கும்படி

வட்டஞ்சுத்ததாரமெடுக்கும்வகை
　　மருவுகலியுகவாக்கியமேற்றிசை
யிட்டதானத்தின்கீழ்ச்செலவைமுன்னமே
　　யிலந்துமைந்துகாலொன்பதேழ்நான்கு
கட்டுமொன்பதுமூன்றுசுன்வாக்கியம்
　　கலியுகத்திசைதானமுன்னேதமா
மட்டுமேறறித்திசைதானமேறிடும்
　　வள்ளல்வீமேசர்தானேவருந்தியே.

இ-ள். இனி சுத்ததினம் எடுக்கும்படி கலியுகம் பிறந்ததை மேலேவைத்து இந்த கலியுகவாக்கியம் மேலே தசஸ்தானத்துக்கு ஏகஸ்தான மளவாய்ப் பெருக்கவும் பெருக்கின பிறகு பத்துக் கொன்று ஏகஸ்தானத்திலிருந்து தசஸ்தானத்திலே பத்துக்கொன்று ஏறிட்டு வரவுமென்ற இந்த வள்ளலாகிய தொடுக்காடுடைய வீமேசர் தானே வருந்திச் சொல்வது எ-று. 11

இதுவுமது

வருந்நியேயதின்கீழ்நடுத்தானனே
    வாக்கியநான்குறுந்தானஞ்சுன்னெட்டுப்பின்
பொருந்துதன்னொருதானம்பின்றொன்றுவை
    போந்தரித்ததுமேனடுப்பததிவை
யிருந்தசேடமறுபத்துநான்குபோக்
    கிந்தவப்பலனுழிகையாமதில்
பிரிந்தசேடமறுபதாலேற்றியே
    பெற்றசேடம்விநாடியுந்தற்பரை.

இ-ள். பத்துக்கொன்று தசஸ்தானத்தில் ஏறிட்டபிறகு, அதின்கீழ் நடுஸ்தானத்தின் முதலாய்போன் பொன்னே மேலோகம் என்கிற வாக்கியத்தை வைத்தரிக்கவும், அரித்துக் கண்ட பலத்தை நடு ஸ்தானத்தின் மேலே உயர வைத்திட்டு வாவும் அரிந்தபிறகு பொதாரென்கிற வாக்கியத்தை வைத்தரித்து அரித்த சேடத்தை எட்டிற் பெருக்கவும பெருக்கினதைக் கண்ட நாழிகைக் கரிக்க நாழிகையாய் மீந்த சேடத்தை போதூரென்கிற அறுபதினாலே பெருக்கி யரிக்க அரித்த பலன் தற்பரையாம் எ-று. 12

இதுவுமது

பரமதேசிகர்வீமேசர்பாதமே
    பணிந்தசுத்ததினத்தின்கீழ்த்தற்பரை
வருவிநாடிகைநாழிகைவைத்ததில்
    வாங்குதற்பரைநாற்பத்தேழ்நாடியிற்
பிரியுநாலெட்டுமைந்துவிநாடியிற்
    பிரித்தவாரமிரண்டொழிசுத்தநாள்
கருதுமேழிற்கழிக்கின்றவாரமே
    காக்குமாண்டிலம்மாதத்துருவமே.

இ-ள். பரமகுருவாகிய வீமேசர் பாதமே சரணகப் பணிந்தெழு கின்ற முன் கண்ட சுத்த தினத்தையும் வைத்து, அதன்கீழ் தற் பரை விநாடிகை நாழிகை அடைவாய் வைத்து அதன்பேரிலே தற் பரை விநாடிகை நாழிகை வாரமுதலாய் எடுக்கும் வாக்கியம் பெற்றீர் பாரில் முன்னாள் வானோர் என்கிற வாக்கியமெடுத்துப்போட்டு நின்ற சேஷம் சுத்ததினமென் றறிக. இந்த சுத்த தினத்தை ஏழிற் கழி த்து மீந்த துவாரமும் கீழிருப்பது தற்பரை விநாடிகை நாழிகையும் வருடப்பிறப்பாமென் றறிக. அதுவே மேஷமாத வாக்கியத் துருவ மென்றறிக. சுத்த தினம் இப்படியாம் எ-று. 13

## அற்றைப் பஞ்சாங்க வாக்கியம்

துரியவேந்தர்வீமேசுரர்சொற்படி
　　தோற்றுமேயற்றைவாக்கியங்காண்பது
மருவுசுத்ததினத்தின்கீழ்தற்பரை
　　வளர்விநாடிகைநாழிகைவாரம்வை
வருடமாதத்துருவத்திற்கத்தினம்
　　வைத்துக்கூட்டியசுத்ததினங்களி
லரியவந்தாறுவைந்தனைந்துமூன்றுமே
　　யாறுமொன்றுமடைவேயெடுப்பதே.

இ-ள். துரிய வேந்தராகிய வீமேசுரர் சொற்படி அற்றைப்பஞ்சாங்க வாக்கியங் காணும்படி சுத்ததினங்கண்ட வாக்கியத்தைவைத்துக் கீழே மாதவாக்கியத் துருவத்துக்குக் கண்டவாக்கியவிநாடி நாழிகையும் வைத்து அதன்பேரில் சென்ற நாளைக்கு மாதத் துருவ வாக்கியத் துருவத்தையுங் கூட்டி கத்தினமுங்கூட்டி விநாடி நாழிகை வாரமடைவா யேரிடவும் ஏறிட்டபிறகு சுத்ததினத்தை முன்னால் குருவி னமுர்தமென்கிற வாக்கியத்தாலே எடுத்துப் போடவும் எ-று. 14

### இதுவுமது

எடுத்தமீதிற்றசத்தானங்கீழ்முத
　　விசையவொன்பதேழாண்டுபின்மூன்றுவைத்
தடுத்தரித்தபலனைமேலாகவைத்
　　தரித்தசேடத்தின்கீழ்வைக்கும்வாக்கியந்
தொடுத்ததாட்டுநாலாண்டுவைத்தேதகழித்
　　துலங்குமப்பலன்மேல்வைத்துச்சேடமே
நடித்திடுமற்றைவாக்கியமாகுமே
　　நவின்றதெங்கடொடுக்காட்டினுதரே.

இ-ள். முன்னெடுத்துப்போட்டு மீந்த சுத்த தினத்தின்கீழே தசஸ்தானமுதலாய் கை மெய்காணில் என்ற வாக்கியம் வைத்தரிக்கவும் அரித்த பலத்தை வேரே உயரவைக்கவும் திரும்பவுமந்த வாக்கியத்தைத் தள்ளிப்போட்டுத்தேடீர்பாலென்கிறவாக்கியத்தை வைத்து அரிக்கவும் அரித்தபலத்தை வேறேவைக்கவும் நின்றசேடம் அற்றை வாக்கியமென்று எங்கள் தொடுக்காடாகிய வீமேசுரர் திருவுளம் பற்றினதாம் எ-று. 15

### இதுவுமது

நாதராந்தொடுக்காடரைப்போற்றியே
　　நயந்துவாக்கியத்து நுவமெடுப்பதா

மோதுமுப்பதொருகலைபாகமே
யுற்றமூவைந்திராசியோசைந்துமே
யாதிமுன்னமெடுக்குமவ்வாக்கிய
மரித்தவப்பலனாலேபெருக்கிய
சோதித்தேறிட்டுவைத்திரண்டாந்தரம்
தொடுத்தரித்தபலன்வகைசொல்லுவாம்.

இ-ள். நாதராகிய தொடுக்காடரைப் போற்றிசெய்து வாக்கியத் துருவம் எடுக்கும் வகைகளின் முன் தருமமென்கிற வாக்கியத்தை முன்னே வாக்கிய மெடுக்கும்போது முந்தவதரித்த நித்தவாக்கியப் பலனை இந்த வாக்கியத் தசஸ்தான முதலாய் வைத்துப் பெருக்கவும் பெருக்கிக் கண்டகலை பாகராசியடைவே ஏறிட்டு வேறேவைத்து முன்னே வாக்கியம் எடுக்கும்போது இரண்டாந்தாம் பலனெடுத்து ரைக்கும் வகை சொல்லுவோம் எ-று. 16

இதுவுமது

சொல்லுவார்தொடுக்காடர்விகலையேழ்
துடர்ந்துநாற்பத்துநாற்கலைபாகமே
சொல்லுமேயிருபத்தேழத[illegible]முன்
துய்யவப்பலனாலேபெருக்கியே
வல்லவர்முன்னரித்துமேல்வைத்தது
மறுத்திரண்டாந்தரமாயரித்தது
நல்லதொன்றுக்கலைநாற்பத்தொன்றரை
நாடுபாகம்பன்மூன்றரைமூன்றதே.

இ-ள். பஞ்சாங்கத்துருவம் எடுக்குமடைவு சொல்வார் தொடுக் காடராகிய வீமேசுரர் வேறே பேர் வீமேசன் தான் என்கிற வாக்கியத் தை வேறே வைத்து முன்னே வாக்கியமெடுக்கிறபோது இரண்டாந் தரம் வாக்கியமெடுக்கிற பலனைக்கொண்டு இந்த வாக்கியத்தை விகலை கலை பாகராசியடையவே ஏறிட்டு முந்தப் பெருக்கின வாக்கியத்தை யும் இரண்டாந்தரம் பெருக்கின வாக்கியத்தையும் இவ்விரண்டையுங் கூட்டி இதன்பேரிலே மீறி பன்னீர் மிகமிக்கோர் என்கிற வாக்கியத் தைக் கூட்டவும் எ-று. 17

வாக்கியத் துருவம்

தேறுமித்தொகையொன்றாகக்கூட்டியே
தெரிந்துகாணத்துருவவாக்கியமிது
கூறுமிராசியிரொறுந்தேசாந்தரங்
குலவுசித்திரைமின்னெட்டுமொன்றுதள்

வேறுமெட்டளவுங்கலைரெண்டுதண்
மிக்கபின்னெட்டுநாற்கலைதள்ளுமே
வீறுவாரமெட்டுங்கலையாறுதள்
வீமநாதர்திருவடயேத்துமே.

இ-ள். முன்கூட்டின கலைபாகராசியை அடைவேளறிடவும் ஏரிட்டபிறகு கண்டது துருவவாக்கியமென்றறியவும் இனிச் சித்திரை மாதமுதல் பங்குனியளவுந் தேசாந்திர மறியும்படி அன்றுடகன் சொல்லும் வாக்கியமுந் துருவமுங் கூட்டி கலைபாக ராசியாய் எறிட்டு ஏறிட்டபிறகு தேசாந்தரகலை சித்திரைமாதத்துக்கு நாள் எட்டளவுங் கலையொன்று தள்ளவும். எட்டுக்குமேல் பதினாறளவும் இரண்டு கலை தள்ளவும் இதற்கு வாக்கியம் வெளிவினை மறைவேலென் றறிக. இப்படி தேசாந்தரக்கலை கழிப்பதென்று வீமநாதர் திருவடியை சிந்திப்பது எ-று. 18

இதுவுமது

மெத்தும்வைகாசிக்கேழெட்டொடெட்டுமே
மேவுமீராறியாழ்பன்ரண்டதா
மொத்தபன்னிரண்டுபன்னான்கீராறதா
முன்னுமாடிமுன்பன்னான்கீரேழுதள்
சித்துபன்மூன்றுபன்மூன்றுசிங்கமுன்
றேறுமுன்னான்குபன்னொன்றுமென்பதே
யத்தவாறைந்துமூன்றொன்றுகன்னிமட்
டாக்கழிவீமநாதருளினால்.

இ-ள். வைகாசிக்குத் தேசாந்திரகலை 7-8-8-12. இதற்கு வாக்கியம் ரிஷி வசுவசுகதிர் ஆனிக்கு தேசாத்திரகலை 12-12-14-12 இதற்கு வாக்கியம் ஒளிகதிர் மகவான மனுவிந்திரனே ஆடிக்கு தேசாந்திரகலை 14-14-13-13 இதற்கு வாக்கியம மிக்க நலமனுமனு விசுவம் விசுவம் இனி ஆவணிக்கு தேசாந்திரகலை 12-11-9-8-இதற்கு வாக்கியம் லக்கினம் ருத்திரன் தாறுகொள் பாலா இனி புரட்டாசிக்குத் தேசாந்திரகலை 6-5-3-1. இதற்கு வாக்கியம் சுந்தன் மந்திரங் கனல் மதிகலைகள். இந்த தேசாந்திர கலைகள் புரட்டாசி யளவும் கழிக்கவும் வீமநாதருளினால் எ-று. 19

இதுவுமது

அரியகோலொன்றுமூன்றுநாலாசக்கூட்
டாகுந்தெளெட்டீரைந்துபன்னொன்றீரா
றுருவிலப்பதின்மூன்றுறிரண்
டுற்றடன்மூன்றுதயமீராறிரண்

ஒருபன்மூன் றுபன்மூன் றுசாலாண்டுபென்
ஞென் றுமொன்பதுமொன் றுசெலாறேடைந்
தரிய மூன்ஞென் றுகோலாதிகூட்டுமே
யுளத்திலெங்கள்வீமேசரையுன்னியே.

இ-ள். அற்பசிக்கு தேசாந்தரகலை 1-3-4-6 இதற்கு வாக்கியம் சந்திரன் வன்னி சதுமுகன் சமயம் இனி கார்த்திகைக்குத் தேசாந்தரகலை 8-10-11-12 இதற்கு வாக்கியம் வசுவவதாரம் ருத்திரன் வான்கதிர் இனி மார்கழிக்குத் தேசாந்தரகலை 13-3-12-13 இதற்கு வாக்கியம் விசுவம்புவனம் வேந்தன்விசுவம் தைக்குக் தேசாந்திரகலை 12-12-13-13 இதற்கு வாக்கியம் விண்டுகொள் விண்கோள் விசுவம் விசுவம் மாசிக்குத் தேசாந்தரகலை 2-11-9-1 இதற்கு வாக்கியம் கண் காண ருத்திரன் மணி தெசக்காணும் பங்குனிக்குத தேசாந்தரகலை 6-5-3-1 இதற்கு வாக்கியம் சுவை பொறி கனல் மதி துலை கூட்டு அற்பசிமுதல் பங்குனியளவும் பஞ்சாங்க கலையினுடனே இந்த தேசாந்தர கலைகளைக் கூட்டுவது எங்கள் வீமேசுரரை தியானித்து எ-று.

யோக்கியாதிகலை

உன்னுமோடாதியோக்கியாதிக்குப்பன்
ஞென்றுபன்ஞன்கிரேட்டுப்பன்னேழுசே
யென்னும்பத்தொன்பதுவுமிருபத்தொன்
றிருபத்தோடிரண்டாயிருபத்துநான்
கின்னமானிமூவெட்டிருபத்தொடைந்
தெய்துமையந்திருபத்துஞல்குளி
ரன்னநாலாரிருபத்துமூன்றுமே
யைந்துநாலிரண்டிருபத்திரண்டதே.

இ-ள். யோக்கியாதி சித்திரைமாத முதல் அற்பசி மாதம் எட்டளவுங் கூட்டுவது சித்திரைக்கு முன்னெட்டு நாளளவுங் கலை 11 இதுகூட 16-நாளளவுங் கலை-16 இதுவும் இருபத்திரண்டு நாளளவுங் கலை-16 இருபத்திரண்டுமேல் சித்திரைமாத வரைக்குங் கலை-17 இந்தப்படி முன் சென்ற நாளைக்கு சென்றநாட் கலையுங் கூட்டி இன்னதென்று அன்றையில் வாக்கியத்துருவங் கூடின கலையில் கூட்டவும் இதற்கு வாக்கியம் வள்ளல் நீதம்பூணச் செல்வம் வைகாசிக்குக் கலை 19-21-22-24 இந்தக் கலைகளைச் சென்ற நாளைக்குக் கணக்குப்பார்த்துக் கூட்டவும் இதற்கு வாக்கியம் ஐபன் கண்டாய் ஆனல் நீவா ஆனிக்குக் கலை 24-25-25-24 இந்தக் கலைகளைக் கணக்குப்பார்த்து கூட்டவும் இதற்கு வாக்கியம் சீமான் முன்னுள் குன்று விட்டார் ஆடிக்குக் கலை 24-23-22-22 இந்தக் கலைகளை முன்போலே கூட்ட

வும் இதற்கு வாக்கியம் நித்தார் நின்றூர் பாலா நாடாள் என்றறி வது எ-று. 21

இதுவுமது

தேனுவானவீமேசரைத்தேடரி
தேறுபத்தோன்பதுபதினேழ்மூவைந்
தானபன்மூன்றுபெண்பதினென்றுமெட்
டர்றுமூன்றுதுலாமெட்டில்ரெண்டுதள்
ளூனமில்லொன்றுமூன்றைந்துதள்கலே
யுற்றதேளாறெட்டோன்பதும்பத்துமே
வானவில்பத்துப்பன்னொன்றுமொன்றுமே
மருவுபனனென்றதாமேன்மகாமே.

இ-ள். தேனுவான வீமேசர் பொற்பாதந் தேடப்பட்ட சிங்க மாகிய ஆவணிக்கு யோக்கியாதிகலே கூட்டும்படி 19-17-15-13 இந் தக் கலேகளெல்லாஞ் சென்ற நாளேக்குக் கணக்குப்பார்த்துக் கூட்ட வும் இதற்கு வாக்கியம் வைத்த செல்வஞ் சுகமிதம் புரட்டாசிக்குக் கலே-11-8-6-3 இந்தக் கலேகளேக் கூட்டவும் இதற்கு வாக்கியம் வாங் கேட்போம் பூண்டோர் மின்னேயினி அற்பசிக்கு எட்டுநாளளவும் இரண்டு கலே கூட்டவும் இந்த யோக்கியாதி கலேகள் அற்பசி எட்டள வுங் கூட்டும்படி அந்தந்த மாதங்களில் எட்டுநாள் வட்டஞ் சொன்ன கலேயும் அதற்கு மேற்சென்ற நாளேக்குக் கூடின கலே கணக்கு பார்த் துக் கூட்டவும் இந்த யோக்கியாதி கலே அறியும்படி இப்படி அற்பசி எட்டுக்குமேல் பங்குனிமாதமளவுங் கழிக்கும் வகை அற்பசி எட் டுக்குமேல் 16-அளவுங் கலே 1-கழிக்கவும் இதனுடன் நாள் 16-க்கு மேல் 22-அளவும் 3-கலே கழிக்கவும் இதனுடன் தினம் 22-க்குமேல் அற்பசிமாதவரைக்கும் 5-கலே கழிக்கவும் இதற்கு வாக்கியம் சாரோர் சுற்றோர் மிக்கோர் பல்லோர் இனி கார்த்திகைக்கு யோக்கியாதி கலே கள் 6-8-9-10 இந்த கலேகளேச் சென்ற நாளேக்கு கூட்டி கழிக்கவும் இதற்கு வாக்கியம் பூவோ தேனே வைத்தோர் போகம் இனி மார் கழிக்கு 10-11-11-11 கழிக்கவும் இதற்கு வாக்கியம் போகந் தவம் பலநலம் எ-று. 22

இதுவுமது

மேலதாம்வீமநாதனேப்போற்றியே
மிக்கவேபன்னென்றென்பதெட்டேழுமே
சாலிதொன்பதுநாலிரண்டாகுஞ்சுன்
றக்கமீனரெண்டுநாலேழுபத்துமே

சிலசங்கிரமநாழிகைசென்றது
திவியில்கூட்டக்கழியிராநின்றது
காலஞ்செல்கதமாதங்கததினங்
கழிப்பதோரைதினங்கழிபாகமே.

இ-ள். வீமநாதரைப்போற்றி இனி தைமாதத்துக்கு யோக்கி யாதி கலை 11-9-8 இதற்கு வாக்கியம் தடங்கையோ வேலோன் வெற் போ மாசிக்கு 9-4-2-1 இதற்கு வாக்கியம் வைப்போ நீரோ மாதோ கோவோ இந்த வாக்கியம் கூட்டவும் பங்குனிக்கு 2-4-7-10 இதற்கு வாக்கியம் பாகோ சீரோ பெண்ணேடோலம் இந்த யோக்கியாதி கலை களை சித்திரை மாதமுதல் அற்பசி எட்டளவும் கழிக்கவும் அற்பசி எட்டுக்குமேல் பங்குனியளவும் பஞ்சாங்க கலையுடன் கூட்டவும் இது யோக்கியாதி யென்றறியவும் இனி சங்கிரம சேஷமாவது அந்தந்த மாதம் பகலிலே பிறந்தால் பிறந்த நாழிகையை திக்குகலையோடே கூட்டவும் இராத்திரியிலே பிறந்தால் சென்றதுபோக நின்ற நாழி கையைத் திக்குக்கூடின கலையிலே கழிக்கவுங் கததினம் கதமாதத் திற்கு கதமாதம் இராசியில் கழிக்கவும் கததினம் பாகத்தில் கழிக்க வும் யோக்கியாதி கலையிற் கழிக்கிறதானல் கழிக்கவும் கூட்டுகிற தானல் கூட்டவும் எ-று. 23

இதுவுமது

பாகமாயத்தைப்பஞ்சாங்கக்காண்பதுஞ்
பத்துமன்றையில்வாக்கியந்துருவமு
மாகமொன்றுக்கித்தேசாந்தரகலை
யதனிற்கூட்டக்கழிப்பதானற்கழித்
தேகமாங்கார்த்திகைக்காலென்றிப்படி
யெடுத்துப்பாகங்களைக்கலையாக்கியே
போகமாமற்றைறவாக்கியத்தாலெடு
புனிதர்வீமேசர்சந்திரபுத்தியே.

இ-ள். அற்றைப் பஞ்சாங்கமறியும்படி அன்றைய வாக்கியத்தை வைத்து வாக்கியத் துருவமுங் கூட்டிக் கலைபாக இராசியடையவே ஏறிட்டுத் தேசாந்தரகலை கூட்டுகிறதானல் கூட்டிக் கழிக்கிறதானல் கழித்து நின்ற கலைபாக இராசியைக் கண்டு நட்சத்திரத்தைக் கழி த்து இந்தப் பாகத்தைக் கலைபாக்கி கீழே இருந்த கலையும் அத்து டன் கூட்டிவைத்து இன்றைய வாக்கியத்தை வைத்து நேற்றைய வாக்கியத்தாலே எடுத்துப் போடவும் மீந்தது புனிதராகிய வீமே சுரர் சந்திரபுத்தி எ-று. 24

## திதி அரியும்படி

சந்திரபாகக்கலைமுக்கலைகளுஞ்
சந்திரன்புத்திக்கீய்ந்ததுநாழிகை
முந்துநாடோன்றநின்றபின்னுடனின்
முடிந்தநாழிகையாமினிப்பக்கமே
சந்தநாள்கலைபாகராசியுடன்
சங்கிரமம்யோக்கியாதிகூட்டலாற்கழி
யுந்துமேகதமாதங்கததின
மொழிக்கவீமேசுரர்திதியோங்குமே.

இ-ள். முன்னே நட்சத்திரத்துக்கு கண்ட கலையையும் பாகத்தையும் கலைபாக்கினதையும் சந்திரபுத்திக் கீயவும் ஈந்து கண்ட நாழிகை முன் நட்சத்திரம் தோன்ற நின்ற நாழிகை பின் நட்சத்திரந் தோன்றுமென்றறிக இனி திதி பார்க்கும்படி முந்தின நட்சத்திரக் கலைபாக இராசியோடே சங்கிரம சேஷம் பகலிலே பிறந்தால் பிறந்த நாழிகையைக் கலையோடே கூட்டவும் இராத்திரி பிறந்தால் இராத்திரி சென்ற நாழிகையைப்போக்கி நின்ற கலையில் கழிக்கவும் யோக்கியாதியுங் கூட்டுகிறதானல் கூட்டிக் கழிக்கிறதனல் கழித்துக் கததினங் கதமாதம் கழித்து நின்ற கலைபாக இராசியில் திதி தோன்றுமென்று வீமேச ருரைத்தது எ-று. 25

## யோக கரணங்கள் அறியும்படி

ஓங்குசந்திரபுத்தியைப்பானுவா
லொழித்துமுன்றிதிதோன்றுங்கலைகளை
நீங்குசந்திரபுத்தியிலீந்தவை
நின்றநாழிகைதோன்றுந்திதிகளே
வாங்குயோகந்திதிக்குக்கழித்தவை
வைக்கயோகம்வருங்கரணந்திதி
தாங்குமொன்றுக்கிருகரணம்பவந்
தக்கபாதமையிற்பாதிசங்கரா.

இ-ள். சந்திரபுத்தியில் சூரியபுத்தி எடுக்கும்வகை சித்திரை மாதமுதல் பங்குனி மாதமளவும் எடுக்கும்வகை வாக்கியம்சேரும் செல்லும் வெல்லுமாமென்றும் வேலுங்கையுஞ் செல்லூர் நல்லூர் டாம்பூபொற்பூவையும் இந்தப்படிக்கு மாதமாதந் திதிக்குச் சந்திர புத்தியில் சூரியபுத்தியைக் கழித்து திதிக்குக்கண்ட கலையைச் சந் திரபுத்திக் கீந்து கண்டநாழிகைமுன் திதிதோன்றப் பின் திதி தோன்றுமென்றறிக. இனி யோகத்துக்குத் திதிக்குக் கூடினதெல்

லாம் யோகத்துக்கு கழிக்து யோகத்திற் கண்ட கலை பாகத்தை இராசி கலையாக்கி முன் திதிக்கு வாங்கின சூரியபுத்தியைக் கூட்டிக் கண்ட சந்திரபுத்திக் கிந்த நாழிகை முன் யோகந்தோன்ற பின் யோகந் தோன்றுமென்றறிக இனி காணம் வருமாறு அமாவாசை கழித்த பிரதமை பிற்பாதியும் பவம் துதிகை முன்னரையும் பாலவம் பின்னரையும் கவுலவம் திரிதிகை முன்னரையும் தைதுலம் பின்னரையும் காசி சதுர்த்தி முன்னரையும் வணசி பின்னரையும் வியஷ்டி இப்படி ஒரு திதிக்கு இரண்டு காணமாய் 30-நாழிகையாய் வரும் இந்த ஏழு காணமும் பஞ்சமி முதல் அஷ்டமி முன்னரையும் அறும் அஷ்டமி பின்னரையு முதலாக ஏகாதசியி லறும் துவாதசி முதல் பவுர்ணமி முன்னரையும் அறும் பவுர்ணமி பின்னரை முதல் திரிதிகையில் அறும் சதுர்த்தி முதல் சப்தமி பாதியும் அறும் சப்தமி பிற்பாதி முதல் தசமியில் அறும் ஏகாதசி முதல் சதுர்த்தசி முன்னரையும் அறும் இந்த ஏழு காணமும் ஒரு திதிக்கு இரண்டு காணமாய் வரும் இனி சதுர்த்தசி பிற்பாதி முதல் அமாவாசை கழித்த பிரதமை முற்பாதியளவும் சகுனி சதுஷ்பாதம் நாகவம் கிமஸ்துக்கினம் இந்த நாலு காணமும் இப்படி வரும் வீமேசுரமூர்த்தியே எ-று. 26

நட்சத்திர விஷகடிகை

சங்கார்வீமநாதர்தாள்சாருநா
டக்கமாவீறுக்கன்பதிற்றியாற்சியங்
கங்குல்ரவிமூரசுமூவெட்டதாங்
கார்தநுதோன்றிமகமாலைமுப்பது
மெங்கள்பாரவெண்ணைக்துமும்மீன்முற
மிலங்குசோதிவொளியுமீரேழதாங்
துங்கவாதிரைமூவேழுமாடிதை
துர்க்கையாடையுமூலநாலைந்ததே.

இ-ள். சங்காராகிய வீமேசர் தாளைத்தொழு தெழுகின்ற நட்சத்திர தியாச்சிய மறியும்படி அசுவினிக்கு 50-பரணி பூராடம் உத்திரட்டாதிக்கு 24-கார்த்திகை இரேவதி மகம் புனர்பூசத்திற்கு 30-உரோகணிக்கு 40-மிருகசீரிஷம சோதி விசாகம் கேட்டைக்கு 14-திருவாதிரைக்கு 21-உத்திராடம் பூசம் பூரம் சித்திரை மூலத்திற்கு 21-க்குமேல் தியாச்சியம் எ-று. 27

இதுவுமது

அந்தவோணமவிட்டமனுடமு
மையிரண்டிருபத்திரண்டத்தமு

முந்தசெக்குழுவா றுபூராட்டையே
முநியபன்னுறுநாலெட்டாவமே
வந்தநாழிகைநா லுறம்வர்ச்சியம்
வைக்காலாண்டுகெயவர்த்தனையறிந்
துந்துமக்காள்விடகடிநாடியி
லுற்றவர்த்தனையோர்ந்துபெருக்கமே.

இ-ள். திருவோணம் அவிட்டம் அனுஷத்திற்கு-10 அஸ்தத்திற்கு-22 உத்திரஞ் சதயத்திற்கு-18 பூராட்டாதிக்கு-16 ஆயில்லியத்திற்கு 32-க்கு மேல் அந்தந்த நட்சத்திரங்களுக்குச் சொன்ன நாழிகையில் விஷகடிகை வந்து மூன்றேமுக்கால் நாழிகை நிற்குமென்றறிக க்ஷயவர்த்தனை அறியும்படி நேற்றைய நட்சத்திரத்தில் இன்றைய நட்சத்திரம் அதிகமானல் வர்த்தனை குறைந்தால் க்ஷயமென்றறிக க்ஷயவர்த்தனைகண்ட நாழிகையை இத்தனை யென்றறிந்து அந்தந்த நாழிகையை முன் நட்சத்திரங்களுக்குச் சொன்ன நாழிகையிற் பெருக்குவது எ-று. 28

இதுவுமது

பெருக்கிக்கண்டவிநாடியைநாடியாய்ப்
பேணிவர்த்தனையாவிடிற்கூட்டுமே
கருத்தினுற்சயமாகிற்கழித்திடக்
கண்டநாடியறுபதுமேற்படி
லொருக்கியோர்தினமேற்படுநாழிகை
யுற்றிடும்விடமென்றேயுணர்ந்துநல்
லருக்கடற்றெடுக்காடரைப்போற்றியே
யாய்ந்துபஞ்சாங்கமன்பாலுணருமே.

இ-ள். முன் தியாச்சியத்துக்கு வரு நாழிகை வர்த்தனையாகில் கூட்டுவது க்ஷயமாகில் கழிப்பதென்றறிக தியாச்சியம் முன்னநாளே போகாமல் நாழிகை 60-க்கு மேல் வரில் நாழிகை 60-கொண்டது ஒருவாரமாகப் பெருக்கி மற்றநாள் சென்ற நாழிகையில் தியாச்சியம் வரும் எ-று. 29

## இராசி விஷகடிகை வார விஷகடிகை

உணருமேடமெருதுவிற்கன்னிபாம்
புண்ணுமாதியாழ்கூனரிகோலதா
மணுகுபேகழுமானகயற்றேளரி
யண்டும்பன்றிகடையரைநாழிகை
புணருஞாயிறுநாலெட்டுச்சோமனே
பூணுமாறேழுபொன்னரிமுப்பதொன்

றிணையுமானுற்பத்தொன்றேழிரண்டுசுன்
னிருபத்தொன்றுவிடகடியெந்தையே.

இ-ள். இராசி விஷகடிகை யறியும்படி மேஷம் ரிஷபம் தனுசு கன்னி இந்த 4-இராசியும் ஆதியில் அரைநாழிகை பாம்புண்ணும் மிதுனம் கும்பம் சிங்கம் துலாம் இந்த 4-இராசியும் நடுவில் அரைநாழிகை கழுக்குண்ணும் மகரம் மீனம் விருச்சிகம் கர்க்கடகம் இந்த 4-இராசியும் அந்தியத்தில் அரைநாழிகை பன்றியுண்ணும் இவை சுப காரியங்களுக்கு விலகப்படும் இனி வாரங்களுக்கு விஷகடிகை யறியும்படி ஞாயிற்றுக்கு 32-திங்களுக்கு 42-செவ்வாய்க்கு 31-புதனுக்கு 41-சனிக்கு 14-வெள்ளிக்கு 21-வியாழத்துக்கு 31-இந்தப்படி அந்தந்த வாரங்களுக்குச் சொன்ன நாழிகைக்கு மேல் விஷகடிகை ஒரு நாழிகைநிற்கும் இது சுபகாரியங்களுக்கு விலகப்படும் எ-று. 30

திதி விஷகடிகை

எந்தைபூக்திதிப்ரதமையெண்மூன்றுமே
விலங்குமேதுதிகைக்குமீராறுமே
லந்தமாமன்பத்தஞ்சாந்திரிதிகை
யைந்துசட்டிசதுர்த்திக்குமாகுமே
முத்துபஞ்சமிமூவைந்துமேலதா
முற்றுமட்டமிசப்தமிபத்தின்மே
லுந்துமேநவமிக்கிருபத்திரண்
டொக்குமேதசமிக்கேழ்கடிகையே.

இ-ள். சந்திரமாதமாவது முன் உவாகழித்த பிரதமை முதல் அமாவாசை யீறாக முப்பது திதியுஞ் சந்திரமாதம் இந்தத் திதிகளுக்கு விஷகடிகை பிரதமை 24-துதிகைக்கு 12-திரிதிகைக்கு 55-சஷ்டிசதுர்த்திகட்கு 5-பஞ்சமிக்கு 15-அஷ்டமி சப்தமிகட்கு 10-நவமிக்கு 22-தசமிக்கு 7-நாழிகைக்கு மேல் ஒருநாழிகை விஷ கடிகை எ-று. 31

இதுவுமது

கடிகைநாலேழுமொன்றுமேகாதசி
கனதுவாதசிபூரணையாறுமேன்
முடியுமேதிரயோதசிமுப்பது
மொழியுமேசதுர்த்தேசியைம்பத்திரெண்
றடியதாமமாவாசைமுப்பத்திரண்
டதனின்மேற்றிதிக்குமோர்நாழிகை

விடாமதர்மற்றநாடியமிர்தமாம்
வீமர்கோன்றிருமேனியுணருமே.

இ-ள். ஏகாதசிக்கு 29-துவாதசி பவுர்ணமிகட்கு 6-திரயோதசிக்கு 30-சதுர்த்தசிக்கு 51-அமாவாசைக்கு 32-நாழிகைக்கு மேல் ஒருநாழிகை விஷகடிகை நிற்கும் இவை சுபகாரியங்களுக்கு விலக்கப்படும் இனி அமிர்தகடிகை சொல்லுவோம் எ-று. 32

## நட்சத்திர அமிர்தகடிகை அறியும்படி

உணருமுன்னுளமிர்தமுவேழின்மே
லுன்னடுப்புமும்மீன்பூராமுப்பது
மணையுமாாலையம்பத்ராகமு
மமிர்தநாற்பதுதேர்மூங்கில்புட்பணை
யிணையுமூலமுடியுமீரேழினமே
விலங்குபூசம்பரமபதினாறுமேற்
றுணைமகம்முறஞ்சுண்டிலரியுமே
சொல்லுநாலைந்துவீமேசர்தோற்றமே.

இ-ள். நட்சத்திர அமிர்தகடிகை அறியும்படி அசுவினி 21-க்கு மேல் பரணி மிருகசீரிஷம் பூராங்களுக்கு 30-க்கு மேல் கார்த்திகைக்கு 50-க்கு மேல் திருவாதிரை ஆயிலியங்களுக்கு 40-க்கு மேல் உரோகணி புனர்பூசம் அவிட்டம் அனுஷம் மூலம் உத்திராடங்களுக்கு 14-க்கு மேல் பூசம் சித்திரைகட்கு 16-க்கு மேல் விசாகம் சதயம் திருவோணங்களுக்கு 20-க்கு மேல் 4-நாழிகை அமிர்தகடிகை எ-று. 33

## இதுவுமது

தோற்றுமுத்திரமுப்பத்துமூன்றினிற்
றலங்குமத்தமேழ்கேட்டைமுப்பத்தொன்றே
யாற்றல்சோதியிருபத்திரண்டுபூ
ராடநாழியொருபத்தின்மேலதாம்
போற்றும்வெங்கதிரோன்பதிரேவதி
பொருக்துமீராறமிர்தநாழிகை
பேற்றுமேல்விளையாடும்வீமேசுர
ரெங்கைநோக்கமமிர்தகடிகையே.

இ-ள். உத்திரத்திற்கு 33-க்கு மேல் அஸ்தத்திற்கு 7-க்குமேல் கேட்டைக்கு 31-க்கு மேல் சுவாதிக்கு 22-க்கு மேல் பூராடத்திற்கு 10-க்கு மேல் உத்திராடத்துக்கு 18-க்கு மேல் இரேவதிக்கு 12-க்கு மேல் 4-நாழிகை அமிர்தகடிகை எ-று. 34

## வருடப் பிறப்பு

நோர்சமுன்னுண்டிலாடியீரெட்டின்மே
　　னைய்பபக்கமீராறு பன்னொன்றுநா
டாக்கும்வாரமிரண்டிற்சித்திரைமுதற்
　　சந்திரன்மறைவேதமசாருடி
யாக்குமீசர்கண்கந்தன்வெளிபணி
　　யணியுசங்கள்பஞ்சாக்கரப்பற்றுமாய்
தேக்குமாண்டாண்டநந்தயுகங்களுஞ்
　　செருக்குவீமேசர்பாதமீன்கன்னியே.

இ-ள். ஆண்டாண்டுதோறும் வருஷம் பிறந்த நாள் முதல் வரும் வருஷப்பிறப்பறியும்படி பிரபவ வருஷம் பிறந்த நாழிகைக்கு வரும் வருஷம் பிறக்கிறது 16-ம் நாழிகை வருஷந்தோறும் காண்பது திதி 12-ம் திதி நட்சத்திரம் 11-ம் நட்சத்திரம் மாதப் பிறப்பென்றறிக. 7-ம் வாரம் ஆனிமாதப் பிறப்பென்றறிக. 4-ம் வாரம் ஆடிமாதப் பிறப்பென்றறிக 7-ம் வாரம் ஆவணிமீ பிறப்பென்றறிக 3-ம் வாரம் புரட்டாசிமாதப் பிறப்பென்றறிக 6 ம் வாரம் அற்பசிமாதப் பிறப்பென்றறிக. சித்திரைமாதம் பிறந்தவாரமேகார்த்திகைமாதப் பிறப்பு 2-ம் வாரமே மார்கழிமாதப் பிறப்பு 4-ம் வாரமே தைமாதப் பிறப்பு 5-ம் வாரமே மாசிமாதப் பிறப்பு 7-ம் வாரமே பங்குனிமாதப்பிறப்பு 2-ம் வாரமே சித்திரைமாதப் பிறப்பு இப்படி ஆண்டாண்டுதோறும் அனந்த யுசங்களுங் காண்பது எ-று. 35

இராசாதிபதி மந்திரி சேனாதிபதி மேகாதிபதி தானியத்திற் கதிபன்
இராஜாதிபதி நிரசாதிபதி மேகாதிபதி அர்க்காதிபதி அறியும்படி.

மீனபூர்வபிரதமராசனு
　　மேடமாதமுதல்வாரமந்திரி
சேனையாதிபன் சிங்கமாடகமே
　　செழித்தபைங்கூழ்சிலைதானியாதிப
னூனமிலொத்துலையோசாதிப
　　னுற்றபாடாணமோங்குமகாமே
யானதானிபம்போசகுமியாழ்சூரிய
　　னுதிரைப்பூணிமாநிகலக்குமே.

இ-ள். பங்குனிமாதத் தமாவாசை கழித்த பிரதமைநாள்வந்த வாரம் அவ்வாண்டுக்கு இராஜாதிபதி யென்றறிக. சித்திரைமாதப் பிறப்பு வந்த வாரம் மந்திரி, ஆவணிமாதப் பிறப்பில் வந்தவாரம்

சேனாதிபதி, ஆடிமாதப் பிறப்பில் வந்த வாரம் பயிரை வளர்ப்பவன் மார்கழி மாதப்பிறப்பில் வந்தவாரம் தானியத்துக் கதிபன், அற்பசி மாதப் பிறப்பில் வந்தவாரம் இராசாதிபதியாவன், தைமாதப் பிறப்பில் வந்தவாரம் பாஷாண முதலானவைகளை வளர்க்கப்பட்ட நிரசாதிபதி, ஆடிமாதப் பிறப்பில் வந்த வாரம் தானியத்தைச் செலவழிக்கப்பட்ட அர்க்காதிபதி, இரவி திருவாதிரைச்குப் போகிற வாரம் மேசாதிபதி எ-று. 36

## மேக விகற்பம்

கலிசகாத்தாண்டையெட்டாற்பெருக்கியே
கழிப்பதொன்பதிலொன்றுறிலாவர்த்த
மிலகும்புன்மழையேசங்கவர்த்தமு
மெய்துஞ்சாற்றுப்பிரளயம்புட்களந்
துலைதுரோணவெள்ளங்காளமேகமே
துளிவளிநீலன்வஞ்சகத்தோயனு
மலையினும்நெல்விளையும்வருணனே
வாயுத்தீதுதமோவெகுமாரியே.

இ-ள். மேகாதிபதி பார்க்குமடைவு அவ்வாண்டுக்குக் கண்டச்சார்த்த வருஷத்தை 8-ற் பெருக்கி, 9-ற் கழிக்க 1-மீந்தால் வர்த்தமேகம் புல்மழை பெய்யும், 2 மீந்தால் சங்குலர்த்தமேகம் சாற்றடிக்கும், 3-மீந்தால் புஷ்களமேசம் பிரளயமாய் வருஷம் வருஷிக்கும், 4-மீந்தால் துரோணமேகம் வெகு வெள்ளமாக வருஷிக்கும், 5-மீந்தால் காளமேகம் தூரலுந் துளியுமாகக் சாற்று மிகுதியா யடிக்கும் 6-மீந்தால் நீலமேகம் கண்டா வருஷம் 7-மீந்தால் வருணமேகம் வெகு வருஷம் வருஷிக்கும், மலையிலும் நெல்விளையும் நற்காலமாம், 8-மீந்தால் வாயுமேகம் அவ்வாண்டு பஞ்சமாம், 9-மீந்தால் தமோமேகம் வெகுமாரி பொழிந்து நற்காலமாம் எ-று. 37

## மாரியளவு

மாரனைக்கடிந்தோன்விழிமைந்தரு
மன்னராகிற்குறுணிசெவ்வாய்பதக்
காபுதன்மதிக்கேழுக்குறுணிநீர்
கனகர்தூணியகலநீளஞ்சத
தூரயோசனைபூமியினுன்குபாற்
றுய்யபார்வதக்கானகத்தாறுபால்
வாரியெங்கும்பொழியுமீரைந்துபால்
வள்ளல்சென்னிக்கதிர்சங்கைமன்னுமே.

இ-ள். இரவி சனி இவர்கள் இராஜாவாகில் அவ்வாண்டுக்கு மழை நருணி, அங்காரகனாகில் பதக்கு, புதன் திங்களாகில் முக்குறுணி, வெள்ளி வியாழம் தூணி, இந்த மரக்கால் நூறு யோசனை தூரம் அகலமும் நிகளமுமுள்ள மரக்கால் அந்தந்த வருஷங்களுக்குக கண்ட மழையில் 1-பங்கு பூமியிற் பொழியும் 6-பங்கு மலையிலுங் காட்டிலும் பொழியும் 10-பங்கு சமுத்திரத்திற் பொழியும எ-று. 38

## மாரி தோற்றமும் வரவும்

தூரத்திற்சோதிதொடர்ந்தொருசத்தியா
யார்த்துநாதமணைந்தொருவிந்துவாய்ப்
பார்ச்சதாசிவம்பார்முதலேந்துக்கும்
மார்த்திற்சத்தியோடாரமிர்தாகுமே.

இ-ள். மாரி தோற்றமும் மழை வரவும் அறியும்படி நிராதார வஸ்துவான பெரு வெளியிலே அறிவென்னும் நிராதார பராசத்தி தோன்றி பராசத்தியிலே நாதந் தோன்றி நாதத்திலே பாவிந்துதோன்றி பாவிந்துவில் சத்தி முதலான பஞ்சமூர்த்திகளும் பஞ்சபூதமுந்தோன்றும் பாவிந்தாவது அண்டத்துக்கு மனமென்றும் மதி என்றும்பெயர் அந்த மதியென்னுஞ் சந்திரனிலே வாயு பிறக்கும் வாயுவினிட கடினததிலே அக்கினி தோன்றும அக்கினி என்னப்பட்ட மின்னிலே நவமேகங்களும் பிறந்து அவையிடமாக வருஷித்து அந்த நீர்க்குழம்பிலே சிக்கென்று பிரிதிவு என்னப்பட்ட பூமிதோன்றும் இப்படி அண்டத்திலுள்ளது பிண்டத்துக்குமாம. பிரம்மரந்தரத்திலே கங்கைபென்றும் அமுத கங்கையாயிருந்து தேகத்தை வளர்கதும் இப்படி அண்டி வெளியே அடிமுடி நடுவுமாயிருக்கப்பட்ட வஸ்துவின் மனக்கண்ணுப் சங்கா தேவியுமாம் அண்டத்திலுண்டான சீவாத்மாக்களைப் பாவித்து வளர்க்கும எ-று. 39

## ஆதாயம் அறியும்படி

இரவிபாறுகதிரிந்திரண்டுசே
யெட்டுபன்னேழிபுந்திபத்தொன்றுமே
குருவுமூவேழ்புகர்சனிபத்ததாம்
குலவுமவ்வாண்டாசன்கதிருட
னரியாசியதிபன்கதிருமொன்
றுக்கிமூன்றூற்பெருக்கித்தொகையுடன்
மருவுயோரைந்துகூட்டிமூவைந்துக்கீழ்
மற்றிருந்ததாதாயமாய்ப்பார்ப்பதே.

இ-ள். ஆதாயம் அறியும்படி இரவிக்குக் கதிர் 6-மதிக்குக் கதிர் 2 அங்காரகனுக்குக் கதிர்-8 புதனுக்குக் கதிர்-17 குருவுக்குக் கதிர் 19 சுக்கிரனுக்குக் கதிர்-21 சநிக்குக் கதிர்-10 இப்படி அவரவர் கதிரறிந்து அவ்வாண்டுக்கு இராசன் எந்தக் கிரகமாவதோ அந்தக் கிரகத்துக்குச்சொன்ன கதிரும் யாதாமொருவர் பேர்வழி நாள் இராசி அதிபன் கதிரும் ஆகக்கூட்டி 3-ற் பெருக்கிக் கண்ட தொகையுடன் அஞ்சுகூட்டி 15-க் கீந்தசேடம் ஆதாய மென்றறிவது ஏ-று. 40

## விரையமும் முதற்கந்தாயமும்

பாருமாதாயமிந்தப்பலன்றன்னைப்
பரிந்துமூன்றுபெருக்கைந்துகூடவைச்
சேருமூவைந்துக்கீந்தவைசேடமே
செலவுபாதிபஞ்சாங்கத்திற்சென்றது
கூருமாமுன்னரவர்நாட்களும்
கூட்டியதொகைமூன்றிற்பெருக்கிய
தேருமெட்டினுக்கீந்தவைசேடமே
தெளியமுன்வருங்கந்தாயஞ்செப்புமே.

இ-ள். முன் ஆதாயத்துக்கு 15-ஆப்க் கழித்த வட்டம் இத்தனை என்றறிந்து அதனை 3-ற் பெருக்கிக் கண்ட தொகையுடன் 5-கூட்டி 15-க் கீந்தசேடஞ் செலவென்றறிக இனிகந்தாயபலன் பார்க்குமடைவு பங்குனி யுகாதியினன்று திதிவார நட்சத்திரயோக கரணங்கள் ஆகிய அஞ்சுவிதமும் அன்றுசென்ற நாளளவுங்கூட்டி அசுவினி முதலாக அவரவர் நாட்கள் சென்றதுங் கூட்டி இன்னதென்று கண்டு கண்டதொகையை 3-ற் பெருக்கி 8-ற் கீப்ந்து ஈபாதசேடம் முதற்கந்தாய மென்றறிவது எ-று. 41

## நடுக்கந்தாயமும் கடைக்கந்தாயமும்

செப்புமுன்றொகையேழிற்பெருக்கியே
தெரிந்துமூன்றிற்கழித்தவச்சேடமே
மூப்பிலாநடுக்கந்தாயமாகுமே
மூன்றிலேற்றியைந்திற்கழிசேடமே
தப்பிலாக்கடைக்கந்தாயமாகுமே
சர்வசீவதயாபரமூர்த்தியா
மப்பர்வீமேசுரரருளாலேசந்
தாயலாபச்செலவுமறியுமே.

இ-ள். முன்கண்ட தொகையை 7-ற் பெருக்கி 3-ற் கழித்து மீந்தசேடம் நடுக்கந்தாய மென்றறிவது முன்கண்ட தொகை 3-ற்

பெருக்கி 5-கழிக்கக் கடைக்கந்தாயமாம் இப்படி யானைமுதல் எறும்பீறுபுள்ள 84 லட்சஞ் சீவனுக்குள்ளும் இபங்கப்பெற்ற சர்வ சீவ தயாபரனாகிய வீமகாதாருளால் முக்கந்தாய லாபச் செலவு மறிவது எ-று. 42

சங்கிராந்தி புருடலட்சணம்

ஆடைவெண்மைகுடைவெள்ளைபொற்கல
மன்னங்கஸ்தூரிபூரணவின்மணி
நீடுபுன்னைமலர்வாகனமரி
நிறையகிற்றாயுமும்முலக்கைகிழக்
கோடும்புன்னகைசங்கிரமத்துநா
ளுதிக்குமப்போமேவுராகிலிந்நெறி
கூடுமன்பரிதபகமலமே
குலவுவீமேசுராடிகூறுமே.

இ-ள். சங்கராந்தி புருஷன் காணங்களில் அதுவருமாறு வஸ்திரம் வெள்ளை, குடை வெள்ளைகுடை, பாத்திரம் பொற்கலம், ஆசாரம் அன்னம், பூசுவது கஸ்தூரி, பூஷணம் மாணிக்கம், பூ புன்னைமாலை, வாகனம் சிங்கம், தூபம் அகில், ஆயுதம் உலக்கை, உபயாயுதம் தடி, கிழக்கு முகம்நோக்கிப் புன்சிரிப்புடன் வருடம் தை மாதப் பிறப்பு சங்கராந்தியில் பவகரணம் வரில் இந்நெறியென்று அன்பரிருதப கமலமே கோவிலாக வீற்றிருக்கும் வீமேசர் அருளிச்செய்தது எ-று. 43

இதுவுமது

கூறுமேதுகில்செம்மைபச்சைக்குடை
குலவுபாத்திரம்வெள்ளியூண்பாயசம்
வீறுசந்தனமுத்தாரப்பூணுமே
மிக்கசாதிப்பூமெய்வாகனம்புலி
யேறுசந்தனதூபமமெறிவலலய
மிசைந்தகத்திதிசைதெற்குசோபியாந்
தேறுபாலகாணத்துக்கிந்நெறி
செப்புமெங்கள்வீமேசர்செருக்குமே.

இ-ள். வஸ்திரம் சிகப்பு, குடை பச்சைக்குடை, பாத்திரம் வெள்ளி பாத்திரம், ஆகாரம் பாயசம், பூசுவது சந்தனம், பூஷணம் முத்து, பூ சிறுசண்பகப்பூமாலை, வாகனம் புலி, தூபம்சந்தனப்பொடி, ஆயுதம் வல்லயம், உபயாயுதம் கத்தி, தெற்குமுகநோக்கிக் கோபமுடன் வரும் பாலகாணத்திற்கு இந்நெறியென்பது வீமேசுரர் அருளிச்செய்தது எ-று. 44

இதுவுமது

செருக்குநாடைகண்டாங்கிகருங்குடை
 செப்புத்தலமுணல்பணிகாரமே
வரிக்குந்துமம்பூடணம்வெள்ளியே
 மகிழம்பூவாகனம்பன்றிவில்வமே
தெரிக்குந்தூபமாஞ்சில்லாக்கோலாயுதஞ்
 செய்பவெண்டாமரையுபயாயுதந்
தரிக்குமிலச்சைவடக்கேகவுலவந்
 தம்பிரான்வீமநாதர்தாள்சாருமே.

இ-ள். வஸ்திரம் கண்டாங்கி, குடை கறுப்புக்குடை, பாத்திரம் செப்புப்பாத்திரம், ஆகாரம் பணியாரம், பூசுவது குங்குமம், பூஷணம் வெள்ளி, பூ மகிழம்பூ, வாகனம் பன்றி, தூபம் வில்வம், ஆயுதம் சிலாக்கோல், உபயாயுதம் வெண்டாமரைப்பூ, இலச்சையுனே வடக்கு முகமாக வரும் கவுலவகாணத்துக்கு தம்பிரானுர் வீமேசர் திருவடியை நாடி நடக்கும் எ-று. 45

இதுவுமது

சாருமஞ்சடுகில்பொற்குடையதங்
 தாலமாமிரும்பப்பமூன்றுபூசுதல்
கூறுங்கோரோசனம்பூணல்வச்சிரங்
 குலவுமல்லிகைப்பூக்கழுதைப்பரி
நேருந்துங்குமந்தூபம்வில்லாயுத
 நெடியவாணம்வயிராக்கியக்குணம்
பேருமேற்குமுகமாகத்தைதுலம்
 பெரியவீமேசர்தாளைப்பெறவிதே.

இ-ள். வஸ்திரம் மஞ்சட்புடவை, குடை பொற்குடை, பாத்திரம் இருப்புப்பாத்திரம், ஆகாரம அப்பம், பூசுதல் கோரோசனம், பூஷணம்வச்சிரம், பூமல்லிகைப்பூ, வாகனம் கழுதை, தூபம் குங்கம், ஆயுதம் வில், உபயாயுதம் வாணம், வயிராக்கிய குணத்துடனே கூடி மேற்குமுகமாய் தைதுல காணமாகில் வீமேசுரருளைப் பெறவரும் எ-று. 46

இதுவுமது

பெருங்கருந்துகின்மயிலிரகின்குடை
 பெருகுபாத்திரமீயபாற்சொள்ளுமே
செரியும்பூசுவதேகாசுக்கட்டிபூண்
 செய்யகோமேதகம்பூச்செயபருத்தியே
நெரியும்வாகனம்பானையாந்தூபமே
 நீலவுண்டைவெண்சாமரமாயுத

நிறைபன்சோன்மறப்பாநடைதென்றிசை
நிமலர்தாளைநினைக்குங்காசியே.

இ-ள். வஸ்திரம் கறுப்புப்புடவை, குடை மயிலிறகின்குடை, பாத்திரம் ஈயபாத்திரம், ஆகாரம் பால், பூசுவது காசுகட்டி, பூஷணம் மாணிக்கம், பூ செம்பருத்தம்பூ வாகனம் யானை, தூபம் நீலவுண்டை, ஆயுதம் வெண்சாமரம், உபயாயுதம் தராசுக்கோல், மறப்புடனேதென்றிசை நோக்கி நிமலராகிய வீமேசர்தாளைநினைந்து நடக்குங்காசிகாண சங்கிராந்திபுருடன் எ-று. 47

இதுவுமது

நினைக்குங்கம்பளியாடைபீற்றக்குடை
நீடுபாத்திரம்பஞ்சலோகந்தயி
ரனைத்துமஞ்சள்பரிமளம்பூடண
மானவித்துருவங்நீலலோசனஞ்
சுனைத்தவாகனமேன்மையாந்தூபமே
துப்பசங்குகயிறுபயாயுதம்
புனைத்தபாப்புபுவிநோக்குடன்வடல்
புனிதர்தாளைப்புகழும்வனசைபே.

இ-ள். வஸ்திரம் சம்பளி, குடை பீற்றக்குடை, பாத்திரம் பஞ்சலோகம், ஆகாரம் தயிர், பூச்சு மஞ்சள், பூஷணம வித்துருவம், வாகனம் எருமை, தூபம் சங்குப்பொடி, ஆயுதம் கயிறு, உபயாயுதம் பாம்பு, பூமியை நோக்கி வடக்குமுகமாகப் புனிதராகிய வீமேசர் தாளைப் புகழ்ந்து நடக்கும் வனசை காணமாகில் எ-று. 48

இதுவுமது

புகழுக்தோலாடையேகம்பளிக்குடை
போசனம்வெண்கலஞ்சித்திரான்னமாம்
புகழுங்கற்பூரம்புட்பராசம்பணி
போதுகுன்றிமணிப்பூவும்வாகனம்
புகழுந்திபநன்னிராளையங்குசம்
போற்றுமாயுதஞசூலமுபையமே
திகழநோக்குறுந்தென்றிசைவிட்டியே
தேசிகன்வீமநாதனைத்தேறியே.

இ-ள். வஸ்திரம் தோல், குடை கம்பளிக்குடை, பாத்திரம் வெண்கலம், ஆகாரம் சித்திரான்னம். பூசுதல் கர்ப்பூரம், பூஷணம் புஷ்பராகம், பூ குன்றிமணிப்பூ, வாகனம் நாய், தூபம் நல்லதண்ணீர், ஆயுதம் அங்குசம், உபயாயுதம் சூலம், தெற்குமுகமாகி தேசிகராகிய வீமேசரைத் தியானித்து நடக்கும் பத்திரவாகாமாகில் எ-று. 49

இதுவுமது

தேறுகந்தைமுறங்குடைநற்கலந்
திசழூமூண்வெல்லம்பூசுங்கிட்டுசேறு
கூறும்பூடணமாகுங்கறுத்தநூல்
குலவுசண்பகப்பூவாடுவாகன
மேறுதூபமகில்வாணமாயுத
மிலகுமேலுபயாயுதஞ்சக்கரம்
வீறுமேசனிமூலைநகர்ந்திடும்
வீமநாதர்விரும்பிச்சகுனியே.

இ-ள். வஸ்திரம் கந்தை, குடை முறம், பாத்திரம் கற்பாத்திரம், ஆகாரம் வெல்லம், பூச்சுசேறு, பூஷணம் கறுத்தநூல், பூசெண்பகப்பூ, வாகனம் ஆடு, அகில் தூபம், ஆயுதம் வாணம், உபயாயுதம் சக்கரம், தென்மேற்கிலிருந்து சனிமூலைநோக்கி வீமநாதரைத்தேடி நகரும் சகுளி காணமாகில் எ-று. 50

இதுவுமது

மேவுமேதழைவத்திரமேகுடை
மெய்ப்பலாசுமரப்பாத்திரமது
நாவினூணும்பரிமளம்பற்பமா
நாடுபூண்படிகங்கொன்றைநன்மலர்
தாவுவாகனஞ்சேதூபங்கந்தமாந்
தக்கவாணாயுதமுபயாங்குசம்
போவபூர்வமேபெற்றசதுட்பாதம்
புனிதர்வீமேசுரர்தாளைப்போற்றியே.

இ-ள். வஸ்திரம் தழை, குடை பலாசிலை, பாத்திரம் மரப்பாத்திரம், ஆகாரம் தேன், பூச்சு விபூதி, பூஷணம் படிகமணி, பூ கொன்றைமலர், வாகனம் எருது, தூபம்சந்தனம, ஆயுதம்வாணம, உபயாயுதம் அங்குசம், கிழக்கு நோக்கிப்போய் தோஷந்தீர வீமேசர் தாளைப் போற்றி நடக்கும் சதுஷ்பாத காணமாகில் எ-று. 51

இதுவுமது

போற்றுபாடைமாத்தோல்வன்னக்குடை
போசனங்கப்பறையூணெய்ப்பூசுவ
தேற்றமாங்கதம்பவ்வயிடூரிய
மிலங்குமார்மலரோலைப்பூவாகனத்
தோற்றுமேசாவற்றாபஞ்சாயபிராணியே
துய்யவாணமுபயநேரிசமா
மாற்றநற்குணந்தென்முகநோக்கவ
மைபர்வீமேசர்க்காளாய்நடக்குமே.

இ-ள். வஸ்திரம் மாத்தோல், குடை வன்னக்குடை, பாத்திரம் கப்பறை, ஆகாரம் நெய், பூச்சு கதம்பம், பூஷணம் வைடூரியம், பூ ஓலைப்பூ, வாகனம் கோழி, தூபம் சாம்பிராணி, ஆயுதம் வாணம், உபயாயுதம் எறிபடை, நற்குணத்துடனே தெற்குமுகம் நோக்கி ஐயர் வீமேசுரர்க்காளாய் நடக்கும் நாகவ கரணமாகில் எ-று. 52

இதுவுமது

நடைக்குநூலரைச்சட்டைப்பட்டுக்குடை
நல்லமூங்கிற்கலஞ்சர்க்கரையதூ
ணடுக்குமோநற்சவாதுமுத்தாரமா
மணியுங்கோங்குமலர்க்கோழிவாகனங்
கொடுக்குந்தூபமோர்குங்கிலியப்புகை
குலவுவாணாயுதம்வாளுபயமே
வடக்குநோக்கலுறுங்கிமித்துக்கமே
வள்ளல்வீமேசர்தாளைவணங்கியே.

இ-ள். வஸ்திரம் அரைச்சட்டை, குடை பட்டுக்குடை, பாத்திரம் மூங்கில், ஆகாரம் சாக்கரை, பூச்சு சவ்வாது, பூஷணம் முத்து, பூ கோங்குமலர், வாகனம் கோழி, தூபம் குங்கிலியம், ஆயுதம் வாணம், உபபாயுதம் வாள், வடக்குநோக்கி நல்லகுணத்துடனே கிமிஸ்துக்கினமாகில் வள்ளலாகிய வீமேசர்தாளை வணங்கி நடக்கும் எ-று. 53

சங்கிராந்திபுருடன் அவயவங்கள்

வணங்குசங்கிரமப்புருடன் சிரசுநால்
வதநநாஞசிநால்வாயுநால்விழி
யிணங்குமெட்டுச்செவியெட்டுத்தாளிரண்
டியோசனைபைந்திரண்டரைதிட்டமாய்
குணமகோரமிரவிமதிதுவாங்
கிசிமகோதரிபுந்திமந்தன்குரு
மணக்கொண்மந்தாகினிபுகர்மித்திரன்
மந்தன்ராட்சதனெங்கோனவகுத்ததே.

இ-ள். சங்கிரமபுருஷன் அவயவம் எந்தவிதமென்னில் சிரசு 4 முகம்-4 நாசி-4 வாய்-4 நாக்கு 4 கண்கள் 8 செவி 8 புஜம் 8 கைகள் 8 பாதம்-2 5-யோசனை உயரமும் இரண்டரையோசனை பருமனும் என்றறிக இனி சங்கிராந்தி புருஷன் பேரறியும்படி ஞாயிற்றுக்கிழமையாகில் அகோரன், திங்களாகில் துவாங்கிசி, செவ்வாய் மகோதரி, புதன் மந்தன், வியாழம் மந்தாகினி, வெள்ளி மித்திரன், சனி இராட்சசன் இப்படி ஆண்டாண்டுதோறும் சங்கிராந்தி புருஷன் பேரறிவதாம் எ-று. 54

சாரநிலை அறியும்படி

இலங்குமாயிரமுந்நூறறுபதோ
டெட்டுமேநல்சகார்த்தந்தனில்கழி
துலங்கிநின்றவருடந்தொடங்கியே
சொல்லவேபெருமாண்டாண்டுதோறுமே
பலன்கொள்செவ்வாய்க்கிருபத்துநாற்கலை
பாகம்பன்னொன்றிராசியாறாம்புத
னலங்கொள்ளுங்கலைநாற்பத்தேழ்பாகமே
நாடுமேழுவெட்டுநண்ணுமொராசியே.

இ-ள். சாரநிலை அறியும்படி சாலிவாகன சகாப்தங்கண்ட வருஷத்திலே 1368-ஞூ தள்ளி நின்றவருஷந்துவக்கிச் சாரநிலை பார்க்க வேண்டின வருஷமளவும் எண்ணி அத்தனை வருஷத்திற்கும் கிரகங்களுக்கும் தனித்தனியே ஆண்டாண்டுதோறும் குஜனுக்கு ஞூ-1-க்கு கலை-24 பாகம்-11 இராசி- 6-ம் புதனுக்கு ஞூ 1-க்கு கலை-47 பாகம்-24 இராசி-1-ம் எ-று. 55

இதுவுமது

எங்கள்பொன்னுக்கிருபத்தோராங்கலை
யிறைக்குப்பாகமிலைராசியொன்றதாஞ்
சுங்கனுக்குக்கலைபதினொன்றதாந்
துய்யபாசமுவைந்தேழிராசியே
தங்குமந்தன்கலைபதின்மூன்றதாந்
தக்கபாகநான்கோரையில்லையே
பொங்காக்கலைமூவேழுபாகமே
போந்தபத்தொன்பதும்ராசிபோக்குமே.

இ-ள். குருவுக்கு வருடம் 1-க்கு கலை-21 பாகம் பூச்சியம் இராசி-1 சுக்கிரனுக்கு வருடம் 1-க்கு கலை-11 பாகம்-15 இராசி-7 சனிக்கு வருடம் 1-க்கு கலை-13 பாகம்-12 இராசி பூச்சியம் இராகு கேதுவுக்கு வருடம் 1-க்கு கலை-21 பாகம்-16 இராசி பூச்சியம் எ-று.

இதுவுமது

போக்குமவ்வவ்விராசிப்பாகங்கலை
புகழ்சகாப்தங்கழிவதுநின்றுண்டுக
ணோக்கிப்பார்க்கவேண்டாண்டளவெண்ணியே
நொய்வாண்டாற்கலைபாகராசியைத்
தாக்கியேற்றிக்கலைபாகம்பாகமே
தக்கவோரைகண்மண்டலம்வாய்க்கணர்

சாக்குஞ்சேடமாண்டாண்டுந்துருவமா
 மையர்வீமேசுரர்போதகமதே.

இ-ள். குஜாதி பஞ்சகிரகங்களுக்கும் இராகு கேதுகளுக்கும் முன் சொன்ன கலைபாக இராசிகளை சகாப்தத்திற் றள்ளினவருஷம் 1368-க்குத் தள்ளி நின்ற வருஷம் கொண்டு தான் பார்க்கவேண்டின வருஷமளவும் எண்ணி ஆக இத்தனைவருஷம் என்று கண்டு அத்தனை வருஷத்திலே அவரவர்க்குச் சொன்ன கலைபாக ராசியை அந்த வருஷத்திற் பெருக்கும் வகை கலையைப்பெருக்கிப் பாகமாக்கவும், பாகத்தைப்பெருக்கி இராசியாக்கவும், இராசியைப்பெருக்கி மண்டலமாகிய 12-ற் கழித்து நின்ற கலைபாக இராசியை ஆண்டுத் துருவமென்று வீமேசுரமூர்த்தி போதித்தனவாம் எ-று. 57

இதுவுமது

போதுசேய்கலைபாரூறுபாகமேழ்
 போக்நராசியாறும்பூண்டுருவமே
தூதுவன்கலைசுன்னைந்துபாகமாந்
 துய்யராசியேழாகுஞ்சுரர்குரு
வோதுசுன்கலைபாகமேழ்ராசிநான்
 குற்றசேறுபாகநான்கிராசியே
யாதவன்மகனேழ்பாகராசிமுன்
 றாவினுக்குத்துருவமிங்கில்லையே.

இ-ள். முன் வருஷந்தோறும் கூடின துருவத்தில் எந்நாளுங் கூட்டுந் துருவம் குஜனுக்குக் கலை-36 பாகம்-7 இராசி-6 புதனுக்குக்கலை பூஜ்யம் பாகம்-5 இராசி-7 குருவுக்குக் கலை பூஜ்பம் பாகம் 7 இராசி-4 சுக்கிரனுக்குக் கலை பூஜ்பம் பாகம்-6 இராசி-4 சனிக்கு கலை பூஜ்பம் பாகம்-7 இராசி-3 இராகு கேதுவுக்கு முன் வருஷந்தோறும் வரும் துருவமேயொழிய வேறில்லை எ-று. 58

இதுவுமது

மிக்கசெவ்வாய்முதற்பணியிறதாய்
 மேடமாதிமுதல்வாரமாதியாய்
தக்கசேய்கலைபாகமார்பாகமே
 சாற்றுநாற்பத்திரண்டாமினிப்புதன்
புக்குபாகநாற்பத்துமுக்காலுக்குப்
 புரியுமொன்றங்கலையாகும்பொன்னுமே
சுக்கிரனென்றரையோடறுகலை
 சுன்னிரண்டுகலையாகுமூன்றுமே.

இ-ள். முன் வருஷந்தோறும் வரும் துருவமும் கூட்டுந் துருவமும் இரண்டு வகையு மொன்றாக ஏறிட்டு சித்திரைமாத முதல்

குஜன் முதல் இராகுவீறுப் அவரவர்க்கு நாள்தோறும் கூட்டும் வகை குஜனுக்கு நாள் 1-க்கு அரைப்பாகம் 42-நாளைக்கு ஒரு பாகம் விழுக்காடு கூட்டவும், புதனுக்கு பாகம் நாற்பதேமுக்கால் நாளைக்கு ஒரு பாகங் கூட்டவும் குருவுக்கு நாள் 1-க்கு 5-கலை கூட்டவும் சுக்கிரனுக்கு நாள் 1-க்கு ஒன்றரைபாகமும் 6-கலையுங் கூட்டவும் சனிக்கு நாள் 1-க்கு 2-கலைகூட்டவும் இராகு கேதுகளுக்கு நாள் 1-க்கு 3-கலை கூட்டவும் எல்லாம் அவரவர்க்குக் கூட்டிக் கலைபாக ராசியை அடைவே கண்டு அம்மதிகாரி பின்னையும் ஒருபடி கட்டி இச்கண்டபடியிலும் மேற்படி கீழ்ப்படி என்று வைப்பது எ-று. 59

இதுவுமது

மெத்துக்கீழாம்படியிலெடுப்பது
மிக்கசெவ்வாய்முதற்பணியீறதா
யொத்தசெய்பாகநாலேழிராசிமூன்
றேதுமோரேழிராசியாறுண்குரு
சுத்தமாரிமூன்றரை தன்பாகமே
சொல்லுவமாறிருபத்தாறிராசியே
மூத்தவீமேசர்பூண்கலைமுப்பது
மானபாகம்பத்தொன்பதாஞ்சித்தியே.

இ-ள். கீழ்ப்படியிற் குஜாதிமுதல் இராகுவீறுய் அவரவர்க்கு எடுக்கும்வகை குஜனுக்கு 28-பாகமும் 3-இராசியும் எடுத்துப் போட்டுத் திரிபூசை கொள்ளவும், புதனுக்கு 7-இராசி எடுத்துப் போட்டுத் திரிபூசை கொள்ளவும், குருவுக்கு 6-இராசி எடுத்துப் போட்டுத் திரிபூசை கொள்ளவும், சுக்கிரனுக்கு 3-இராசியெடுத்துப் போட்டு திரிபூசை கொள்ளவும், சனிக்கு 27-பாகமும் 7-இராசியும் எடுத்துப்போட்டு திரிபூசை கொள்ளவும், இப்படி அவரவர்க்கு எடுக்கும் வகை எடுத்துப்போட்டு நின்ற கலைபாக ராசியை அவரவர்க்கு அசாதி துலாதிபறிந்து திரிபூசை கொள்ளுவதென்றறிக. இராவுக்கு முன்கண்ட கலைபாக ராசியில் 19-பாகம் எடுத்துப்போட்டு நின்ற கலைபாக இராசியில் இராகுநிற்பன் மீனுடு ஆதியாகத் தலை கீழாகப் பார்க்கவும் இராகு நின்ற 7-ம் இராசியில் அந்தக் கலைபாக ராசியில் கேது நிற்பன் எ-று.
60

இதுவுமது

சித்திரைமுதற்சாரிபபுக்தியைத்
தெரிந்துபார்க்கின்றநாளளவெண்ணியே

யொத்தபாகத்திலாண்டுபாகமொழித்
துன்னுமேகலையோரெட்டுதள்ளியே
மெத்தநாளெழுபத்தொன்றுக்கொன்றுதண்
மீதிசெய்சுன்னியாழமெடுப்பதே
வைத்தசட்பூசையென்றுங்கொள்வது
மாரிமான்முப்பூசைகொள்ளத்தக்கதே.

இ-ள். அரக்க மத்திமை எடுக்கும்வகை குஜாதி பஞ்சக்கிரகங்களுக்கு அவரவர்களுக்குப் பார்க்கவேண்டின நாளளவும் எண்ணி இத்தனை யென்றுகண்டு அத்தனை வாரமும் அத்தனை பாகமென்றறிக அந்தப் பாகத்தில் 8-கலைபுந் தள்ளி 71-நாளால் ஒரு பாகம் விழுக்காடு தள்ளி நின்ற பாகத்தைக் குஜன் சநி குரு இந்த மூன்றுபேருக்கும் தனித்தனி சட்பூசை கொள்ளும்போது கீழ்ப்படியில் எடுத்துப் போடவும் புதனுக்கும் சுக்கிரனுக்கும் இந்த அர்க்கமத்திமைக் கண்ட பாகத்தைக் கலைபாக ராசி அடைவாய் வைத்து இரண்டுபடி கட்டி கீழ்ப்படியிலே முன்னெடுக்கச்சொன்ன பலனை எடுத்துப்போட்டு நின்றது அசாதி துலாதி அறிந்து பூசைகொள்வது எ-று. 61

இதுவுமது

தக்கமுப்பூசைசட்பூசையாபினுஞ்
சாற்றுவேன்பூசைகோடியென்றேயெடு
தொக்குமேபூசைமீதியிற்கோடியீ
துற்றராசிகள்பாகங்கலைகளு
மிக்கவத்தொகைமுன்பூசையிற்றள்ளு
மீந்தவோரைபாகங்களாடாதிகள்
புக்குமேற்படிகோலாதிகூட்டுமே
புனிதர்வீமேசர்தாளுறப்போற்றுமே.

இ-ள். கீழ்ப்படியில் அவரவர்க்கெடுத்து மீந்த கலைபாக இராசியை அசாதி துலாதி அறிந்து திரிபூசை கொள்ளும் வகை பூசை என்றுங் கோடியென்று மும்மூன்று இராசி யெடுக்கவும் பூசையினுற்றால் இருந்த இராசிக்கு வரும் பாசமும் பாகமீந்தால் பாகத்துக்கு வருங்கலையும்பெறும், கோடியினுற்றால் கோடியினுற்ற கலைபாக இராசி மாத்திரம் முன்பூசையில் வாங்கிப்போட்டு மீந்த இராசி பாகமாம் பாசம் கலைபாமென்றுசொன்ன பலனை அறியவும் இராசி 12-மே பூசையென்றும் மும்மூன்றிராசி கோடியென்னும் 3-இராசி இந்தப்படி திரிபூசைக்குப் பார்க்கவும் இனி சட்பூசைக்குப் பூசை என்றும் கோடி என்றும் அவ்வாறிராசியாய் எடுக்கவும் பூசையினுற்ற இராசிக்குவரும்

பாகத்துக்கு வரும் கலையும் பெறுமென்றறிக. இந்தப்பலனை முன் மேஷாதி 6-க்குள்ளானல் மேற்படியில் வாங்கிப்போடவும் துலாதியானல் கூட்டவும் திரிபூசை சட்பூசைக்கும் இந்தடைவாம் எ-று. 62

இதுவுமது

போற்றுசெய்முப்பூசைராசியொன்றுக்குப்
போந்தபாகமாளுங்கலைபன்னிரண
டேற்றபாகம்பன்னொன்றிராசியி
லிசையுமக்கலையீரைந்ததாகுமே
தோற்றுமோரைமூன்றுக்குப்பன்மூன்றதாந்
துலங்குபாகங்கலைநாலுசட்பூசை
யேற்றராசியொன்றும்பனிரண்டதா
மெய்துபாசங்கலையறுநான்கதே.

இ-ள். குஜனுக்கு திரிபூசையில் ஒரு இராசிக்குப்பாகம் 6-ம் ஒரு இராசியில்பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-10 இரண்டாம் இராசிக்குப்பாகம் 11 இரண்டிராசியிற் பாகமீந்தால் பாகம 1-க்கு கலை 13-ம் இராசிக்குப் பாகம்-13-2-ம் இராசியிற் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-4 இது குஜன் திரிபூசை யென்றறிவது குஜன் சட்பூசை கொள்ளும் வகை இராசி 1-க்கு பாகம்-12 இராசி ஒன்றிற் பாகம் 1-க்கு கலை-24 எ-று. 63

இதுவுமது

சேறுமோரைரெண்டிருபத்துமூன்றதாஞ்
செய்யபாகங்கலையிருபத்திரண்
டேறுமூன்றோரைமுப்பத்துமூன்றதா
மிலங்குபாகவகலைபாமிருபதே
வீறுநாலோரைமுப்பதொடொன்பதாம்
விரும்புபாசங்கலைபன்னிரண்டதாங்
கூறுநாலரையோரைக்குநாற்பதாங்
குலவுபாகங்கலைநாலுங்கொள்ளுமே.

இ-ள். 2-இராசிக்கு 23-பாகமாம் 2-இராசியிற் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-22 3-இராசிக்குப் பாகம்-33 3-இராசியிற் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-20 இனி 4-இராசிக்குப் பாகம்-39 4-இராசியில்பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-12 நாலரை இராசிக்குப்பாகம் 40 நாலரை இராசியில்பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-4 எ-று. 64

இதுவுமது

கொள்ளுமோரைகளைந்துக்குமுப்பத்தேழ்
குலவுபாசங்கலையிருமூன்றதாம்

விள்ளுமோரையைந்தேகாலெண்ணுன்கதர்
மிக்கபாகங்கலையன்பத்தாரதா
முள்ளவைந்தரைக்காதலையைந்ததா
முற்றபாகமெழுபத்திருகலை
தெள்ளுமைந்துமுக்காலுரைபத்துரா
றேறுமெண்பத்தெட்டாங்கலைசேய்க்கண்ணே.

இ-ள். 5-இராசிக்குப் பாகம்-37 இராசி 5-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-6 இனி இராசி $5\frac{1}{4}$-க்கு பாகம்-32 இராசி $5\frac{1}{2}$-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-56 இராசி ஐந்தரைக்குப் பாகம்-25 இராசி ஐந்தரையில் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-72 இராசி ஐந்தேமுக்காலுக்கு பாகம்-14 இராசி ஐந்தேமுக்காலில் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-88 இது குஜனுக்கு சட்பூசை ஒன்பது தானமாகப் பார்ப்பது எ-று. 65

## புதனுக்கு திரிபூசை

எண்ணும்புந்திமுப்பூசைராசியொன்றுக்
கிலங்குபாகமிரண்டாகுநாற்கலை
நண்ணுமோரையிரண்டுக்குமூன்றதா
நாடுபாகங்கலையிரண்டாகுமே
திண்ணமோரைகண்மூன்றுக்குநாலதாஞ்
செப்பபாகங்கலைரெண்டுசெப்புமே
யண்ணல்வீமேசுரார்புலவன்பூசை
யறுவகைக்குமடைவாய்ந்துசொல்லுமே.

இ-ள். புதனுக்கு திரிபூசை பலனறியும்படி இராசி 1-க்கு பாகம் 2 இராசி 1-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-4 இராசி 2-க்கு பாகம் 3 இராசி 2-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-2 இராசி 3-க்கு பாகம் 4 இராசி 3-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-2 இது புதன் திரிபூசை பலனென்றறிக புதனுக்கு சட்பூசை பலனையும் சொல்லுமாறு வீமேசுரமூர்த்தி கடாட்சிப்பர் எ-று. 66

## புதனுக்கு சட்பூசை

ஆய்ந்தசாமன்முதலோரைக்கெட்டதா
மரியபாகங்கலைபதினறதாஞ்
சேர்ந்தவோரைரெண்டிற்பதினைந்ததாஞ்
செய்யபாகங்கலையீரேழதாம்
வாய்ந்தவோரைமூன்றுக்குநாலைந்ததா
மருவுபாகங்கலையொருபத்ததா
மீந்தவோரைநாலுக்கிருபத்திரண்
டினியபாகங்கலைநாலிசையுமே.

இ-ள். புதனுக்கு சட்பூசை அறியும்படி இராசி 1 க்கு பாகம் 8 இராசி 1 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 16 இராசி 2 க்கு பாகம் 15 இராசி 2 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 14 இராசி 3-க்கு பாகம்-20 இராசி 3-ல் பாகம் மீந்தால் பாகம் 1-க்கு கலை-10 இராசி 4-ச்கு பாகம் 22 இராசி 4 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 4 எ-று.

## புதனுக்கு சட்பூசையும் குருவுக்கு திரிபூசையும்

இசைந்தவோரையதைந்துக்கிரெட்ட தா
மெய்துபாகக்கலையாறுபுந்திமட்
டுசேந்தபொன்முப்பூசைராசியொன்றினுக்
குற்றபாகமூன்றுங்கலையாறதாம்
வசந்தவோரைரெண்டுக்கைக்துபாகமா
மருவுகாற்கலைமூன்றுமிராசியே
யசந்தபாகநாலாங்கலைரெண்டதா
மறுபூசைச்குவடைவுகள்சொல்லுவாம்.

இ-ள். புதனுக்கு இராசி 5 ச்கு பாகம் 16 இராசி 5 ல் பாகமீந் தால் பாகம் 1 க்கு கலை 6 இது புதனுக்கு சட்பூசையென்றறிக இனி குருவுக்குத் திரிபூசைபலன் இராசி 1 க்கு பாகம் 3 இராசி 1 ல் பாக மீந்தால் பாகம் 1 க்கு கலை 6 இராசி ரெண்டுக்கு பாகம் 5 இராசி ரெண்டில் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 4 இராசி 3 க்கு பாகம் 4 இராசி 3 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 2 இது குருவுக்கு திரி பூசைபலனென்றறிக இனி சட்பூசைக்குள்ள அடைவு சொல்லுவாம்.

## குருவுக்கு சட்பூசை

சொல்லுமோரையொன்றுக்கைந்துபாகமாந்
தொடர்ந்தபத்துகலைரெண்டிராசியே
செல்லுமொன்பதுபாகமெட்டாங்கலை
தேறுமூன்றுக்குப்பன்னொன்றுநாற்கலை
நல்லராசிநால்பாகம்பத்தாங்கலை
நாடிரண்டாமினியைந்திராசியே
வெல்லுமேழ்பாகமேகலையாறதாம்
வீமநாதர்திருவடிமேவுமே.

இ-ள். குருவுக்கு சட்பூசைபலன் இராசி 1 க்கு பாகம் 5 இராசி 1 ல் பாகமீந்தால்பாகம் 1 க்கு கலை 10-2 இராசிக்குப் பாகம் 9-2 இரா சியில் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 8 இராசி 3 க்கு பாகம் 11 இராசி 3 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 4 இராசி 4 ச்கு பாகம் 10 இராசி

4-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை 2 இராசி 5 க்குப் பாகம்-7 இராசி 5-ல் பாகமீந்தால் பாகம் 1-க்குக் கலை-6 இப்படி தெளிந்துக் கண்டவர் வீமேசுர மூர்த்திக்காளாவர் எ-று. 69

## சுக்கிரனுக்குத் திரிபூசையும் சட்பூசையும்

மேவுகார்முப்பூசைராசியேகமீன்
மிக்கபாகமொன்றுங்கலையொண்டதாம்
பாவும்ரெண்டோரைக்கொன்றரைப்பாகமே
பற்றுமுக்கலைமூன்றுமிராசியே
தாவுபாகமுமொன்றரைமுக்கலை
சட்பூசைமுதலோரைபன்மூன்றதா
மாவென்பாகவிருபத்தறுகலை
யையர்வீமேசுரரருள்கூறுமே.

இ-ள். சுக்கிரனுக்குத் திரிபூசை பலன் இராசி 1-க்கு பாகம் 1 இராசி 1-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-2 இராசி 2-க்கு பாகம் ஒண்ணரை இராசி 2-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-3 இராசி 3க்கு பாகம் ஒண்ணரை இராசி 3-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை 3 இது சுக்கிரனுக்குத் திரிபூசை பலன் இனி சுக்கிரனுக்கு சட்பூசை பலன் இராசி 1-க்கு பாகம் 3 இராசி 1-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை 26 இப்படி கிரகநிலை யறிவது எ-று. 70

## இதுவுமது

கூறுமோரையிரண்டைந்துபாகமுங்
கொள்ளுமேகலைநாலாறதோரைமூன்
றுருமேமுப்பதோடைந்துபாகமே
யமர்ந்தவான்கலையுமிருபத்ததாஞ்
சேருநாலோரைபாகநாற்பத்துநாற்
றிகழுமெண்கலையாருமேநாலரை
யோரைநாற்பத்துபாகமுமெண்கலை
யுற்றராசியோரைந்துக்குரைப்பதே.

இ-ள். இராசி 2-க்கு பாகம் 25 இராசி 2-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை 24 இராசி 3 க்கு பாகம் 35 இராசி 3 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 20 இராசி 4-க்கு பாகம் 44 இராசி 4-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை 8 இராசி நாலரைக்கு பாகம் 46 இராசி நாலரைக்கு பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 8 இனி உற்ற இராசி 5 க்கு சொல்லுவோம் எ-று. 71

## மேற்படி சட்பூசை 95

ஐந்துராசிக்குபாகமேநாற்பத்தைந்
தானநாற்கலையைந்தேகால்ராசிமேன்
முந்துபாகமுநாற்பத்தொன்றுங்கலை
முற்றுமெண்ணான்குமைந்தரைராசியே
யுந்துமுப்பத்துமூன்றுபாகங்கலை
யுற்றதேயறுபத்துநாலக்கின
மைந்துமுக்காலுக்கைநான்குபாகமா
மந்தமாங்கலை நூற்றுநான்கண்ணலே.

இ-ள். இராசி 5 க்கு பாகம் 45 இராசி 5 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 4 இராசி $5\frac{1}{4}$ க்கு பாகம் 41-$5\frac{1}{2}$ ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 32 இராசி $5\frac{1}{2}$ க்கு பாகம் 33 இராசி ஐந்தரையில் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 64 இராசி $5\frac{3}{4}$ க்கு பாகம் 20 இராசி $5\frac{3}{4}$-ல் பாகமீந்தால் பாகம் 1க்கு கலை 104 என்று. 72

## சனிக்குத் திரிபூசையும் சட்பூசையும்

அண்ணல்சுன்முப்பூசைராசியொன்றினுக்
கானபாகநாலெண்கலைரெண்டினுக்
கெண்ணல்பாகமெட்டாங்கலையெட்டதா
மிலங்கமூன்றினவபாகமீர்கலை
பண்ணல்சட்பூசைமுன்னோரைமூன்றதாம்
பாகமாறுகலையிருராசிமே
னண்ணல்பாகமைந்தாங்கலைநான்கதா
நம்பாரந்தொடுக்காடரைநாடுமே.

இ-ள். கிரகங்களுக்கெல்லாம் நாயகனாகிய இரவிக்குப் புத்திரனான சனிக்குத் திரிபூசையாவது இராசி 1 க்கு பாகம் 4 இராசி 1 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 8 இராசி 2 க்கு பாகம் 8 இராசி 2 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 8 இராசி 3-க்கு பாகம் 9 இராசி 3 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 2 இது திரிபூசை பலன் இனி சட்பூசை பலன் இராசி 1 க்கு பாகம் 3 இராசி 1 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 6 இராசி 2 க்கு பாகம் 5 இராசி 2 ல் பாகமீந்தால் பாகம் 1 க்கு கலை 4 இது நம்மை யாளுடைய வீமேசுரரை நாடிவரும் என்று.

## ஷை சட்பூசை.

நாட்டுமோரைமூன்றுக்கறுபாகமா
கண்ணுமேகலைரெண்டுநாலோரைமேல்

கோட்டுபாகமைந்தாங்கலைரெண்டதாங்
குலவுமைந்தோரைமுப்பாகநாற்கலை
கூட்டுமேனற்குசாதியைங்கோட்கண்முப்
பூசைகள்சட்பூசையும்புகன்றதைத்
காட்டுவார்க்குச்குருவாயருட்கடல்
கருணைகூர்ந்தமொடுக்காடராகுமே.

இ-ள். இராசி 3-க்கு பாகம்-6 இராசி 3-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-2 இராசி 4-க்கு பாகம்-5 இராசி 4-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-2 இராசி 5-க்கு பாகம்-3 இராசி 5-ல் பாகமீந்தால் பாகம் 1-க்கு கலை-4 இப்படி குஜாதி பஞ்சக்கிரகங்களுக்கும் திரிபூசை சட்பூசை பலன்களை ஆராய்ந்து பார்க்கும் பேரறிவாள ரிருதய கமலத்திலிருந்து சற்குருவாய் வீமேசுரர் அறிவின் கண்ணாக திருவருட் காட்சிப்பார் எ-று. 74

மேற்படி பூசைகளின் சோதனை

ஆகுஞ்சேய்சுன்னாசர்க்கும்பார்ப்பதும்
மவர்துருவமுமாண்டாண்டிலக்கமு
மாகப்பார்க்கும்வருடமேடாதியு
மறிநதுகூட்டினலக்கம்போற்கீழ்ப்படி
யாகவைத்துமுன்சொற்படிதள்ளியே
யந்தச்சேடமசாதிதுலாதிகண்
டாகுமுப்பூசைக்கீந்தோரைப்பாகமே
டாதிதள்ளித்துலாமாதிகூட்டுமே.

இ-ள். குஜன் சனி குரு இந்த மூன்று கிரகத்துக்கும் பார்க்கின்ற அடைவு அவரவர்க்கு எப்போதும் கூட்டுந் துருவமும் ஆண்டாண்டு வருந்துருவமும் பார்க்கவேண்டின வருஷத்துச் சித்திரைமாதமுதல் பார்க்கும் நாளளவும் அர்க்கமத்தியையென்று கூட்டுசிற வகையும் இரண்டுவகையுங்கூட்டி இரண்டுபடிகட்டி ஒருபடி மேற்படியாக வலப்புறத்தில்வைத்துஒருபடிகீழ்ப்படியென்று இடப்புறத்தில்வைத்து அந்தக்கீழ்ப்படியி லெடுக்கும் வகை குஜனுக்கு 3-இராசியும் 28-பாகமுமெடுத்துப்போடவும். சனிக்கு 7-ராசியும் 26-பாகமு மெடுத்துப் போடவும், குருவுக்கு 6-ராசி யெடுத்துபோடவும், இப்படி அவரவர்க்குப் பார்க்கும்போதும் அவரவர் கலைபாக ராசியிலே தனித்தனியே யெடுத்துப் போட்டு மீந்தசேஷம் அசாதி துலாதியறிந்துதிரிபூசை கொண்டு கொண்ட பலனை முன் மேஷாதியானால் மேற்படியில் வாங்கிப்போடவும் துலாதியானால் மேற்படியிற் கூட்டவும் எ-று. 75

இதுவுமது

கூட்டுமேப்பலன்போலிடுகட்டியே
குலவுகீழ்ப்படியிற்பகலோன்கொளு
நாட்டுபுத்தியெடுத்தவைமீந்ததை
நல்லசாதிதுலாமாதிகண்டுபின்
வீட்டுசட்பூசைக்கிந்தேரைப்பாகமே
லெடுமசாதிதுலாமதியேற்றியே
பூட்டுமவ்வோரையிற்கோட்கள்போந்திடும்
புனிதர்வீமேசர்தாளைப்புகழுமே.

இ-ள். முன் திரிபூசைகொண்டு கூட்டின மேற்படி மதிகாரி இரண்டு படிகட்டி மேற்படி கீழ்ப்படியென்று வைத்து கீழ்ப்படியில் சட்பூசை கொள்ளும் வகை இரவி புத்தியை யெடுத்துப்போட்டு மீந்த கலைபாக ராசியை அசாதி துலாதிகண்டு சட்பூசைகொண்டு கொண்டபலனை முன் மேஷாதி ஆறுக்குளானால் பூசைகொண்ட பலன் மதிகாரி மேற்படியில் வாங்கிப்போடவும் துலாதி ஆறுக்குளானால் சட்பூசை கொண்ட பலனை மேற்படியில் கூட்டவும், கூட்டின மேற்படியில் கலைபாக இராசியிலே இந்தக் கிரகங்கள் தோன்றுமென்று மனம்புத்தி அசங்காரம் சித்தம் சிவகாரணமான தவபுத்தியினாலே 76
யூகித்தறிவது எ-று:

இதுவுமது.

புகழ்ந்தசுக்கிரன்புந்திக்கும்பார்ப்பது
போந்தவாண்டாண்டிற்பூணும்பலன்களுந்
திகழ்ந்தமுன்னூட்டுருவமுமவ்வவர்
சித்திரைமுதற்சேரும்பலன்களு
மகிழ்ந்துகூட்டிவைத்தேயிதுவன்றியு
மருவுசூரியபுத்தியைமட்டுமே
யுகந்துவைததங்கெதிர்ப்படிகட்டிக்கீ
ழோரைமூன்றுநீர்புந்திக்கேழ்தள்ளுமே.

இ-ள். சுக்கிரனுக்கும் புதனுக்கும் பார்க்கிற அடைவும் ஆண்டாண்டுதோறும் வருந்துருவமும் எப்போதுங் கூட்டுந்துருவமும் அவரவர்க்குச் சித்திரைமீ முதல் பார்க்கவேண்டின நாளளவுங் கூட்டும் பலன்களும் ஈதெல்லாமாசக் கூட்டிக் கலைபாக ராசியடைவே எறிட்டு வேறே உயரவைக்கவும் இதுவன்றியில் இரவி புத்தியை மட்டும் இரண்டுபடி கட்டிக் கீழ்ப்படியில் சுக்கிரனுக்குப் பார்க்கும்போது 3-ராசி எடுத்துப்போடவும் புதனுக்குப் பார்க்கிறபோது 7-இராசி
எடுத்துப்போடவும் எ-று. 77

இதுவுமது

தள்ளிமீந்தவைராசிபாகங்கலை
தகர்துலாதியறிந்துதிரிபூசை
கொள்ளவப்பலன்ராசிபாகங்களர்ங்
குறைக்கமேடாதிகோலாதிகூட்டியே
தெள்ளிரண்டுபடிசட்டுக்கீழ்ப்படி
சென்றவாண்டுத்துருவமேடாதிகள்
விள்ளுமேடாதிகோலாதிகண்டதி
மிக்கசட்பூசையாய்ந்துவிரும்புமே.

இ-ள். புதனுக்குஞ் சுக்கிரனுக்கும் முன் கீழ்ப்படியில் எடுத்து மீந்ததைக் கலைபாகராசி யடைவேகண்டு அசாதி துலாதி யறிந்து திரிபூசை கொண்டு கொண்ட பலனை மேஷாதிக்குளானல் மேற்படியிலெடுத்துப்போடவும், துலாத்திற்குள்ளானல் மேற்படியிற் கூட்டவும் கூட்டின மேற்படியை இரண்டு படிகட்டி கீழ்ப்படியில் முன்வருஷம் மாதத்துருவம் உயரவைத்த பலன் மாத்திரம் மீந்த இரண்டாம்படியிலெடுத்துப்போட்டு நின்ற கலைபாக ராசியை அசாதி துலாதி அறிந்து சட்பூசை கொள்வது எ-று. 78

இதுவுமது

விரும்புசட்பூசைமீந்தோரைபாகமா
மிக்கபாகங்கலையாமசாதிதன்
வருந்துலாதுகூட்டுப்புகர்புந்திபு
மன்னுமவ்வோரைபாகங்கலையுறு
மரும்பனிக்குவருடத்துருவமவ்
வாண்டுசித்திரைமுன்றினமுக்கலை
யுரங்கொள்பாகமும்பததென்பதோடரை
யொழிக்கமீனதிமேடாந்தமோங்குமே.

இ-ள். சட்பூசை கொண்ட பலன் முன் மேஷாதிக்குளானல் மேற்படியில் வாங்கிப் போடவும், துலாதி ஆறுக்குள்ளானல் மேற்படியிற் கூட்டவும், அந்த மேற்படியை கலைபாகபிராசி யடைவே கண்டு அந்த ராசி பாககலையிலே புதன் சுக்கிரன் தோன்றுமென்றறிக. இனி இராகுவிற்கு முன்னுடோறுங் கூடின வருஷமும் அவ்வாண்டு சித்திரைமீ முதல் தனக்குப் பார்க்க வேண்டின காளளவும் நாள் 1-க்கு 3 கலை விழுக்காடு கூட்டிக் கண்ட கலைபாக இராசியில் 19 பாகமும் 30 கலையும தள்ளிப்போடுவது எ-று. 79

இதுவுமது

ஒழிவிலாதகிருபாசமுத்திரமா
மொப்பிலாவுபகாரதேவுத்தம

னழகர்பூடணமவ்வோரைசாருமே
யானமீனுதிமேடாந்தமாகவே
யெழுமதக்கொள்ளிடப்பிரதட்சண
மேழிற்கேதுதிக்கோர்மூன்றில்வட்டமே
தழுவதூமமைந்திற்றனுவொன்பதிற்
றக்கநுட்பம்பன்னொன்றாய்விரும்புமே.

இ-ள். ஒழிவிலாத கிருடைக்கடலான உதார தேவோத்தமன் வீமேசுரர் பூணாமான இராகு முன்சொன்ன இராசிபாக கலையிலே நிற்பன் மீனுதியாய் மேஷாந்தமாக அப்பிரதட்சணமாய் வருவன், இந்த இராகு நின்ற 7-ம் இராசியில் அந்த இராசி பாக கலையிலே கேது நிற்பன, இனி இரவி நின்ற இராசிகளுக்கு 3-ம் இராசியில் பரிவேஷம் நிற்கும், இரவிக்கு 5-ம் இராசியில் தூமம் நிற்கும், இரவிக்கு 9-ம இராசியில் இந்திரதனுசு நிற்கும், இரவிக்கு 11 ம் இராசியில் நுட்பம் நிற்கும் கிரகங்கள் நிலை இப்படி அறிவது எ-று. ௪0

தூமாதி பஞ்சக்கிரகநிலை அறியும்படி

விரும்புசெங்கதிர்செற்றிங்கடேதிமேன்
மிக்காசிநால்பாகம்பன்மூன்றுற
நிரம்புதூமமத்தான்மண்டலங்களை
நின்றதேவிதிபாதழதனுடன்
வரம்பிராசிகளாறிடவட்டமாம்
வட்டத்தான்மண்டலங்களைவான்சிலை
பொருரும்பல்பாகம்பன்னேழுறக்சேதுவாம்
பூட்டமுன்போற்புனிதாருளுமே.

இ-ள். இரவி மேஷமுதல் சித்திரைமீ முதலாய் கதமாதம் கதவாரம் கதநினத்துடன் 4-இராசியும் 13-பாகமுங்கூட்டி மேஷத்தின் சென்ற இராசியை ஒன்றால் கார்த்திகைக்காலென்று கழித்த அந்தத்திலே தூமம் தூமத்துக்குக் கூடின இராசியைக் கொண்டு மண்டலமாகிய 12-ல் கழித்து நின்ற இராசி மேஷமுதலாய்க் கூட்டிவைத்த அந்தம் கலைபாக இராசியிலே விதிபாதம் நிற்கும் விதிபாதத்திற்குக் கூடின கலைபாக ராசியுடனே 6-இராசி கூட்டி அற்றதன்மேல் பரிவேடமாகிய வட்டம் நிற்கும் வட்டத்திற்குக்கூட்டின கலைபாக இராசியைக்கொண்டு மண்டலத்திற் கழிக்க நின்ற இராசி மேஷமுதலாய் அற்றதன்மேல் கலைபாகங்களிலே இந்திரதனுசு நிற்கும், இந்திரதனுசுக்குக் கூடின கலைபாக இராசியுடனை 17-பாகங் கூட்டிக் கண்டதொகை யந்தத்திற் கேதுநிற்கும், அத்துடன் மேஷாதி ஒரு இராசி கூட பூர்வத்தில் இரவி கதமாதம் கதினம்போல நிற்கும், இரவி

1-க்கு இராசி 30-வாரமும் 30-பாகமென்றறிக. விகலை 60-கொண்டது கலை, கலை 60-கொண்டது பாகம், பாக 30-கொண்டது ராசி, ராசி 12-கொண்டது ஒரு மண்டலம் என்றறிந்து தூமாதி முதலான பஞ்ச கிரகங்களுக்கும் இரவி நின்ற நிலையிலே அவரவர் நின்ற ஸ்தானங்க ளறியும்படி குஜாதி பஞ்சக்கிரக முதலாகிய 12-ராகாசி நிலையும் முடிந்தன இனி நட்பாட்சி உச்சம் பகை நீசம் சொல்லுவோம் எ-று.

## இரவிக்கும் மதிக்கும்

அருணநட்பர்பொன்விற்கயல்சிங்கமே
யாட்சியாடுச்சநீசங்கோன்மற்றெலா
மருவலார்மதிநட்பிறைமார்சிலை
மங்கையாழ்மீன்மனையாட்சிகொண்டலே
கருதும்விமேசர்வாகனமுச்சந்தேள்
கடியநீசமாமற்றதுகோட்களும்
பொருதிராசிகளாந்தும்பகைஞரே
புனிதர்நந்தொடுக்காடரைப்போற்றுமே.

இ-ள். இரவிக்கு நட்பு குரு தனுசு மீனம், ஆட்சி சிங்கம், உச்சம் மேஷம், நீசம் துலாம், மற்ற இராசிகளும் கிரகங்களும் பகை என்றறிக மதிக்கு நட்பு குரு புதன் தனுசு கன்னி மிதுனம் மீனம் ஆட்சி கர்க்கடகம், உச்சம் ரிஷபம், நீசம் விருச்சிகம், மற்றக் கிரகங்களும் இராசிகளும் பகை எ-று. 82

## குஜனுக்கும் புதனுக்கும்

போற்றுசேய்க்குறவாம்புகர்புந்தியும்
பூவையாழ்சேவினியாட்சியாடுதே
ளேற்றவுச்சங்கலையெண்டுநீசமற்
றெய்துகோளுமிராசிகளும்பகை
சாற்றுமாற்கைந்துகோளெட்டிராசியுந்
தக்கநட்பாட்சிகன்னியாமுச்சிபெண்
டோற்றநீசமீன்வெய்யோனரிபகை
துய்யவிமேசர்தாளைத்துதியுமே.

இ-ள். குஜனுக்கு நட்பு சுக்கிரன் புதன் கன்னி மிதுனம் மீனம் ஆட்சி மேஷ விருச்சிகம் உச்சம் மகரம் நீசம் கர்க்கடகம். மற்றகிரகங்களும் மற்ற இராசிகளும் பகையென்றறிக, புதனுக்கு நட்பு குஜன் குரு சுக்கிரன் சநி மதிமேஷம் விருச்சிகம் கர்க்கடகம் துலாம் தனுசு மகரம் கும்பம் ரிஷபம் ஆட்சி மிதுனம் உச்சம் கன்னி நீசம் மீனம், மற்றக்கிரகமும் இராசியும் பகை எ-று. 83

## குருவுக்கும் சுக்கிரனுக்கும்

துதித்தபொன்னட்புச்சூரியன்மால்புகர்
சோமன்சுன்விடையாழரிகன்னிகோல்
விரித்தசாலாட்சிவிற்கயலுச்சங்கார்
விரும்புமாநீசங்தேண்மறிசேய்பகை
மதித்தசிதநட்பால்பொன்னீலன்மான்
மறிகுடங்தேள்யாழ்மான்றனுவாட்சிகோல்
பதித்தசேவுச்சமீனிசம்பெண்பகை
பரமர்வீமேசர்தம்பதம்விடதே.

இ-ள். குருவுக்கு நட்பு இரவி புதன் சுக்கிரன் சனி, மதி ரிஷபம் சிங்கம் கன்னி மிதுனம் துலாம் கும்பம் ஆட்சி தனுசு மீனம் உச்சம் கர்க்கடகம் மகரம் நீசம், மற்றக் கிரகங்களும் இராசிகளும் பகை என்றறிக. இனி சுக்கிரனுக்கு நட்பு குஜன் குரு சனி புதன் மேஷம் விருச்சிகம் மகரம் கும்பம் மிதுனம் தனுசு ஆட்சி துலாம் ரிஷபம் உச்சம். மீனம் நீசம் கன்னி மற்றக் கிரகங்களும் இராசிகளும் பகை எ-று. 84

## சனிக்கும் பாம்புக்கும்

வீடுகந்தகுருவீமநாதர்தாள்
விரும்புசுன்னட்புபொன்புதன்வெள்ளியுங்
கூடும்வின்மீனரிவையாழாட்சிமான்
கும்பமுச்சங்சோலாடுநீசம்பகை
வாடும்வீமேசுரர்பணிநட்புவின்
மகரம்யாழ்சோன்மகண்மீனமாட்சிசா
னீடுதேளுச்சஞ்சேநீசமாடளி
நெடியகான்மாப்பகையினின்மன்னுமே.

இ-ள். சநிக்கு நட்பு வியாழம் புதன் சுக்கிரன் தனுசு மீனம் கன்னி மிதுனம் ஆட்சி மகரம் கும்பம் உச்சம் துலாம் நீசம் மேஷம் மற்றக் கிரகங்களும் இராசிகளும் பகையென்றறிக. பாம்புக்கு நட்பு தனுசு மகரம் மிதுனம் கன்னி துலாம் மீனம் ஆட்சி கும்பம் விருச்சிகம் நீசம் ரிஷபம், மற்ற இராசிகள் பகை எ-று. 85

## உச்சம் அத்துச்சம் நீசம் அதிநீசம் அறியும்படி

மன்னுமெங்கள்வீமேசர்மகிழவே
மருவுமேடமுதன்மீனமீறுகொண்
முன்னவன்மதியூர்சோள்பொன்றாமமான்
முடவன்பாம்புதனுசேநுட்டம்புகர்

துன்னுமுச்சமாமத்துச்சம்பத்துடன்
றுய்யமூன்றைந்துமூவைந்திருபது
மென்னுநாலேழிருபத்தோர்சூரிய
னிந்தபொன்புதன்சுன்னெரிவெள்ளியே.

இ-ள். உச்சமறியும்படி இரவிக்கு மேஷம், பரிவேடத்திற்கு மிதுனம், குருவுக்குக் கர்க்கடகம், தூமத்துக்குச் சிங்கம், புதனுக்குக் கன்னி, சனிக்குத் துலாம், இராகுவுக்கு விருச்சிகம், இந்திரதனுசுக்கு தனுசு, குஜனுக்கு மகரம், நட்பத்துக்குக் கும்பம், சுக்கிரனுக்கு மீனம், இனி அத்துச்சம் அறியும்படி இரவிக்கு மேஷத்தில் 10-ம் பாகம், மதிக்கு ரிஷபத்தில் 3-ம் பாகம் குருவுக்கு கர்க்கடகத்தில் 5-ம் பாகம், புதனுக்குக் கன்னியில் 15-ம் பாகம், சனிக்குத் துலாத்தில் 20-ம் பாகம், குஜனுக்கு மகரத்தில் 28-ம் பாகம், சுக்கிரனுக்கு மீனத்தில் 27-ம் பாகம் என்றறிக, இனி அதிநீசம் அறிவது அந்தந்தக் கிரகங்கள் உச்சராசிக்கு 7-ம் இராசியில் கிரகங்கள் வருகிறபோது அவரவர்க்குச்சொன்ன பாகங்களில் அதிநீசம் எ-று. 86

## உதயவலிது

விளங்குவீமேசர்மெய்வடிவானசேய்
வெய்யவன்சுன்பிறகுடைவெள்ளிமால்
களங்கில்பொன்பணிகண்சிரங்கேதுவெண்
கதிரவன்கடைவால்வலிகாணுமே
வளங்கொண்மேடமெருதளிமான்சிலை
வருபிறகுடைமீனவாற்றலையுமாந்
துளகொள்யாழரிபெண்டுலைதேள்குடந்
துய்யதாமபகன்முன்சிரஞ்சொல்லுமே.

இ-ள். சோதிடமயமான வீமேசரிட நிர்மலஸ்வேத விந்துவினாற் பேரொளிமயமான குஜன் இரவி சனி இவர்கள் பிருஷ்டோதய கிரகங்கள், சுக்கிரன் புதன் குரு இராகு இவர்கள் சிரோதயக் கிரகங்கள், கேது மதி இவர்கள் சிரபிருஷ்டோதய கிரகங்கள், மேஷம் ரிஷபம் கடகம் மகரம் தனுசு இவை பிருஷ்டோதய இராசிகள். மீனம் சிரபிருஷ்டோதயராசி, மிதுனம் சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் கும்பம் இவை சிரோதயராசிகள் எ-று. சிரோதயம் தலையாலுதிப்பது, பகற்கண் உடையது ஆதலால் பகல்வலிது, பிருஷ்டோதயம் வாலாலுதிப்பது இராக்கண் உடையது ஆதலால் இராவலிது, சிர பிருஷ்டோதயம் தலையும் வாலுமாய் உதிப்பது அந்திக்கண் உடையது ஆதலால் அந்திவலிது எ-று. 87

## கால் அறியும்படி

சொல்லுபேரருளாயவீமேசர்கண்
　　சுன்னவன்குசனுற்பதந்து துவ
னல்லபொன்புகர்பா தவுபயமே
　　நாகமிந்துவுநற்பலகாலதாம்
வில்லுமேடமரிவிடைநாலுதாள்
　　வீணைகோல்பெண்குடமிவைரெண்டுதாள்
வல்லதேளளிதான்பலகாலதா
　　மகாமீனமும்வாய்ந்தபாவையே.

இ-ள். வீமேசர் கண்ணுகிய இரவி குஜன் சநி இவை நாற்கால், குரு சுக்கிரன் புதன் இவை ஒருகால், இராகு கேது மதி இவை பல கால், தனுசு மேஷம் சிங்கம் ரிஷபம் இவை நாற்கால், மிதுனம் கன்னி துலாம் கும்பம் இவை இருகால், விருட்சிகம் கர்க்கடகம் இவை பலகால், மகரம் மீனம் சிறகுக்கால் எ-று. 88

## கேந்திரங்களும் கேந்திரங்களால் சொல்வனவும் அறியும்படி

வாய்ந்தவீமேசர்தாளுறுநெஞ்சமே
　　மருவிலக்கினகேந்திரமுதயநீர்
பாய்ந்தகாலேழுபாடுச்சிபத்ததாம்
　　பரந்தகேந்திரபத்தினியிற்சிந்தனை
போந்தபாட்டாலிதவெதிரெட்சியாற்
　　புரிந்தநீர்க்கீழ்கனுநிலைபூணுமே
சேர்ந்தவாரூடத்தாலேகெடுதியுஞ்
　　செறிந்தமுட்டிகவிப்பினுற்செப்புமே.

இ-ள். உதயமாவது இலக்கினம் நீர்க்கீழாவது 4-ம் இராசி, பாடாவது 7-ம் இராசி, உச்சியாவது 10-ம் இராசி, ஷை உதயத்தால் எதிர்காலம்சொல்க, நீர்க்கீழால் கனுநிலை சொல்க, பாட்டால் இறந்த காலம் சொல்க, உச்சியால் நினைத்த சிந்தனை சொல்க, ஆரூடத்தாற் கெடுதி சொல்க, கவிப்பினுல் முஷ்டி சொல்க எ-று. 89

## இராசிவலிதும் கிரகவலிதும்

கவிக்கிசைந்தசழல்வீமநாதனைக்
　　கருதும்ராசியிருகாலுமெட்சியாம்
புவிக்குளீரிருகாற்களுமுச்சியேழ்
　　பூணுபல்சாற்பறவைநீர்போதுவார்
சவிக்கொண்மால்பொன்னுதயவலியரே
　　சசியுமாரியுநீர்க்கிழ்தருக்குவார்

சிவத்தசெய்சனிசெங்கதிருச்சியிற்
சிறந்தபாண்டிற்சனிநாகந்தேறுமே.

இ-ள். இருகாலிராசி உதயத்தில் வலிது, நாற்காலிராசி உச்சியில் வலிது, பலகாலிராசி பாட்டில் வலிது, பறவை இராசி நீர்க்கீழ் வலிது, புதன் குரு உதயத்தில் வலியர், மதி சுக்கிரன் நீர்க்கீழ் வலியர் சனி பாம்பு பாட்டில் வலியர், இரவி குசன் உச்சியில் வலியர் எ-று. சுக்கிரன் நீர்க்கீழிலன்றி உதயத்திலும் வலியன் என்றும், சனி பாட்டிலன்றி உச்சியிலும் வலியன் என்றும், கிரந்தாந்தரங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன எ-று. 90

## இராசிவடிவம்

தேறும்வீமேசுரர்க்கபிடேகமே
செய்பசால்குடங்கோற்றலைசெவ்வையாம்
வீறுமாண்பெண்ணுமாய்த்தடிதண்டுறு
மிக்கபெண்பாலிகைவிளக்சேந்துமே
கூறுவின்மேற்புருடன்குதிரைகீழ்
கூடுமான்றலைகூர்சுறுமீனமே
மாறிரண்டாய்க்கவிழ்வதெழுவதா
மற்றாசிகடந்தம்வடிவமே.

இ-ள். கும்பம் ஒரு புருஷவடிவாகிக் கும்பமேந்தி நிற்கும், கன்னி ஒரு கையில் பாலிகையும் ஒரு கையில் விளக்கு மேந்தி நிற்கும், தனுசு அரைக்குமேற் புருஷ வடிவும் அரைக்குக்கீழ் குதிரை வடிவுமாய் நிற்கும், மகரம் தலை மான்றலைபோலும் மற்றது சுறுமீன் போலுமிருக்கும், மீனம் இரண்டுமீன் கவிழ்வதும் எழுவதுமாயிருக்கும், மற்ற ராசிகள் தம்தம் வடிவமாயிருக்கும் எ-று. தம்தம் வடிவமாவது மேஷம் ஆட்டைப்போலவும், ரிஷபம் எருதைப்போலவுமிருக்கும், மற்றவைகளும் இப்படியேயாம் எ-று. 91

## நடப்பன பறப்பன தவழ்வன

வடிவிலாதபெரியவீமேசர்தாண்
மருவுதேளளிவைந்தேதவழ்வதாம்
படியுமான்றலைமீனம்பறவையாம்
பற்றிமற்றவைபாங்காய்நடச்குமே
கடியபாம்புமதியும்தவழ்ந்திடும்
கற்றமான்மேற்கருதிற்பறக்குமே
நடவுமோர்பதநாடுஞ்சநியனர்
நாட்டமற்றவர்நன்றாய்நடப்பரே.

இ-ள். விருச்சிகம் கர்க்கடகம் தவழ்வன, மகரம் மீனம் பறப்பன, மற்ற 8-ராசியும் நடப்பன, இராகு மதி தவழ்வன, புதன் பறப்பன, சனி ஒரு காலால் நடப்பன, மற்றக் கிரகங்களெல்லாம் நேரே நடப்பன எ-று. 92

## இராசிநிலையும் கோள்நிலையும் அரியும்படி

நடக்குமெங்கள்வீமேசுரர்நாமமே
நல்லவாழிபுவியுறக்கிழின்மேல்
வடக்குதெற்கிரண்டாய்மூலையேகமாய்
மருவுகீழ்த்திசையேருதிமன்னுமே
யடுத்தவெய்யவனுகாசமிந்துபா
ரானதாமரிபெண்ணுகுமம்புலி
கடக்கும்பானுயிரிந்துமெய்க்கண்ணதே
கதிருமொற்றைமதிரெண்டைகண்டதே.

இ-ள். இராசிநிலை கோள்நிலை அறியும்படி ஒக்க நிலத்திலே கிழக்கு நோக்கியிருந்து ஆழிபோல் வட்டமாகக்கீறி வட்டத்துக்கு நடுவாகக் கிழக்கு மேற்காக இரண்டு வரையும் தெற்கு வடக்காக இரண்டு வரையும் கீறி நாலுமூலையிலும் ஒவ்வொரு கீற்றுக்கீற பன்னிரண்டறையாக நிற்கும். இதில் கிழக்கு ரிஷபமுதலாக மேஷமீருக 12-ராசியும் அடைவே நிற்கும் என்பன இரவி ஆகாசம் மதி பூமி இரவி உயிர் மதிஉடல் மற்றெல்லாவற்றையும் இப்படிக்கண்டு சொல்வது எ-று. 93

## எதிர்க்கயிறு

கண்டபோருட்கண்டவீமேசர்தாள்
கருதுமேறுவேள்யாழ்விற்கடகமா
ணண்டுகோளரிசால்மகண்மீனமா
மாடுகோனுமெதிர்க்ககயிறுகுமே
திண்டிறற்கதிரோன்புகர்சேய்சனி
செய்யமால்பணிபொன்னவன்றிங்களாங்
கொண்டகீழிற்கொடிவிடையேமுதற்
கூறுநல்லோரைகோளெதிர்கூடவே.

இ-ள். ரிஷபத்துக்கு எதிர்க்கயிறு விருட்சிகம், மிதுனத்திற்குத் தனுசு, கர்க்கடகத்திற்கு மகரம், சிங்கத்திற்கு கும்பம், கன்னிக்கு மீனம், துலாத்துக்கு மேஷம் எதிர்க்கயிறென்றறிக. இரவிக்கு சுக்கிரன், குஜனுக்கு சனி, புதனுக்கு இராகு, குருவுக்கு மதி ரிஷபத்தை நேர்கிழக்காகக்கொண்டு எதிர்க்கயிறுபார்ப்பது எ-று. 94

## இரவி விதியும் ஆரூடக்கவிப்பும் அறியும்படி

கூடுநல்லுறவானவீமேசுரர்
  குண்டைதண்டளிகோலரிசொச்சைமே
லாடுமீன்றுலைபாயிழைபேறதா
  மானதேள்சிலைமான்குடம்வீணைமே
ஞூடுசூரியர்வீதிபட்டாரூட
  நயந்தலக்கமேநன்றுநயந்தொட
நீடுமத்தொகையந் தங்கவித்திடு
  நெடியகோளின்றிசையினிலையிதே.

இ-ள். ரிஷபம் மிதுனம் கர்க்கடகம் சிம்பம் இந்த 4-ராசியும் மேஷவீதியிலுதிக்கும், மேஷம் மீனம் கன்னி துலாம் இந்த 4-ராசியும் ரிஷபவீதியிலுதிக்கும், விருட்சிகம் தனுசு மகரம் கும்பம் இந்த 4-ராசியும் மிதுனவீதியிலுதிக்கும், இனி ஆரூடக்கவிப்பு அறியும்படி ஒருவன் வந்த ஆரூட இராசியைப் பிடித்து ஆதித்தன் உதய வீதி மட்டாக எண்ணிக்கண்ட தொகையை அப்போது உதிக்கிற ராசியிலே வைத்தெண்ண உதிக்கிற இராசி வினவினவன் ஆரூடத்தைக் கவிக்கு மென்றறிக. கவிப்பிராசிக் கதிபதியாகிய கோளினும் அப்போது வலிபெற்று நோக்கின கோளினும் நிறமுங் குலமும் தாதுவாகில் தாது, மூலமாகில் மூலம், சீவனாகில் சீவனென்று சொல்லுவது எ-று.

## உதயகவிப்பும் இராசி நோக்கும்

சுன்னபாவரென்றெண்ணுணுதெங்குமா
  யெய்தும்வீமேசுரரின்பத்தாண்டவ
கன்னிகோல்நயன்மேடமுமேறதாங்
  கடகந்தண்டரிகுண்டைநாலுந்தகர்
மன்னுதேள்சிலைமான்சான்மிதுனமா
  மருவுமெட்சிகொடைமுழுநோக்குமே
பூன்னபத்துநான்முக்காலைந்தொன்பது
  மரைதம்பன்னொன்றுமூன்றுகாலானதே.

இ-ள். கன்னி துலாம் மீனம் மேஷம் இவை உதயமாக ரிஷபம் கவிக்கும், ரிஷபம் மிதுனம் கடகம் சிங்கம் இவை உதயமாக மேஷம் கவிக்கும், விருட்சிகம் தனுசு மகரம் கும்பம் இவை உதயமாக மிதுனங் கவிக்கும், இனி நோக்கு அறியும்படி உதயமும் 7-ம் ராசியும் முழுநோக்கு, 10-ஆம் ராசியும் 4-ஆம் ராசியும் முக்கால் நோக்கு, 5-ஆம் ராசியும் 9-ஆம் ராசியும் அரை நோக்கு, 11-ஆம் ராசியும்

2-ஆம் இராசியும் கால்நோக்கு எ-று. 2-6-8-12-ஆம் இராசிகளைக் கூறுமையால் இவற்றிற்கு நோக்கில்லை என்பதும் கண்டுகொள்க எ-று.

## உதயவலிதும் கிரகவலிதும்

காலமேதுமிலாதவீமேசர்தாள்
    காணவேயெழுவார்கணுற்கண்டமு
மாலும்பொன்ராசியாதிபனேக்கினும்
    வந்துநிற்கினுமெட்சிவலியதா
நீலன்பாம்புகால்பொன்னரையாரழ
    னிறைந்தமுக்காலினீடவர்நோக்கமே
சாலமால்புகர்வெய்யவன்சோமனுந்
    தாழ்விலாமுழுநோக்கிற்றக்கோர்களே.

இ-ள். கிரகங்கள் நடக்கும் நாற்கண்டத்திலும் உதயத்தில் வியாழன் புதன் நிற்கினும் நோக்கினும் இலக்கினாதிபன் நிற்கினும் நோக்கினும் உதயம் வலிதாம், சனி பாம்பு $\frac{1}{4}$-நோக்கில் வலியர், குரு $\frac{1}{2}$ நோக்கில் வலியன், குஜன் முக்கால் நோக்கில் வலியன், இரவி புதன் சுக்கிரன் மதி இவர்கள் முழுநோக்கில் வலியர் எ-று. 97

## நோக்கினியல்பு.

தக்கசம்பந்தரைப்பெறுமையாரந்
    தம்பிரான்வீமநாதர்தாள்சாரவாழ்
மக்கள்சால்கோளரிவையாழ்செவ்வையே
    மானுமீனும்பறவையமேனேக்குமே
மிக்கதேளவிகீழ்மறியேறறி
    விற்குசன்கதிரோன்விலங்சாங்கடை
புக்குபொன்மதிமேர்புகர்புந்திகீழ்
    பொங்கராச்சனியோர்விழிபோதுமே.

இ-ள். மானிடராசியான மிதுனம் கன்னி துலாம் கும்பம் இந்த இராசியும் செவ்வை நோக்கும், விருட்சிகம் கர்க்கடகம் கீழ்நோக்கும், மேஷம் ரிஷபம் சிங்கம் தனுசு குஜனும் இரவி கடைக்கண்ணேக்கும், குருவும் மதியும் செவ்வை நோக்கும், சுக்கிரனும் புதனும் கீழ்நோக்கும், இராகுவுஞ் சனியும் ஒரு விழிநோக்கும் எ-று. 98

## நோக்குத்திசை

போதில்வீமேசர்தாடொழுமெல்லைகீழ்
    பூணும்வில்லரியங்கிதெற்கேறுமான்

கோதைதென்மேலியாழ்மழைக்கோல்குடங்
 கொண்டன்மாருதிநண்டுகுபோன்மே
லோதுமீன்மணியீசனேநோக்குமே
 யுதயர்சுங்கனெரிபணியூழ்சுதன்
மீதுவெண்பிறைமால்குருநோக்கமு
 மேவுமேவலங்கிழாகிமெய்த்தலே.

இ-ள். மேஷம் கிழக்குநோக்கும், தனுசு சிங்கம் தென்கிழக்கு நோக்கும், ரிஷபம் தெற்கு நோக்கும், கன்னி மகரந் தென்மேற்கு நோக்கும், மிதுனம் மேற்கு நோக்கும், துலாங் கும்பம் வடமேற்கு நோக்கும், கர்க்கடகம் வடக்கு நோக்கும், விருச்சிகம் மீனம் வட கிழக்கு நோக்குமென்க. இனி கிரகநோக்கு இரவி கிழவி நோக்கும், சுக்கிரன் தென்கிழக்கு நோக்கும், குஜன் தெற்கு நோக்கும், இராகு தென்மேற்கு நோக்கும், சனி மேற்கு நோக்கும், மதி வடமேற்கு நோக்கும், புதன் வடக்குநோக்கும், குரு வடகிழக்குநோக்கும் எ-று.

## ஆண் பெண் அலி ஒற்றை இரட்டை

மெய்த்தவீமேசுரர்விழியாரல்பொன்
 வீறுமாணரவொண்மதிவெள்ளிபெண்
டத்துசுன்கொடிமாலசிதாரமான்
 சால்விற்கோற்றகரானவீராறும்பெண்
சுத்தன்மால்மணிசுன்மழைரெட்டையாஞ்
 சூரியன்கனல்சோமனுமொற்றையே
வைத்ததேண்மறிசேவளிகன்னிமான்
 மருவுமொற்றைமற்றுறுமிரட்டையே.

இ-ள். இரவி குஜன் குரு ஆண்கோள், மதி இராகு வெள்ளி பெண்கோள், சனி கேது புதன் அலி, இனி இராசியில் மிதுனம் சிங்கம் தனுசு துலாம் கும்பம் மேஷம் இவை ஆண் இராசி, ரிஷபம் கர்க்கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இவை பெண் இராசி, குரு புதன் ராகு சனி வெள்ளி இரட்டை, இரவி மதி குஜன் ஒற்றை விருச்சிகம் மேஷம் ரிஷபம் கர்க்கடகம் கன்னி சிம்பம் ஒற்றை இராசி மிதுனம் துலாம் தனுசு கும்பம் மகரம் மீனம் இரட்டை இராசி எ-று.

## குலம் அறியும்படி

ஆறுகந்தணியாதிவீமேசர்கண்
 ஞானபன்னர்பொன்னம்புலியந்தணர்
தேறுமால்வணிகன்பணிவெள்ளியுஞ்
 செய்பருத்திரர்சேய்கதிகேதுவுஞ்

கூறுகிழரிவின்மறிவேந்தராங்
கோடியதேளளிமீன்மறையோர்களே
வீறுகோல்குடம்வாழ்வணிகேசரே
மிக்கசூத்திரர்பெண்மான்விடையுமே.

இ-ள். இரவியும் குஜனும் க்ஷத்திரியர், குருவும் மதியும் பிராமணர், புதன் வைசியன், இராகுவும் வெள்ளியும் சூத்திரர், சனியுங் கேதுவுங் கீழ்ப்பட்டஜாதி, இராசியில் சிங்கம் தனுசு மேஷம் க்ஷத்திரியர், விருச்சிகம் கர்க்கடகம் மீனம் பிராமணர், மிதுனம் துலாம் கும்பம் வைசியர், கன்னி மகரம் ரிஷபம் சூத்திரர் எ-று. 101

## நிறம் அறியும்படி

விடையர்வீமேசுரர்விழிசெம்மைசெய்
மிக்கசெம்மைமதிவெண்மைவெள்ளிபா
லுடைபாந்தணர்பொன்னுபர்பச்சைமா
லுற்றசுன்னரவங்கறுப்பொக்குமே
படைகொள்வில்லரிபாய்மறிசெம்மையாம்
பாண்டில்கட்டளைபன்னியவெண்மையே
யடையுமீன்மணிசால்செம்பசுமையா
மானசேடிப்புல்வாய்கறுப்பாகுமே.

இ-ள். இரவி செம்மை, குஜன் மிகுந்த செம்மை, மதி வெண்மை வெள்ளி பால்வெண்மை, குருபொன்னிறம், புதன் பச்சை, சனி ராகு கறுப்பு, தனுசு மேஷம் சிங்கம் செம்மை, ரிஷபம் துலாம் கர்க்கடகம வெண்மை, மீனம் விருச்சிகம் கும்பம் சிறுசெம்மை, மிதுனம் கன்னி மகரம் கறுப்பு எ-று. 102

## கிரகவடிவும் கதிரும் அறியும்படி

கறுத்தகண்டர்வீமேசுரர்கண்முகற்
கடியநாகமிறுதிநாற்கோணமே
நிறத்தவட்டந்துடிப்புமுக்கோணமே
நெடியவட்டமெண்கோணங்குனித்தகோ
ணறுத்தநீள்கதிரைந்திருபத்தொன்றே
மானவொன்பதுபத்துபானுன்குரா
லுறுத்திரண்டுமுதயன்முதலதா
யுரைக்குநாகமிறுதியாயோதுமே.

இ-ள். இரவி நாற்கோணம், மதி வட்டம், குஜன் துடிவடிவு, புதன் முக்கோணம், குரு நீண்டவட்டம், சுக்கிரம் எண்கோணம், சனி பிறைவடிவு, இராகு நீண்டவடிவு இனி கதிரறியும்படி இரவிக்கு கதிர்-5 மதிக்கு-21 குஜனுக்கு-7 புதனுக்கு-9 குருவுக்கு-10 சுக்கிரனுக்கு-16 சனிக்கு-4 இராகு கேதுவுக்கு-2 எ-று. 103

### இராசிகதிரும் கிரக நெடில் குறில் சமன்

ஓதுவார்தொடுக்காடரையுள்கிடா
யோங்குமேயெட்டுப்பன்மூன்றுமாறுமே
போதுபன்னொன்றுமாறுறுமாறுமே
போந்தவேழ்பதின்மூன்றுபனிரண்டு
நீதிநூற்றுகான்முப்பத்துநால்கதிர்
நெடியர்மால்பணிபொன்சமனீர்பகல்
சீதவெண்பிறைகாரிசெவ்வாயிவர்
செய்யகோளிற்சிறியராந்திரவே.

இ-ள். மேஷத்துக்குக் கதிர்-8 ரிஷபத்துக்கு-13 மிதுனத்துக்கு-6 கர்க்கடகத்துக்கு-11 சிம்பத்துக்கு-6 கன்னிக்கு-6 துலாத்துக்கு 6 விருட்சிகத்துக்கு-7 தனுசுக்கு-13 மகரத்துக்கு-12 கும்பத்துக்கு 4 மீனத்துக்கு-34 இப்படிக்கு இராசிக்கு கதிரறிவது, புதனுங் குருவும் இராகுவும் நெடியர், சுக்கிரனும் இரவியும் சமன், மதி சனி குஜன் சிறியர் எ-று. 104

### காதம் அறியும்படி

தீரவேவீமனாதரைத்தேறுமாற்
றினகாவெட்டனலேழ்பொன்னென்பதே
காரிநாலைந்துமாரிபன்னறதாங்
காணுமிந்துவுக்கொன்றதாங்காதமே
தாரமானெருதாறறியேழுகோல்
சாடியாடளிபெட்டதாந்தையல்வில்
கூறுமேபதினொன்றுதேணன்குமீன்
கோலமாமிருபத்தேழுகொண்டதே.

இ-ள். புதனுக்கும் இரவிக்கும் காதம்-8 குஜனுக்கு-7 குருவுக்கு-9 சனிக்கு-20 சுக்கிரனுக்கு-16 மதிக்கு-1 மிதுனம் மகரம் ரிஷபத்துக்கு-6 சிம்பத்துக்கு-7 துலாம் கும்பம் மேஷம் கர்க்கடகத்துக்கு 8 கன்னி தனுசுக்கு-11 விருட்சிகத்துக்கு-4 மீனத்துக்கு-27 இப்படிக்காதம் அறியுமிடத்து உச்சத்திலுள்ள காதம் பெறும் ஆட்சியில் இரட்டித்துக்கொள்க நட்பில் முத்தித்துக்கொள்க பகையிற் பாதி கொள்க, நீசத்தில் மூன்றத்தொன்று கொள்க, ஒருவன் வினவின போது வலிபெற்ற கோட்களாலும் இராசிகளாலும் திசையுங்காதமும நிச்சயித்துச்சொல்வது எ-று. 105

### வயதறியும்படி

கொண்டலென்னந்தருந்தொடுக்காடர்காள்
கூடவந்தெழுவார்நவக்கோட்களுங்

கண்டுவாழ்வார்புவனமோடண்டமுங்
காட்சிகாணுங்கதிரவற்கைமபது
விண்டுசந்திரனேழுபத்தாராலே
மிக்கபன்னறுமேமைதக்கிருபதே
மண்டுபொன்முப்பதாம்புகரேழ்சனி
வாய்ந்தபாம்புநூறுகும்வயதுமே.

இ-ள். இரவிக்கு வயது-50 மதிக்கு-70 குஜனுக்கு-16 புத னுக்கு-20 குருவுக்கு-30 சுக்கிரனுக்கு-7 சனிக்கும் இராகுவுக்கும் வயது-100 இப்படி வலிபெற்றகோட்களால் வயதுசொல்வதாம் எ-று.

சுவை மறு அறியும்படி

ஆகமங்கட்கதிபர்வீமேசர்கண்
ணுருங்கார்த்தல்பிறையுவர்ப்பையரின்
ணகமைந்தர்கைப்பாங்கறித்தல்குச
நாடுமோற்றுவர்நற்சுங்சனேபுளிப்
போகசென்னிமதிபுகரேன்முகம்
பொன்புயங்கனல்வென்னுகைக்கிழ்புதன்
வேகமாங்கதிரோணரைசுன்றுடை
மிக்கபூண்கணேக்கான்மறுமேவுமே.

இ-ள். இரவிக்குச் சுவை கார்த்தல், மதிக்கு உவர்த்தல், குரு வுக்கு இனித்தல், சனிக்கும் இராகுவுக்கும் கைத்தல், குஜனுக்குக் கறித்தல், புதனுக்குத் துவர்த்தல், சுக்கிரனுக்குப் புளித்தல், இனி மருவறியும்படி மதிக்கு உச்சியில், சுக்கிரனுக்கு முகத்தில், குருவுக் குத் தோளில், குஜனுக்கு முதுகில், புதனுக்கு கைக்கீழில், இரவிக்கு அரையில், சனிக்குத் துடையில், இராகுவுக்கும் கேதுவுக்கும் கணேக் காலில் மறு எ-று. மறுவுக்கு வடுவு மச்சம் இருக்கினும் ஆம் எ-று.

மறுவின் வலமிடமும் விலங்கின் கோம்பும்

மறுவிலாவடிவோர்வீமகாதர்கண்
மால்கனன்மறையோன்வலமாம்பணி
பொறைகொளிந்துபுகர்சுன்னிடமறு
புந்தியூழ்வளேதீக்குரட்கொம்பதாங்
குறையில்பொன்மழைதானெடிதாகுமே
கூறுசுன்னாவேமுறிக்கொம்பதா
முறையும்ராசிகள்நாலுபயஞ்சா
முழலுநாற்றிரநாலுறநிற்குமே.

இ-ள். இரவி குஜன் குரு புதன் வலப்புறத்தில் மறு, இராகு மதி சுக்கிரன் சனி இவை இடப்புறத்தில் மறி என்பன. விலங்கின் கொம்பறியும்படி குஜனுக்கு குறட்கொம்பு, மதிக்கு மொண்ணை, குருவுக்கும் சுக்கிரனுக்கும் நெடியகொம்பு. புதனுக்கும் இரவிக்கும் வளைந்தகொம்பு, சனி இராகுவுக்கு முறிந்தகொம்பு என்பன இனி சரம் ஸ்திரம் உபயம் அறியும்படி மேஷம் கர்க்கடகம் துலாம் மகரம் இவை சராசி, ரிஷபம் சிம்பம் விருச்சிகம் கும்பம் இவை ஸ்திராசி மிதுனம் கன்னி தனுசு மீனம் இவை உபயாசி, இவை முறையே தாதுமூல ஜீவன்களாகக் சொல்க எ-று. 108

கேடுதிநிலை அறியும்படி.

நிற்குமெங்கள்வீமேசர்கண்சேகரி
நேரிற்காடாமதிபுகர்நீர்க்குரு
கற்குமானூரரவுபொந்தாம்விடை
கழநிசொண்டல்வாய்க்காலாங்கடுந்தகர்
விற்குமேகாடரிமலைமீன்கலை
மிக்கவாணிபனீராறுமேவுமே
வற்கவீணைபெண்ணூர்குடமேகுளம்
வழுத்துதேள்கிணறுங்தேறன்மன்னுமே.

இ-ள். இரவி குஜன் சநி உதயாரூடக் கவிப்பினுங் கண்டங்களினும் வலிபெற்று நிற்கில் கெடுதி காடுசேரும். மதி சுக்கிரன் வலிபெறில் நீர்ச்சேர்ந்தவிடம். குரு புதன் வலிபெறில் ஊர்சேரும். பாம்பு பொந்துகளிலும் வளைகளிலும் சேரும், இனி இராசிகளால் அறியும்படி ரிஷபம் கழனி, கடகம் வாய்க்கால், மேஷம் தனுசு காடு, சிம்பம் மலை, மீனம் மகரம் துலாம் நீர் ஆறு சேர்ந்தவிடம், மிதுனம் கன்னி ஊர், கும்பம் குளம், விருட்சிகம் கிணறு, இவை நோக்கி நிற்கும் கோளின் வலிகண்டு கெடுதிசேரும் இடம் சொல்லுவது எ-று. 109

கேடுதிநிலை அகத்திற் குறிக்கும் அடைவு

மன்னுமெங்கள்வீமேசர்கண்ணேயுறின்
மருவுமண்டலஞ்சோமனீர்க்காடிச்சா
லுன்னுசேய்குடுவைநீலன்மண்ணினு
மொண்புதன்சுவர்பாயலிடத்தினும்
பொன்னுமட்டிடச்செங்குடமாலயம்
புகருநீர்க்கரகஞ்சனிபோரடுப்
பென்னுமேயொருவாயாங்கருங்குட
மினியாகுவுஞ்சான்முதற்காட்டுமே.

இ-ள். கெடுதிநிலை அகத்திற் குறிக்கும்படி இரவி வலிபெறில் உறியிலும் நெய்சட்டியிலும் போசனம் பண்ணுமிடத்திலும், மதி நீர்ச்சாலிலும், குஜன் சிறுகுவையிலும் பூமியிடத்திலும், புதன் பாயின் கீழும் சுவரிடங்களிலும், குரு அடுப்பங்கரையிலும் செங்குடத்திலும் ஆலயங்களிலும், சுக்கிரன் நீர்ச்சார்ந்தவிடம் காகத்திலும் சனி யுத்தத்தலத்திலும் அடுப்பங்கரையிலும் ஒருவாய்க் கறுப்புக் குடுவையிலும், பாம்புசாலிலும் பொந்துவளையிலும் குதிரிலும் எ-று.

## கெடுதிசேரும் காலவளவும் கெடுதியான ஜாமமும் முதலியனவும்

காடுவீடெனக்கண்டுவீமேசர்தாள்
 கருதுமூற்சங்கடிகைபன்னைந்ததா
நீடுமாட்சிநாணட்பொருதிங்களா
 நீசம்வெம்பகையாண்டுகேர்ணிச்சயித்
தாடுமுன்னறுகான்மீனறுதியே
 யருக்கர்சேய்குருமால்புகராஞ்சநி
கூடுமம்புலியாம்புறுமேழரை
 கொண்டசாமம்வரும்பொருள்கொள்ளுமே.

இ-ள். வலிதுபெற்ற கிரகம் உச்சமாகில் 15-நாழிகையிலும் ஆட்சியாகில் 1-நாளிலும், நட்பாகில் 1-மாதத்திலும் பகை, நீசமாகில் 1-வருடத்திலும் கெடுதி கைகூடும் மேஷமுதல் மீனமறுதியாய் ஒரு கோளுக்கு ஒண்ணரை இராசியாக ஒரு சாமமாகக் கிழக்கு முதலாக, இரவி ஆதியாக, இராகு அந்தமாக, மேஷம் 4-காலும் ரிஷபம் முன்னிருகாலும் இரவிநிற்பன், ரிஷபத்துப் பின்னிருகாலும் மிதுனத்து 4-காலும், குசன் நிற்பன், கடகம் 4-காலும் சிம்பம் மூன்னிருகாலும் குருநிற்பன், சிம்பம் பின்னிருகாலும் கன்னி 4-காலும் புதன் நிற்பன், துலாம் 4-காலும் விருட்சிகம் முன்னிருகாலும் சுக்கிரன் நிற்பன், விருட்சிகம் பின்னிருகாலும் தனுசு 4-காலும் சனிநிற்பன, மகரம் 4-காலும் கும்பம் முன்னிருகாலும் மதி நிற்பன், கும்பம் பின்னிரு காலும் மீனம் 4-காலும் இராகு நிற்பன், இவ்வடைவே ஒருகாலுக்கு $1\frac{1}{4}$-நாழிகையாக 6-காலுக்கும் ஏழரைநாழிகையாக ஒவ்வொரு கிரகங்கள் பேரும் ஆகவேயாதாமொருவன் வினவின உதயாரூடத்தில் இரவி பெலவானாகில் உதித்தொருசாமத்தில்கெட்டதென்றும்குஜனாகில் 2-ம் சாமம், குருவாகில் 3-ம் சாமம் புதனாகில் 4-ம் சாமம், சுக்கிரனாகில் 5-ம் சாமம், சனியாகில் 6-ம் சாமம், மதியாகில் 7-ம் சாமம், இராகு

வாயில் 8-ம் சாமம், கெட்டதென்றும் இப்படிக்கெட்ட ஜாமமும் வார முதலானவையும் கிரக வுதயங்களால் அவர்கள் கெடுதியும் பெறுதியும் வரவும் போக்கும் சொல்வது எ-று. 111

கேடுதிசேரும் காலவளவு

பொருளெலாந்தரும்வீமேசர்நெஞ்சமே
போதுகாலம்வருவதொழிதனு
மருடருமற்றைவாரக்கோண்முன்பணி
யந்தநாழிகைமூன்றேமுக்காலதா
மிருளின்முன்னிலேதிக்குறவெண்ணியே
யெய்துமவ்வவர்சாமமறிந்துநா
டிராளுமப்போதெழுச்சிநாள்சோமனூர்
சேருநாளேபெறுதிவந்தெய்துமே.

இ-ள். செல்காலம் வருங்காலம் நிகழ்காலம் வாரக்கிரகம் சந்திரோதயத்தால் இச்சித்த பதார்த்றமெல்லாந்தரும். மற்ற வாரக்கிரக முதலாகப் பாம்பிறுதியாக 3-முக்கால் நாழிகையாக 8-கிரகங்களும், பகல் 30-நாழிகையிலும் இந்தப்படி இராத்திரி காலமுங்கொள்வது 8-திக்கிலும் வைத்தெண்ணி அவரவர் காலமறிக. காலமாவது 3-முக்கால் நாழிகை, ஒருகாலம் 16-காலமென்றறிந்து சொல்வது, மதி நின்ற நாளை அறிந்து அப்போதுதிக்கிற இராசிகளிலே மதிவருங் காலத்துக்கெடுதிகளும் கெட்டவன் பெறுதியும்வரும் எ-று.

வினவினது கைகூடும் காலவளவு

வந்தவீமேசர் தாளைவணங்கிவாழ்
மந்தராண்டுகதிரா றுமாவிரண்
டந்தணர்க்கொருதிங்கள்சேய்நாண்மழைக்
கானபக்கமதிக்குமுகூர்த்தமாம்
புந்தியாற்குவலிகுசன்பூமனிற்
போதில்சுன்சனிக்கேகுருபொன்னினுக்
கந்தமாரிபுகர்க்கம்புலிசசிக்
காதவனரிக்குப்பாம்பதிகரே.

இ-ள். சனி பெலவானுகில் ஒருவன் வினவின காரியம் 1-வருடத்திற் கூடும், இரவிக்கு 6மீ புதனுக்கு 2மீ குருவுக்கு 1மீ குஜனுக்கு 1-நாள் சுக்கிரனுக்கு 15-நாள் மதிக்கு 3-முக்கால் நாழிகையிற் கைகூடும். மேற்படி கிரகபலனறியும்படி புதனுக்குக் குஜன் வலியன், குஜனுக்குச் சனி வலியன், சனிக்கு குரு வலியன், குரு

வுக்கு சுக்கிரன் வலியன், சுக்கிரனுக்கு மதி வலியன், மதிக்கு இரவி வலியன், இரவிக்கு பாம்பு வலியன், இவர்கள் உதயாரூடக் கவிப்பினும் கண்டங்களினும் நட்பாட்சி யுச்சங்களினும் நிற்கிறபெலமுடைய லிகங்களால் முன்சொன்ன குறிப்பின்படி எல்லாங் கண்டு நட்டமுட்டி சிந்தனைகள் சொல்க எ-று. 113

## தாதுமூல சீவன்கள் அறியும்படி

அதிரவேகடமாடும்வீமேசர்பூ
　　ஞாமம்புலிதிசநிதாதுவாங்
கதிரவன்புகர்மூலமால்பொன்னுயிர்
　　காணவாடளிகோல்கலைதாதுதேண்
முதியவேறரிசாவிணைவமூலமீன்
　　முந்துபெண்சிலைதண்டுமீன்சீவனே
பதியுமெய்யுயிர்நிற்பனமூலமே
　　பரவுதாதுவுங்கோள்வலிபார்ப்பதே.

இ-ள். வீமேசர்க்குப் பூணாரமான பாம்பும் மதியும் குஜனும் சனியும தாதுக்கோள், இரவியும் சுக்கிரனும் மூலக்கோள், புதனும் குருவும் சிவக்கோள், மேஷம் கர்க்கடகம் துலாம் மகரம் தாதிராசி, விருட்சிகம் ரிஷபம் சிம்பம் கும்பம் மூலவிராசி, மீனம கன்னி மிதுனம் தனுசு சீவவிராசி எ-று. 114

## இதுவுமது

பார்க்கில்வீமேசுரர்விழிரெண்டுமே
　　பதியிலேதாதுவாம்பிறமூலமால்
சார்க்கில்சீவன்பிறமூலஞ்சுன்னெரி
　　சவ்வுமூலமறுநிலந்தாதுபொன்
னோர்க்குமெல்லாமுயிர்புகர்மூலமே
　　யிநதுவெண்கலஞ்சேய்செம்புபொன்பொன்னே
நீர்க்கொள்வெள்ளியிரும்புசுன்மாறரா
　　நோந்தபித்தளைபானரவீயமே.

இ-ள். வீமேசுரர்க்குக் கண்ணான இரவி மதி தன்னிலத்தில் தாது பிறநிலத்தில் மூலமாம் புதன் தன்னிலத்தில் மூலம், பிறநிலத்தில் சீவனும். சனி தன்னிலத்தில் கவிழ்ந்தமூலம் பிறநிலத்தில் தாதுவாம். குரு எல்லா நிலத்திலும் சீவன், சுக்கிரன் எல்லா நிலத்திலும் மூலம், இவ்வடைவில் மதி வெண்கலம், குஜன் செம்பு, குரு பொன், சுக்கிரன வெள்ளி, சனி இரும்பு, புதன் தரா, இரவி பித்தளை, இராகு ஈயம் எ-று. 115

## கருவி அறியும்படி

ஈயவல்லரெல்லோர்க்கும்வீமேசரே
யென்றுண்ஞாயிறுசெய்சனிசுங்கன்வா
யாயதொன்றுமதிமால்குருவின்வா
யாமிரண்டுநட்பாட்சியுந்தாதுநின்
ஞாயிறேகன்மதிபுவர்புந்திமண்
ணுடுசெய்பவழம்புகர்முத்துமே
தூயபொன்சீவனுகமனேசிலை
சுன்பணிக்கிரும்பாம்வலிசொல்கவே.

இ-ள். இரவி சனி குஜன் சுக்கிரன் இவர்களொருவாய்க்கருவி, மதி புதன் குரு இவர்களிருவாய்க்கருவி, இவர்கள் நட்பாட்சி உச்சங்களில் வலிபெற்று நிற்கில் தாதுவானபோது இரவிக்கு கல், மதிக்கு உவர், புதனுக்கு மண், குஜனுக்குப் பவழம், சுக்கிரனுக்கு முத்து, குருவுக்குப் பொன், பாம்பு சனிக்கு மனேசிலை இரும்பு எ-று. 116

## இரத்தின வர்க்கம்

வேங்கையாடையணிந்தவீமேசர்கண்
வீறுசூரியக்காந்தமுடன்மணி
தேங்குசந்திரன்வச்சிரங்காந்தமே
செப்புசேய்பவழம்மால்மரகத
மோங்குகாஞ்சனமாமெனவேகுரு
வுயர்ந்தநீர்தரளமவைடூரியம்
பாங்குசுன்னவர்நீலமாநாகமே
பற்றுகோமேதகந்தாதுபாருமே.

இ-ள். இரவிக்குச் சூரியகாந்தம் மாணிக்கம், மதிக்கு சந்திரகாந்தம் வச்சிரம், குஜனுக்கு பவழம், புதனுக்கு மரகதம், குருவுக்குப் பொன், சுக்கிரனுக்கு முத்து வைடூரியம், சனிக்கு நீலம், இராகுவுக்குக் கோமேதகம். இப்படி கோளின் வலிகண்டு சொல்வது எ-று.

## பணிவிகற்பம்

தாதுலாவுசடையர்வீமேசர்தாள்
சார்ந்தமால்புகர்பொன்னிறைதைபல்சார்
போதுவீணையுமானிடராகுமே
பொன்னர்தாதுசிறுவர்தம்பூடணந்
தாதிராசிவலியுறக்கெட்டதுந்
தாதுவாங்கோணிறமதுசாருமே
யோதுமப்பொருள்பெற்றவக்கோளினு
லூற்றமாதுவருவதுரைக்கவே.

இ-ள். இருகால் மானிடக்கோளான புதன் குரு சுக்கிரன், இருகால் மானிடராசியான மிதுனம் கன்னி துலாம் கும்பம் இவற்றில் குரு நிற்கினும் தாது வினவில் மக்கள் பூணப்பட்ட பூஷணமென்க. தாது இராசிகள் மேஷம் கடகம் துலாம் மகரம் இவற்றை நோக்கின கோள் நிறம் எந்தப்படியோ அந்தப்படி வலிபெற்ற கோளின் நிறமே போனதும் அவரவர் திசையும் அவரவர் சாதமும் ஊரும் வருவதும் ஆராய்ந்து சொல்லுவது எ-று. 118

மூலவர்க்கம்

உரைக்கொணுமறைதந்தவீமேசர்கண்
ணுச்சமாமரப்போர்மரங்கானதா
நிரைக்குமுட்டோல்வரைமேடுசோமனூர்
நீடும்வாழைக்கிழங்குவெண்ணெல்லெள்ளே
வரைக்குநீர்க்கொடிமுள்ளெரிபூத்தினை
வரகுகொள்ளுக்கடலைநுண்முட்புதன்
கரைக்குமேசிறுதூறிலைபுற்றிடங்
காணும்பச்சைப்பயறிதுகாட்டுமே.

இ-ள். இரவி மூலமாகில் ஊர் சாந்தமாமென்றும், நட்பாட்சியுச்சம் பெருமரம் காடுசேர்ந்த முள்மரம் தோலுள்ள மூலம் வரை மேடு சேர்ந்தவை, மதி உச்சத்தில் வாழைக்கிழங்கு வெண்ணெல்லு வெள்ளெள்ளு கொள்ளு சிரத்தில் மூள்ளுடையது. குஜனுக்கு பூதினை வரகு கொள்ளு கடலை சிறுமுள்ளுடைய தூறென்றும், புதனுக்கு பச்சைப்பயறு இலை சிறுதூறு புற்றிடங்களும் எ-று. 119

இதுவுமது

காட்டுவார்வீமநாதனைக்காண்குரு
கனிதேனெல்லுத்துவரைகல்வெள்ளிமாற்
றீட்டுகன்னல்விளைநிலம்வெள்ளொள்ளே
செய்யவேண்டுவரைச்சனிமுண்மா
மீட்டுகூரைத்துடரிகத்தாரிகாய்ப்
பெய்துளுந்துவேர்பாம்புறிலேபனை
யூட்டுயெட்கொடிபுற்றுறுமூலமே
யோங்கிராசியுங்கோள்வலியோங்குமே.

இ-ள். குருவுக்குக் கனி தேன் நெல் துவரை கல், சுக்கிரனுக்கு மரம் கரும்பு விளைந்தநிலம் வெள்ளெள்ளு வெண்துவரை, சனிக்கு முள்மரம் கூரை கத்தரி உளுந்து வேர், பாம்புக்குப் பனை எள்ளுக

சொடி புற்று இந்தக் கிரகங்களுக்குள்ளபடியே இராசிகளுக்கும் மேஷம் விருச்சிகம் பூ, ரிஷபம் துலாம் காய், மிதுனம் கன்னி இலை, கடகம் கிழங்கு சிம்பம் தோல், தனுசு மீனம் பழம், மகரம் கும்பம் வேர், இப்படி இராசியாலும் கண்டங்களாலும் உதயாரூடக் கவிப்பினாலும் வலிபெற்றதனைக் கொண்டு இன்னதென்று சொல்லுவது எ-று.

மூலதாது அறியும்படி

பாருமேமூலதாதுவேற்சூரியன்
பார்க்கில்வைக்கோன்மதிபுல்லெரிதினை
சேருஞ்சாமைவரகுபுதனிலை
சிறியகோல்பொன்கடலைநெற்சீலையுங்
கூறும்வெள்ளிமாச்சோறுகடுகுகொள்
குருவுமந்தன்மிளகுமுள்ளெட்கரி
நேரும்பாம்புகொடிகயிறுன்வை
நினையவீமேசர்தாணிறையொக்குமே.

இ-ள். மூலதாதுவாய் வந்தவிடத்து இரவிக்கு வைக்கோல், மதிக்கு புல், குஜனுக்குத் தினை சாமை வரகு, புதனுக்கு இலைமசிக் கொம்பு, குருவுக்கு கடலை நெல் வஸ்திரம், சுக்கிரனுக்கு வுறுசோறு கடுகு கொள், சனிக்கு மிளகு முள் எள் கரி, பாம்புக்கு கொடி கயிறு இவைகளாம் எ-று. 121

இதுவுமது

ஒக்கவென்னெஞ்சுறைந்தவீமேசர்தா
ளோதுமெல்லைமணிபயிரோறுகோற்
றக்கஞெண்டிவைதான்கொடிகன்னியுந்
தாரம்புல்லரிவின்மரமாகுமே
புக்கமீன்றனுவியாழ்துலைபுல்லமும்
பூவைமுள்ளிலைமற்றவைமுள்ளுளார்
மிக்கபொன்புகர்மான்மதிமேலதாம
வீறுமற்றவைதீவினைமூலமே.

இ-ள். மேஷம் விருச்சிகம் பயிர், ரிஷபம் துலாம கர்க்கடகம் கொடி, கன்னி மிதுனம் புல், சிங்கம் தனுசு மகரம் மீனம் தனுசு மிதுனம் துலாம் ரிஷபம் கன்னி இவை முள்ளில்லாத மூலம் மற்ற 6-ம இராசியும் முள்ளுள்ள நஞ்சும், குரு புதன் சுக்கிரன் மதி நல்ல மூலம், இரவி சனி குஜன் இராகு வலிபெறில் கொடிதுள்ள மூலம் எ-று. 122

பொதுப்படலம் முற்றிற்று.

## பஞ்சபூதப்படலம்

மூலமாகியமூர்த்திவீமேசர்கண்
　　முதியதந்தைமதியுறுதாயரே
கோலவஞ்செழுத்தாங்குருவெள்ளிசேய்
　　சோதிற்றாதுவன்வான்சநிகொண்டதே
காலகற்பமுடிவுபோரண்டமுங்
　　காணுமேபுல்லுயிர்பிண்டகாரணஞ்
சீலநூன்மறையாகமந்தத்துவந்
　　தேவர்கோனக்கரத்தாற்செருக்குமே.

இ-ள். இரவி உயிராகவும், மதி உடலாகவும், தனது திரிநேத்திரமான ஐம்பத்தோரட்சரத்திற்கு மூலமான பஞ்சாட்சரமே பஞ்சபூதங்களுக்கும், ஆதாரமான நகாரமான பிருதிவு குருவாகவும், மகாரமான அப்பு சுக்கிரனுகவும், சிகாரமான தேயு குஜனுகவும், வகாரமான வாயு புதனுகவும், யகாரமான ஆகாயம் சனியாகவும், இவற்றின் சப்தம் சனியினிடமாய்ச் செல்லவும், இரசம் சுக்கிரனிடமாய்ச் செல்லவும், ரூபம் குஜனிடமாய்ச் செல்லவும், கந்தம் குருவினிடமாய்ச் செல்லவும், இப்படி தத்துவங்களை அமைத்து உலகங்களுமூழிகளுங் காலங்களுமாக நடக்க, அகார உகார மகார விந்துநாதமே ஆதாரமாக இடை பிங்கலை சுழிமுனை என்கிற சூத்திரக்கயிற்றினுலே இந்தக் கிரகங்களைச் சரியாக நிறுத்தி திருவிளையாட்டுக்கொண்டருளும் வீமேசாருளினுலே நல்வினையிடமாகச் சுவர்க்காதி லோகங்களும் மோட்சமும் சுபக்கிரகங்களால் வரும். தீவினையிடமாய் வறுமையும் வாதையும் நரகமும் பாபக்கிரகங்களால் வரும். இப்படி அண்டபிண்டத்துக்கும் ஆம் என்று கண்டுசொல்வது எ-று. 1

### ஓரறிவாதிய சீவன்கள்

செருக்குமந்தணனைந்தறிநாகமீன்
　　தேவர்மானிடர்புள்ளிருகாற்றிறம்
பெருக்ககாலறிவாம்புகர்வண்டுகள்
　　பெற்றதுமபிகொசுகீயும்பேசிலே
யெரிக்குமூவறிவாஞ்செல்லெரும்புமா
　　லிரண்டதேசங்கலகுமூரண்முதலையுந்
தருக்குமொன்றுசுன்மூலம்வீமேசர்நந்
　　தம்பிரானஞ்செழுத்துறச்சாற்றுமே.

இ-ள். பிருதிவியின் கூறுன குருவர்க்கம் நாகம், மீன்தேவர் நாகர் புள் இருகாலுள்ளவையும், சப்த ஸ்பரிச ரூப ரச கந்தமாகிய ஐயறிவுள்ளது. அப்புவின் கூறுன சுக்கிரன் வர்க்கம், நாலறிவுள்ள வண்டு தும்பி கொசுகு ஈ என்பன. தேயுவின் கூறுன குஜன் வர்க்கம், மூன்றறிவுள்ள செல் எறும்பு தேள் மூடு என்பன. வாயுவின் கூறுன புதன்வர்க்கஞ் சங்கு அலகு சிப்பி முதலே இவை ஈரறிவுடையது. ஆகாயத்தின் கூறுன சனியின் வர்க்கம், மூலாதியாய் முளைக்கப்பட்ட சசியாதிகள் முதலானதெல்லாம் ஓரறிவு இப்படி பஞ்சாட்சரத்தால் சர்வ சீவனையும் படைத்தனர் வீமேசுரமூர்த்தி எ-று. 2

ஊர்வன தாழ்வன நடப்பன கிடபபன

சாருமேகோளுபிரிவைசாற்றுக
சங்குசிப்பிமுரணலகேபணி
யூருமாமையுடும்புதவழ்வதா
முன்னிமூடெறும்போடுபல்காலுறுஞ்
சேறுநாற்காலிருகானடப்பதே
செய்யபுட்கதிரண்டேபறக்குமே
பாருமெய்ச்சுவசிந்தனைப்பண்பரே
பாமர்வீமேசுரரருளின்படி.

இ-ள். சங்கு சிப்பி முரண் அலகு பாம்பு இவை ஊர்வன. ஆமை உடும்பு இவை முதலானவை தவழ்வன. உண்ணி மூடு எறும்பு பகலால் நாற்கால் இருகால் நடக்கும், பட்சி பறக்கும். இது வீமேசுரரருளால் ஒருவரிட சிந்தனை தன்னாத்ம சிந்தனையாக அறிந்து சொல்வது எ-று. 3

சீவதாது

அடருஞ்சீவதாதேலருணன்றே
லணிநகந்திங்கண்முத்துடனத்தையுங்
குருதிவற்றாண்புதன்பீலியந்தணன்
குங்குமங்கள்புழுகுகத்தூரியு
மருவுவெளளிவெண்சாய்மரமாகுமே
மந்தனூர்மயிர்பாம்புகொம்பென்பதாம்
பாவுமிம்முறைகண்டுகருத்திறைற்
பரிந்துசொல்கவீமேசருரைப்படி.

இ-ள். சீவதாதுவாய் வந்தவிடத்து இரவி தோல் நகம் முதலானவை, மதி முத்து நத்தை முதலானவை, குஜன்வற்றாண், புதன் பீலி, குரு குங்குமம், புழுகு கஸ்தூரி, சுக்கிரன், வெண்சாமரம், சனி கறுப்புமயிர், இராகு எலும்பு கொம்பு, முன்சொன்ன நூலின்

விதியிலே கருத்தினல் கண்டுதெளிந்து வீமேசர் திருவடியை நினைந்து திகையாமற் சொல்வது எ-று. 4

பஞ்சபூதப்படலம் முற்றிற்று.

---

## முகூர்த்தப்படலம்

### தேவப்பிரதிஷ்டை

உத்தராயணத்தேர்பரிமான்றலை
யுத்திரங்கள்பணிதோணிமுற்சனி
வைத்தமாலதையுத்தமமத்திப
மங்கைசெவகைமரக்காலுலக்கையுஞ்
சுத்தநற்கோட்டினமுமுதயமுஞ்
சொல்லுமாசிப்பிறப்பக்கண்ணற்றநாண்
மெத்துவாவினாட்டித்தபக்கமும்
விலக்குமென்றுவீமேசர்விதித்ததே.

இ-ள். தேவப்பிரதிஷ்டைக்கு உத்தராயணம் பிறந்தவாரம் ரோகணி அசுவினி மிருகசீரிஷம் உத்தரங்கள் மூன்றும், அநுஷம் இரேவதி மகம் புநர்பூசம் இவை உத்தமம். இனி அஸ்தம் திருவாதிரை சுவாதி திருவோணம் இவையும் காலற்றநாள் இடையற்றநாள் தலையற்றநாள் இவைமத்திபம் என்க. சுபவாரங்களும் அமிர்தயோகங்களுமாய் சுபக்கிரகங்கள் நோக்கிலும் பண்ணுவது மாசி மாதத்திலும் பிற்பக்கத்திலும் கண்ணில்லாத நாளும் உவா இரண்டும் இராத்திரிகாலமும் இராட்டித்த பக்கமும் இவையெல்லாம் விலக்கப்படும் என்று வீமேசர் விதித்தது எ-று. 1

### இதுவுமது

விதித்தபொன்வெள்ளிமூடஞ்சரவோரை
விருட்டிகர்த்தாவுக்காறெட் டீராறுமா
யுதித்தவெள்ளிபொல்லாதெழுபாலர்பொன்
ஞென்றுமூன்றுரிற்றேரிலுயர்நல
மிதித்தவீராறினுவிற்போல்வான்மதி
யெட்டனிற்கோட்களெல்லாருமாசுதம்
பதித்தவேற்றிலுதிக்கப்பிரதிஷ்டைகள்
பண்ணநன்மைவீமேசர்பதத்தையே.

இ-ள். குரு சுக்கிரன் மூடமுஞ் சராராசியும் விருஷ்டியோகமும் கர்த்தாவுக்கு 6-8-12 ஆமிராசியும் ஆகாது, சுக்கிரன் 8-ம் இடம்

பொல்லன் பாபக்கிரகங்கள் 11-3-6-ம் இடந்தேடி நிற்கில் நல்லவர் 12-ம் இடம் இடபமதி பொல்லான் 8-ம் இடமாகிய எல்லாக்கிரகங் களும் பொல்லார், சுக்கிரன் ரிஷபத்தி லுதயமாக சிவகுரு வீமநாதர் முதலான திரிமூர்த்திகளுக்கும், மற்றுமுண்டான தேவர்களுக்கும், பிரதிஷ்டைகள் பண்ணுவது சரம் இடத்தில் பிருதிவு அப்பு அந்த எஜமானுக்கும், பண்ணுகிற குருக்களுக்கும், பிருதிவு உதிக்கப்பண்ண உத்தமம் எ-று. 2

இதுவுமது

பதந்தருஞ்சரசெவ்வாய்தான்பிற்பக்கம்
பன்னுபூர்வபட்சத்தினட்டமி
விதஞ்செயுஞ்சத்தமாதர்பிரதிட்டைகண்
மிசகசத்திக்குபயஞ்சரநல
முதிர்ந்துவாயிருத்தைரட்டித்தபக்க
மூதேவிக்குமூரிறைக்குப்பொருந்துநா
ளிதந்தமாதாந்தநற்கோட்களெட்சியி
லிசைதிருநாண்முகூர்த்தமசேதாதுமே.

இ-ள். சராசியிலும், செவ்வாய்க்கிழமையிலும், அமரபட்சத்து சதுர்த்தசியும், பூர்வபட்சத் தஷ்டமியும், சத்தமாதாக்களை எழுந்தரு ளப்பண்ணுவது ஸ்ரீதேவப் பிரதிஷ்டைகளுக்கும் உபய சரம் நன் றென்பது உவாவும் இருத்தையும் இரட்டித்த பக்கமும் மூதேவிக்காம் ஊருக்கு ஊராளுகிற கர்த்தனுக்குப் பொருந்தின நாளில் சங்கிரம காலங்களில் மாதாந்தத்தில் நற்கோளுதயத்தில் சந்தி திருநாளெழுந் தருளப்பண்ணுவது எ-று. தேவப்பிரதிஷ்டை முடிந்தன. இனி வந்த வனுக்குத் தற்காலப் பொருத்தஞ் சொல்லுவோம் எ-று. 3

மங்கிலியப் பொருத்தம்.

ஓதுபாரினில்வாழ்வுறுமானிட
ருற்றநற்கோள்வலிபெறினன்மணம்
போதுமேரைக்கதிரோரிதேறுமே
பூவைநாலறும்பூணமதிசாதல்பாம்
பாதல்சுன்முடியாய்பெற்றிழச்குமா
லந்தணன்புகர்செல்வத்தடையுமே
தீதுபாவர்குடிசுபர்நன்மையே
செய்யவீமேசர்தாளுறத்தேடுமே.

இ-ள். பூமியிலேவாழு மனிதருக்கு நற்கோள் வலுவினால் மணப் பொருத்தம் பார்க்குமளவு இரவி, குஜன் உதய இராசியில் வலி

பெறில் வினவினவன் பெண் விதவை, மதி உதயமாகில் மரிக்கும், இராகு சனி வலிபெறில் பெற்றிழக்கும், புதன் குரு சுக்கிரன் உதயத்து வலிபெற்றுத் தேறிநிற்கில் சம்பத்துண்டாய் வாழும், 2-ம் இராசியில் இரவி சனி குசன் இராகு வலிபெறில் பாவசீவனமாம், மதி புதன் குரு சுக்கிரன் 2-ம் இராசியில் வலிபெற்று நிற்கில் சுக சீவனமாம் எ-று. 4

இதுவுமது

தேடவாரிசேய்சனியிந்துமால்
    செய்யவெள்ளியுமூன்றுநிற்செல்வமாங்
கூறுபொன்மிடிபாமபுமலடிஞல்
    கோன்கதிர்மதிசேயுறப்பாவியா
மூடுசுன்பாலறும்பனிமாறிடு
    மோதுவோன்புகர்பொன்னுறில்வாழ்வுறு
நீடுமைந்திவிருகதிர்சேயிலே
    நேசர்வீமேசர்தாளைநினைப்பதே.

இ-ள். இரவி குஜன் சனி மதி புதன் சுக்கிரன் 3-ம் இடத்தில் நிற்க வாழ்வுண்டாம, குரு மிடி பாம்பு மலடியாம், 4-ம் இராசியில் இரவி குஜன் மதி வலிபெற்று நிற்கில் பாவத்தையடையும், சனிநிற்கில் முலைப்பாலில்லை, இராகுவுக்குச் சக்களமை கூடும், புதன் குரு சுக்கிரன் 4-ம் இராசியில் வலிபெற்று நிற்கில் செல்வமு மைந்தருமுண்டாம் 5-ம இராசியில் இரவி மதிநிற்கில் புத்திரப்பேறில்லை எ-று.

இதுவுமது

நினைத்தபொன்புகரைந்தினின்மைந்தர்கூர்
    நீளுமால்சேய்மகவிலைசுன்னாநோ
சினத்தாராமரணம்பிணியாறின்மால்
    சிலுகுசோமன்விதவைமழைசுக
மனைத்துநல்லர்வீமேசர்கண்ணேழ்பிணி
    யாவுசுன்னாலறுமனலோன்சிறை
புனைத்தபொன்புதனுக்கமாமம்புலி
    பூணுமேல்வெதுப்பாம்புகாசொல்லுமே.

இ-ள். குரு சுக்கிரன் 5-ம் இராசியில் வலிபெறின் மகவுண்டாய் வாழும், புதன் குஜன் மகவில்லை, சனி வியாதி பாம்பு மரிப்பிருக்கும், 6-ம் ராசியில் புதன் தேறில் சிலுகு மதி விதவை, சுக்கிரன் சுகித்திருக்கும, இரவி குஜன் குரு சனி இராகு நன்மை, 7-ம் இராசியில் இரவிதேறி நிற்கில் பிணி, சனி இராகு விதவை, குஜன் சிறை

குரு புதன் 7-ம் இராசியில் தேறி நிற்கில் ஆக்கம் பொருந்திவாழும், மதி வெதுப்பு, சுக்கிரன் மரிப்பிக்கும் எ-று. 6

இதுவுமது

கொல்லுமெட்டிற்சசிமழைபொன்பணி
 கொடியர்மந்தன்புதன்சுகன்சேயரி
பொல்லர்நாலறுமொன்பதிற்புந்திநோய்
 பூமன்ஞாயிறுபாலறுமேபுகர்
நல்லமக்கண்மதிகுருவேநல
 நாகர்நீலர்மலடியாம்பத்தின்மால்
வெல்வன்சூரியனன்மைசேய்சுன்பணி
 விதவைபீதன்வீமேசர்தாண்மேவுமே.

இ-ள். 8-ம் இராசியில் மதி தேறில் சடுதியில் மரிக்கும், சுக்கிரன் குரு இராகு கொடுமை செய்யும், சனி புதன் சுகித்திருக்கும், இரவி குஜன் விதவை, 9-ம் இராசியில் புதன் தேறி நிற்கில் நோய், இரவி குஜன் முலைப்பாலில்லை, சுக்கிரன் மைந்தர் பெற்றுவாழும், மதி குரு நன்மை, சனி பாம்பு மலடி, 10-ம் இராசி புதன் இரவி நன்மை, குஜன் சனி இராகு விதவை, குரு பதிவிரதையாக வீமேசர் திருவடிக் குரித்தாயிருக்கும் எ-று. 7

இதுவுமது.

மேவுசுங்கரும்வேசிமகவிலை
 வீறுசோமன்பதினொன்றின்மிக்ககோ
டாவும்பொன்பனிரண்டுசேய்சுன்பணி
 தள்ளுறும்மதிகோடாந்தபனனே
மேவுமாகின்மகவிலைமேதையே
 வீறுமைந்தருண்டாம்வெள்ளிபொன்னுமே
தேவரெங்கள்வீமேசராற்செல்வராந்
 திசப்பொருத்தநாள்ராசியாற்செப்புமே.

இ-ள். 10-ம் இராசியில் சுக்கிரன் தேறில் வேசி, சந்திரன் மலடி, 11-ம் இராசி நவக்கிரகமும் பெருமைத்தருவர், நட்பாட்சி உச்சம் பெறில் வெகு நன்மை, பகை நீசமாகில் சிறிது நன்மை, 12-ம் இராசியில் குஜன் சனி பாம்பு வலிபெறில் தள்ளுண்ணும், மதி கெடுக்கும், இரவி இராகு மலடி, புதன் பிள்ளையுண்டாய்வாழும், குரு சுக்கிரன் பலமுண்டாய் வாழும், இப்படி வீமேசுரர் அருளினாலே அப்போது உதிக்கிற இராசிமுதற்கொண்டு மங்கிலியப்பொருத்தம் பார்த்துச்சொல்வது இனி தசப்பொருத்தம் சொல்லுவோம் எ-று. 8

## தசப்பொருத்தத்தில் தினப்பொருத்தம்

செப்பநாட்கணமாகேந்திரந்திரீ
தீர்க்கம்யோநிராசிலக்கினுதிபர்
தப்பிலாதவசியமிரச்சுவுந்
தக்கவேதைவிருட்சப்பொருத்தமு
மொப்பிலாதபராபரஞ்சோதியென்
னுள்ளம்விட்டுப்பிரியாதவுத்தம
னப்பனெங்கோனழகனருட்கட
லண்ணலைப்புகழ்வார்க்கழிவில்லையே.

இ-ள். தினம் கணம் மாகேந்திரம் ஸ்திரீ தர்க்கம் யோனி இராசி வசியம் இராசியாதிபதிவசியம் இரச்சு வேதை விருட்சம் பொருத்தம் 9
ஆக 10-ம் சொல்வது எ-று.

## இதுவுமது

அழிவிலாத்தினம்சென்டுநாலாறுநா
ளானவொன்பதுமாமபனிரண்மோ
மொழிபன்னல்பதினுறுபத்தொன்பது
முறையிருபத்திரண்டிருபத்துமூன்
றிழியுநாளிருபத்தாறிருபத்தே
ழிந்தநாட்களெல்லார்க்கும்பொருந்துநாள்
பழுதிலாச்சீவனபாதாரவிந்தமே
பரிந்துபோற்றவினைபரிந்தோடுமே.

இ-ள். பெண் நாள் தொட்டு பிள்ளை நாளளவும் எண்ணிவரில் 2-4-6-9-12-14-16-19-22-23-26-27, இவை தினப் பொருத்தம் 10
இவை எல்லாக் கர்மங்களுக்கும் பொருந்தினதாம் எ-று.

## கணப்பொருத்தம்

போற்றுவாருத்திரங்கண்முப்பூரமும்
புனிதர்நாளும்பரணியுமக்களா
மேற்றமுமமீனிருபூசமோணமா
மிரேவதிபனைசோதிபத்தாஞ்சுக
ராத்தல்சொக்காடையாரலொளிபணி
யவிட்டமாசிமுறஞ்செக்கரக்காரம்
சாற்றுமொன்றுநனறசுரர்சுரர்மனு
தானவர்சாமனுத்தேவர்தியதே.

இ-ள். உரோகணி உத்திரம் மூன்றும் பூரமூன்றும் திருவாதிரை பரணி இவை மனுஷகணம், மிருகசிரிஷம் புனர்பூசம் பூசம்

திருவோணம் அசுவினி இரேவதி அனுஷம் சுவாதி அஸ்தம் இந்த 9-ம் தேவகணம், மூலம் சித்திரை கார்த்திகை கேட்டை ஆயில்யம் அவிட்டம் மகம் விசாகம் சதயம் இந்த 9-ம் இராக்ஷத கணம், இவை ஏககணமாகில் உத்தமம், தேவகணமும் இராட்சத கணமாகில் சிறுகு இராட்சதகணமும் மனுஷகணமுமாகில் மரணம், மனுஷ கணமும் தேவகணமுமாகில் மத்திபம் எ-று. 11

## மாகேந்திரப் பொருத்தமும் ஸ்திரீதீர்க்கமும்

தீதுமேதுமிலாதவீமேசர்தா
டேவமாகேந்திரப்பொருத்தந்தெளி
தோதுமொன்றுடனாலேழுபத்துட
னொருபன்மூன்றுபன்னாறுபத்தொன்பதின்
மீதிருபத்திரண்டுமையைந்துநன்
றென்றுமேபெண்கிரகம்பெண்சென்மநா
ளாதியாய்ப்புருடனாட்பன்மூன்றின்மே
லாகுநன்மையதிற்றனிற்கேடதே.

இ-ள். மாகேந்திரப்பொருத்தம் பார்க்கும்படி பெண் நாள்தொட்டு பிள்ளை நாளளவும் எண்ணினால், 1-4-7-10-13-16-19-22-25-நாட்கள் மாகேந்திரப் பொருத்தம் என்பது, இனி ஸ்திரீ தீர்க்கம் அறியும்படி ஸ்திரீ நட்சத்திரந் தொட்டு புருஷநட்சத்திர மளவும் எண்ணினால் 13-க்கு மேற்படில் நன்றென்பது 13-க்குக் குறையலாகாது எ-று. 12

## யோனிப்பொருத்தம்

தேறுமுன்னாட்சதயமும்வாசியாஞ்
செய்யபூசங்கடைநாளும்யானையா
மாறுமீனந்தைபாடுதேர்மான்தலை
யுரவியாழ்குநாரணுய்பிண்டில்கவை
சீறுபூனைறுகம்பூரமும்மெலி
செப்புமுத்திரங்களத்தஞ்சோதியே
கூறுமேயெருமைச்சித்திரைமுறங்
கொடும்புலிமறைக்கோனுடுதாமமே.

இ-ள். அசுவினி சதயம் குதிரை, பரணி இரேவதி யானை, கார்த்திகை ஆடு, பூசம் கிடா, உரோகணி பாம்பு, மிருகசீரிஷம் சாரைப் பாம்பு, திருவாதிரை பெண்ணாய், மூலம் ஆண் நாய், ஆயில்யம் கடுவன்பூனை, புனர்பூசம் பெண்பூனை, மகம் எலி, பூரம் பெண்ணெலி, உத்

திரம் எருது, உத்திராடம் மலட்டுப்பசு, உத்திரட்டாதி பாற்பசு, அஸ்தம் எருமை, சுவாதி கிடா, சித்திரை ஆண் புலி, விசாகம் பெண் புலி எ-று. 13

இதுவுமது

உடுத்தபுன்றோள்வல்லாறைமான்வாவியு
மூலக்கைவானரம்புண்ணுழிமானிடர்
நடக்குநாட்கண்மூவொன்பதுங்கண்டுபின்
னம்பியானைமக்கட்பரியேனமான்
கடுத்தவேங்கைபணிக்காடுமெந்திநாய்க்
கடுவன்பூனைக்கெலிபகைசோமனீர்
முடித்தசெஞ்சடையார்வீமநாதரா
மூர்த்தியன்பால்வினைசமன்முற்றுமே.

இ-ள். அனுஷம் புல்வாய், கேட்டை கலை, பூராடம் குரங்கு, திருவோணம் பெண்குரங்கு, அவிட்டம் நரி, பூரட்டாதி புருஷன், இவ்வகையாலே இருபத்தேழுயோனியுங் கண்டுகொள்க. இனி யோனிப் பகையறிய யானைக்குப்பகை மனுஷன், பசுவுக்கு குதிரை, எருமைக்குப் புல்வாய், புலிக்குப் பாம்பு, ஆட்டுக்குங் குரங்குக்கும் நாய், பூனைக்கு எலி பகையாம் எ-று. 14

யோனிக்குப்போருத்தமும், இராசிப்போருத்தமும்

முற்றுமாணுக்காண்பெண்ணுளுத்தம
மூனியுமாணுணும்பெண்பெண்ணுமத்திப
மற்றவாண்பெணும்பெண்ணுண்மறுதலை
மங்கைராசிபுருடர்மட்டெண்ணவே
யுற்றலக்கினமேழுமேனுங்கல
முறவுதேண்மறியாழ்மான்பெண்கோல்விடை
பெற்றங்கோல்கதார்தேளாதிநண்பருள்
பித்தர்தாளைப்பெருக்கிப்புகழுமே.

இ-ள். இரண்டுயோனியும் புருஷனுகி லுயித்தியமுண்டாம்; இரண்டுயோனியும் பெண்ணுகிலுத்தமம், ஸ்திரீ ஸ்திரீயோனியாய்ப் புருஷன் புருஷயோனியாகில் நல்லது, புருஷன் யோனியாய் ஸ்திரீ புருஷ யோனியாகில் மறுதலையுண்டாம், இவ்வகையால் யோனிப் பொருத்தம் பார்ப்பது; இனி இராசிப்பொருத்தம் கொள்ளும்படி ஸ்திரீ இராசியில் நின்று புருஷராசியளவு மெண்ணினுல் 7-ம் இராசியாகிலும் 7-க்கு மேற்படிலும் உத்தமம் 7-க்கு குறையிலாகாது, இனி இராசி நட்பு, விருச்சிகம், மேஷத்துக்கு மிதுனம், மகரம் கன்னி துலாம ரிஷபம் இவை 5-ம் நட்பு, ரிஷபதுலாத்துக்கு விருட்சிக முதல் 6-இராசியும நட்பு எ-று. 15

## மேற்படி இராசிப் பொருத்தம்

பெருத்தயாழ்மபண்ணுறவரிமீனலார்
பேசுகாற்குமீன்வில்விடைபெண்ணியாழ்
விரித்தசிங்கமுறவுவின்மின்மறி
விற்கயற்குடமாம்விடையாதியா
றுத்தநாட்புமான்கூனட்பியாழ்விடை
யுற்றபெண்கோறனுமீனமாகுமே
கருத்துளேகற்பகம்மயன்மாலான்
கனத்தவீசன்சதாசிவன்கார்க்குமே.

இ-ள். மிதுனத்துக்கும் கன்னிக்கும் சிங்கமு மீனமுமொழிய எல்லா முறவெனபது, காக்கடகத்துக்கும் மீனந் தனுசு, ரிஷபம் கன்னி மிதுனமுறவென்பது, சிங்கத்துக்குறவு தனுசு, மீனம் மேஷ மென்பது தனுசு மீனத்துக்குக் கும்பமும், ரிஷபமுதல் 6-இராசியு மென்பது, மகாத்துக்கும கும்பத்துக்கும் மீனம் ரிஷபம் கன்னி துலாம் தனுசு மீனமுறவு எ-று. 16

## இதுவுமது

கார்க்குஞ்சிங்கமறியுடன்றேள்விடை
கடகங்கோன்மிதுனத்துக்கரியவையாங்
தேர்ந்தநற்கடகத்துக்குத்தேள்சிலை
சிங்கத்துக்குச்சுறு கயல்கன்னியும்
பார்க்குங்கோண்மான்றெறுக்காலளிபெணும்
பற்றும்வின்மீசுறுக்கூன்குடங்கய
றீர்க்குமீனமகரமபொருத்துமே
சிவகுருக்கலியாணர்செருக்குமே.

இ-ள், மேஷவிருட்சத்துக்கு வசியம், ரிஷபத்துக்கு கர்க்கடக மும் துலாமும் வசியம், மீனத்துக்குக் கன்னி வசியம், கர்க்கடகத் துக்கு விருட்சிகமும் தனுசும் வசியம், விருட்சிகத்துக்கு கர்க்கடக மும் கன்னியும் வசியம், தனுசுக்கு மீனம், மகாத்துக்கு கும்பம், கும் பத்துக்கு மீனம், மீனத்துக்கு மகரம் வசியம் எ-று. 17

## இரச்சுப் பொருத்தம்

செருக்குமெட்டாம்பிறையர்பூமியாற்
செவ்வைமூன்றுவரையாய்க்குறுக்கினுற்
பெருக்கமூன்றுரைமுன்னுள்வைத்தெண்ணவே
பெண்ணுமாணுமொருவரைதிமையா
மருக்குமப்பனிமாசிவல்லாரையு
மன்னுதேட்கடைநாவியிறுக்கயி

திருக்குசோறுகுளமிடைச்சனிபனே
யிலகுவாவிமுரசுகுரங்கதே.

இ-ள். 8-ம் பிரைபோலே உயர்ந்த நிலத்திலே மூன்றுவரையைக் கீறி அதிலே குறுக்கே 4-வரையுங்கீற 27-வரையாம். இதில் முதல் முதல் வரையிலே அசுவினியைநாட்டி 27-நாளையும் எண்ணுமிடத்து ஸ்திரீநாளும் புருஷநாளும் ஒருவரையில் இருக்குமாகி லாகாதென் பது எ-று. இதன்மேலென்று சிறப்பித்தவதனுல் அசுவினி ஆயிலி யம் மகம் கேட்டை மூலம் இரேவதி இந்த 6-நாளும் அடிக்கயிறென் றுபெயராம், பரணி பூசம் பூராடம் பூரம அனுஷம் பூரட்டாதி இவை 6-ம் துடைக்கயிறென்று பெயராம் எ-று. 18

இதுவுமது

தொடுக்கும்வீமேசர்மேனியாங்கார்த்திகை
துப்யமாலைபங்குனிமுறமாடி
யடுக்குமேபுரட்டைவயிருகுமே
யத்தங்தொணியோணஞ்சோதிசெக்காதிரை
கடிக்குங்கண்டங்கமாடைவிட்டஞ்சிர
நாடடிக்கயிறெய்துமேற்சேயிலே
வடுக்குறங்குமகவிழப்புந்தியேன்
மருணர்போங்களம்பெண்போமுதடதே.

இ-ள். கார்த்திகை புநர்பூசம் உத்திரம் விசாகம் உத்திராடம் பூரட்டாதி இவை 6-ம் வயிறென்று பெயராம். அஸ்தம் ரோகணி திருவோணம் சுவாதி சதயம் திருவாதிரை இவை 6-ம் கழுத்தென்று பெயராம். மிருகசீரிஷம் சித்திரை அவிட்டம இவை 3-ம் முகடென்று பெயராம் இவையெல்லாந் தம்மிற் பொருந்தாது. அடிக்கயறுகில் அர்த்தஹாநி, துடையாகில் மலடி, வயிறுகில் புத்திர ஹானி, கழுத தாகில் பத்தா மரணம், முடியாகில் பெண்சாதி மரணம் எ-று. 19

வேதைக்கயிறு

போந்தபூமியின்முறுசதிர்கீறிமேற்
புரிபன்னிரீகீற்றுமூவொன்பான்மூலையு
மேந்துமாமூலைவைத்துமிரேவதி
யெண்ணப்பெண்ணுணேருவரையாக்கொண
சாந்தமாசிமாதம்மிற்பொருந்திடார்
தாலம்பூரமடுப்பொளிதீய்ப்பனே
வேந்தற்குத்திரங்கோடுதெற்குமூறம்
வெம்பகைபோக்கும்வீமேசர்பாதமே.

இ-ள். வேதைக்கயிறு கொள்ளும்படி ஒத்தசிலத்திலே முச்சதுரமாகக் கீறி இதன்மேல் 12-கீற்றுக் கீறில் 24-ம் 3-மூலையுமாக 27-ங் காண்பது. ஆகாதென்று சிறப்பித்த வதனால் அசுவினி மகந் தம்மிற் பொருந்தாது, அசுவினியை ஒரு மூலையில் நாட்டி இரேவதி ஈறாக வெண்ணினால் இருவர் நாளும் ஒருவரையி லுறிலாகாதென்பது ஆகாதென்று சிறப்பித்த வதனால் அசுவினி மகந்தம்மிற் பொருந்தாது. பரணிக்கு கேட்டை பகை, கார்த்திகைக்கு அனுஷம் பகை, உத்திரத்துக்கு உத்திரட்டாதி பகை, ரோகணிக்கு விசாகம் பகை.

இதுவுமது

பாதகமறுக்கும்விடைச்செல்வர்நாட்
    பகைபுண்மான்றலைக்குச்சோதிமூங்கிலுக்
கோதுள்ளொன்றருபூசத்துக்குத்தி
    முத்திரட்டாதிக்குசதிரஞ்சித்திரை
போதுசெக்குப்பனிகுளமரேவதி
    பூரமங்கைபூரட்டாதியும்பகை
மீதியானதெலாமுறவாகுமே
    மிக்கவேதைக்கயிறுவிருப்பமே.

இ-ள். திருவாதிரைக்கு அவிட்டம், மிருக சீரிஷத்துக்குச் சுவாதி, புனர்பூசத்துக்கு அவிட்டம், பூசத்திற்கு உத்திராடம், சித்திரைக்குச் சதயம், ஆயில்யத்துக்குப் பூராடம், இரேவதிக்குப் பூரம், அஸ்தத்திற்குப் பூரட்டாதி, இந்தப் பகைக்குச் சொன்ன நாட்களொழிய மீந்த நாளெல்லாம் உறவென்பது எ-று. 21

விருட்சப் பொருத்தம்

விரும்புகாஞ்சிரநெல்லியுமத்தியு
    மேவுநாவற்கருங்காலிசண்பக
மரும்புபுன்னையால்வாகைபரசுநன்
    மகிழ்விளாவும்பலாவுமெருக்குமே
தருக்குமாதளைவில்வமருதுநற்
    றழையாமகிழ்மூங்கின்மாவஞ்சியே
வருப்பலாசிலைவன்னிமரப்புளி
    மருவுவேம்பிலுப்பையையர்வைத்ததே.

இ-ள். அசுவினி காஞ்சிரம், பரணி நெல்லி, கார்த்திகை அத்தி, ரோகணி நாவல், மிருகசீரிஷம் கருங்காலி, திருவாதிரை சண்பகம், புனர்பூசம் புன்னை, பூசம் ஆல், ஆயிலியம் வாகை, மகம் அரசு, பூரம் விளா, உத்திரம் பலா, அஸ்தம் எருக்கு, சித்திரை மாதளை, சுவாதி

வில்வம், விசாகம் மருது, அனுஷம் தாழை, கேட்டை மகிழம், மூலம் மூங்கில், பூராடம் தேமா, உத்திராடம் வஞ்சி, திருவோணம் பலா, அவிட்டம் வன்னி, சதயம் மாமரம், பூரட்டாதி புளி, உத்திரட்டாதி வேம்பு, ரேவதி இலுப்பை, ஆக விருட்சம் 27-ம் எ-று. 22

இதுவுமது

வைத்தவாலாசத்தியுமாதளை
மகிழ்பலாமாவிலுப்பைசண்பகமெருக்
குய்த்தவஞ்சிநாவலிவையல்லது
முற்றசேகுமகுணர்பெண்பான்மா
மொய்த்தவாழ்வுபெண்ணுணும்வயிரமா
மூப்பினமையுமூதேவிவாழ்க்கையா
மெத்தபண்பால்கொழுநர்வயிரமேன்
மிக்கசெல்வந்தருமிறைவேந்தனே.

இ-ள். ஆல் அரசு, அத்தி மாதளை, மகிழ் பலாமரம். இலுப்பை சண்பகம் எருக்கு வஞ்சி நாவல் இவை பாலுள்ள மரமென்பது அல்லாதவை யெல்லாம் வயிரமென்பது வயிரமாணும் பெண்பால் மரமுமாகில் மைந்தரும் பொருளுமுண்டாம் வயிரம் பெண்ணும் ஆண்பால் மாமுமாகில் மலடியாகும். இரண்டும் வயிரமாகில் மைந்தரும் பொருட்சேதமுண்டு. இரண்டும் பால்மரமாகில் வாழ்வுண்டாம் எ-று. 23

சோபன முகூர்த்தம்

வேந்தர்தோணியசுவினியேமக
மிக்கவத்தம்விளக்காளிதாலமுஞ்
சோந்தநாட்கலையாழ்குளிர்கன்னிகோல்
சிலையிற்பாதிகலைகூனல்லோரையேழ்
வாய்ந்தசுத்தமதியிறைகூடுநாண்
மகிழ்சுபக்கோட்கணேக்குதயங்நலம்
போந்தசோபனமுகூர்த்தவகணன்றெனப்
புனிதர்வீமேசுராருள்போதவே.

இ-ள். சோபனமுகூர்த்தத்துக்கு உத்திரட்டாதி ரேவதி அசுவினி மகம் அஸ்தம் சுவாதி மூலம் இந்த நட்சத்திரங்களும் மீனம் மிதுனம் கர்க்கடகம் கன்னி துலாம் தனுசு மகரம் கும்பம் இந்த இலக்கினத்துக்கு 7-ம் இடம் சுத்தியாக குரு சந்திரயோகம் கூடு நாளில் சுபக்கோள் நோக்குண்டாகப் பிள்ளைக்கு சந்திரசாம் பிருதிவியில் நடக்கச் சோபனம் பண்ணுவது எ-று. 24

விவாகச் சக்கரம்

பேர்ந்தவட்டத்துமெண்கோணமேனடுப்
போனநாணின்றநாளரியோர் துநாண்
மீந்தநாட்களப்பூர்வமும்மூன்றுமே
மிக்கசுற்றம்பெண்பிள்ளையும்போநடு
சேர்ந்தவாழ்வுகிழக்கெரிநோய்கெடுந்
தெற்குவாழ்வுநிருதிமேற்றீங்கதாம்
வாய்ந்தகாலப்பெருங்கேடுவாழ்க்கையாம்
வடக்குநற்சுகசிவரீசானமே.

இ-ள். விவாகச்சக்கரமறியும்படி சதுரவட்டமாகக் கீறி நடுவே முன் இரவி இருந்தநாள் இருக்கும்நாள் இருக்கப்போகிறநாள் இந்த 3-நாளும் நடுவே எழுதி இது முதலாய்க் கிழக்குமுதல் மும்மூன்று நட்சத்திரமாக 8-திக்கிலுமெழுதி நட்சத்திரம் 27-ம் கண்டுகொள்க. இனி வட்டத்துக்கு நடுவே இரவி நடுநாள் 3-ல் மூகூர்த்தம் பண்ணினால் கணவனும சுற்றமும் பெண்ணும்போம். கிழக்குநாள் 3-ல் முகூர்த்தம் பண்ணினால் தனதானியமுண்டு. திருமாது சேரும். தென்கிழக்குநாள் 3-ல் நோய். தெற்குநாள் 3-ல் அழியும் தென்மேற்கு நாள் 3-ல் வாழ்வு மக்களுமுண்டாம். மேற்குநாள் 3-ல் 7-மாதமளவும் தோஷம் பெருங்கேடு. வடக்கு வாழ்வுண்டாம். வடகிழக்குநாள் 3-ல் தனதானியமுந் திருமாதுஞ் சேரும் எ-று. 20

முகூர்த்தப்படலம் முற்றிற்று.

---

# தெருட்சிப்படலம்

---

## நட்சத்திர பலன்

சிவநாயகர்வீமேசர்வாசிபெண்
டெருட்சிதூலறுங்கங்குன்மகவுறு
மேவுமானமலடிதேர்நன்மையும்
மீனலங்கொழுநற்காதிரைபிணி
யாவணஞ்சுகம்சீரியன்பூசம்பாம்
பழிவுசேமண்வனநலன்மாசியே
போவதாம்பங்குனிக்குப்புரோசனம்
புரியுமத்தநலமறிவாடையே.

இ-ள். அசுவினிற்றெருண்டால் வித்தை, பாணி புத்திருண்டாம், கார்த்திகை மலடி, உரோகணி நன்மை, மிருகசீரிஷம் பத்தாவுக்கினியள், திருவாதிரை வெப்பு, புனர்பூசம் சுகம், பூசம் சீருடையாள் வயிறிழிவு, மகம் பத்தா நல்லவன், பூரம் புத்திரஹானி, உத்திரம் பிரயோசனமுண்டாம், அஸ்தம் நன்மை, சித்திரை அறிவுள்ளவள் எ-று. 1

இதுவுமது

அறிவுசோதிகுடும்பைவிதவை
வையாசிநோயநுடஞ்சொரிகேட்டையே
செறியும்பாலானிவாவிக்கடுமைபோஞ்
சிறந்தபுத்திகுளமோணஞ்செல்வியா
நிறையுமாவணிபோன்சுன்னிலமிடி
நெடியவாம்புரட்டாசிமகவிலாள்
வறுமைவேந்தர்கடைமீன்வியாதியே
வள்ளல்வீமேசுராடிவாழ்ததவே.

இ-ள். சுவாதி குடும்பி, விசாகம் விதவை, அனுஷம் வியாதி, கேட்டை பாஸ்திரீ, மூலம் பாலுடையாள், பூராடம் மடியாற்கெடும், உத்திராடம் புத்தியுண்டாய் வாழும், திருவோணஞ் செல்வமுடையவள், அவிட்டந் தனமுடையவள், சதயம் அர்த்தஹானி, பூரட்டாதி மலடி, உத்திரட்டாதி வறுமை, ரேவதி பிணி, இது நன்மையாக வள்ளல் வீமேசுராடியை வணங்குக எ-று. 2

திதிப்பலனும் இராசிப்பலனும்

அடியநாம்பக்கமந்தம்பவுரணை
யணங்குகன்னியழகன்புசேர்பகை
வடிவுமைந்தராசாரமகவுளாண்
மகவிழக்குநல்வாழ்வுறுந்தன்மமே
லுடையாள்சற்றுவிகோபிதனைப்புக
ழூரியசௌரிபிணியினமேடமுன்
கடியசௌரிகவடிபாத்திரி
கனத்ததுட்டையருநெறிகாணுமே.

இ-ள். தெருட்சி பிரதமை கன்னி, துதியை அழகி, திரிதியை அன்புடையள், சதுர்த்தி சத்துருவுடையவள், பஞ்சமி புத்திருண்டாம், சஷ்டி ஆசாரம், சப்தமி புத்திருடையவள், அஷ்டமி புத்திரஹானி, நவமி வாழ்வு, தசமி தன்மமுடையவள், ஏகாதசி பெலமுடையவள், துவாதசி கோபி, திரயோதசி தன்னைப்புகழும். சதுர்த்தசி

சௌரி உவா கன்மி என்பன, இனி இராசிபலன் அறியும்படி மேஷம் பலஸ்திரீ, ரிஷபம் கன்னி, கபடி மிதுனம், சௌரி பலஸ்திரீ, கடகம் துர்ச்சேஷ்டை சிங்கம் கன்னி நெறியுடையவள் எ-று. 3

### மேற்படி இராசிபலன் வாரபலன் முதலானவை

காணும்பஞ்சம்பாத்திரிநள்ளிநற்
கற்புளான்கனகந்தீதுவாரமுன்
னூணுஞ்சேயிலேயுத்தமிநாணுநூ
லுதவுசேயுள்ளபொன்னுளரிவையாம்
வாணுதன்மிடிந்தக்கோணமதியுறும்
வாழ்வுவீமேசர்தாளேவணங்கியே
பூணுங்காலேநலமத்தியானமே
புன்மையந்தியதமமேழ்நன்றிதே.

இ-ள். துலாம் மிடி, விருட்சிகம் பலஸ்திரீ, தனுசு கன்னி மகரம் கற்புடையவள், கும்பம் அர்த்தமுண்டாம், மீனம் தீது, ஞாயிறு ரோகி புத்திரரில்லே, திங்கள் பதிவிரதை, செவ்வாய் விதவை, புதன் புத்திரருண்டாம், வியாழம் தனமுண்டாம், வெள்ளி அழகு, சனி மிடிபடும், இனி சுபக்கிரகங்கள் மதியுடனே கூடிநிற்கில் வீமேசர் கிருபை கூர்ந்த செல்வமுடையவள், தீக்கோளாகில் தீதென்பது காலேயில் உத்தமம், மத்தியானத்தில் மத்திபம், அந்தியிலும் இரவிலும் அதமம் தெருட்சியான இலக்கினத்துக்கு 7-ஆம் இடம் சுத்தியாக இருக்கில் சகலதோஷமும் நிவர்த்தியாம் எ-று, 4

### ஆரூடதிக்கின் பலன்

இந்திரன்றிசையேழுசேய்சௌரியா
மினபனுக்கடங்காள்பிறிவெண்டுகில
செந்தழன்மகவொன்றுகருந்துகிற்
றெற்குநீலத்துகிலுமலடியா
மந்தன்வெண்டுகின்மைந்தர்நால்வாழ்விலாள்
வருணன்சேயாறுவன்றுகின்மாசுறு
முந்துசெல்வங்கொழுநற்குமுன்னதா
மும்பர்கோன்வீமனாதருரைத்ததே.

இ-ள். தெருட்சிக் குறித்து கிழக்சாக வந்து கேட்கில் பிள்ளே 7-சௌரி கணவனுக்கடங்காள், உடுத்தபுடவை வெண்டுகில் அக்கினி மூலே பிள்ளே 1-கறுப்புத்துகில் தெற்கு நீலத்துகில் மலடி தன கணவனுக் கிதப்பட்டிராள், நிருதி வெண்டுகில் பிள்ளேகள் 4-திருமங்கிலியமிருப்பாள் போகமுடையவள், மேற்குப் பிள்ளேகள் 6-அழுக்காடை

செல்வமுடையவள் தன் கணவனுக்கு முந்துவள் பத்தாவுந் தானும் பிரியாத செல்வமுண்டா யிருப்பள் எ-று. 5

இதுவுமது

உரைத்தகாற்செந்துகிற்சக்களமைசே
யுற்றரெண்டுசோமன்றிசைவாடையாம்
பெருத்தசெல்வமாமீசன்றுலாநலம்
பிள்ளைபத்துபிடியொடுமீளுமே
யுரத்தவுத்திராடம்முதற்பன்னிரண்
டுத்தமம்மத்திபம்மிறையாகியே
முரைத்தவாழ்விலைச்சித்திரையத்தமற்
றெழியுமாறு ஞாலும்பர்கோன்சொன்னதே.

இ-ள். வடமேற்குப் பொன்னிறமாகிய செந்துகில் சக்களமை யுடையவள், பிள்ளை 2 பத்தாவுந்தானும் சந்தோஷமா யிருப்பார்கள் வடக்குத் துவரை வர்ணமாகிய செந்துகில் வெகு செல்வமுடையவள், ஈசானமூலையில் நல்ல துகிலுடையவள் பிள்ளைகள் 10 மிடிபடும் இன்னம் ஒரு அடைவு உத்திராடம் முதல் 12-ம் உத்தமம் மேல் 7-ம் மத்திபம் மேல் 2-ம் வாழ்வு குன்றும் மேல் 6-ம் விதவையாம் எ-று. 6

இதுவுமது

சொன்னமேடமரிபிறப்பேறதே
துய்யகோட்டிற்றுலைச்கன்னிநால்வரு
முன்னுதேள்யாழுடைவிளக்கில்புறம்
புற்றவிற்சாலசங்குளிமான்கய
லென்னுநீர்க்கரையீசன்மேல்விந்துவொன்
றிந்திரன்பத்தெறிதெற்குநாற்றுளி
மன்னுமகாநாற்றிக்கிலும்ரெண்டுநன்
மங்கைபூர்க்கில்வகுத்தாரிறைவரே.

இ-ள். மேஷஞ் சிங்கம் வீட்டுக்குப் பிறத்தியிலாகுதல் ஊருக் குப் பிறத்தியிலாகுதலாம், ரிஷபம் பசுத்தோஷம், துலாங் கன்னி 4-பேருக்கு நடுவால் 4-பெண்களுக்கு நடுவாதலாம், விருட்சிகம் மீனந் துகில் விழுந்து படுக்கையிலே பிறத்தியிலே காணப்படும், தனுசு கும்பம் வீட்டுக்குள், கடக மகரம் மீனம் தண்ணீர்க்கரையிலாகுதல், தண்ணிமிடாக் கையிலிருக்கையில் ஆகுதலென்றறிக, ஈசானமூலை யில் வந்துகேட்கில் துளி-1 கிழக்கு-10 கலைந்திருக்கும், அக்கினியுந் தெற்கும் துளி 4-திக்கும 2-துளி என்று தெருட்சியைக் குறித்து வினவ்ல் இவ்விதம் சொல்வார் எ-று. 7

## புணர்ச்சி

சிறந்தமீன்றிருப்பூத்தநாண்மூன்றினுஞ்
சேரொணாதுமற்றீராறுஞ்சேரலா
நிறைந்தசோமன்சகனுச்சிபாடுற
நீடுவாயுமிடத்தேயியங்கிட
வறிந்துகூடவிரவிரட்டித்தநா
ளணைவதாமொற்றைநாட்பெண்ணதாகியே
பிறந்திடுங்கோட்கணட்பாட்சியுச்சமே
பேணிநிற்கில்வீமேசர்க்காம்பிள்ளையே,

இ-ள். புணர்ச்சிக்குத் தூரமானநாள் 3-நாளும் புணரொண்ணாது, மற்ற 12-நாளளவும் புணரலாம், மதி சுக்கிரன் 7-ம் மிடம் 10-ம்மிடம் நிற்க இடைகலை நடக்கிறவேளையிலே புணரலாம், ஒற்றித்தநாளில் கூடில் ஆண், இரட்டித்தநாளில் கூடில் பெண்ணென்றறிக, அப்போது சுபக்கிரகம் நட்பாட்சி யுச்சம்பெற்று நிற்கில் வலிபெற்றகோள், பெண் கிரகமானால் பெண், ஆண் கிரகமானால் ஆண், அப்போது கர்ப்பம தரிக்கிறபோது பிருதிவு அப்பு உதிக்கச் சரம் பிங்கலை நடக்க ஆண், இடை நடக்கப்பெண், அந்த வேளையில் குரு 5-ம் இடமாக உற்பத்தியான பிள்ளை ஞானியாய்ப் பரோபகாரியாய் வீமேசர் திருவடிக் குரித்தாவன் எ-று. 8

## இதுவுமது

இலங்குசோதிபனைமூலமோணந்தே
ரேவதியுத்தரங்கள்செகத்தழும்
பலன்கொள்சுத்தநிடேகம்விட்டம்பரி
பயறுபூசங்கடேங்காயுமத்திப
நலந்தருஞ்சராசிநற்கோடின
நாட்டஞாயிறுசெவ்வாய்சனியுவாத்
துலங்கிருத்தையுமட்டமியுந்தகர்
சோபனங்களுக்காந்தொடுக்காடரே.

இ-ள். சுவாதி அனுஷம் மூலம் திருவோணம் உரோகணி இரேவதி உத்திரங்கள் மூன்றும் சதயம் அஸ்தம் இவை சுத்த நிஷேகத்துக்கு உத்தமம், அவிட்டம் அசுவினி சித்திரை புநர்பூசம் மிருகசீரிஷம் இவை மத்திபம், சராசியும் சுபவாரமும் சுபக்கிரகங்கள் தனலாப கேந்திர திரிகோணங்களில் நிற்கினும் நோக்கினும் புணர்ச்சிக்கு நன்மை, ஞாயிறு சனி செவ்வாய் உவா இருத்தையும் அஷ்டமியும் இவையெல்லாம் ஆகாது எ-று. 9

## சீமந்தம்

நேரவிந்துதயம்பத்துநானல
    நீர்பொன்னெட்சியைந்தொன்பதினல்லன்மா
லோருமேழொன்பதின்னலன்பாவர்பன்
    னென்றுமூன்றினிற்பண்பாம்வீமர்கோ
னாமூன்றுநாலாறெட்டுத்திங்கண்முன்
    றந்தணர்காமப்பூர்வபட்சத்தினிற்
சேரநற்கோடினத்திலுதயமுஞ்
    சிறக்கத்திங்கள்செலக்கோளுந்திக்கவே.

இ-ள். மதி உதயம் 12-4 இவற்றில் நல்லன் சுக்கிரன் குரு உதயம் 5-9, இவற்றில் நல்லன் புதன் இரவி 7-9, இவற்றில் நல்லன் பாபக்கிரகங்கள் 3-6-11, இவற்றில் நல்லவர் இலக்கினம் சுபமாய் இலக்கினத்தில் ஜலக்கிரகம் உதிக்க சீமந்தம் பண்ணலாம் எ-று. 10

## இதுவுமது

உதித்தசீமந்தமாரெட்டாந்திங்களி
    லுற்றபூர்வபட்சத்தேறுபோதினில்
விதித்தசத்தமியாந்துவர்தேசுதோ
    விரும்புமோணஞ்சுபக்கோட்கணோக்கவே
மதித்தமால்பெலிமக்கள்பெறுமனை
    மங்கைசேணவத்திராங்கண்மான்றலை
கதித்தபுல்விளக்காவணங்காரிமால்
    கார்த்திவாரங்கருத்துடைநமபரோ.

இ-ள். சீமந்தத்துக்கு 8-ஆம் மாதத்திலும் பூர்வபட்சத்து ஏறுபொழுதில் சப்தமி துவாதசி உரோகணி திருவோணம் இந்த நாளில் சுபக்கிரசங்கள் நோக்க மக்கட்பேறு மனைக்குப்போக அஸ்தம் திருவோணம் உத்திரம் மூன்றும் அசுவினி மிருகசீரிஷம் அனுஷம் புநர் சனி புதன் வெள்ளி திங்கள் நல்லது எ-று. 11

## மகப்பேறு

நம்பர்நன்தொடுக்காடரைநாடிவாழ்
    நானிலத்தோர்மகப்பெறுமைந்தினைச்
செம்பொனேக்கினும்மாசியக்சோளினைச்
    சேர்ந்தகோட்கள்வலித்திறஞ்செப்புக
வெம்பாப்பரிவேடம்வின்னுட்பமே
    மேவல்கெற்பமுடம்பினுக்கேழ்மெய்யோங்
தம்பமாருயிர்க்கேழினிற்சோமனூர்
    சாருநாண்மகப்பேறதுசாற்றுமே.

இ-ள். மகப்பேறு வினவில் 5-ஆம் இராசியை குருபார்க்கினும் இருக்கினும் அவ்விராசியை நோக்கின கோட்கள் இராசியாதிபனுடனே நின்ற கோளாலும் நோக்கின கோளாலும் இத்தனை பிள்ளையென்றறிந்து ஒற்றித்த கோள் இரட்டித்த கோளாலும் இத்தனை பிள்ளை யென்றறிந்து சொல்லது தேறிநோக்கின கோளின் திறமறிந்து நன்மை தீமை சொல்லுக, நற்கோள் நோக்கில் நலமிகவுண்டு பகை நீசங்களிலுந் தீக்கோள் நோக்கில் கொடியரும் அற்பசுகமுமுண்டென்க, உதயாரூடக் கவிப்பில் இராகு கேது பரிவேடம் இந்திர தனுசு நுட்பம் நிற்கில் கெர்ப்பமுடையவள் போதுகாலம் ஆரூடத்துக்கு 7-ஆம் இராசியில் மதி வரில் மெய் நேரம் உதயத்துக்கு 7 ஆம் இராசியில் மதிவரில் பிள்ளைபெறும் எ-று. 12

இதுவுமது

சாற்றுமோரைபுருடர்முற்பாதியுந்
தக்கவாண்கோள்வலியுறிலாணதாந்
தோற்றுமோரையுந்தோகைமுற்பாதியுந்
துய்யபெண்கோள்வலிவுறிற்றோகையே
போற்றுமப்பேர்வலிபெற்றகோணிறம்
பொருந்துமாருயிர்புத்தியும்பூணுமே
யாற்றல்பொன்புகர்மாலுறவந்தசே
யழகர்வீமேசுராருள்காணுமே.

இ-ள். ஆண் இராசி உதிக்கில் முற்பாதியாகில் ஆண்கோள் வலிபெற்று நிற்குதல் நோக்குதல் செய்யில் ஆண்பிள்ளை, பெண் இராசியு முற்பாதியும் பூரணஇராசி பின்னரையுமாகில் பெண்கோள் வலிபெற்று நிற்கில் பெண் பெறுவாளென்க, அப்போது தேறிய கோளால் நிறமும் பாமாயுசுங் குணங்களும் அக்கோள் தேறி நிற்குங் காலங்களிலே சுகமும் பகை நீசமும் அஸ்தமானம் பாவக்கோள் கூடினும் நோக்கினும் அவரவர் தானங்களிலே தீதுவருமென்க, உதயத்தையாதல் மதிலக்கினத்தையாதல் குரு சுக்கிரன் புதன் தேறி நோக்குதல் செய்யில் தீவினைகளெல்லாம் வென்ற பெருஞ்செல்வமாகில் ஞானேசுரனுமாகி சர்வாகமங்களுக்குந் தானே தேறி அறிவும் அன்பும் கருத்தும் அருளும் பெருந்தயவு முடையராமென்று மனமே ஆலயமாகி பூமணமாகி இருக்கும் அழகர் வீமேசுரர் திருவடிக்குரித்தாவர் எ-று. 13

இதுவுமது

காணலாந்தொடுக்காடர்நற்கோளெழக்
கடியதேளிருத்தையொழிந்தேதிறல்

பூணுமட்டமஞ்சுத்தியநம்புகப்
　　புரிந்தலைமந்தர்நீராட்டிப்பொன்பூபசு
தாணுவுக்கந்தணர்க்குபசாரமே
　　தக்கதீந்துதனையனைக்கண்டுகந்
தூணுமெய்த்திறற்சாதகச்சுற்றநூ
　　லோலையில்லெழுதற்குளம்பூணுமே.

இ-ள். நற்கோள் உதயத்தில் விருட்சிசம் இருத்தை ஒழிந்த நாளில் அஷ்டம சுத்தியாக அசும்புருதலாம் பிறந்த பிள்ளையை நீராட்டிப் பொன் பூஷணம் பசு இவைகளெல்லாம் பெரியோர்களுக்கும் பிராமணர்களுக்கு மீந்து புத்திர தரிசனம் பண்ணுவது பின்பு சாதகம் பண்ணுவது எ-று. 14

தெருட்சிப்படலம் முற்றிற்று.

---

## ஜாதகப்படலம்.

### இலக்கின பாவம்

பூணுநற்கோள்பொலிவுறக்கேந்திரம்
　　போதுசெய்யும்வியாழமடங்கல்பொன்
காணுமன்னநட்பாட்சியிலாறுகோள்
　　கதிர்களுச்சிகலந்திடவேந்தாம்
பேணுமுச்சியின்மூன்றுசோண்மண்டலம்
　　பேசுநாறைதேசாதிபன்பேறதே
தாணுவைந்தாறுதிக்கெலாங்கொள்ளுமே
　　சததகோள்வீமநாதர்தாள்சாருமே.

இ-ள். நற்கொளாகிய குரு சுக்கிரன் மதி நாற்கண்டங்களில் நிற்க கர்க்கடகத்தில் குரு உதபமாக 4-7-10-ஆம் இடத்தில் சுபக்கிரகங்கள் தேறி நிற்கப்பிறந்தால் அநேகநாள் சுகத்துடனே இராச்சியம் பண்ணுவான், சிங்கத்தில் குரு உதிக்க நட்பிலு மாட்சியிலும் ஆறு கோள் நிற்கில் அரசாளும இங்நெறியே। சிங்கத்தில் குரு உதிக்க ரிஷபத்தில் பூரண மதியும் மேஷத்தில் இரவியும் நிற்கப் பிறந்தானுகில் இராச்சியமாள்வான், மூன்றுகோள் உச்சத்தில் நிற்கப் பிறந்தவன் ஒரு மண்டலமாள்வன் 4-கோளுச்சமாகில் தேசமாள்வன், 5-கோள் 6-கோளுச்சுமாகில் 56-தேசமுமாள்வான், 8-கோளுச்சமாகில் திரிலோகங்களையு முணர்ந்து திக்குவிஜயங்களும் பண்ணி ஞானவேந்த வீமநாதன் திருவடிக்குரித்தாவர் எ-று. 1

இதுவுமது

சாரும்வெய்யோனிருபாலுந்துய்யகோ
டலேவனிந்துவைச்சாரிற்றலவியா
னோவைந்தின்னெறிமதிமந்திரி
நீடுமொன்பானும்வெகுதானியாவனே
கூறுபன்னொன்றுதெற்குறுதலமகன்
கூடிநற்கோளுநாத்தனச்செல்வர்முன்
றூநட்புச்சகோதாவன்பனு
மணிகொணன்மைவீமேசாளிக்குமே.

இ-ள். இரவி இருபாலும் நற்கோள் தேறிநிற்க, அரசனும் பிறை மதிக்கு இருபாலும் நற்கோள் நிற்க, இராஜதேவிகள் 5-ஆம் இடத்தில் நற்கோள் தேறிநிற்குதல் நோக்குதல் செய்யில் வெகு தானதர்மங்களைச் செய்யும் 11-ம் இடத்தில் தேறின கோட்கள் நோக்குதல் நிற்குதல் செய்யில் சகலமும் புகழுந்தேவன் 2-ம் இராசியிற் றேரிய கோட்கள் நிற்கினும் நோக்கினும் தனச்செல்வன் 3-ம் இடத்தில் நற்கோளுண்டாகில் சிநேகமும் சகோதரப்பிரியமு முடையவன் கிரகங்களெல்லாம் அணியணியாய் நிற்கில் வற்றாத செல்வன் எ-று. 2

இதுவுமது.

அளிக்கும்வெய்யோன்பிதாமதிதாய்பிறந்
தார்களாசல்குருமைந்தர்கல்விமால்
விளைக்குமாரிபெண்ணுகாவிதனமும்
வெய்யமக்தனெட்டாலேயுரைநிலே
தளிர்க்குந்தான்குடியென்றமுன்னுன்கினும்
தக்கநன்மையுந்தீமையுஞ்சாற்றுக
விளைக்குந்திக்கோட்கணட்புச்சமேறினு
மெம்பிரான்றேடுக்காடரிசைத்ததே.

இ-ள்· இரவி நட்பாட்சி யுச்சத்தில் நிற்கில் நற்கோள் நிற்கினும் பிதாவுக்கு நன்மை, மதி இந்நிலையாகில் மாதாவுக்குச் சுகம், குஜன் உடன்பிறந்தார்க்கென்றும் குரு புத்திரருக்கு கல்விக்கு புதன் கல்வி- வெள்ளி பெண்திறம் இராகு இடத்திறம் சநியால் மரணகாலங்கள் என்று சொல்க, இன்னம் இராசி 12-லும் நன்மை தீமை சொல்லும் படி உதயராசியின் பலன் கொண்டு ஜெனித்த பிள்ளைக்கு சொல்க, 2-ம் இராசி சுற்றத்தாருக்கு 3-ம் இராசி உடன்பிறந்தாருக்கு 4-ம் இராசி போஜனமும வாகனசவுக்கியமுஞ் சொல்க, 5-ம் இராசி மக்கட்டிறம் புத்தி கல்வியுஞ் சொல்க, 6-ம் இராசி பகைத்திறம் பிணித்

திறம், 7-ம் இராசி பெண்டீர், 8-ம் இராசி மாணம், 9-ம் இராசி குரு நிலை பிதாநிலை, 10-ம் இராசி தொழில்நிலை, 11-ம் இராசி செலவமும் புகழும், 12-ம் இராசி நற்கோள் நிற்கினும் நோக்கினும் நட்பாட்சி உச்சக்கோள் நிற்கினும் அவன் பொருள் அவத்துக்குச் செலவிடா மல் தர்மச்செலவிடும், பகை நீசக்கோளும் பாவக்கோளும் பார்க்கில் அவச்செலவும் தெண்டமுங் கொடுப்பன், இந்நிலை உதயமுதல் 12-ஆம் இராசியும் நற்கோள் நன்மை தீக்கோள் தீமை அவரவர் தானங் கொண்டு பலன் சொல்க, தீக்கோள் நாற்கண்டங்களிலும் பகை நீச மாய் நிற்கப் பிறந்தால் சுகதேகியல்லன் எ-று. 3

## பிணி துர்க்கருமம் சிறை ஆக்கினை: தரித்திரம்

சேலதாந்தொடுக்காடரெண்ணார்களே
செனிக்குமபோதுநாற்கண்டமுந்தியகோள்
சோலநற்கோள்பகைநீசஞ்சேரினுவ
கொடியர்பாதகர்சீர்கேடர்சற்றனு
னீலர்பாம்புகண்டத்துறச்சேயெழ
நேரினுஞ்சிறைநீர்க்கிழ்க்கொடியரே
சாலநோய்மிடிசுன்னெழவெம்பிணி
சசியுறப்பொன்னுயிர்தறிப்புண்மையே.

இ-ள். உருபாருபமாய் அஞ்செழுத்திலுடனும் உயிருமாகப் படைத்து விந்து நாதங்களுமாகி நின்று முறைமுறையே நடத்தப் பட்ட பரிபூர்ணன் தொடுக்காடரென்றும் சர்வ வல்லவரென்றும் புக ழாமல் இகழ்வார், செனிக்கும்போது நாற்கண்டத்திலும் தீக்கோட் கள் நிற்க நற்கோள் பகை நீசங்களில் நிற்கப் பிறந்தார்கள் கொடிய வசனராய் கொலைபாதகருமாய் சிவதூஷணராய் எமனுக்காளாகி நா கங்களை அனுசரிக்கவும், சனி இராகு கண்டத்திலே நிற்கக் குஜன் உதிக்கில் சிறைப்படுவன் 4-மிடத்தில் தீயர்பகை நீசமாக நோக்கில் வ்றிஞராய் நோயால் மெலியும், சனி உதிக்கில் 7-மிடத்தே மதி நிற் கில் அவனுடன் இராகு கூடி நிற்கில் பொன்னேக்காணுகில் கை கால் தறிப்புண்பன் அறத்தையும் நற்றவத்தையும் மெலிவார் பெறும்பேறு இதுவாம் எ-று. 4

## ஆக்கினையின் அவயவம்

உண்மைகூர்தொடுக்காடரையுன்னிடா
ருதயந்தீந்தாரவெய்புறச்சுன்னெழ
வண்மைகூர்சுபரில்லையேற்கூனுறு
மதியிற்கேதுறகம்மறுந்தேடகா

திண்மைசெய்கரியோனெழுமுன்றிறற்
செய்யமாலுறக்கூட்டமுமாகுமே
தண்மைநீசாங்கிசம்பன்னிரண்டிலே
சந்திரன்புவிமேவக்கண்சாவிதே.

இ-ள். மெய்நூலும் மெய்த்தவமும் மெய்யறமும் மெய்ஞ்ஞான முந்தரும், சற்குரு தொடுக்காடான வீமேசுராரைப் பொருளென் றுணராத பாவசன்மிகள் பெறும்பேறு இரவியுடனே மதி நிற்கில் காலறுப்புண்ணும், மதியுடனே கேதுநிற்கில் தலையறுப்புண்ணும், விருட்சிகம் மேஷத்தில் குஜன்நிற்க சனி உதிக்க 3-மிடம் 4-மிடம் புதனிற்க பிறக்கும் பிள்ளை கூனு முடமுமாமென்க. இரவி முதலான கிரகங்கள் பகை நீசமான அங்கிசங்களில் நிற்கினும பெருந்துயர முடையவன், 12-ம் இராசியில் இரவிமதி நிற்கில் இரண்டுகண்ணும் போம், இரவி வலக்கண், மதி இடக்கண், குரு நோக்கில்லையாகிற் சொல்வது எ-று. 5

தரித்திரம் ஆயுதம் அக்கினி இவற்றால் வாதைப்படுவன்
பறிகோடேப்பன் குருபுத்திரன்

சாவிலாதசமர்த்தர்வீமேசனார்
சார்பிலாக்காறுமெட்டிலுந்தீயகோள்
பாவிநோயாற்கருவியாற்பங்காதிப்
பகையுநீசமும்பன்னிரண்டெய்துமே
மேவலார்கொளுமேதையிரண்டுபொன்
மேற்றமேகுருமைந்தனல்லார்பிறந்
தாவுகோணிறஞ்சாதிமிங்கில்லை
தாரிகண்டுரைப்பார்கற்றலைவரே.

இ-ள். அழிவில்லாத பெருந்தகைமை யுடைய சமர்த்தர் வீமேசுரைப் புகழாமல் யிகழ்வார் ஜனிக்கும்போது 6-ஆம் இராசியிலும் 8-ஆம் இராசியிலும் தீக்கோள் பகை நீசமாக நிற்குதல் நோக்குதல் செய்யில் நற்கோளில்லையாகில் தீராத மிடிகளாலும் கருவிகளாலும் அக்கினிகளாலும் வெகு வாதைப்படுமென்க. பாவக்கோள் பார்க்கில் நிற்கப்பிறந்தான் பொருளெல்லாம் பகைவரும் இராஜாக்களும் கொள்ளுமென்க, இதய இராசியையும் மதி லக்கினத்தையும் குருநிற்குதல் நோக்குதல் செய்யில குரு புத்திரனென்க. இப்படி அல்லாதது பிறர்க்குப் பிறந்தானென்பது உயிருடலை நோக்கின கிரகங்களாலே நிறமுஞ் சாதியுங் குணமும் திசைகளும் முன்சொன்னபடி எல்லாங்கண்டு வகுத்துரைக்கவல்லவன் பூலோகப்பிரம்மா எ-று. 6

### நஷ்ட ஜாதகம்

தலைவராசியொடாறுயிர்பூர்வமே
சாலொடாறுமெய்த்தேயவுதற்கோணல
மில்குமோரையதாண்டகர்க்காறிலே
யெய்த்ததுமுன்னோரைமூன்றுமுன்பின்னர்பின்
குலவுமோரைமுக்கூறிதுகொண்டதைக்
கூறிலொன்றுகால்கூறுகால்கொள்வதே
துலைகொடாறுபெண்ணின்நிலைதுய்யகோ
டோன்றநாடொடுக்காடருரைத்ததே.

இ-ள். கிரகத்தலைவரான இரவி ஆட்சியான சிங்கமுதல் 6 இராசியும் உயிரென்றும் பூர்வமென்றும் இவ்வாறிலும் நற்கோள் நிற்கில் உயிர்சுகம், தீக்கோள்நிற்கில் உயிரழிவு, கும்பமுதல் 6-இராசியும் உடலென்றும், அமரபட்சம் என்றுமறிக. இவ்வாறில் நற்கோள் நிற்கில் சுகதேகியென்றும், தீக்கோள் நிற்கப் பிறந்தவன் பீடைதேகியென்றறிக, நாளுமோரையும் பிறந்தநாளும் அறியாதார்க்குச்சாதகம் நிச்சயம்பண்ணும்படி ஒற்றித்த ஆண்ராசியாகிய மேஷம் மிதுனம் சிங்கம் துலாம் தனுசு கும்பம் இவைகளுதிக்க வினவினபோது மேஷாதி ஆறுக்குளென்க. ஆண் இராசி முன்னரையாகில் மேஷமுதல் மூன்றுக்குளென்க. பின்னரையாகில் கர்க்கடகமுதல் மூன்றுக்குளென்க மேற்படி இராசியை மூன்றுகூறாக்கி முதற் கூறாகில் மேஷம் நடுக்கூறாகில் ரிஷபம, கடைக்கூறாகில் மிதுனமென்றறிக, கர்க்கடகமுதல் மூன்றுக்கும் இந்நெறியேகொள்க. முதற்கூறானால் அந்தக் கூறாய் மூன்று கூறாயீய்ந்து அந்தக்கூறை 4-ஆக ஈய்ந்து அப்போவுற்ற பட்சிக்காலென்றறிக. பெண் இராசி உதிக்கில் துலாமுதலாறுக்கு ளென்றறிக. மற்றது முன்சொன்னபடி நிச்சயம் பண்ணிக் கொள்வது அப்போ தேறிநிற்கிற கிரகநிலையிலும் நோக்கினும் இன்ன நாளென்றும், இன்ன வாரமென்றும், இன்னமாதமென்றும் இன்ன வருஷமென்றும ஆகம நீதிமதிகளெல்லாம் தெரித்து திகையாமற் சொல்க எ-று. 7

### இலக்கினபலன்

உதயபானுவுரூரபிமானியா
முத்தமன்மதிபோகவான்சீலர்சேய்
முதியகோபிபுதன்ஞானியந்தணன்
முத்தியன்பன்குலவேந்தன்சுங்கனே
யதிகசெல்வன்சனிமனரோகியா
மாயுபீடைக்கொடியர்கடும்பிணி

மதியணிந்தசடையர்வீமேசர்தாள்
வணங்கியெட்சிவலியறிந்தோதுமே.

இ-ள். யாதாமொருவன் செனித்தபோது இரவி இலக்கினத்தில் தேறி நிற்கில், சூரன் அபிமானி உத்தமன், இலக்கினத்தில் மதி நிற்கில் போகவான், தாட்சண்ணியசீலன், குஜன் நிற்கில் கோபவான் சூரன், அபிமானி, சவுரியன், சபலன், யுத்தயோகமுள்ளவன் கலகமுள்ளவன் ஆயுத அப்பியாசி வீரன் வியாதியுடையவன் இலக்கினத்தில் புதன் உச்சமாக நிற்கில் ஞானி விருத்தன் புத்தி விஸ்தாரசீலன் காவியலட்சணமறிவன் நீசம் அஸ்தமனமானால் அற்பவித்தை பகை. இராசியில் நிற்கில் அன்னியவித்தை படிக்கும் இலக்கினத்தில் குரு நிற்கில் உத்தியோகன் குலசிரேஷ்டன், சரீரமழகுடையவன், பாக்கியஸ்திரீயுடையவன், இராஜசேவையுடையவன் ஆத்ம சவுக்கியமுடையவன், மனோபலமுடையவன், தனதான்னிய விதியில் ஐஸ்வரிய முடையவன், உச்சத்திலுதயமானால் பட்டாபிஷேகத்தலைவன், இலக்கினத்திற் சுக்கிரன் நிற்கில் அதிக செல்வமுடையசுகவான், பிரசன்னத்தையுடையவன், நயகுணமும் சரீரமழகியன், பந்துகுண முடையவன், புத்திரவர்த்தனையும் தேவப்பிரமாணபக்தியுமுடையவன், கிருஷி பலிப்புள்ளவன், தான்சுகித்துவாழப்படும். இலக்கினத்தில் சனிநிற்கில் மனோவியாதியும் எந்நேரமும் சரீரஆலசியமுடையவன் இவைபால்யவயதிலே சித்திக்கும், ஆட்சியிலாகுதல், உச்சததிலாகுதல், குருக்ஷேத்திரத்திலாகுதல்நிற்கில் பிரபுக்கள் சன்மானிக்கவும் கிராமஜனம் சன்மானிக்கவும் வித்துவானுமாய் பூமியுடையவனுமாம் இலக்கினத்தில் இராகுநிற்கில் விஷவியாதியுடையவன் நீசரோகி குஷ்ட வெளுப்புடையவன் புத்திரஹீனன், அங்கரோகி, விவாதசீலன், பரிபூதன், இலக்கினத்தில் கேது நிற்கில் விஷரோகி, சரீரமெல்லிதாயிருப்பன் பலயீனன் இவை நட்பாட்சியுச்சத்தில் வலிபெற்று நின்றகோளின்திறமறிந்து சொல்லுவது எ-று. 8

2-ஆம் இடப்பலன்

வலியபானுக்குடிப்பொருட்சேதமா
மதியின்மாதனஞ்சேய்கடுஞ்சொல்புதன்
குலவுநன்மொழிப்பொன்வெகுசெல்வனுங்
கூறுவாய்சொற்பலிக்குங்கரியவ
னலைவுதற்குடிபாம்புவரில்விட
மணிந்தகேதுவணிதூடணஞ்சொலு
மிலகுமெங்கள்வீமேசரைப்போற்றியே
யிணைந்தகோட்கள்பெலங்கண்டியம்புமே.

இ-ள். 2-மிடத்தில் இரவி நிற்கில் மக்களாலும் இராஜாக்களாலும் பொருட்சேதமாம். 2-மிடத்தில் மதி உச்சனாகி நிற்கில் தனவான் பந்து சுகமும் புத்திரசுகமு முள்ளவன் நல்லவசன முடையவன் வித்வானால் பகை நீசமாகில் அற்பபலம் நட்பாட்சியாகில் பாகாரியப் பிரவிர்த்தியாம் ஸ்திரீ சொல்கேட்பன். 2-மிடம் குஜன் நிற்கில் கடுஞ் சொல்லுடையவன் பலவிதத்திலும் திரவியநாசன் கோபவான், தந்தரோகி, கண்டித்துச்சொல்லும் கலகப்பிரியன். 2-மிடம் புதன் நிற்கில் நல்லவசனஞ் சொல்லவல்லவன். தனவான் சுபத்திரவிட முடையவன், வாகனபுத்தன், கணக்குங்காவியங்கள் சொல்லச் சமர்த்தன். 2-மிடம் குருநிற்கில் வெகுசெல்வன். தனவான் தியாகி வெகுசுவாத்தியமுடையவன். சீவன் வாகனமுடையவன் இராஜப்பிரியன் சொல்லும் வாக்கு பலிக்கும். ஆயுசுடையவன் வீரியமுடையவன் புத்திமான் தான் சுகித்து வாழப்படும் புத்திர மித்திர களத்ரசுக முடையவன் 2-ஆம் இடம் சுக்கிரன் நிற்கில் வாசாசித்தியுடையவன் வெகு தனதானியமுடையவன் பரமாத்மசீலன் கதைகாவியஞ்சொல்ல வல்லவன். வித்தியாப்பியாச முடையவன். 2-மிடம் சனிநிற்கில் அக்குடிக்குக்கவலையுண்டாம். திரவிய நாசம். வினோதஞ்சொல்லவல்லவன். அந்நியதேச சஞ்சாரன். உபமானங்களும் கூட்டிச்சொல்லும். 2-ஆம் இடம் இராகு விஷவாக்குடையவன் பிரத்திஷ்டம் சொல்லும் 2-ம் மிடம் கேதுநிற்கில் சம்பிரமிக்க வார்த்தைசொல்லும். சபலன் துஷ்டவசனன் எல்லாரையும் தூஷிப்பனென்று வீமேசனைப்போற்றிப் பலாபலன் சொல்வது எ-று. 9

## 3-ஆம் இடப்பலன்

இபங்குமூன்றிற்கதிர்புத்திமான்மதி
 யிலக்குடன்புறந்தார்குசன்றீயன்மான்
மயங்குகல்வியின்பொன்சவுபாக்கியன்
 மாரிபுத்திரவீனன்சுகாத்துமாத்
தயங்கிராகுமுசரோகிகேதுவேற
 றக்கலோகப்பிரியன்பலமுளான்
செபங்கொளும்வீமநாதாதாள்போற்றியே
 செய்யகோட்கடிறங்கள்விரும்புமே.

இ-ள். 3-ஆம் யிடத்தில் யிரவிநிற்கில் புத்திமான் சவுரிய பிராதாக்களுடனே சினேகமாயிருக்கும் கண்டபட்சணங்கள் பொசிக்கும் 3-ஆம் இடம் மதியாகில் பிராதாக்களுடையவன் ஞான பலர் திரவியம் சேர்க்க வல்லவன், வித்தை பரிஞானம் பண்ணும். 3-ம் இடம்

குஜன் நிற்கில் சூரன். உடன்பிறந்தார்மேல் கலகப்பிரியன். கலக போஜனமும் சுடச்சுடப் போஜனமும் பண்ணும் 3-ம இடம் புதன் நிற்கில் பிராதுரு குணமுடையவன. பிபலன, சுவாகன, சகலமும் அனுஜீவிக்கும. அற்பவித்தை யுடையவன். அன்னிய சங்காரகர்த்தன். குரு நிற்கில் சவுபாக்கியன். பிராதுரு சுகமுடையவன். இலட்சுமீகரமுடையவன. இராசசேவை யுடையவன். தானினைத்தது சாதிக்க வல்லவன். பரிபூரன் லோகவசியமுடையவன், சுக்கிரன் நிற்கில் புத்திர ஈனன். பிரபு குணமுடையவன. கிருஷிபண்ண உச்சாகமுள்ளவன். இனிய பட்சணமுள்ளவன. சனி நிற்கில் சுகாதமா சுகஸ்திரீயை யுடையவன் தேகமுமாத்மமும் சுகமுடையவன். பரிஞானமுடையவன் தான் சுகித்து வாழப்படும் தனதானிய வர்த்தனையுடையவன். இராகு நிற்கில் முகரோகி தீர்க்கவசனி, சபலன், பிராதாக்களுடன் இகம் குறைச்சலுடையவன். ஸ்ரீமான கேது நிற்கில் லோகப்பிரியன், பலவான், பந்துடையவன, பிராதுருசுகம, குறைச்சலுடையவன். இவையெல்லாம் செயங்கொடுத்திரட்சிக்கும் வீமநாதர் பாதாரவிந்தத்தைப் போற்றி வலிபெற்ற கோளின் திறமறிந்து சொல்லுவது எ-று. 10

## 4-ஆம் இடப்பலன்

விரும்புநாலெரிபந்துபொல்லான்மதி
மிக்கதாய்க்கிடையானங்கிமேதகன்
வரும்புதன்சவுபாக்கியன்பண்டிதன்
மறையவன்குலநாயகன்சம்பன
னரும்புகர்சுகமாககமுளான்சனி
யக்கரோகியரவுபிணிமிடர்
துரும்பர்கேதுகலகப்பிரியனுந்
துய்யனுந்தொடுக்காடலரைப்போற்றுமே.

இ-ள். 4-ம் இடம் இரவி பந்து சுகங்குறையும் மதி தாய்க்கினியவன் தான் சுகித்து வாழப்படும மாத்திரை யறிந்தவன் பந்துசுகமுடையவன் பரிஜனசுகமுடையவன் வாகநாரோகணன சுகங்களை அனுபவிக்கும் கிருஷிபண்ண வல்லவன். குஜன் நிற்கில், மேதகன், சுகமிலாதான், சுகிதன், பாக்கியவாசி சுசங்களை அனுபவிப்பன். புதன் நிற்கில் சவுபாக்கியன், பண்டிதன், சுபாஷிகவான், இராஜசேவையுடையவன், கிரகவர்த்தனை யுடையவன், புத்திமான, போகவான், வாகனயுத்தன், பந்துள்ளவன் குரு நிற்கில் குலநாயகன் சிகிதன் புத்திமான் போகவான், இராஜசேவையுடையவன், கிரகவர்த்தனையுடையவன், தனயீனன். சுக்கிரன் நிற்கில் சுகமுள்ள செல்வமுடையவன், புத்திரமித்திர களத்திர சுகமுடையவன், வாகனயுத்

தன் கிரகசகமுடையவன் சனி நிற்கில், அங்கரோகி, அற்பசுகி, சஞ்சலவிதயன், நாஞவியாதிகன், தனயீனன், இராகு நிற்கில் ரோகி, தரித்திரன், புத்திரயீனன், பந்துசுகமில்லான், துக்கிதவான், எல்லாரோடு மிதமிலான், விஷரோகி. 4-ம் இடம் கேது நிற்கில் கலகப்பிரியன், விஷரோகி, பலயீனன், மாத்திரரோகமுள்ளவன், இவையெல்லாம் கிரகவலியறிந்து சொல்லுவது எ-று. 17

## 5-ம் இடப்பலன்

போற்றுமைந்தரிற்போக்கும்பிதாமதி
புத்திபாதிபன்செய்நன்றியற்றவ
னேற்றமானலறுத்துமஞானிபா
மிற்றவன்புத்திவாசாரசித்தியாஞ்
சாற்றுலோகப்பிரியன்சுனசேயிலான்
தக்காகுகொடியன்மகவிலான்
ஞேற்றமுண்டனுதாரமெய்ஞ்ஞானியாஞ்
சுததநற்ருெடுக்சாடரைச்சொல்லுமே.

இ-ள். 5-ம் இராசியில் இரவி நிற்கில் பிதாயீனன், பந்துசுசமும் மனோசுகமில்லாதான், கிரகசுகம் அற்பம், மதிநிற்கில் மாதா சுகமிலலான், குஜன் நிற்கில் நன்றியிலலாதான், புத்திரயீனன், சுசீலன் மனதில் ஒருநாளுஞ் சுகமில்லான், யாவருடனும் பிரீதியில்லான் துவேஷமுடையவன், புதன் நிற்கில் சற்குணன், ஆத்மஞானி, நிருபசேவிதன், வித்வான், சகல கலைவித்தையும் காவியாதிகளும் வல்லவன், குரு நிற்கில் புத்திவான், ஆசார சித்தியுடையவன், மனோபலமுடையவன், புத்திரமித்திர களத்திரசுகமுடையவன், அறிவுள்ளவன், மனதழகியன், கலகப்பிரியன், சனி நிற்கில் புத்தியீனன், புத்திரயீனன், சண்டாளசித்தன், இராகு நிற்கில கொடிய வசனன், மகவிலான், மனதில் ஒருநாளுஞ் சுகமிலான், சுகர்மன், ஜனத்வேஷமுடையவன், விஷசுபாவமுள்ளவன், கேது நிற்கில் உதாரணஞானி, சபலன், சுத்தராகிய தொடுக்காடரைத் துதிக்க வல்லன் எ-று. 12

## 6-ஆம் இடப்பலன்

சொல்லுமாறிற்றபனன்பிரபலன்
சோமன்சஞ்சலரோகிசெவ்வாய்நலன்
வெல்லுமால்பிணிவியாழமதுபொலான்
வியந்தநீரசத்துவிகன்காரியே
வல்லசமபன்னன்ராகுமாறுப்பிணி
மருவுகேதுவனுகூலசத்துரு
வெல்லையில்வடிவார்வீமநாதர்தா
ளேற்றிடக்கோட்ட்ள்வலிகண்டிசைப்பதே.

இ-ள். 6-ஆம் இடம் இரவி நிற்கில் பிரபலன், அதிக பலவான், ஸ்ரீமான், குணவான், பிரபு சேவிதன், மதி நிற்கில் சஞ்சலரோகி, அக்கினி பலங்குறைந்து சரீரம் அழகியதாய் ஆலசியமாய் இருப்பன். குஜன் நல்ல குணமுடையவன், சர்வ காரியலாபமுஞ் சத்துருசங்காரன், புத்திராதி திர்க்கமுடையவன், புதன் நிற்கில் விவாதசீலன், வியாதியஸ்தன், நிஜவாக்குச் சொல்லும் பரிபூதன், குருநிற்கில் கொடியன், பரிபூதன், பலயீனன், சத்துருஜெயமும் லோகதீபமும் அற்பன், சுக்கிரன் நிற்கில் பாரியர் சுகமும் பந்து சுகமும் அற்பன் விஷசீலன், பலரையு நிந்திப்பான், கலகம் பண்ணுவன், புத்திர மித்திர களத்திர சுகமும பிரபுகுணமுடைய சுபதேகியின் பலன். இராசாக்களாலும் பிராமணர்களாலும் சன்மானிக்கவும் வல்லவன். இராகு நிற்கில் மாருப்பிணியுள்ள குஷ்டரோகி, கேது நிற்கில் அனுகூல சத்துரு என்று எல்லையில்லாத வடிவரான வீமேசர் தாளை வணங்கி கிரகங்களின் வலிகண்டு சொல்வது எ-று. 13

## 7-ஆம் இடப்பலன்

இசைந்தவேழிற்கதிர்சிறுமாதுள
ஙிந்துவுக்குச்சந்தானச்சமர்த்தன்றீய்க்
கசந்தகோபிகடினன்பிரபுமால்
கனிந்தசொல்லன்கலைவல்லன்மந்திரி
யுசந்தமாதவன்செல்வர்புராதன
னுத்தமன்சனிபுத்திரவீனர்பாம்
பசந்தரோகிகொடிகளுங்கேதுகோ
யையர்வீமேசர்சொற்படியாகுமே.

இ-ள். 7-ஆம் இடம் இரவிநிற்கில் இருபாரியர், சிறுதாயருடையவன், பரசுகதூஷி, அகன்றவன், வரிபாடவல்லவன், வியாதியஸ்தன் மனோபலமில்லாதவன், 7-ல் மதி நிற்கில் புத்திரமித்திர களத்திர சுகமும், அர்த்தசித்தியும், சுகபிரதாபமும், சௌபாக்கியமுமுள்ளவன். குஜன் நிற்கில் கோபமுடையவன், கடினப்ரபலன், துரிதன், கவியாதியுடையவன். புதன் நிற்கில் மிருதுவசனன், புத்ர மித்ர களத்ர சுகமுள்ளவன், பிதாவிலும் அதிகன், ஸ்திரீசொற் கேட்பவன், இருபாரிய சித்தியுடையவன், அறிவுள்ளவன். 7-ல் குரு நிற்கில் குருவிசுவாசன், களத்திர சுகமுள்ளவன், பிதாவிலதிகன், கீர்த்திமான், பிரதானி, பகையுள்ளவன், ஞானி. சுக்கிரன் நிற்கில் புத்திரசுகமுள்ளவன், பாக்கியமுடையவன், பிரபலன், சிநேகிதபுத்தி, விஸ்தாரசீலன், சனி நிற்கில் கபடன், புத்தியீனன், ஸ்திரீ சாவகாசமுள்

ளவன், பாபகர்மி, விருதஸ்திரீயை யுடையவன், இராகு நிற்கில் விஷரோகி, கண்ணில் ரோகமுடையவன் தந்தரோசமுள்ளவன், உதாரன், புத்திரயீனன். கேது நிற்கில் பாதரோகி, நீலாதாரமுடையவன், தேகரோகி, விஷகோசமுனடயவன் இவையெல்லாங் கிரகபலனறிந்து வீமேசர் தாளை நினைந்து சொல்லுவது எ-று. 14

## 8-ஆம் இடப்பலன்

ஆகுமெட்டிலருணன்சுகமிலா
னமுதவிந்தழகன்பலவீனன்சேய்
லோகவிண்கலன்றாதுவனலன்
லோபியந்தணனீசமனதுளன்
போகவான்பிரபுசேவிதனுகுஞ்சுன்
புத்தியீனன்பணிஞானிகேதுவே
தோகைபாகருக்கன்பன்றயாளனுந்
துய்யவீமேசர்தாளைத்துதிக்குமே.

இ-ள். 8-ஆம் இடம் இரவிநிற்கில் சுகமிலான், தனயீனன், விதலன், சரீரத்தில் வியாதியுடையவன், இருபாரிய சித்தியுடையவன், மனோபலமில்லாதான். 8-ஆம் இடம் மதி நிற்கில் அழகுடையவன் பிரசித்தன், மாதுருவேஷி. குஜநிற்கில் பலயீனன், புத்திரயீனன், குணலட்சணமுடையவன், ரோகி, கலகபாரியர் சித்தியுடையவன, சரீரமெல்லியன், தூஷகன், நீசகர்மி. புதன் நிற்கில் நல்ல மனதுடையவன், மனோபல மில்லாதவன். குரு நிற்கில் நீச மனசுள்ளவன், பரிபூதன் வசனத்வேஷி, அற்ப புத்திரவான் ஸ்திரீசித்தியுடையவன். சுக்கிரனிற்கில் பிரபுசேவிதன், தனவான், புத்ரமித்ர களத்ர சுகமிலாதான், மனோபலமுடையவன். சனி நிற்கில் புத்திரயீனன் ரோகி போசனசவுக்கியமில்லாதான். இராகு நிற்கில் ஞானி, விஷசீலன். கேது நிற்கில் அறிவுள்ளவன், ரோக வியாதியுள்ளவன் சத்பாரியர் சித்தியுடையவனுகத் துய்யராகிய வீமேசரைத் துதிக்கும் எ-று. 15

## 9-ஆம் இடப்பலன்

துதிக்குமோன்பதில்பானுகரோதியாஞ்
சோமர்புண்ணியர்செவ்வாய்கொல்பாவிமான்
மதிக்குமாதவன்பொன்சகலாகலன்
மாரிசெல்வன்றருமனரிமக
னிதத்தனுமுபகாரிசுகங்குறை
யிராகுவஞ்சிற்கொடியனிருவினை
விதிக்குரித்தாங்கருமங்கள்செய்யுநல்
வீமநாதர்பொற்றுளைவிரும்புமே.

இ-ள். 9-ஆம் இடம் இரவிநிற்கில் குரோதமுடையவன். செறுவி கண்டகன், கோபி, பிரியன், புத்திரயீனன், மதிநிற்கில் புண்யவான் பாக்கியமுடையவன், புத்திருடையவன், லோகப்பிரியன். குஜன் நிற்கில் பிராணிகளை வதைகரும் பாபகர்மி, அதிஷ்டமில்லாதான் வெகுசலமுடையவன், புத்திவரன், அதிகமும் தனவான், குருசிந்தை யுடையவன், துவேஷமுடையவன், கலகப்பிரியன், புதனிற்கில் தப சுடையவன், தர்மவான், வித்துவான், புத்ரமித்ர சுகமுடையவன், தேவதாபத்தியுடையவன், அர்த்தலாபமுடையவன், ஆசாரமுடைய வன். குருநிற்கில் சகலகலாப்ரவீணன், நல்ல ஸ்திரீயையுடையவன். சுக்கிரன்நிற்கில் செல்வமுடையவன், ஞானி, புத்திரகளத்ர சுகமுள்ள வன், சற்சன சேவையுடையவன், தர்மத்தில்மனதுடையவன், தேவப் பிராமணபத்தியுடையவன், வஸ்திராபரணபூஷணமும்கோவர்த்தனமு முள்ளவன். சனிநிற்கில் தர்மயீனன், சுகங்குறைந்தவன், குருவுப கார பத்தியுடையவன், இராகு நிற்கில் விஷரோகமுடையவன், விரத சீலன், உடன்பிறந்தார் குறைந்தவன். கேதுநிற்கில் அதிஷ்டமில்லா தவன், பாபகர்மம் அதிகமாயுள்ளவன், ஜெபதபவர்ச்சித்தன், புத்திர மித்திருள்ளவன், சவுரியமுள்ளவன், தர்மவான், பிரீதிவல்லவன். இப்படி நல்வினைக்கிடாய் நற்தருமங்களைச் செய்து வீமநாதர் திருவ டிக் குறித்தாவார் எ-று. 16

## 10-ஆம் இடப்பலன்

விளங்குசூரியன்பத்தினில்வேந்தரா
மிக்கவிந்துவிராசசம்பன்னர்சேய்
களங்கில்பூமிசமைப்பன்பிரதானியாங்
கருணன்வாகன்வரதஞெங்குருத்
துளங்குசெல்வன்சுகசீவிசுக்கிரன்
சூரன்மந்தன்றனவானிராகுவேற்
களங்குகன்மனீசன்கேதுஞானவான்
கர்த்தன்வீமேசராடிகாட்டுமே.

இ-ள். 10-ஆம் இடம் இரவுநிற்கில் வேந்தராய், தனவானுமாய் தேவதாபத்தி குருபத்தியுள்ளவனுமா யிருப்பன். மதிநிற்கில் புத்தி மான், சூரன், தான் சுகித்துவாழும், குஜனிற்கில் பூமி ஆளுவன் பிரதானி சூரன் சுகவான். புதனிற்கில் சிறபவித்தையும் விதயாபர ஞானமு மறிகுவன், அறிவுடையவன், சத்தியவாசகன், காவிய கணி தாதிவல்லவனுமாய் குசலவித்தை யுடையவனுமாய் இருப்பவன். குருநிற்கில் செல்வமுடையவன், அபிமானி, குலவித்தை பரிஹரிக்

கும் புத்திவல்லவன், புத்திருண்டாம், சுகவான், தனவான், வாக னமுள்ளவன், சுபத்திரவியமுடையவன், இராஜசேவையுடையவன் பிரதாபமுடையவன். சுக்கிரன்நிற்கில் சூரன், அபிமானி, கீர்த்தி மான், புத்திமான், விர்த்தியுடையவன், தனவான், பிரவிர்த்தியுமாய் அதிக சுகமும் அதிக ஐஸ்வரியமு முடையவன். சனி நிற்கில் தன வான், சூரன், பிரபு சேவையுடையவன், பிற்புத்திமுடிக்க வல்லவன், தனம் தேடவல்லவன். இராகுநிற்கில் நீசகர்மி, குசலன், இரண மிதன், புத்திரசுகமில்லான், கேதுநிற்கில் உச்சாஹவல்லவன் ஞானப் பெருஞ் செல்வன் எ-று, 17

## 11-ஆம் இடப்பலன்

காட்டுமேபதிஞென்றறிபாக்கியன்
கருதுசோமன்சகலசம்பன்னர்சேய்
கூட்டுமேமிகுசெல்வன்புதனலன்
குரவுசானன்பெருஞ்செல்வன்சுக்கிர
ஞட்டுமாண்டுமமைச்சனிவாகனன்
ராகுமர்மியாங்கேதருட்சீலனும்
பூட்டுமேகவக்கோடேறிநின்றிடம்
புனிதர்வீமேசர்தாளைப்புகழுமே.

இ-ள். 11-ஆம் இடம் இரவி தேறினிற்கில் சகலபாக்கியன், கீர்த் திமான், தனவான், புத்திரவர்த்தனேயும் தெய்வப்பிராமண பத்தி யுடையவன், போகவான் ஆளடிமையுள்ளவன். மதினிற்கில் சகலகுண சம்பன்னன், தனவான், புத்திமான், புத்திருடையவன், ஆளடிமை யுண்டாயிருக்கும். குஜனிற்கில் தனவான், பரிபூதன், பிரபலன், தான் யம் வர்த்திக்கும், தான் சுகித்துவாழும், சூரன், புத்திரசுகமில்லான், மனதிலொருநாளும் சுகமில்லான், புதனிற்கில் தனவான், பிரதானி, அறிவும் யோகங்கள் ஆசாரங்கள்சொல்லும் பலஜாதி அர்த்தமுஞ்சித் திக்கும், புத்திர மித்திராதிகளுமுண்டாம். குரு நிற்கில் ஆசாரியனும் பலஜாதி அர்த்தமும்வரும், புத்திரரும் ஆளடிமையும்வரும், வாகனமு டையவன், பிரபுசம்பந்தன். சுக்கிரனிற்கில் ஆளடிமைபுடையவன், சுப த்திரவியமுடையவன், வெள்ளி வெண்கலம்வர்த்திக்கும், மனேசுகமும் தன்னுடைய காரியம் முடிக்கவல்லவன். சனிநிற்கில் தனவான், ஆளடிமையுள்ளவன். இராகு நிற்கில் மர்மி, சபலன், தர்மமில்லா தான் புத்ரரில்லாதான் தீரன். கேதுநிற்கில் லோகப்பிரியன், அர்த்த வான், சக்திகுறைந்தவன். 11-ஆம் இடந்தேறி நின்றகோளின், பெல மறிந்து வீமேசர்தாளைப் புகழ்ந்து அறிவது எ-று. 18

## 12-ஆம் இடப்பலன்

புகழுமார் தாண்டர்க்கிரா றுகண்கணெய்
    புரிமதிக்கங்கவீனராமங்கிபே
நிகழும்பாரிகோய்புந்திலோகப்பகை
    நெடியபொன்வழக்கோரஞ்சுகனலன்
மகிழுநன்மைசனிமுகரோகியா
    மத்தர்பூணூரமேவழக்கோராமாந்
திகழுங்கேதுசெகவாதிகோட்டிரஞ்
    செப்பும்வீமேசர்சேவடிக்கேற்கவே.

இ-ள். 12-ஆம் இடம் இரவி நிற்கில் நயனரோக முடையவன், குணங்களுறைஞ்சிருக்கும் விகலன் சூத்திராதி வெறுக்கை. மதி நிற்கில் அங்கயீனன், என்னேரமும் பசித்திருக்குந் துவேஷமுடையவன், பரிபூதன். குஜன் நிற்கில் ரோகபாரியர், சித்தியுடையவன், துக்கிதன் நயனவிகாரி, சுயஜாதிகள் வெறுத்திருக்கும், அசன சயனசுகம், இல்லாதவனுமாம். புதன் நிற்கில் லோகம்வெறுக்கவும் கிரகசுகமாலசிய முடையவன், பாரியர்சகிதன், வித்யாப்பியாசமில்லாதவன், ஆசாரக்கிருதன், துவேஷமுடையவன், அங்கயீனன், குருநிற்கில் வழக்கோரஞ் சொல்லுவன், பாபகர்மி, அழிவேறினவன், இரணஸ்தான இராஜவயிரமுடையவன், போகமவெறுக்கவும், சுயஜாதி பட்சமில்லாதவன். சுக்கிரனிற்கில் தான் சுகித்து வாழ்வன், தேகசுகமுடையவன், இஷ்டான்னமுடையவன், குலவித்தை படிக்கவல்லவன். சனிநிற்கில் முகரோகி, விவாதசீலன், பரிபூதன். இராகுநிற்கில் வழக்கோரஞ் சொல்வன், அழிவேறியிருக்கும், அன்னிய கிரஹபரிபாலன், கேதுநிற்கில் பலவான், தேகவாதி அழிவேறினவன் சயன சுகமில்லான். இப்படி இந்த 12-இராசியிலும் நவக்கிரகங்கள் நட்பாட்சி யுச்சத்திற றேறி நின்ற கோளின் மகாதிசை காலச்சக்கரம் அஷ்டகவர்க்கு விந்துகளேறின இராசிகளில் பெலன்பெற்ற கிரகங்கள் வருகிறபோது நன்மைகள் தரும். பகைநீசமாய் அஸ்தமனமானல் அந்தந்தத்திசை காலசக்கரங்கள் வருகிறபோது தீமையுண்டாக்கும் எ-று. 19

12-இராசியின்பலன் முற்றிற்று.

---

## பாவபலன்

### இலக்கினபாவம் செல்வவான் அழகுடையவன்

சிறந்தசந்திரசூரியரெட்சிசிற்
    சேர்ந்திருக்கப்பகலுமிரவிலும்
பிறந்தசேய்மகாபாக்கியயோகமாம்
    பிறக்கில்ரெட்டையிலிந்நெறிபேசுமே

நிறைந்தமெய்யாதிமுக்கோணங்கேந்திர
　　நேத்திரலாபஞ்சுபர்னோக்கத்தேறினுங்
குறைந்தமெய்யன்றிவீமேசர்க்கன்பரர்ய்க்
　　குவலயத்தோர்புகழக்குலவுமே.

இ-ள். இலக்கின பாவத்தில் பூர்வபட்சத்து மதியும் இரவியும் கூடி நிற்கச் செனனகாலம் பகலிலானால் இது மகா பாக்கியயோகம். இதில் ஜாதகமானவன் மகா பாக்கியவானும். இப்படி இரவிமதி ஒரு இராசியிற்கூடி அந்த இராசி இரட்டித்த இராசியுமாய் அதுவே இலக்கினமாக இராக்காலத்தில் ஜெனனமானால் அதுவும் மகா பாக்கிய யோகம். தேகாதிபதி நட்பாட்சி உச்சததிலாதல் சுபக்கிரக இராசியிலாதல் தேகலக்கினத்திலாதல் தனலாபகேந்திர திரிகோணங்களிலாதல் இருக்கினும் இப்படிக்கொத்த இராசியாதிபதியோடே இந்த தேகாதிபதி கூடி இருக்கினும் அவர்கள் நோக்குண்டாயினும் இவன் தேகம் அவயவங்களெல்லாம் நன்றாய் வீமேசாக்கன்பாய் குவலயத்தோர் புகழக் குலாவுவர் எ-று. 1

சீமான் குணரூப முதலியன உடையவன்

குலவுசேர்மனைத்திரிகோணகேந்திரங்
　　குடியிலர்தவர்கூடினுநோக்கினு
மிலகுமேனியுயிருடலாதியை
　　யெங்ஙெந்தக்கோட்கணிற்கினுமக்குணம்
பலர்கள்கோட்களாய்புத்தியும்வித்தையும்
　　பகையும்நட்புமவாங்கிசப்படி
நலமுந்தீமையுமாயுசுநற்பிணை
　　நயந்துசொல்கவீமேசனைநாடியே.

இ-ள். தேகமாகிய மதியுடனே இவனுடைய தனலாபம் கேந்திர திரிகோணர்கள் கூடியிருந்தாலும் இவர்கள் பார்வையுண்டானாலும் இவன் தேகசுகத்திலே சீமானுயிருப்பன் இலக்கினத்திலே தான் தேகாதிபதியோடேதான் எந்தக்கிரகங்கள் கூடியிருந்ததோ அந்தக் கிரகங்களினிட குணமும் ரூபமும் வித்தையும் புத்தியும் அவாங்கிசத்துக்குச் சொன்ன ஊர் செனங்களுடையவனுமாய் அந்தந்தக் கிரகங்களிட குணமும் ரூபமும் குணமும் அந்தந்தக் கிரகங்களின் அவத்தைக்கீடான பலமும அந்தந்தக் கிரகங்கள் நட்பானல் மித்துருத்வ பகையானல் சத்துருத்வமும் அவரவர்கள் சரகிரகமும் ஸ்திரகிரகமும் அவர்களாயுசு லாபங்களெல்லாம் பிறந்த காலத்து இப்படிக் காண்பது எ-று. 2

இலக்கினபாவம் முற்றிற்று.

## இரண்டாம் பாவம்

### நல்லதிஷ்டியுடையவன் தனவான்

நாடுநேத்திரர்கேந்திரத்திரிகோணமு
        நயந்துநட்பாட்சியுச்சமாய்நோக்கிலுங்
கூடியாட்சியாய்நிற்கினுநல்வழி
        குலவுமேதனமார்கூடிநிற்கினு
நீடுமிக்கோளைக்கோளாட்சிசேரினு
        நின்றகோணேந்திராதிநயநோக்கினு
தேடுமுச்சங்கள்சேரினுமாதனஞ்
        செல்வாவீமேசாதானுறத்தேடுமே.

இ-ள். இலக்கினத்துக்கு 2-ஆம் இராசி தனஸ்தானம் குடும்பஸ்தானம் வாக்குஸ்தானம் நேத்திரஸ்தானமென்று பெயர், இந்த 2-ஆம் இராசியாதிபதி தான் 2-ஆம இராசியிலிருந்த கிரகந்தான் தனலாப கேந்திரத் திரிகோணத்தில் நட்பாட்சி யுச்சத்திலிருந்தாலு மிவர்கள் பார்வையுண்டானாலும், இவர்களாட்சியிலிருந்தாலும் இவருடன் கூடியிருந்தாலும் இவனிட திருஷ்டி நன்றாயிருக்கும், தனவானுமா யிருப்பன் எந்தெந்தக்கிரகம் கூடியிருந்தாலும் இந்தஸ்தானாதிபதியாருடைய ஆட்சியிலிருந்தாலும் யாருடைய திஷ்டியுண்டானாலும் அவர்களும் நட்பாட்சி யுச்சத்திலிருந்தால் வெகு தனபிராப்தியுண்டு தன் கண்ணினாலே சகல சந்தோஷமுங் காண்பர் எ-று. 1

### நிர்ப்பாக்கியன் நேத்திரரோகி

தேறுநேத்திராதியாறெட்டீராருறச்
        சேடத்திராதியுமங்கூறத்திக்கிலான்
சீறுநீசம்பகையததமானரைச்
        சேரினுங்கூடிகோள்வாநோக்கினு
மாறெணுவிழிநோயாங்குடும்பமே
        யந்தணன்றேறிநிறசனுநோக்கினும்
வீறுசெல்வந்தனபதியாகுமே
        வீமநாதர்திருவடிமெத்துமே.

இ-ள், இந்த ஸ்தானாதிபதி 6-8-12-லே யிருக்க அவனிருந்த இராசியாதிபதியும் 6-8-12-லே யிருக்க் செனித்தவன் நிர்ப்பாக்கியனென்று சொல்லப்படும், தனஸ்தானாதிபதி நீசஸ்தானமா யிருந்தாலும் பகை நீசக்கிரகங்களுடனே கூடியிருந்தாலும் ராசியந்தத்திலே க்ஷீணனாயிருந்தாலும் இப்படி க்ஷீணக்கிரகங்களுடனே கூடி இப்படிக்கொத்த பார்வையுண்டானாலும் அவன் நேத்திரரோகியாம், தனக்

கிரகமாகிய குரு சேறிநிற்கினும் நோக்கினும் இதா பந்துக்களாலே வெகு தனமுண்டாய் வீமநாதர் திருவடிக் குரித்தாவர் எ-று. 2

இரண்டாம்பாவம் முற்றிற்று.

---

## மூன்றும் பாவம்

### சகோதரலாபம் சகோதரநஷ்டம்

மெத்துமூன்றுமிடக்கோள்சகோதரர்
மிககசெய்தனலாபத்திரிகோணமு
மொத்தகேந்திரரோடுறவாயுற
வுற்றுநோக்கிற்சகோதரலாபமாஞ்
சுத்தமூன்றுதியாறெட்டீராறினிற்
றாயவன்பகைநீசராய்ச்சீணரா
யத்திறத்துப்பிராதாகசிப்பனே
யழகானவீமேசாமைத்ததே.

இ-ள். சகோதரஸ்தானமான 3-மிடத் ததிபதிதான் சகோதர காரகனுகிய குஜன்தான் தனலாபகேந்திர திரிகோணங்களிலே நட்பாட்சி யுச்சமபெற்று நிற்கினும் இப்படிக்கொத்த ஸ்தானுதிபதியோடே கூடியிருந்தாலும் அவர்களாட்சியிலிருந்தாலும் அவர்கள் பார்வையுண்டானுலும் இவனுக்குச் சகோதர லாபமுண்டு. இந்த சகோதர ஸ்தானுதிபதி 6-8-12-லே அஸ்தமிச்சு பகை நீசராசியிலேதான் க்ஷீணக்ஷேத்திரங்களிலே தான் இருந்தாலும் இந்த அதிபதிகளுடனே கூடியிருந்தாலும் இவர்கள் பார்வையுண்டானுலும் இவன் சகோதர நஷ்டமாம் என்று அழகாகிய வீமேசாமைத்தது எ-று. 1

### பெண் சகோதரம்

அமைத்தமூன்றுபெண்ணக்கோளும்பெண்ணதா
யச்சகோதரத்தக்கோட்கணிற்கினுங்
குமைத்தவக்கோள்பெண்கோளுடன்கூடினுங்
கூடுங்கோட்கள்பெண்ணுட்சிகுலவினு
னிமைத்தபெண்கோளுச்சாட்சியாய்நோக்கினு
னிற்கினும்பெண்பிறக்குமாங்கோட்களே
சமத்தராய்நின்றுநோக்கினுமங்கையாஞ்
சற்குருவையர்வீமேசர்தந்ததே.

இ-ள். சகோதர இராசி அதிபதிக்கிரகமுமாய் அந்த இராசி பெண் இராசியுமாய் அதிலே அந்த அதிபதியிருந்தாலும் அல்லது

சுபக்கிரகத்தோடே கூடியிருந்தாலும் இவனிருந்த இராசிக்கதிபதியும் ஸதிரீகிரக இராசியிலே யிருந்தாலும், ஸ்திரீகிரகம் நட்பாட்சியுச்சமாய் நோக்கினும் ஸ்திரீகிரகங்கள் இந்த அடைவே அதிபதிக்குண்டானால் இந்தப் பிள்ளைக்குப்பிறகு பிறக்கிறது பெண்ணென்று சொல்க. இப்படி ஸ்திரீகிரக ஆட்சி இராசியிலே அந்தப் பிராதாவுக்கு அதிபதியிருக்க அல்லது புருஷக்கிரகத்துடனே கூடி இருந்தாலும் அவனிருந்த இராசியாதிபதி பிரபலனுயிருந்தாலும், புருஷக்கிரக அங்கிசம் ஸ்திரீயாய்ப் பிறக்கும் இதெல்லாம் கிரகவலியறிந்து காண்பது எ-று. 2

## சகோதரமின்மை சகோதரமடிவு

தந்தைவீமேசர்கண்மூன்றிற்றங்கினுஞ்
சகோதாக்கோடரித்தத்தமிக்கினு
மந்தமூன்ருதியாறெட்டீராறினு
மத்தமன்பாலசீணநீசத்துற
வுந்திநோக்கிற்சகோதரமில்லையே
யுற்றகேந்திரத்திரிகோணலாபந்தனம்
வந்துநிற்கிற்பிராதருண்டாகியே
மளர்ந்திராமன்மரித்திடுமைந்தரே.

இ-ள். சர்வாத்மாவுக்குந் தந்தையான வீமேசர் வலக்கண்ணுகிய இரவி பிராதருஸ்தானுதிபதியுடனே கூடி அஸ்தமனமாகி அந்தப் பிராதருஸ்தானத்திலே இருந்தாலும் இவனிருந்த இராசியாதிபதி 6-8-12-ஆமிடத்திலே அஸ்தமன பாபக்ஷீணநீசராய் இருந்தாலும் இப்படிக்கொத்த கிரகங்களுடனே கூடியிருந்தாலும் இவர்கள் பார்வையுண்டானாலும் இவனுக்குப் பிறகு பிள்ளையில்லை என்க. இப்படி யிருந்த கிரகம் தனலாபகேந்திரத் திரிகோணம் சேர்ந்திருந்தால் இவனுக்குப் பின் சில நாளில் பிள்ளையுண்டாய் பால்யத்திலே மரித்துப்போம் எ-று. 3

## சகோதரலாபம் ஆண்சகோதரம் சகோதரசங்கை

என்றுமூன்றுதிநற்கோளெவ்வன்னரா
யிலங்குநட்பாட்சியுச்சராய்த்தேறியே
நின்றகோளுடனிந்நெறிகூடினு
நெடியர்நோக்கத்தனலாபகேந்திர
நன்றியெதிரிகோணத்திருந்தவர்
நயந்துபார்ப்பவரொத்தனையத்தனைப்
பொன்றிடாதசகோதரச்செல்வராய்ப்
புருடர்பெண்வீமநாதர்தாள்போற்றுமே.

இ-ள். 3-ஆம் இடத்ததிபதி சுபக்கிரகமுமாய் எவ்வன்னாய் நட்பாட்சி யுச்சத்திலிருந்தாலும் இப்படிச் சகோதர கிரகங்களுடனே கூடியிருந்தாலும் இவர்களிட ஆட்சி இராசியிலே இவர்கள் திருஷ்டி யுண்டானாலும் இவர்கள் தனலாபகேந்திர திரிகோணத்திலிருந்தா லும் நட்பாக நயனத்தோடு பார்க்கினும் இதனுக்குச் சகோதரலாப மூண்டு தீர்க்காயுசுண்டாய் தனவானுமா யிருப்பார்கள் இந்தப்படி பிராதுராதிபதி எத்தனை கிரகத்துடனே கூடியிருந்ததோ அத்தனை பேர் சகோதரமுண்டெனக. அல்பொழுது கூடியிருந்த கிரகங்களில் ஆண் கிரகங்களெல்லாம் ஆணென்றும் பெண்கிரகங்களெல்லாம் பெண் ணென்றும் இவர்கள் தீர்க்காயுசுண்டாய் வீமநாதர் பாதாரவிந்தத் தைச் சேர வல்லவர் எ-று. 4

ஆண் சகோதரம் தீர்க்கசகோதரம் வேகுசகோதரம்

போதுமூன்றூதிசெய்நின்றகோட்களும்
புருடராயவர்நின்றூரையாண தா
யோதுநட்பாட்சியுச்சத்தெவ்வன்னரா
யுற்றகேந்திரத்திரிகோணபொன்லாபராய்
நீதர்நோக்கவோரோரையினிற்கினு
நிபுணராய்ப்பிறந்தார்களாண்டீர்க்கமா
மாதராண்கோண்முற்பாதிபிற்பாதியாய்
மதிப்பர்நந்தொடுக்காடரைமன்னியே.

இ-ள். 3-ஆம் இராசியாதிபதியும் பிராதுருகாரகனாகிய குஜனும் பிராதுருஸ்தானமாகிய 3-ஆம் இராசியில் கிரகங்களுண்டானாலும் இந்த மூன்றுபேருடைய ஆட்சி இராசிகள் புருஷராசியுமாக இந்த மூன்றுபேரும் புருஷக்கிரகமுமாம் இவர்கள் நட்பாட்சியுச்ச எவ் வன்னராய் தனலாபகேந்திரத் திரிகோணங்களிலிருக்க இப்படிக் கொத்த கிரகத்துடனே கூடியிருந்தாலும் இவர்களுடைய ஆட்சி இராசியிலிருந்தாலும் இவர்கள் பார்வையுண்டானாலும் இவனுக்குப் பின் பிறக்கும் பேரெல்லாம் புருஷராம். இவனுக்குச் சகல பாக்கி யங்களுள்ள பிராதாக்கள் உண்டு. இம்மூவருமிருந்த இராசியாதி பதிக் கிரகங்களுடனே இந்தக் கிரமத்திலிருந்தால் இவனுககுத் தீர்க் காயுசுள்ள சகோதாரும சகல பாக்கியமுஞ் சம்பூரணமாக உண்டு. இந்தக் கிரகத்திலே புருஷக்கிரகம் முற்பாதியும் ஸ்திரீகிரகம் பிற்பா தியுங் கூடியிருந்தால் இவன் சகோதரர்கள் அளவில்லையாக சகலரும் மதிக்க வாழ்ந்திருப்பார்கள் எ-று. 5

பெண்சகோதரம் சகோதரமின்மை

மன்னுமூன்றுமிராசியாண்கோள்பெண்ணாய்
மற்றுமாண்கோளகத்துறவக்கிரக

மூன்னுபெண்கிரகவோரைபன்னொன்றுற
வுரைக்கும்பெண்பெறும்பெண்கிரகச்செல்வியாம்
சொன்னமூன்றின்முக்கோட்களாலெட்டிலுங்
தொடர்ந்தவீராறிலந்தமீசக்கோ
ளென்றும்பாவரோடெய்தினுஞ்சேயிரா
திலகும்லாபத்திலெங்கள்வீமேசரே.

இ-ள். 3-ஆம் இராசி புருஷ இராசியாய் இந்த இராசிக்கதிபதி கிரகம் ஸ்திரீகிரகமுகமாய் இந்த ஸ்திரீகிரகம் புருஷக்கிரக இராசியி லிருக்க அந்தப் புருஷக்கிரக இராசி அதிபதியும் ஸ்திரீகிரக இராசி யிலே இவனுக்கு இலாபமாகிய 11-ஆம் இடத்தில் நிற்க இவனுக் குப்பின பிறக்கிற சகோதரம் பெண்ணும் அது சுகத்திலே தீர்க்காயு சுண்டாயிருக்கும் இவர்கள் மூன்றுபேரும் 6-8-12-ஆம் இடத்திலே அஸ்தமன நீசக்கிரகங்களுடனே கூடியிருந்தாலும் அஸ்தமனமா யிருந்தாலும் சகோதரம பால்யத்திலே மரிக்கும் இந்தப்படி இலாப மாகிய 11-ஆமிடத்திருந்தால் சிலநாள் அற்பசவுக்கியம் இவையெல் லாம் அந்தந்தக் கிரகமகாதிசை காலச் சக்கரங்களில் பலன சித்திக்கு மென்று வீமேசரமைத்தது எ-று.

மூன்றும்பாவம் முற்றிற்று.

## நான்காம் பாவம்

### மாதுரு பல்ன்

இலங்குநாலாமிராசிதாய்போசன
மிசைந்தவாகனமபோகசவுக்கியங்
துலங்குதாய்க்கோண்மதிராசியதிபன்
றுய்யநட்பாட்சியுச்சக்கோள்கூடினு
நலங்கொளக்கோளினுட்கியினிற்கினு
நயந்துநோக்கத்தனலாபகேந்திர
நிலந்திரிகோணந்தன்வயிற்றுயர்கோ
ளிற்கத்தாய்க்குவீமேசர்நிறைக்குமே.

இ-ள். 4-ஆம் இராசிக்கு மாதுருஸ்தானம் போசனஸ்தானம் வாகனஸ்தானம் சகல போகசவுக்கிய ஸ்தானமென்று பெயர். மாது ருகிரகமாகிய மதியும் மாதுரு இராசியிலே நின்ற கிரகமும் மாதுரு இராசியாதிபதியும இந்த மூன்றுகிரகமும் சுபக்கிரகமுமாய்நட்பாட்சி யுச்சாய்த் தேறி நிற்கினும் அல்லது இப்படிக்கொத்த கிரகங்க ளுடனே கூடி நிற்கினும் அவர்களிட ஆட்சி இராசியிலே நிற்கினும

அவர்கள் பார்க்கினும் தனலாபகேந்திரத் திரிகோணத்திலே இந்த மூன்று கிரகமும் நிற்கினும் அந்த மாதாவுக்குப் பூரணயுசும் ஐஸ்வரியமும் அர்த்தலாபமுமுண்டு எ-று. 1

தனப்ராபதி வாகனம் சுகம் வித்தை

நிறைக்குஞ்சோமனூலாங்கடக்கத்துற
நீடுதாயர்காலாதிபன்சோமனும்
பிறக்கும்பில்லைக்குநட்பாட்சியுச்சராய்ப்
பிரியநற்கோளதன்முடையிட்டுனுஞ்
சிறக்கும்லாபாதிநட்பாட்சியுச்சராய்ச்
செய்தகோண்டனலாபகேந்திரமுற
நிறக்குநற்கோட்களுக்கிற்சம்பன்னராய்
நேசர்வீமேசர்சேவடிக்கன்பரே.

இ-ள். மாதுரு இராசி கர்க்கடகமாக அதிலே மதிநிற்க மாதாவுக்குப் பூரணயுசுண்டு மாதுரு இராசியாகிய 4-ஆமிராசியாதிபதி சுபக்கிரகமுமாய் மதிகூட நட்பாட்சியுச்சம் தனஸ்தானமாகிய 2-ஆம் ராசியிலிருக்கில் தனப்பிராப்தியுண்டாய் இட்டுண்பன் 4-ம் இராசியாதிபதி நட்பாட்சியுச்சமாய் தனலாபகோணத்திலிருந்தாலும் இப்படியிருக்கிற கிரகத்துடனே கூடியிருந்தாலும் இப்படிக்கொத்த கிரகங்களிட ஆட்சி இராசியிலே கூடியிருந்தாலும் இவர்கள் பார்வையுண்டானாலும் வாகனமும் சுகமும் வித்தையும் பந்து சுகமும் பூரணமாக வீமேசர் கிருபையினாலே உண்டாகி வாழ்ந்திருப்பர் எ-று. 2

மாதா பிதா அனுகூலமா யிருக்கை

அன்பர்சேய்தந்தைதாய்கிரகங்கணட்
பமர்ந்துகூடியிருக்கினுநோக்கினு
மின்பராயேகசித்தராய்வாழ்ந்திடு
மேகவாதிபனின்புற்றிருக்கினுந்
தன்பிதாதாய்ச்சகோதராபாரிக்கோ
டககவீராறிராசிக்கோணன்பரால்
முன்புநற்கோட்கணட்பாட்சியுச்சராய்
முதல்வீமேசுரான்பர்க்காளாகுமே.

இ-ள். பிதாக்கிரகம் மாதாக்கிரகத்துடனே கூடி நட்பாட்சியின் இருந்தாலும் இவனிட பார்வையுண்டானாலும் இவனிட மாதாபிதாக்கள் ஏக யிருதயமாய் அனுகூலரூபமா யிருப்பார்கள். சுபஸ்தான கிரகங்கள் மாதுரு க்ஷேத்திரமாகிய 4-ஆம் இராசியில் நிற்கினும்

மாதுருக் கிரகங்களுடனே நட்பாகயிருக்கினும் தாயாரும் பிள்ளையும் மனது சந்தோஷமாய் அன்யோன்யரா யிருப்பார்கள். இப்படி 12-ம் இராசிகளும் இந்த தேகாதிபதிக்கு அவரவர் நட்பாட்சியுச்சராய் பிர பலரா யிருந்தால் இவனுக்கும் பிரபலமாயிருக்கும் ஈனராயிருந்தால் கீழ்ப்பட்டிருக்கும் இப்படி 12-இராசிக்கும் பார்த்து, பிரபலமான இராசி சம்பந்தம் வீமேசர்க்கன்பர்கள் பெறும்பேறு என்பன எ-று. 3

பால்யத்திலே மாதா மரணமும் அதற்குக் காலமும்

ஆகுமாதுருவின்சேத்திராதிப
 னன்னியாயங்குறவப்புவியுறப்
போகுஞ்சேய்தாய்மதியுநாலாதியும்
 பூணுமூடம்பகைநீசட்சீணரா
யேகுமாறுமெட்டிராறுமக்கோட்க
 ளியங்கிலிந்துபத்தென்னிரண்டாமிறை
மோகம்பத்தொன்பதுச்சனியின்றின
 முடியுமாதுருமுக்கணர்சாற்றுமே.

இ-ள். மாதுரு இராசி அன்னியராசியாய் அந்த அதிபதிக்கிரக மும் அதிலிருந்ததிலே மதிக்குக் கூடியிருந்தால் இந்தப் பிள்ளைக்குப் பால்யத்திலே மாதா மரணம, மதியும மாதுரு ராசியாதிபதியும் இந்த இருவரும் அஸ்தமானராய் பகை நீசக்ஷீணராய் 6-8-12-ல் நிற்கினும் இப்படிச்சொத்த கிரகங்களுடனே கூடி நிற்கினும், இப்ப டிக்கொத்த கிரகங்கள் பார்க்கினும் இப்படி மாதுரு ராசியாகிய 4-ஆம் இராசியிலிருக்கினும் அந்த மாதாவுக்கு ஆயுசு தினபலத்தைக் கூட் டும்வகை மதிக்கு 10-4-ஆம் ராசியில் நின்ற கோளின் தினமுஞ் சனி க்குத் தினம் 19 இப்படி முக்கண்ணராகிய வீமேசுரராருளால் காண் பது எ-று. 4

மைத்துனன் மாமி மரணமும் அதற்குக் காலமும் பிதாவுக்குமுன் மாதாவும் மாதாவுக்குமுன் பிதாவும் மரணம்

சாற்றும்வில்லுச்சசிக்குத்தினம்ரெண்டு
 தனுவிணுதியாறெட்டுப்பன்னிரண்டுறக்
கூற்றுசேய்க்குமதிபிதாபத்தினிற்
 கூறுபன்னுலுமந்நன்பத்தொன்பது
தேட்டுமெட்டாதிபன்னின்றகோட்களின
 றினத்திருட்சமமதியாதிதேறிடி
லாற்றுத்தாயார்முன்னையாதிதேறிடி
 லறிபிதாப்போமயனுரெழுத்திதே.

இ-ள். மாதருக்ஷேத்ரம் தனுசாய் அதிலே மதிநிற்கில் அந்தப் பிள்ளைக்குப் பூராடம் இரண்டாங் காலுமாய்த் தனுசாதிபதி குரு 6-8-12-ஆம் இடத்தில் நிற்க மச்சினன் மாமன் மரணம் எத்தனைநாளென்னில் மதிக்குநாள்-10 குருவுக்குநாள்-10 ஆயுள்காரகனுகிய சனிக்குநாள்-19. 8-ஆம் இடத்தில் நின்றவனிடதினமும் அதிபதியினிட தினமும் இந்த நாளுக்குள்ளே மரணம். பிதுர் கிரகம் அப்போது வலிபெறில் பிதாவுக்கு முன் மாதா மரணம். மாத்ருகிரகம் வலிபெறில் மாதாவுக்குமுன் பிதா மரணம். சர்வ ஜீவனையும் சிருஷ்டிக்கும் பிரமாவின் எழுத்து இதுவாம் எ-று, 5

இதுவுமது

எழுத்தெலாங்கடந்திசர்சடைச்சசி
யிலங்குதாயதிசேயெட்டிற்காறினும்
வழுத்துமாறெட்டுபன்னிரண்டேகிடின்
மருவலாருறச்சீணநீசாத்தராய்ச்
செழித்தசூரியாஞ்சொன்பதாகியுஞ்
சேர்ந்தகோட்கடன்லாபகேந்திரம்
பிழைத்திருக்கச்சுபர்கூடித்தேறினும்
பிதாமுன்மாதருபோமெனப்பேசுமே.

இ-ன். பிரமசிருஷ்டியைக் கடந்த நிராதார பராபர வஸ்துவான வீமேசர் முடித்த மதியும் மாதரு ராசியாதிபதியும் இந்தப் பிள்ளையினிடச் சனன லக்கினத்திற்கு 6-8-12-லே நின்றாலும் உதவான். தன லாபகேந்திரத் திரிகோணத்திலே ஸ்திரீராசியிலிருந்தா லுதவும். மாதா பிதாக்களுக்கு அனுகூலமானதற்கு விபரம் மாதரு பிதுரு இராசியாதிபதிகளாதல், இரவி மதியாதல், அந்த மாதரு மாதுரு இராசியிலே கூடியிருந்தாலும் பிதா சம்பந்தக் கிரகங்கள் மாதுரு இராசியிருந்தாலும் பிதா சம்மந்தக் கிரகமும் மாதா சம்மந்தக் கிரகமும் இரவியுடனே கூடி அஸ்தமானமா யிருந்தாலும் அவமாணமென்று வீமேசருரைத்தது எ-று. 6

குருபுத்திரனும் குருபுத்திரனல்லாமையும்

உரைத்தசந்திரனையுயிராசியை
யுற்றபொன்புகர்புந்திநோக்காவிடி
னிரைத்ததாயாதிராகுகேதைந்துற
நீடுபாவர்கணிற்கினுநோக்கினும்
பெருத்ததந்தைமகவல்லப்பிள்ளையும்
பெறுவர்சேய்வசியன்சனிசூத்திரர்

பருத்தபாம்புகொடியன்புலையனும்
　　பரமனைப்பணிந்தால்வினைபாறுமே.

இ-ள். மதி நின்ற ராசியையாதல், சென்மராசியையாதல் குரு சுக்கிரன் புதன் இவர்களிலொருவர் நிற்கினும் நோக்கினும் குருபுத்திரனும். பாவக்கிரகம் நிற்கினும் நோக்கினும் பாபகர்மி யென்றறிக. மாதுருராசியாகிய 4-ஆம் ராசியாதிபதி பிள்ளையுடைய சென்மலக்கினத்திலிருக்க அந்த இலக்கினத்தில் ராகுவானாலும், கேதுவானாலுமிருக்க இவன் ஈனசாதிக்குப் பிறந்தவன் இவன் பிதாவின் சாதியறிய வேண்டில் குசன் நிற்கில் வைசியன் சனி நிற்கில் சூத்திரன் ராகு கேதுவாகில் புலையன். இவை தீரப்பராபரமாகிய வீமேசரைப் பணிந்தால் வினைகளெல்லாம் பறந்துபோம் எ-று. 7

நான்காம்பாவம் முற்றிற்று.

---

## ஐந்தாம் பாவம்

### பிதாபலன் புத்திரபலன் விவேகபலன்

பாறுமேவினைவீமேசர்பார்வையாற்
　　மற்றுசேய்சுகத்தானமைந்தாமிடம்
வீறுமேபிதாவாதியிரவியும்
　　வியாழமும்மிந்தமூவர்நட்பாட்சியாய்த்
தேறுநற்கோணுறத்திரிகோணமுஞ்
　　செய்யகண்டந்தனபாக்கியமுறப்
பூரணாயுசுதந்தைபிதாவுமே
　　புத்திரர்க்கும்வெகுநன்மைபூட்டுமே.

இ-ள். குரு சுக்கிரன் புதன் இந்த மூவரிலொருவர் நிற்கினும் நோக்கினும் சர்வதோஷமும் வீமேசுரரருளால் நீங்கும் 5-ஆம் இராசிக்கு புத்திரஸ்தானம் விஸ்தாரத்தானம் சுபஸ்தானம் புண்ணியஸ்தானம் மந்திரஸ்தானம் திரிகோணஸ்தானம் என்றுபெயர். பிதுருக்கிரகமான இரவியும் மாதுருகிரகமான மதியும் புத்திரகாரகனான குருவும் இம்மூவரும் நட்பாட்சியுச்சமாய்ப் பலவானுமாய் சுபக்கிரகம் நிற்கினும இவர்கள் பார்வையுண்டாகினும், பிதாவுக்குப் பூர்ணாயுசு சுபக்கிரகங்களினிடப் பார்வையுண்டானாலும் அல்லது இவர்கள் தனலாபகேந்திர திரிகோணங்களில் நிற்கினும் இந்தப் பிதுரு இராசியிலே யிருந்த கிரகத்துக்கு எத்தனை பெலனோ அத்தனைபலன் உண்டாம். பிதாவுக்குப் பூர்ணாயுசுமுண்டு. இவனுக்குப்

புத்தியும் புக்திரனும் புத்திரிகளும் உண்டாய் பூர்ணுயுசுமுண்டாய் வீமநாதர் பாதாரவிந்தத்தை நாடும் எ-று. 1

இதுவுமது

பூட்டுசென்மம்பிதர்க்கோணட்பாட்சியாய்ப்
பூணுமுச்சிகற்கோணுக்கந்தேறினு
காட்டுமைந்தாதியைப்பிதாவையோரையை
கல்லகண்பர்நோக்கப்பிதாப்பூரண
நீட்டுமொன்பதாதிசுபக்கோட்களா
யிருக்கத்தேறிற்பிதாவுக்கினியனுவ்
கூட்டுலமைந்தாதிபானுகூடாதுறிற்
குருவிணண்ணுமெங்கோனேக்குறிக்குமே.

இ-ள். சென்ம இலக்கினத்தில் பிதுருக்கிரகம் நட்பாட்சியுச்சமாய்ப் பெலன்பெற்று ராசிமுற்பாதியில் நிற்கினும் இப்படிக்கொத்த கிரகங்கள் பிதுருகிரகமானல் இந்தராசிக்குண்டான குணமும் இவன் பிதாவுச்குப் பூரணுயுசுமுண்டு. இவரிருந்த ராசியாதிபதி எவ்வனரா யிருந்தாலும் பிதாவுச்குப் புத்தியும் பூரணுயுசும் சம்பூரணமாகவுண்டு பிதுருராசியாகிய 9-ஆம் ராசியாதிபதி சுபக்கிரகங்களாய்த் தேறிநிற்கில், பிதாவுக்கு இந்தப்பிள்ளை இனியவானுயிருக்கும். 5-ஆம் ராசி அதிபதியுடனே இரவி கூடாமல் சுபக்கிரகங் கூடியிருக்கில் பிதாவும் பிள்ளையு நட்டபராய் வீமேசர் பாதார விந்தத்தை நாடிவாழ்வார்கள்.

இதுவுமது

குறிக்கும்புத்திராதிப்பிதுராதியும்
சோளிநாயகனேக்கூடியோரையிற்
செறிக்குங்கோட்கள்பகைநீசப்பாவராய்ச்
சீனமுடமாறெட்டுப்பனிரண்டி
லறிக்குந்தந்தையைமத்திபபுத்தியு
மருணசொன்பதாதியந்நிலத்துறப்
பிறிக்குமிக்கோட்களொன்னுவலிபெறிற்
பிள்ளைதந்தையோமெங்கோன்குறித்ததே.

இ-ள். பிதுரு இராசியாதிபதியும் புத்திர இராசியாதிபதியும், இரவியும் 5-ஆம் இராசியிலிருந்த கிரகமும் பகைநீசமாய் அஸ்தமானமாய் சத்துருக்களாய் பாபக்ஷீணராய் லக்கினத்து 6-8-12-லே இருந்தாலும் இப்படிக்கொத்த கிரகங்களுடன் கூடியிருக்கினும் இந்தக் கிரகாதிபதி யிராசிகளிலே நிற்கினும் இவன் பிதாவுக்கும் ஆயுசு மத்திபம். பிள்ளைக்கும் பிதுரு ராசியாகிய 9-ஆம் இராசியில் பிதுரு

கிரகமாகிய இரவியிருந்து அந்த 9-ஆம் ராசியாதிபதியும் அங்கிருக்க இவர்களுக்குப் பகைக்கிரகம் பெலவானுயிருந்தால் இந்தப் பிள்ளை யுடைய பிதா பால்லியத்திலே மாரணமென்று எங்கோன் வீமநாதர் பிறித்தது எ-று. 3

இதுவுமது

பிறித்தபிள்ளைப்பிதுருக்கிரகமாம்
பேணுமாறுதுபன்னிரண்டாறுற
மறித்தவைகோட்டிசைபிதாமாரக
மன்னுமாறின்மகாதிசைமாரக
மெறித்தபானுப்பிதுராதியாறினு
மெட்சிக்கிராறுமெட்டுறவைந்தினி
லொருத்தவொன்னார்மதியுநாலாதிப
னுச்சந்தேறிறபிதாமுன்னொழியுமே.

இ-ள். பிருதுகிரகமாகிய இரவி 6-ஆம் ராசியில் நின்று அந்த 6-ஆம் இராசியாதிபதிக்கிரகம் 6-8-12-ஆம் இராசியிலே இருந்தால் அவனிட மகாதிசையிலே பிதா மரணம். 6-ம் இராசியாதிபதி 6-ஆம் இராசியிலிருந்தால் இந்த தேகாதிபதி திசையில் மரணமாம் அல்லது 6-ஆம் இராசியாதிபதி கிரகத்துடனேகூடி இருந்த கிரகத்தின் அந் தந்த திசையிலே மரணம். பிதுருகிரகமாகிய இரவியும் பிதுரு இராசி யாதிபதியும் இந்தப்பிள்ளை ஜென்மலக்கினத்துக்கு 6-8-12-ஆம் இரா சியிலிருக்கினும் பிதுரு இராசியான 9-ஆம் இராசியில் பகைக்கிரக மிருக்க மாதா சம்பந்தக்கிரகம் மதியும் 4-ஆம் ராசியாதிபதியும் தன லாபகேந்திரத் திரிகோணங்களிலே வலிபெற்று நிற்கில் மாதாவுக்கு முன்னே பிதாமாணம் எ-று. 4

இதுவுமது

ஒழிவிலான்வலக்கண்பிதுராதிப
னுன்னுமாறெட்டீராறுறத்தந்தையூ
ணழியிற்சேயுதவான்பிதுராதிப
னணுகிலாபதனகேந்திரகோணமூ
மொழியுமூலமுறச்சேயுதவிடான்
முற்றுசெய்பிதுராதிபன்றுயதி
யழிவிலாக்கோளொருவனேயாயிடி
லவமரணமாறின்றிறங்கூறுவோம்.

இ-ள். ஒழிவில்லாத கிருபாசமுத்திரமாகிய வீமேசர் வலக் கண் ணுன இரவியுடன் பிதுரு இராசியாதிப்தி கூடி அஸ்தமனமாய், 6-8-12-ஆமிடத்திலிருந்தால் பிதுரு மரணகாலத்துக்குப்பிள்ளை உத வான். பிதுரு இராசியாதிபதி இரவியுடன் கூடாமல் தனலாபக் கேந்தி

ரத் திரிகரணங்களிலே எதிரிராசியி லிருந்தால் பிதுருமரண காலத்
துக்குப் பிள்ளை உதவும். பிதுரு இராசியாதிபதியும் மாதுரு ராசியாதி
பதியும் ஒருத்தரேயானல் அது மரணம் இனி 6-ம் பாவம் சொல்லு
வோம் எ-று. 5

ஐந்தாம்பாவம் முற்றிற்று.

---

## ஆ ரு ம் பா வ ம்

### சத்துருவின் பணியின்மை

கூறுசேயெட்சிக்காறுசத்துருப்பிணிக்
கொடியஞாதியதிபனுமந்தனுந்
தேறிநின்றகோனட்பாட்சியுச்சராய்ச்
செய்யபாக்கியதனலாபகேந்திரத்
தாறின்ஞாதிபனின்றோரைக்கோட்களு
மந்தநட்பாட்சியுச்சத்திரிகோணராய்
வீறுமைந்தர்பகைநோய்மிடியறும்
வீமநாதர்பணிவிடைபண்ணுமே.

இ-ள். 6-ஆம் ராசிக்கு சத்துருஸ்தானம் பிணிஸ்தானம் ஞாதி
ஸ்தானம் என்றுபெயர். இந்த 6-ஆம் ராசியாதிபதியும் சனியும் 6ஆம்
இராசியிலிருந்த கிரகமும் நட்பாட்சி யுச்சாய் தனலாப கேந்திர
திரிகோண இராசியிலே முற்பாதியிலே எவ்வன்னரா யிருக்கினும்
இப்படிக்கொத்த கிரகங்களுடன் கூடியிருந்தாலும். இவர்கள் பார்
வையுண்டானலும் இவர்கள் தனலாப கேநதிர திரிகோணங்களிலிருந்
தாலும் இப்படி இந்தக்கிரகங்களும் இந்த இராசியாதிபதிக்கிரகமும்
இப்படி நட்பாட்சி யுச்சமாய்த் திரிகோணத்திலிருந்தால் இந்தப்
பிள்ளைக்குச் சத்துருக்களால் வியாதியால் ஸ்திரீயால் உபத்திரவமில்
லாமல் வீமநாதருக்குப் பணிவிடைசெய்து அவரது திருவடிக் குரித்
தாவர் எ-று. 2

### சத்துரு இன்மை ஜேஷ்டனுக்கும் பிதுருவுக்கும் சத்துருத்துவம்

விடையர்வீமேசர்பூணரிசேய்சனி
மிக்கலக்கினவேந்தராறிலுற
வுடையவப்பகைப்போகிலையாறிற்சுன்
னுறவெய்யோனேரையாதியாய்மூன்றுறட்
படைத்திறமில்லையாறுதிமூடமாய்ப்
பாவராய்ப்பகைநீசராய்ச்சீனரா
யடைத்தவாறெட்டிராறுறத்தியரோ
டனுகினுந்நோயுறவாலுங்கெடதே.

இ-ள். சர்வஜீவோபகாரமான காமதேனுவுக்கு நாயகமான ரிஷபாரூடராகிய வீமேசர் பூரணமான இராகு கேது இரவி குஜன் இவர்களாதல் இலக்கினாதிபனாதல் 6-ஆம் ராசியாதிபதி இவர்கள் 6-மிராசியிலிருந்தால் இவனுக்குச் சத்துருவாதையில்லை 6-ஆம் இராசியாதிபதி இலக்கினத்திலிருக்கினும் சத்துரு வாதையில்லை பாபக்கிரகங்கள் 3-6-11-ல் நிற்க வெகு நன்மையுண்டாம். சத்துருவாதை இல்லை இலக்கினாதிபன் இரவி 3-ஆம் இராசியில் நிற்கினும் அதுவேயாம், இலக்கினம் மிதுனமாக துலாத்தில் இரவிநிற்க விருட்சிகத்தில் குஜன் நிற்கில் இவனுக்கு முன்பிறந்த பிள்ளைக்கும் பிதாவுக்கும் பகை. சத்துருஸ்தானமான 6-ம் ராசிக்கிரகங்கள் மூன்றுபேரும் மூடராய்ப் பாவராய்ப் பகை நீசக்ஷீணராய் 6-8-12-ஆம் இராசியிலிருந்தாலும் இவர்களுக்குப் பகைக்கிரகங்கள் கூடியிருந்தாலும் இவர்களுக்குப் பகை இராசியில் நிற்கினும் இவர்களிடப் பார்வையுண்டானாலும் இவர்களுடன் கூடியிருந்த கிரகத்தின் இராசியும் அதனுடன் பார்வையுண்டான இராசியும் உதயமுதல் வியஸ்தான மளவும், தான் தன் குடியுள்ளார் தன்னுடன் பிறந்தாரென்ற அடைவே அவரவர்க்கடுத்தபேர்க்குத் தீங்கு செய்யும், இந்ததோஷந்தீர வீமநாதருக்கு அபிஷேகம் பண்ணுவது எ-று. வீமநாதருக்கு அபிஷேகமாவது ருத்திராப்பிஷேகம். 3

ஆறும்பாவம் முற்றிற்று.

## ஏழாம்பாவம் ரூப களத்திரம்

கேடுவாராதுவீமேசர்தாடொழக்
கிட்டிலேழாமிராசிப்பேர்பாரினில்
வீடுதாரம்பிரகாசந்தீவினை
வினையிலாசவுபாக்கியம்போகித
நீடுமேழாதிகாரகன்சுக்கிர
னின்றகோடேறிநட்பாட்சியுச்சராய்க்
கூடுபாக்கியதனலர்பகேந்திரங்
கோணங்களுறலட்சணக்கோதையே.

இ-ள். வீமேசர் திருவடியைத் தொழுவார்க்குக் கேடுவராதென்றும், 7-ஆம் இராசிக்கு கிரகம் களத்திரம உதயம், பிரகாசம் சவுபாக்கியம் போகம் என்றுபெயர் இந்த 7-ஆம் இராசியாதிபதியும் களத்திரகாரகனாகிய சுக்கிரனும் 7-ஆம் இராசியிலிருந்த கிரகமும் இவர்கள் மூவரும் நட்பாட்சி யுச்சராய்த் தேறிநிற்க இவர்களிருந்த இராசியாதிபதிக் கிரகமும் நட்பாட்சி யுச்சராய்த் தேறிநிற்க தனலாபகேந்

திரத் திரிகோணங்களிலே எவ்வன்னாயிருக்கினும் இப்படிச்சொத்த கிரகங்கள் பார்க்கினும் இவனுக்கு சர்வலட்சண சம்பன்னமுள்ள களத்திரமுண்டாய் வாழ்வர் எ-று. 1

## தீர்க்ககளத்திரம் களத்திரத்தினுல் நிதி நிட்சேபலாபம்

கோதைபாகர்வீமேசரருள்பலங்
கோமளாங்கிக்கொழுநன்மகத்தாம்
போதுசம்பூரணுயுசிருவரும்
பூவைசென்மத்துக்கைக்திலாபத்தல
மோதுமைந்தாதிபாக்கியதனகேந்திர
முற்றமாதிரிகோணங்களேறினு
நீதிலாபாபாதிதேறிநற்கோடன்
நிற்கவேநிதிநிட்சேபங்கூறுமே.

இ-ள். கோதையாகிய நகைமுகவல்லித்தாயார்பாகர் வீமேசர் அருளைப் பெறுகிறபேர்க்கு கோமங்களாங்கமான ஸ்திரீயுண்டாய் இந்தப் புருஷனுக்கும் ஸ்திரீக்கும் பூரணயுசுமுண்டாம், இவர்களுக்குப் பூர்வதனமு முண்டென்கிறதற்கு விபரம், ஸ்திரீகளுக்கு இலாபஸ்தானம் 5-ஆம் இடம், இந்த 5-ஆம் இராசியாதிபதியாகிய தன கேந்திரத் திரிகோணங்களிலேயிருந்தால் பூர்ணயுசும் பூர்வதனமு முண்டு, இவர்களிட லாபாதிபதி தனஸ்தான மேறியிருந்தாலும் அந்த தனஸ்தானதிபதியோடுகூடி நட்பாயிருந்தாலும் இலாபதன கேந்திர திரிகோணங்களி லிருந்தால் இவர்களே அந்தத்தனத்தை அனுபவிப்பார். இவர்களிட லாபாதிபதியும் தனதிபதியும் இவர்களிருந்த இராசியாதிபதியும் இப்படியிருந்தால் இவர்களுக்கு மேன் மேலும் தனம் வர்த்திக்கும். எ-று. 2

## நரவாகனப்ராப்த பத்தாவுடையவள்

கூடிமின்லாபர்பெண்டனமேவினுற்
கொழுனர்வாகனம்லாபகேந்திரமுறி
ஞடுசெல்லு நரவாகனங்குரு
லாபநட்பாட்சிகேந்திரசவுச்சராய்
நீடுதேசாதிவாகனஞ்சுங்கரே
னிரைந்தவெள்ளிச்சொரூபஞ்சனிபரி
தேடுநல்லர்தனகேந்திரங்கோணமேற்
றேறிலாபத்துறப்பெருஞ்செல்வமே.

இ-ள். ஸ்திரீ சென்மங்களுக்கு லாபஸ்தானம் 5-ஆமிடம், இந்த 5-ஆம் இராசியாதிபதி அவளிட தனஸ்தானமேறினுல் அவள் புருஷ

னுக்கு நாவாகனப்பிராப்தியுண்டு. அந்ததனஸ்தானாதிபதி லாபகேந்திரத்திலிருந்தால் அவன் புருஷனுக்குப் பூரணமாக நாவாகனப் பிராப்தியுண்டு அவளிட லாபாதிபதி குருவாய் நட்பாச்சியுச்சம் பெற்று பலமுடைத்தாய் எவ்வன்னராய் அவளிடதனஸ்தானத்திலிருந்தால் அவளிட பத்தாவுக்குச்சொன்ன நாவாகனப் பிராப்தியுண்டு. இந்தப்படி சுக்கிரன் நிற்கில் வெள்ளிசொரூபம், சனியானால் குதிரைகுடை, சுபக்கிரகங்கள் நட்பாட்சி யுச்சம்பெற்று எவ்வன்னராய் அவளிட தனஸ்தானத்திலே நிற்கிலும் அவாகளிருந்த இராசியாதிபதியும் தனலாப கேந்திரத் திரிகோணங்களிலே நின்றால் அவள் பத்தாவுக்கு வாகனப்பிராப்தியுண்டு எ-று. 3

### புத்திராட்டி களத்திரத்தின் சாதி

பெருத்தவைந்தாதிகோட்கள்பத்தொன்பதிற்
பெறுபன்னொன்றினற்கோட்கள்வெகுதன
நிறைத்தவாகனமேழாதிதேறியே
நீடுகேந்திரத்திரிகோணலாபத்து
ளூரத்தபுத்திரருண்டுபொன்சுங்கரு
மொன்பதிற்சசிபிந்துமான்மத்திப
மிருத்தன்மற்றவரேயீனசாதியா
மெந்தைவீமேசர்கட்டளையிட்டதே.

இ-ள். ஸ்திரீகளிட தனாதிபதி அவளிட 10-ஆம் இராசி 6-ஆம் இராசி 11-ஆம் ராசியில் நிற்கில் அவள் உள்ளளவும் வெகுதனமும் வாகனப் பிராப்தியுமுண்டு. அவளுக்கு புத்ரஸ்தானமான 7-ஆம் இராசியாதிபதி சுபக்கிரகமுமாய் நட்பாட்சி யுச்சம்பெற்று எவ்வன்னராயிருக்கினும் இப்படிக்கொத்த கிரகங்களிட இராசிகளில் நிற்கினும் இப்படிக்கொத்தவாள் பார்வையுண்டானாலும் இவர்களுக்கு இலாபஸ்தானமாகிய 5-ஆம் இராசியில் நிற்கினும் இவளுக்குப் புத்ரலாபமுண்டு, இனி இவளுக்குப் பத்தா ஸ்தானமான 9-ஆம் இடத்திற் குரு சுக்கிராளாயில் இவள் புருஷன் தன் சாதிக்கொத்தசாதி, மதி புருஷனாகில் மத்திபம மற்றக்கிரகங்களானால் ஈனசாதியென்றும் எந்தையாகிய வீமேசர் கட்டளையிட்டது எ-று. 4

### கிரகபலன்

இட்டவொண்பாதிபாக்கியகேந்திர
மிலகுநட்பாட்சியுச்சமைந்தேறினாற்
சிட்டராமெனவிட்டுண்டுவாழ்வாரந்
தேறுகோளாபமட்டுப்பன்னொன்றுற
முட்டவாயுரிலாபாதிலாபமே
லுற்றகோளொத்தனைபத்தனைமனைக்

கட்டுசிவன்போய்மூலமுமின்னிலே
காக்குந்தாதுசிவனைக்கருதியே.

இ-ள். இவள் பத்தாஸ்தானமாகிய 9-ஆம் இராசியாதிபதி நட்பாட்சி யுச்சம்பெற்று சுபராய் எவ்வன்னருபாய் இவளிட லாபஸ்தானமாகிய 5-ஆம் இடத்திலாதல் 8-ஆம் இடத்திலாதல் 11-ஆம் இடத்திலாதல் நிற்கில இவள் ஐஸ்வரியம் சம்பூரணமாகவுண்டு வியஸ்தானமாகிய 12-ம் இராசியாதிபதி லாபமாகிய 11-ஆம் இராசியில் நிற்கினும் கேந்திர திரிகோணத்தில் நின்றும் அவனுடன் எத்தனைக் கிரகங்கள் கூடியிருந்தது அத்தனையிடத்தில் வீடுகட்டும் அந்த இராசி சிவராசியானால் உபயதேசத்திலும் அன்னியதேசத்திலும் மூல இராசியானால் சுயதேசத்திலும் வீடுகட்டுமென்று பராபரவஸ்துவாகிய வீமேசரைப்புகழ்ந்து சொல்லுவது எ-று. 5

## கிரகபலன் சவுபாக்கியபலன்

கருதுபொன்கிரகாதிநட்புச்சராய்க்
கனதனக்கேந்திரத்திரிகோணமேன்
மருவிலக்னுதிபன்னெறிமன்னவே
மங்கைபொன்மடமாளிகைவாழ்வுறுந்
தெரிவையின்றனவாதிலாபத்துறச்
செல்வாம்வியத்தானிதனத்துற
கருணையிற்றனம்பண்டாரங்கட்டியே
கடுவுணுந்தொடுக்காடரைநாடுமே.

இ-ள். வியஸ்தானுதிபதி குருவாய் நட்பாட்சியுச்சமாய் தனகேந்திரத் திரிகோணங்களில் உத்தமஸ்தானங்களில் நிற்க இவனிருந்த இராசியாதிபதியும் இப்படி உத்தமஸ்தானத்தி லிருந்தால் அவளிடகிரகம் இராஜ கிரகத்துக்குச் சமானமாகயிருக்கும் இவன் 2-ஆம் இராசியில் நிற்கில் வெகு தனுட்டியுமாய் நஞ்சுண்டகண்டராகிய தொடுக்காடரை நாடி முத்திரைக்கன்பாராம் எ-று. 6

## புத்திராட்டி

நாடுமூன்றுதியாண்கோளகத்துற
நயந்தராசிபுமாணுயாண்கோளுடன்
கூடுநோக்கலாபத்துச்சகோதரர்
குணவியன்றனவானுப்சுகிக்குமே
யாடவன்னுறுலாபாதிபனிவ
னைந்துறவுபயத்துறமூன்றதா
மோடுமேசராநாலுதிரமிரன்
டுற்றவீமேசர்தானையுகந்ததே.

இ-ள். பிராதுருஸ்தானமாகிய 3-ஆம் இராசியாதிபதி புருஷக் கிரகக்ஷேத்திரத்திலும் புருஷராசியிலும் புருஷகிரகங்களுடன் கூடி நிற்கினும் நோக்கினும் இப்படி அவனுக்கு லாபஸ்தானமான 11-ஆம் ராசியில் நிற்கில் இவள் பிதாவானவன் நற்குணமுடையனுமாய் தன வானுமாய் சுகித்திருக்கும். இவனிருந்த 11-ஆம் ராசியாதிபதி இவ ளிட லாபஸ்தானமாகிய 5-ஆம் ராசியிலிருந்தாலும் இவளுக்கு பூர் ணாயுசுண்டு. புத்திரர்களுண்டு. எத்தனையென்பதற்கு விபரம் உபய ராசியாகில் 3, சரராசியாகில் 4-ஆம் ராசியாகில் 2 என்று வீமேச ருரைத்தது எ-று. 7

இதுவுமது

உகந்தவேழாதிபனுட னுற்றகோ
ளெத்தனையெத்தனைக்கேழுக்கொன்பதாஞ்
சுகந்தகோளுடனெத்தனைபத்தனை
துய்யலாபத்தொகையைந்திராசியிற்
புகுந்திருந்தவரெத்தனையத்தனை
புதல்வருண்டுசனிகூடிற்றீங்கரின்
மகிழ்ந்திருந்திடிற்புத்திரவர்த்தனை
வள்ளல்வீமேசர்பூசைக்குவாய்க்குமே.

இ-ள். புத்திரஸ்தானமாகிய 7ஆ-ம் இராசியாதிபதி எந்த இரா சியிலிருந்தான் அவனுடனெத்தனை கிரகங்கூடி யிருந்தது அத்தனை யும் புத்திரர்கள். அந்த 7-ஆம் ராசிமுதல் 9-ஆம் ராசியாதிபதியோ டே எத்தனை கிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனையும் புத்திரர்கள். 9-ஆம் ராசிமுதல் 11-ஆம் ராசியாதிபதியோடே எத்தனை கிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனையும் புத்திரர்கள். ஸ்திரராசிக்கு 2-ஆம ஸ்தானத்துக்கும் விபரம். 7-ம் ராசியாதிபதி கிரகங்களுடன் எத் தனை கிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனைபேரும் புத்திரர்கள். இனி உபய 3-க்கு தனஸ்தானமென்ற அதனுல் புத்ரஸ்தானமான 7-ஆம் ராசியாதிபதியுடனே எத்தனை கிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனை யும் புத்திரர்கள். அந்த 7-ஆம் ராசிக்கு 9-ஆம் ராசியாதிபதியுடனே எத்தனை கிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனைபேரும் புத்திரர்கள். அந்த 9-ஆம் ராசிக்கு 11-ஆம் ராசியாதிபதியுடனே எத்தனை கிரகங் கள் கூடியிருந்ததோ அத்தனைபேரும் புத்திரர்கள். இந்த வகை அதிபதியுடனே சனி கூடியிருந்தால் நசிக்கப்பண்ணும். இரவி கூடித் தேறியிருந்தால் வர்த்திக்கும். இப்படி புருஷர் சாதகத்துக்கும் 5 ஆம் இராசி புத்திரஸ்தானம் இது முதலாக மதி உபயம் இதற்கு

முன்போலப் பார்த்து பிள்ளைகளித்தனை என்று யூகிப்பது அந்தந்த அதிபதிகளுடன் சனி கூடியிருந்தால் நசிக்கப்பண்ணும். இரவி கூடி தேறி நிற்கில் வள்ளல் வீமேசர் பூசைக்கு வாய்த்தவனும் எ-று. 8

இதுவுமது

வாய்க்கும்பாரியாதிபரோடுசுன்னரி
மருவிற்றூரம்பத்தொன்பதுவாழ்திசை
யாக்குமாண்டுக்கொன்றெல்லார்க்குமிங்நெறி
யரிமகனுச்சிப்பாரிகாரன்குரு
நோக்கிற்றேறிற்றன்னலாபகேந்திர
னுலவருந்திரிகோணங்கண்மேவினுந்
தாக்கிமுற்றிச்சுநூற்றஞ்சுதாரங்கோள்
சமர்த்தன்மும்மூர்த்திகட்குந்தனையனே.

இ-ள். களத்திர ஸ்தானமாகிய 7-ஆம் இராசியாதிபதியுடன் சனி கூடியிருந்தால் அந்த அதிபதி மகாதிசை வருஷமெத்தனை அத்தனை ஸ்திரீகள். இரவி கூடிநிற்கில் மகாதிசை வருஷம் எத்தனையுண்டு அத்தனை ஸதிரீகள். மற்ற கிரகங்களுமிப்படி கண்டுகொள்க. சனி உச்சனுய் பலம்பெற்று களத்திராதிபதி குருவாய் இவர்களிருவரும் நட்பாகத் தனலாப கேந்திரங்களிலே கூடிநிற்கிலிவர்கள் இருவருக்கும் மகாதிசை வருஷம்-35 இதனை முற்றித்தால் எத்தனை அத்தனை ஸ்திரீகளென்றறிக. சுக்கிரனிப்படிக் கூடியிருந்தால் சுக்கிரன் மகாதிசை வருஷம் எத்தனையுண்டோ அத்தனை ஸ்திரீகள் உடையவனுமாய் மும்மூர்த்திகட்கும் இனியவனு யிருப்பன் எ-று. 9

விவாகமின்மை களத்திரசங்கை

தனையன்லக்கினதிபன்புத்திராகியெட்
டாறுபனிரெண்டுதானத்தமானர்க்கு
மனைவியில்லைக்களத்திராதியுடன்
மருவலெத்தனைப்பாரிச்குடும்பமுங்
சனியநிற்பவரெத்தனையத்தனைக்
கன்னிபாரியிற்கோட்களில்லாவிடி
னியவேழாதியைப்பாவர்கூடினு
மேகதாரம்வீமேசர்க்கினியனே.

இ-ள். இலக்கினதிபதியுங் களத்திராதிபதியு மிவர்களிருவரும் 6-8-12-ஆம் இடத்தில் நிற்கினும் அஸ்தமனமானுலும் இவனுக்கு விவாகமில்லை, களத்திராதிபதியுடனே எத்தனை கிரகங் கூடியிருந்தா

னும் குடும்பஸ்தானத்தில் எத்தனை கிரகங்கள் கூடியிருந்தாலும் களத்திரஸ்தானத்தில் ஒரு கிரகமிருக்க களத்திராதிபதியுடனே எத்தனைபேர் கூடியிருந்தாலும் அத்தனைபேரும் களத்திரமாம். ஸ்திரீகள் களத்திரதிதானத்தில் ஒருவருமில்லாமல் களத்திராதிபதியுடன் எத்தனை கிரகங்கள் கூடியிருந்தாலும் ஏகதாரவிரதராய் வீமேசர்க்கன்பராம் எ-று. 10

## புத்திராட்டி தத்தபுத்திரருடையவள் மிருகரூபமான புத்திரரைப்பெறுவள்

ஈசன்கண்ணுடனைந்தாதிதேறியே
யிருக்கமைந்தர்மிகுஞ்சனியங்குறப்
பூசன்மக்களீராரெட்டுமாறினிற்
புத்திராதிமுடித்துறச்சேயிலைப்
பேசுமைந்தாதிநாகரோடெட்டுறப்
பிள்ளைதத்தாகுங்கூடுகோளத்தனை
வீசுமைந்தாதியெட்டரிகேதுற
விருப்புமைந்தர்மிருககதியதே.

இ-ள். வீமேசர் வலக்கண்ணாகிய இரவியுடன் புத்திரஸ்தானாதிபதி அஸ்தமானமன்றியிலே கூடியிருந்தால் வெகு புத்ரப்பிராப்தியுண்டாம். சனி புத்திரஸ்தானாதிபனுடன் கூடியிருந்தால் தத்தபுத்திருடையவள் புத்திரஸ்தானமாகிய 5-ம் இராசியாதிபதியுடனே இரவியும் கேதுவுங்கூடி அஸ்தமானமாயிருந்தால் இவளுக்குப் பிள்ளைகள் மிருகரூபமாய்ப் பிறக்கும் எ-று. 11

## நல்ல புத்திரி புத்திரர்களைப்பெறுவள் பதிவிரதை

மிருகமேந்திக்கண்மைந்தர்புத்திராதியு
மிரவியெட்டுறவான்பெறுமாலுற
பெறுவாபெண்பெறுமைந்தாதியுச்சராய்ப்
பிரியகேந்திரலாபத்திரிகோணமு
முறுவரேடகவாண்டுக்கொன்றீனுவ
ருதயாங்குறத்தாமிசததின்பெருஞ்
செறியுமொன்பதான்றேறியும்பத்துறிற்
றெரிவைசேல்வம்புடர்சீவிக்குமே.

இ-ள். மானேந்திய வீமேசர் கண்ணாகிய இரவி பிள்ளையாகிய சனியுடன் புத்திரஸ்தானாதிபதி கூடி அஸ்தமனமாயிருந்தால் நட்பும் சுகமும் உள்ள பிள்ளைப்பிறக்கும். புத்திராதிபனுடனே புதன் கூடி அஸ்தமானமா யிருந்தால் நட்பும் சுகமும் உள்ள பெண் பிறக்

கும். புத்திரஸ்தானாதிபதி உச்சமாய் மித்துரு சகிதனுமாய் கேந்திர லாபத் திரிகோணங்களி லிருந்தால் வருஷந்தோறும் பிள்ளைகள் பெறுவரென்றறிக. புத்திர ராசியாதிபதியுடனே இரவிகூடியிருந்தால் தாமிசங்களிலே பெறுவள். 9-ஆம் ராசிபாதிபதி சுபக்கிரகமுமாய் இவள் கர்மஸ்தானமாகிய 10-ஆம் இராசியில் நிற்கில் இவள் பதிவிரதையாம். இவள் செல்வத்தினாலே புருஷன் ஜீவிக்கும் எ-று. 12

## தனப்பிராப்தியின்மை தனப்பிராப்தி ஆயுருஹீன களத்திரம்

சிவநாயகர்வீமேசர்க்கன்பிலாத்
திருவிலாபாதிநீசர்சத்துருவுடன்
மேவவாறெட்டுமீராறுபொன்னிலே
விரும்புலாபாதிநின்றசேத்திராதியும்
பாவரக்நெறியேயுறப்பொன்னிலாப்
பாரிசம்பந்தர்மூவர்நின்றுதியுங்
கோவர்நீசருடன்கூடிச்சீணராய்க்
குறுதுமாறெட்டீராறுநற்கோதையே.

இ-ள். சர்வ ஜீவநாயகனான வீமேசர்க்கன்பிலாதார் லாபாதிபன் நீசசத்துரு பாவக்ஷீணமுடராய் 6-8-10-ஆம் இராசியிலிருந்தால் இவனுக்கு பூர்வதன பிராப்தியில்லை. இந்த லாபாதிபன் இருந்த இராசியாதிபதியும் இப்படி யிருந்தால் வேண தனமும் அஷ்ட போகபாக்கியமு மில்லாதவனுமாய் இரந்து திரியும் பாரிய சம்பந்த கிரகங்கள் மூவருமிருந்த இராசியாதிபதியும் நீச சத்ருட்சீணமுடராய் பாலக்கிரக க்ஷேத்திருமாய் அல்லது இப்படிக்கொத்த கிரகங்களுடனே கூடியிருந்தாலும் அவர்களிட க்ஷேத்திரானாலும் பார்வையுண்டானாலும் இரவிகூடி அஸ்தமானராய் 6-8-12-ஆம் இடத்தில் இருந்தாலும் இந்தக் கிரகாதிபதியுடன் கூடியிருந்து 6-8-12-க்கு அதிபதிகளிட பார்வை உண்டானாலும் இந்தப் பாரிக்கு ஆயுசு ஈனம். போக போக்கியமும் ஈனம் இவனுக்கு சவுபாக்கியஹானி எ-று. 13

## புத்ரஹானி பத்தா மரணம்

கோதையாதிபகைநீசச்சீணராய்க்
குலவுமுட்டேகந்திரலாபக்கோணமும்
போதுமேதனங்கால்வாசியாயுசு
புருடவோரைபெண்ராசியாதிபகை
வாதையென்னவோரைந்ராதிபானுவின்
மடிந்துநீசமுறிற்புத்திரவானியா

மேர்துமொன்பதாதிபகைநீசமா
யுறங்கியெட்டுறப்பத்தாவொழியுமே.

இ-ள். களத்திர சம்பந்தக் கிரகங்கள் நீச சத்துரு க்ஷீணமூட ராய் கேந்திரலாபத் திரிகோணங்களி லிருந்தார்களாகில் களத்திரத் திற்கு ஆயு சுகால்வாசி. பவுஷ்பாக்கியமும் கால்வாசி. பத்தாசம்பந்தக் கிரகங்களும் சத்துருக்களால் எந்நேரமும் இந்தப் பத்தாவும் ஸ்திரீ யும் சத்துருக்களாயிருக்கும், ஸ்திரீக்கு லாபஸ்தானம் 5-ஆம் இராசி இந்த 5-ஆம் இராசியாதிபதி இரவியுடன்கூடி அஸ்தமானமாய் பொல்லாத ஸ்தானத்திலிருந்தால், இவளுக்குப் புத்திரஹானி. இவளுக்குப் பத்தா ஸ்தானமாகிய 9-ஆம இராசியாதிபதி பகை நீசக்ஷீணமுமாய் இவள் லாபஸ்தானமாகிய 5-ஆம் ராசியில் நிற்கி னும் அல்லது 9-ஆம் இராசியாதிபதி பகை இராசிகளில் பகை நீச ராசிகளில் நிற்கினும் அவனிருந்த இராசியாதிபதிகளும் அப்படி யிருந்தால் இந்தக் கிரகங்களுடன் கூடியிருந்தாலும் அந்த இராசி 8-ஆம் இராசியானாலும் பாலியத்திலே இவளுட பத்தா மரணம் எ-று.

களத்திரம் இளைத்திருப்பள் சோரஸ்திரீ சோரநாயகர்

ஒழிவிலாச்சிவன்பூமதியேதிரு
உடம்பினதிமூன்றிற்பகையோரையிற்
பழுதுகொள்பகையோடுறவந்துமுன்
பத்தினதியாறெட்டிவீராறுறத்
தழுருத்திரர்பன்னிரணடந்தணர்
தக்கபத்திற்சதிராகுகேதுவு
மிழியிற்சோரலாபகுணற்கிடு
மீசன்சொல்லாற்பிரமாவெழுத்திதே.

இ-ள். ஒழிவிலாத சுயஞ்சோதியாகிய சிவன் முடிக்கப்பட்ட மதி இலக்கினமாகிய இவளுடம்பினதிபதி பிராதுஸ்தானமாகிய -ஆம் இராசியிற் பகை இராசியிற் பகைக்கிரகங்களுடன் கூடியிருந் தால் இவள்தேகமிளைத்திருக்கும். இவள் சோரஸ்திரீ யென்கிறதற்கு விபரம இவள் பத்தாஸ்தானமாகிய 9-ஆம் ராசியாதிபதி 6-8-12-ஆம் இடத்திலிருந்தால் சூத்திரனுடனே சம்பந்தம் இராகுவுடன் கூடி யிருந்தால் ஈனஜாதி. 8-ஆம் இடத்திலிருந்தாலும் சூத்திரன் 12-ஆம் இடத்தில் பிராமணஜாதி என்க. அந்த 9-ஆம் இராசியாதிபதி இவள் கர்மஸ்தானமாகிய 10-ஆம் இடத்தில் சனி இராகு கேதுவும் கூடி யிருந்தால் இவள் விபசாரத்தில் தேடினவுடைமையால் இந்தப் புரு ஷன் சிவன் பண்ணுமென்று பிரமா வகுத்தது எ-று. 15

## சோரஸ்தானம்

எழுத்தொன்பான்பாவர்களிருநான்கரோ
　　டிருக்கப்பாம்புதொட்டெல்லாங்கொளுஞ்சீவன்
விழிக்குமங்தனுறில்விருட்சத்தடி
　　விமலர்பூண்கிணற்றங்கரைமேவுமே
செழித்தபுத்திராதியாய்நாகரைச்
　　சேர்ந்தங்காறுமிடத்துப்புத்திராதியு
முழைத்துத்தேடும்பதார்த்தம்பிதாக்கொளு
　　முற்றபெண்கள்வைதவ்வியமுன்னுமே.

இ-ள். 9-ஆம் இராசியாதிபதி பாபக்கிரகமுமாய் அவனுடன் இராகு கேது கூடியிருந்தால் அவள் விபசாரத்திலே தேடின உடமை இந்தப் புருஷனுக்குச்சேரும். அந்த 9-ஆம் இராசியாதிபதியுடனே சனிகூடியிருந்தால் இவள் சோரத்துக்குக் கூடுமிடமேதெனில் சூத்திரனுடன் விருட்சத்தினடியிலென்க. இராகுவானல் கிணற்றங் கரையென்க. அந்தப்புர ஸ்தானதிபதி பாபனுமாய் அவருடன் இராகு கேது கூடி 6-ஆம் இடத்திலிருந்தால் புத்திரவிபசாரத்தில் உழைத்துத் தேடினவுடைமை இந்தத்தகப்பனுக்குச் சித்திக்கு மென்றறிக. இனி ஸ்திரீகளிட வைதவ்வியஞ் சொல்லுவோம் எ-று. 16

## வைதவ்வியன் பதிவிரதை

உன்னுமொன்பதோனறெட்டீராறினு
　　முறங்கவைதன்னியம்வாலிபத்திலே
நன்னிலத்திலிருந்தத்தமித்திடி
　　னடுவில்வைதவ்வியம்போகியாதியே
பன்னிரண்டாறெட்டினின்மூடமாய்ப்
　　படியின்மாரணன்சுன்னவனென்பதின்
மன்னுலக்கினகேந்திரத்திரிகோணமேன்
　　மகுணர்சங்கமம்வீமேசர்வைத்ததே.

இ-ள். ஸ்திரீகள் வைத்தவைதவ்வியத்துக்கு விபரம். 9-ஆமிடத்ததிபதி 6-8-12-ஆம் இடத்தில் அஸ்தமனமாயிருந்தால் பால்லியத்திலே வைதவ்வியம். 9-ஆம் ராசியாதிபதி அஸ்தமனமாய் ஆயுருஸ்தானங்களி லிருந்தால் நடு வயதிலே வைதவ்வியம். இனி புருஷருக்குக் களத்திர ஸ்தானதிபதி 6-8-12-லே அஸ்தமனமாயிருந்தால் புருஷன் பால்யத்தில் மரணம் சனி அஸ்தமானத்திலே யாகுதல் இலக்கினகேந்திர திரிகோணஸ்தானத்திலே யாகுதலிருந்தால் தன்னிட பத்தாவுடனே சங்கமமென்று வீமேசரமைத்தது எ-று. 17

வைத்தநாலாதியோடேபணியுற
மைந்தரோர்பரசாதமேழாதிப
னிற்கத்தியர்பால்பாவர்சுன்னிந்நெறி
நேர்வாறெட்டீராறுமுண்டைச்சனிக்
கொத்தவாதியாரெட்டினிலீராறி
னும்மிராகுவுங்கேதுறக்கூடமின்
மிக்கத்தாராதிசுன்னேக்கவந்நெறி
வீமர்சொற்படிவேதாவிதித்ததே.

இ-ள். மாதுரு ஸ்தானமாகிய 4-ஆம் இராசியாதிபதியுடன் இராகு கேது கூடி சென்மலக்கினத்திலிருந்தால் இவன் பரஜாதக மென்றறிக. புருஷனுக்கு களத்திராதிபனுடன் சுபரிருந்தால் சுப ஸ்திரீ பாபரிருந்தால் பாபஸ்திரீ. களத்திராதிபதி சனியுமாய் அவன் 6-8-12-ஆம் இடத்திலிருந்தால் விதவை சேர்த்தி பாரியாதிபதியுடன் இராகு கேது கூடி 6-8-12-லிருந்தால் ஈன ஸ்திரீ சங்கமும் களத்திராதிபதி சனி ஸ்தானத்தில் பார்வையுண்டானல் அந்தப்படி யென்று வீமேசர் அருளின்படி பிரமா விதித்தது. 18

விபசாரத்தாற் சீவனம் உருத்திரக்கன்னிகை

விதித்தமூன்றுதிபாவகன்மத்துற
விரவிராகுவுங்கேதுவுமேவிடக்
குதித்தவள்விபசாரத்திற்கூட்டுபொன்
கொழுநற்கேயாகுமேயொன்பதாதியெண்
ணுதித்தவோரையுறவோரையாதிப
ஞேங்குபாரியினுற்றுலுடன்கிடை
பதித்தவாறுதியொச்கப்பணியுறப்
பாவும்ருத்திரக்கன்னிகைப்பாவையே.

இ-ள். பிராதுரு ஸ்தானமாகிய 3-ஆம் இடத்ததிபதி பாபக்கிரகமாய் இவனிட கர்ம ஸ்தானத்தில் இருக்க இவனுடன் இராகு கேது கூடியிருந்தால் இவள் விபசாரத்தில் தேடியிட்டுப் பொசிக்கும். இனி அநுமரணத்துக்கு இவளிட பத்தாஸ்தானமான 9-ஆம் இடத்ததிபதி இவள் இலக்கினத்திலே யிருந்தாலும் இவளிட இலக்கினதிபதி பாரியஸ்தானத்தி லிருந்தாலும் அநுமாணம். ஸ்திரீகளுக்கு 6-ஆம் இராசியாதிபதியோடே இராகு கேது கூடியிருந்தால் இவள் ருத்திரக் கன்னிகையாம். எ-று. 19

ஏழாம்பாவம் முற்றிற்று.

## எட்டாம்பாவம்

### தீர்க்காயுசுதன்மை

பாவினுக்கிசைபாண்டவர்நாதனைப்
பரிந்தபேர்கட்டமாதுநற்கோளதின்
மேவதீர்க்காயுசுக்கெட்டினினின்றவாம்
வெய்யவன்சேயெட்டாகியிம்மூவருந்
தாவுபாக்கியத்தனகேந்திரகோணமுஞ்
சாரநட்பாட்சிநோக்குமுன்சாரியுஞ்
சீவனொன்றுமுக்காலாறுமூன்றிலுந்
தீயர்பன்னொன்றிநன்மையுரைக்குமே.

இ-ள். பஞ்சபாண்டவர்கள் மகாலிங்கார்ச்சனை பண்ணி பரிந் திரட்சித்த வீமேசுராருக் குகந்த அன்பர் செனிக்கும்போது உதயத் துக்கு 8-ஆம் இராசிக்கு ஆயுருஸ்தானம் என்றுபெயர். இந்த அஷ் டமஸ்தானாதிபதி சுபக்கிரகமாய் அஷ்டமத்தில்நின்ற கிரகமும் ஆயுரு காரணாகிய சனியும் அஷ்டமராசிக் கதிபதியும் இம் மூன்று கிரகங் களும் தனலாபகேந்திர திரிகோணங்களில் நட்பாட்சி யுச்சம்பெற்று நிற்கினும் இந்தக் கிரகங்களுடன் கூடிநிற்கினும் இவர்கள் பார்க்கி னும் இவர்கள் இருந்த இராசியாதிபதியும் இப்படிக்கொத்த இராசிக ளிருந்தால் தீர்க்காயுசு பாபக்கிரகங்கள் 3-6-11-ல் இருந்தால் நன்மை யுண்டாய்வாழும் எ-று. 1

### பர்வதாரோகணம் சிரோவியாதி பரிமளாதி வஸ்திர கிரய விக்கிரயங்களாற் சீவனம் பாபி சாஸ்திரி

உரத்ததேகாதிபானுதையத்துற
வுற்றுநோக்கப்பிறந்தாக்கிருபுறம்
பரக்குமிந்துதிரிசங்கமத்தினாற்
பரிமளவத்திராதியாற்சீவன
மெரிக்குமாயுதபங்குசம்பந்தமாம்
விலங்குசோதிபொறுமையாய்பேடியாற்
றருக்குபொன்மறையாகமத்தாற்புகர்
தங்குமெங்கோனருளாற்கற்பங்களே.

இ-ள். தேகாதிபதி இரவியுமாய் தேக லக்கினத்திலிருக்கினும் நோக்கினும் கிரித்தலத்திலே திரிவன். சிரோவியாதியுடையவன். இந் தப்படி மதியாகில் ஸ்திரீசங்கமும் வெகு சங்கமுண்டானவனுமாய் பரிமளவஸ்திராதி கிரயவிக்கிரகங்களினாலே சீவிக்கும். குஜனால் அக்கினியால் பாத்திய முடையவனுமாய் சூரனுமாய் விரணவியாதி

களுமுண்டாய் ஆயுதாப்பியாச முடையவனுமாய் குரூரனுமாய் பாவி யுமாய்த்திரியும். புதனுற் கணித சாஸ்திர மறிந்தவனுமாய்ப்பிரவீண னுமாய் அன்பும் அடக்கமுமுண்டாய் வியாபாரத்தினாலே வயிறு வளர்க்கும், குருவானுல் சுயதேசத்திலே பிராமண வித்தியாப்பியா சனுமாய்ச் சரீரம் அழகுண்டாய் வாழ்ந்திருப்பன். சுக்கிரனுல் பிரம்மசுற்பமுண்டாய் ஆயுசுகற்பமுண்டாய் அருள் பெற்றுவாழும்.

வனசஞ்சாரி பரதேசத்தில் மரணம்

கற்பினைப்பிறப்பில்லான்விழிமகன்
கரியவன்சந்திரனுற்கியாதியாய்
நிற்பனேக்குதலால்வனத்தேபுகு
நீடுதேசாதிமூலமூலத்தெய்தி
லற்பமிட்டிலச்சாமமகத்தினி
லவமரணங்களெட்டாதிதாதுவாய்ச்
சிற்பனேரையிற்கோடணிக்கிற்பா
தேசசஞ்சாரங்கொண்டுசிறக்குமே.

இ-ள். இறப்பிறப்பில்லாத சுயஞ்சோதியான வீமநாதர் வலக் கண்ணுகிய இரவிக்குப்புத்திரனுபை சனி தேகாதிபதியாய் தேகத்தில் நிற்கினும் தேகராசியை நோக்கினும் இந்தத் தேகி வனத்தினில் திரி யும். அஷ்டமாதிபதியோடே ஒருவரில்லாமல் தாங்களே யிருந்து அந்த இலக்கினமும் மகரமாய் கிரகங்களுஞ் சரக்கிரகமானுல் பரதே சத்தில் மரணம் எ-று. 3

நிவாசஸ்தலம்

சிறக்குஞ்சென்மந்திரமாய்த்தேகாதியுஞ்
சேர்ந்திருந்திடவத்தேசமேநிலை
மறக்குமெட்டிற்சுபக்கிரகத்தினின்
மன்னுபையமேலன்னியதலத்திற்போய்
பறக்குமேசராங்தேசாந்தரத்தினிற்
பரவுதேகாதிதாதுவும்போக்குமே
நிறக்குமேயுபயம்புறம்புள்ளுமா
நிமலர்சர்வாத்மாசித்தர்நிறைத்தகதே.

இ-ள். சென்மலக்கினம் ஸ்திரலக்கினமுமாய் அந்த தேகாதி பதியும் அங்கே யிருந்தால் சுயதேசத்தி லிவனுக்கு இருக்கப்பிராப்தி அஷ்டமாசி உபயராசியானுல் சமீப கிராமத்தில் மரணம். சரராசி யானுல் அன்னியகிராமத்தில் மரணம். தேகாதிபதி சரராயிலிருந் தால் இவன் தேசாந்திரத்திலே திரியும். திராசியானுல் சுயதேசத்தி

லும் உபயாசியானுல் உபயதேசத்திலும் திரியுமென்று நிமலாகிய வீமேசர் சர்வாத்மாக்களுக்கும் நிறைத்தது எ-று. 4

ஆயுசும் மரணகாலமும்

நிரைந்தசம்மந்தவட்டமமூவரு
நீசர்சத்துருபாவராய்ச்சீணராய்ப்
பரித்தகோட்களுநோக்கியிருக்கினும்
பாரியாறெட்டிராறிற்படிகினு
மறித்தவீராறதிபன்பிணியுற
மன்னுமாறுதியெட்டுப்பன்னிரண்டுற
வருத்தய்பன்னிரண்டாதிபன்மாதிசை
மரணம்வேதாவிதித்தவாம்பிதே.

இ-ள். அஷ்டம சம்பந்தக்கிரகங்கள் மூவரும் நீச சத்துருக்களாய்ப் பாபராய் க்ஷீணராயிருக்க இப்படி யிருந்த கிரகங்களிட இராசியிலிருக்கினும் இவர்களுடன் கூடினும் நோக்கினும் இவர்களிருந்தபடி 6-8-12-லிருக்கினும் இவனுக்காயுசு க்ஷீணம் அந்த அதிபதி இப்படியிருக்கினும் ஆயுசு க்ஷீணம் அவர்களெங்கெந்த இராசிகளிலிருந்தார்கள் அந்தந்த இராசிக்காரர்களுக்கு நாசம், இவர்கள் பார்வையுண்டான இராசிகளில் நசிக்கும் ஜெனனகாலத்தில் 10-ஆம் இராசியாதிபதி 6-8-12-ல் இருந்தால் 12-ஆம் இராசியாதிபதி மகாதிசை. ஜெனனகாலத்திலே வந்தால் அந்த மகாதிசையிலே மாரணமாமென்று வேதவாக்கியம் பிரம்மா விதித்தது எ-று. 5

மரணதிக்கு

வரம்புமெட்டாதிசென்மநட்புச்சாய்
வழங்குமுக்காற்பகைநீசநீட்பலம்
விரும்புதேசாதியட்டமாதியுடன்
மேவுமோரையின்லாபமிவருட
னிரம்பநின்றவரெத்தனையத்தனை
நின்றசோளோரைநின்றவரெத்தனை
திரும்பமாரணகாலத்திருப்பர்கள்
சீவனும்வீமநாதர்தாட்சேருமே.

இ-ள். அஷ்டமாதிபதி சென்மலக்கினத்தில் நட்பாட்சியுச்சம் பெற்று சத்துருக்ஷேத்திரம்பெற்று லாயுசு முக்கால்வரிசை பகை நீசமாகில் அற்பம், தேசாதிபதியும் அஷ்டமாதிபதியுங்கூடி யிருந்தபோது அவருடன் எத்தனை கிரகங்கள் கூடியிருந்தார்கள். அந்தக் கூடின இராசியாதிபதியும் அங்கிருக்க அந்த ஸ்தானமும் லாபஸ்தானமாக அந்த தேசாதிபதியுடன எந்த ராசியாதிபன் கூடியிருந்தார்கள் அத்தனைபேரும் மாணகாலத்துக்கு அண்டையிலே கூடி

விருப்பார்கள் இந்த அதிபதிகள் கூடியிருந்த இராசி எந்தெந்த திக்கு அந்ததிக்கு மரணம். அந்தச் சீவனும் விமலாதர் தாள்சேருமென்று ஈதெல்லாங் கிரகவடியறிந்து கண்டுசொல்வது எ-று. 6

எட்டாம்பாவம் முற்றிற்று.

---

## ஒன்பதாம்பாவம்

### பாக்கியபலன்

சாருமோன்பான்குருத்தனபாக்கியந்
தானவாதியிறையதினிற்பவர்
சேர்ந்தவக்கிரகநட்பாட்சியுச்சாய்த்
தேறல்பாக்கியதனகேந்திரகோணமும்
பாரில்பாரிவரிவராறிற்கோள்
பரியவிங்நெறிபட்டவர்த்தனராய்த்
தேரும்பாக்கியசமபந்தமாதிசைச்
செல்வாசோனருள்சங்கற்பசித்தரே.

இ-ள். 9-ஆம் இராசிக்கு குருஸ்தானம் பாக்கிய ஸ்தானம் தர்மஸ்தானம் என்று பெயர். இந்த 9-ஆம் இராசிபாதிபதியும் பாக்கிய காரகனுகிய குருவும் பாக்கியஸ்தானத்தி லிருந்தபேரும் ஆகிய மூன்றுபேரும் சுபக்கிரகமுமாய் நட்பாட்சி யுச்சம்பெற்று எல்வன்ன ராயிருக்க இந்தக் கிரகங்களுடன் கூடியிருக்கினும் இப்படிக்கொத்த வர் பார்க்கினும் இவர்கள் தனலாபகேந்திர திரிகோணங்களில் சேரி னும் இவரிருந்த இராசியாதிபதிக்கிரகங்களும் இவர்களைப்போலிருந் தால் இவன் பட்டவர்த்தனனுவன். அல்லது அவனுக்குச் சமான மான ஐஸ்வரியவானுயிருக்கும். இந்தக் கிரகங்கள் மூன்று பேரிட மகாதிசைக்குள்ளே இலாபாதிபதி பொசிக்கிறபோது செல்வர். வீமே சுரரருளால் மகாபாக்கியஞ் சித்திக்கும் எ-று. 1

இதுவுமது

சித்தவேந்தரடியர்பாக்கியாதிபன்
செய்யபொன்னதினிற்கநட்பாட்சியா
யொத்தமாதனபாக்கியங்கேந்திர
முதயமைமந்துபயலக்கினுதிபன்
சுத்தாசுவிடுவாதியைலுந்
துப்பகீர்த்திசெளபாக்கியவர்த்தன
மெத்துபாரியினற்கோணட்புச்சமே
விவர்கள்பூமிநிதியாற்றருக்குமே.

இ-ள். சர்வ சங்காரமூர்த்தியாகிய வீமேசர் அருளிய இலக்கி னத்துக்கு பாக்கிய இராசியாகிய 9-ஆம் இராசியாதிபதியுடனாகிலும் பாக்கியகாரகனாகிய குருவுடனாகிலும் பாக்கிய ஸ்தானத்திலிருந்து மித்துருக் கிரகத்தினுடனாகிலும் இவனிட லாபஸ்தானமாகிய 11-ம் இடத்ததிபதி நட்பாட்சி யுச்சம்பெற்று பாக்கிய தனலாபகேந்திர திரிகோணங்களிலிருந்தால் லாபாதிபன் பாக்கியாதிபன் இவர்களிரு வர் மகாதிசையிலும் கீர்த்தியும் ஐஸ்வரியமும் அர்த்தலாபமும் வாக னம் முதலானவை யுண்டாம். பாக்கியாதிபதியும் லாபாதிபதியும் நட்பரா யுத்தமஸ்தானத்திலே கூடியிருந்தால் பாக்கியாதிபதி மகா திசை லாபாதிபதி மகாதிசை இந்த 2-லும் பிரியாத ஐசுவரியமும் அர்த்தலாபமும் உண்டாய் இவர்களிருந்த இராசி பாரியஸதானமா னல் பாரிய லாபமும் வாகனாதிகளுமுண்டாய் பூஸ்திதிகளுமுண்டாய் வாழ்குவன் எ-று. 2

இதுவுமது

தருக்கும்பாக்கியலாபாதிபர்த்தனந்
　　தனமிகுமிவர்தேசாதிபனுட
னிருக்கவுள்ளளவுந்தனபாக்கிய
　　மிவர்கணலோன்பதில்விடாவாகனஞ்
செருக்குந்தேகாதிபொன்வாகனாதியுந்
　　தேறினலுநன்மாறாதவாகனம்
பெருக்குஞ்சென்மிசேய்நாலாதிநாலுறப்
　　பிதுரின்பூமிபிள்ளைக்கிறைகாட்டுமே.

இ-ள். பாக்கியாதிபதியும் லாபாதிபதியும் நட்பாய் தனஸ்தா னத்திலிருந்தால் வெகு தனலாபமுண்டு. தேகராசியில் தான் தேகாதி பதியுடன் தான்கூடி நட்பாக நின்றால் தேகமிருக்குமட்டும் அர்த்த லாபமும் பவுஷ்பாக்கியமுமுண்டாம். தேகாதிபதி பாக்கியாதிபதி லா பாதிபதி இந்த மூன்றுபேரும் வாகனஸ்தானமான 4-ல் கூடியிருந்தா லும் 9-ற் கூடியிருந்தாலும் இந்த அதிபதிகளுடன் கூடியிருந்தாலும் பார்வையுண்டானாலும் இவன் தேகமுள்ளமட்டும் நரவாகனப்பிராப்தி யுண்டு. தேகாதிபதிக்கு குருநட்பாக வாகனஸ்தானத்தில் தான் அல் லது வாகனாதிபதி குருவுமாய் தேகாதிபதியுங்கூடி நட்பாய் வாகன ஸ்தானமான 4-ஆம் இராசியிலிருந்தால் பூரண நரவாகனப் பிராப்தி இலக்கினாதிபதியும புத்திரஸ்தானாதிபதியும் 4-ஆம் ராசியாதிபதியும் நட்பாய் 4-ஆம் ராசியிலிருந்தால் பிதுராச்சியம். அத்தனையும் இந் தப் பிள்ளையுள்ளமட்டும் அனுபவிக்குமென்று இறைவராகிய வீமே சர் கட்டளையிட்டருளியதாம் எ-று. 3

இதுவுமது

கூட்டுஞ்சேயாதிதந்தைபாக்கியத்தின்மேற்
கலந்திருந்தான்மகத்தாம்பிதாப்பொரு
ளூட்டுமைந்தர்தேகாதிபிதாப்பத
மொன்பதிலுறவாயுறநண்பரா
நாட்டிலாபாதியும்பாக்கியாதியு
நயந்திருக்கப்பிதாப்பொருள்கைக்கொளுங்
கூட்டும்பாக்கியலாபாதியுமுத்தமங்
குலவுமத்தனையெங்கோன்கொடுக்குமே.

இ-ள். புத்திரஸ்தானாதிபதி பிதுரு ஸ்தானமாகிய 9-ஆமிடம் பாக்கிய ஸ்தானத்திலிருந்தால் இந்தப் புத்திரனுக்கும் பிதாவுக்கும் அன்யோன்யமாக இருக்கும். லாபஸ்தானத்துக்கு கர்த்தனும் பாக்கியஸ்தானத்துக்கு கர்த்தனும் இந்த இருவரும் உத்தம ஸ்தானத்திலிருந்தால் பூர்வபாக்கியம் ஐஸ்வரியமுள்ளதெல்லாம் இந்தப் பிள்ளை அனுபவித்துக்கொண்டுவரும். இவனிட பாக்கிய ஸ்தானத்துக்கும் லாபஸ்தானத்துக்கும் கர்த்தரான இருவரும் லாபபாக்கிய கேந்திர திரிகோணங்களிலிருக்க அந்த இராசியாதிபதியும் உத்தம ஸ்தானங்களிலிருக்க இப்படியிருந்தால் பூர்வ பாக்கியத்தைப் பார்க்கிலும் ஐஸ்வரியம் எங்கோன் வீமேசரருளால் காண்பது எ-று. 4

இதுவுமது

கொடுக்கும்பொன்புகர்மான்மதிதேறியே
குலவுவான்குருதன்மசம்பன்னரா
நடுக்குமைந்தாதிலாபபாக்கியத்தி
னட்பாட்சியுச்சமாகிற்பிதாநண்ப
னெடுக்கும்லாபாதிபாக்கியாதிராசியு
மெக்குலமக்குலத்தாருதவுமே
தொடுக்கும்பாக்கியாதிலாபாதிருத்திரர்
தொடர்ந்துநல்கத்தருந்தொடுக்காடரே.

இ-ள். இவனிட பாக்கிய ஸ்தானத்துக்குக் கர்த்தன் குரு சுக்கிரன் புதன் மதி இவர்கள் வலிபெற்று அந்த ராசிகளிலே ஆட்சியாயிருந்தால் சற்குரு சேவையுந் தனபாக்கியமும் சகல பாக்கியமுமுண்டாம். பிதுரு பாக்கியமும் குருமாதுலம் இத்தனையும் சம்பூரணம், பிதுரு பாக்கியம் தனக்கு சித்திக்குமென்கிறதற்கு விபாம். பிதுரு இராசியான 5-ஆம் இராசியாதிபதி உத்தமனாக லாப பாக்கிய ஸ்தானங்களில் நட்பாட்சியுச்சம் பெற்றிருக்க அந்த அதிபதி இராசிகளில் கூடியிருந்தாலும் பிதுரு பாக்கியமுண்டு. பாக்கியாதி

பதியும் ப்பாக்கிய இராசியும் எந்த ஜாதி அவர்களால் பாக்கியம். இந்த பாக்கியாதிபதியுடன் கூடியிருக்கிற கிரகம் லாபாதிபதியுமாய் லாபாதி பதிக்கு ஸ்திரக்கிரகமாக இவர்களிருந்த இராசி உத்தம ஸ்தானமாக இந்த இராசியாதிபதியும் இந்தப்படி யிருந்தால் சூத்திரக்கிரக முச்ச மானுல் சூத்திரத்தினுலே இவனுக்குப் பாக்கியம் நல்கும் சொதடுக் காடர் எ-று. 5

## இதுவுமது

தொடர்ந்தபாக்கியலாபாதியினேடுபொன்
றய்யவுத்தமத்திலுறமன்னராற்
படர்ந்தபாக்கியத்தனலாபர்பாரியிற்
பாரியாதிநற்பாக்கியலாபத்துறத்
தொடர்ந்தவப்போதிடத்தோகைக்காகுமத்
தோகையாதிசுபன்கணவன்குடி
யடர்ந்தவுச்சமேசம்பத்தவனதே
யன்பர்தேனுவீமேசரளித்ததே.

இ-ள். பாக்கிய இராசியாகிய 9-ஆம் இராசியாதிபதியுடன் கூடி யிருந்த கிரகம் குருவாய் குரு இலாபாதிபதியுமாய் பிரபல லாபாதி பதிகள் பாரியஸ்தானத்திலிருக்கப் பாரியஸ்தானுதிபதி லாப பாக்கி யத்திலிருந்தால் இவனிட பாக்கியம் இவனுயுசுள்ளளவுஞ் சித்திக் கும். பாரியஸ்தானுதிபதி சுபனுமாய் இந்தப் பாரியஸ்தானுதிபதிக்கு இவன் தனஸ்தானம் உச்சராசியாய் அங்கே இந்த அதிபதியிருந்தால் இவனிட பாக்கியம் ஐசுவரியம். அர்த்தலாபமும் இந்தப் பாரிக்கு விருத்தி. இந்தப்படி இராசி 12-க்கும் அதிபதிகளுந் தேறியிருந் தால் தனலாப பூமிவாகனம் இப்படிக்கொத்த இடங்களில் சேர்ந்தி ருந்தாலும் இந்த அதிபதிகளுடன் கூடியிருந்தாலும் அவரவர் இராசி யிலே ஆட்சியா யிருந்தாலும் அவர்களுக்குத் தனப்பிராப்தி யுண் டென்று அன்பரிதயத் தேனுவாகிய வீமேசரளித்தது எ-று. 6

## இதுவுமது

அளிக்கும்பாக்கியலாபாதிதேகாதியு
மடர்ந்துகேந்திரத்தனலாபகோணமேற்
களிக்கும்போகசம்பன்னராயொன்பதிற்
கதிரவன்மதிகூடல்சம்பந்தத்தா
மிளைக்குஞ்செவ்வாய்ப்புவியிலாஞ்சேவுக
மிந்துமைந்தர்வாகனம்வித்தையிட்டுண்ணும்
வளர்க்கும்பொன்மதிமாபாக்கியம்புகர்
வத்திராலங்காரமன்னும்வீமேசரே.

இ-ள். பாக்கிய ஸ்தானாதிபதி லாபஸ்தானாதிபதி தேகாதிபதிகள் தனலாபகேந்திர திரிகோணங்களில் நிற்கில் போக சம்பன்னராயிருக்கும். 9-ஆமிடத்தில் இரவி மதி நிற்கில் ஐசுவரிய லாபமுண்டு குஜனாகில் சேவுகவிர்த்தி பூமிலாபமுண்டு. புதனாகில் வித்தை தனம் சுகம் பந்துபாக்கியமுமுண்டாய் இட்டுண்ணும். குருவாகில் ஐசுவரியம் புத்திரசுகமும் பாக்கிய சம்பத்துமுண்டு. சுக்கிரனாகில் பூமி வஸ்திராலங்காரமுண்டு. கோவர்த்தனம் பூமிலாபம் சமஸ்த பாக்கியமுமுண்டு, சனியாகில் கலகம் சோரதாசிகள் விர்த்தியுமாம் இராகு கேதுவாகில் இந்தப்படி அருளும் வீமேசர் எ-று. 7

## குருபலன் தர்மபலன்

வீமநாதரைப்போற்றநற்கோளக
மேவவுத்தமர்நோக்கவாரூடுறத்
தாமனுமொன்பதாமோரையாதியெச்
சாதியச்சாதியேகுருவாய்வரு
மேமமாதனமாச்சாதிக்கேயிடு
மிலங்குகர்மாதிநட்புற்றுநோக்கினு
நேமநால்வகைச்சாதிக்கோள்ராசியி
னிட்டையேசித்தியாமெனநிச்சியே.

இ-ள். வீமநாதர் தாளைப் போற்றுஞ் சுபக்கிரகம் சுபக்கிரக்ராசியிலிருந்தாலும் உத்தமாதிபதியுடன் கூடியிருந்தாலும் அவரிடப் பார்வையுண்டானாலும் சுபபலன், ஆதியிலே ஈனம், அந்தியத்திலே பிரபலமாம். இந்த தர்மஸ்தானகிரகம் எந்தசாதி அந்தச்சாதியேகுரு ஸ்தானம். 9-ஆமிடத்ததிபதியும் அதிலிருந்த கிரகமும் குருவானால் இந்த தேகி பிராமணன்கையி லுபதேசமும் வித்தையும் பிராமணர் முகாந்தரத்தில் வரும். சமஸ்த பாக்கியமுண்டு. சுக்கிரனானால் பிராமண குரு இவன் கையில் உபதேசமாகும். இப்படி எந்தக்கிரகமானாலும் அந்தக் கிரகத்தை அடுத்தசாதியே குருவுபதேசமும் அந்தச் சாதி மந்திரங்கள் இந்தக்கிரகம் தனலாபகேந்திர திரிகோணங்களிருந்தால் அந்த உபதேசவித்தை பலிக்கும். 6-8-12-லே அஸ்தமானமாயிருந்தால் பலியாது. இந்த தர்மஸ்தான கிரகம் குருவானால் பிராமணர்க்கே தானதர்மம் பண்ணிக்கொண்டிருக்கும். சுக்கிரனால் பிராமணர்க்குத் தர்ப்பணமும் ஆயுத அப்பியாசமுடையவனுமாய் இப்படி அந்த தர்மஸ்தானக்கிரகம் எந்தக் கிரகம் இராசியாச்சுது அந்தக் கிரகசாதி தர்மத்தில் நடக்கும் அந்தச் சாதி தர்மத்திலே தானதர்மம் பண்ணும் இந்தக் கிரகங்களாலே தர்மியென்கிறதும் வீமேசாருளாகக் கண்டு சொல்வது எ-று. 8

இதுவுமது

நிச்சயமொன்பதாதியோனின்றகோ
ணீசச்சத்துரிராசியிற்பாவராய்
மச்சர்பாபக்கிரகங்கள்கூடினு
மபக்குமாறெட்டிராதிலறங்கெடும்
பிச்சையுண்டினும்பாக்கியாதியாருடன்
பெரியராகுசனிகேதுசேயுறி
லச்சநோய்தரச்சோரரின்கோட்சொலு
மையர்சொல்லவயனூர்விடுத்ததே.

இ-ள். பாக்கியஸ்தானமான 9-ஆம் இராசியாதிபதியும் பாக்கிய காரனாகிய குருவும் பாக்கியஸ்தானத்திலிருந்த கிரகமும் இந்த 3-பேரும், நீசசத்துருக்களாப் பாபக்கிரகங்களாய் நீசசத்துரு இராசிகளிலிருக்கினும் இப்படிக்கொத்த கிரகங்களுடனே கூடியிருக்கினும் இவர்கள் பார்க்கினும் இவர்கள் இராசிகளில் நிற்கினும் 6-8-12-லிருந்தாலும் இந்த அதிபதிகளுடன் கூடியிருந்தாலும் இவர்கள் பார்வையுண்டானாலும் பாக்கியநஷ்டம், தனநஷ்டம், குருநஷ்டம் இவர்களிருந்த தனாதிபதியும் இப்படியிருந்தால் அந்த தேகி நிர்ப்பாக்கியனாய் இரந்துண்ணும் 9-ம் 9-ஆமிடத்ததிபதிக் கிரகமும் இரவியுடன் கூடியிருந்தாலும் சனி இராகு கேது குஜன் கூடியிருந்தாலும் இந்த தேகி அச்சமும் நோயும் சோரதாசனுமாய்க் கோட்சொல்லுமென்று ஐயர் வீமேசுரர் இருவினைக்கீடாகக் கட்டளையிட்ட பிரமன் விதித்தது எ-று. 9

ஒன்பதாம்பாவம் முற்றிற்று.

---

## பத்தாம்பாவம்

### சத்கருமம்

விடுத்தபத்தாமிராசிப்பலந்திகழ்
மிக்காரகங்கர்மம்பவுடத்துவ
மெடுத்தகீர்த்திப்பிரதாபநிருபர்த
மிலக்குதிவசிற்கர்மாதிபொன்சனி
நடுத்துகர்மத்துறுகோணட்புச்சமாய்
நல்லராய்ச்சுபரோடுறநோக்கினு
மடுத்தலாபத்தனகேந்திரகோணமு
மணுகத்தர்மியருட்கடன்மைந்தனே.

இ-ள். 10-ம் இராசிக்கு இராகஸ்தானம் கர்மஸ்தானம் பவிஷ்யுஸ்தானம் கிரகஸ்தானம் நிருபஸ்தானம் என்றறிக. இந்த ஸ்தானதி

பதி சத்கர்மாதி, குரு துர்க்கர்மாதி சனியென்றறிக, இந்த கர்மஸ்தானத்திலிருந்த கிரகம் இவர்களுக்கு நட்பாட்சி யுச்சம்பெற்று எவ்வனராய் சுபக்கிரகங்களாயிருக்கிலும் அல்லது இப்படிக்கொத்த கிரகங்களுடன் கூடியிருந்தாலும் பார்வையுண்டானாலும் தனலாபகேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும் இந்தத் தேகி சத்கர்மமும் பிரதாபமும் பவிஷ்யும் கீர்த்தியுமுள்ளவனும் அருட்கடலாகிய வீமெசுரர்க்கினியவனும் எ-று. 1

## சத்கரும விகற்பம்

மந்தர்பொன்கர்மாதியிந்தமூவரு
மருவுமோரைமன்னல்லார்பத்தேறினு
மிந்தகர்மாதிபத்துறயாகமா
யிறைபுகர்தர்மவுச்சாகில்வெகு
மந்திரிபுகர்நோக்கிலாபாதியை
பருவநற்கோட்களத்தனையாகுமா
லந்தணன்மறையுற்றுரையாதியு
மந்நெறியுற்சேயாகம்பண்ணுமே.

இ-ள். கர்மஸ்தான சம்பந்தக்கிரகங்கள் சனி குரு கர்மஸ்தானுதிபதி இந்த மூவரும் இந்த இராசியாதிபதிக் கிரகங்கள் நட்பாய் வலிபெற்றிருந்தால் சத்கருமங்களும் எக்யாதிகளும்பண்ணும். வெகு பிரதாபம் சித்திக்கும். குரு சுக்கிராள் இப்படிப் பார்வையுண்டானாலும் எக்யாதி கருமங்கள் சிததிக்கும். குரு சுக்கிராள் பலவான்களாயுத்தமஸ்தானத்திலிருந்தால் இவர்களிருந்த இராசியாதிபதியும் அப்படியே பெலஷ்டனுயிருந்தால் அவர்களுடனெத்தனை சுபக்கிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனை எக்கியாதிகளும் இந்தப் பிள்ளைக்குச் சித்திக்கும் எ-று. 2

## சீவன பலன்

பண்ணுங்கர்மாதிகர்மசம்மந்தரும்
பரியுநட்பாய்ச்சுபங்கோணலாஞ்சீவன்
கண்ணதாகிற்பிதா தனஞ்சந்திரன்
கருதுதாய்தனஞ்சேய்சத்துருத்தன
நண்ணுமான்மித்துருத்தனம்வேந்தர்பொன்
னற்சகோதரர்பாரிநாரித்தன
மெண்ணுங்காரியிருக்கநன்னுகமே
யிருக்கவீணர்தனத்தாற்சீவிக்குமே.

இ-ள். கர்மஸ்தானுதிபதியும் கர்மஸ்தானக் கிரகங்களும் சுபராய் தேகிக்கு நட்பனுகிய இரவியாகில் பிதுர்தன பிராப்தி. இரவி

ஈனனைப் பிதுர்ஸ்தானத்திலிருந்தாலும் கர்மாதிபதிமாதரு பிதருஸ் தானத்திலிருந்தாலும் மாதுரு தனப்பிராப்தி கர்மஸ்தானத்திலே குஜனிருந்தாலும் குஜன் கர்மஸ்தானாதிபதியாயினும் கர்மேசனுடன் கூடியிருக்கினும் அவன் பார்க்கினும் கர்மாதிபதி குஜனுடைய ஆட்சி இராசியிலிருக்கினும் இவனுக்கு சத்துரு தனப்பிராப்தி. புதனாகில் மித்துரு தனப்பிராப்தி. குருவாகில் இராசாக்கள் தனமும் சகோதரர் தனப்பிராப்தியும், சுக்கிரனாகில் ஸ்திரீ தனப்பிராப்தி சனியாகில் அன்னிய தனப்பிரப்தி. இராகு கேதுக்களாகில் ஈனசாதி தனப் பிராப்தி எ-று. 3

இதுவுமது

தாலமெண்கருமாதிகர்மத்துறத்
தர்மர்கூடியிருக்கத்தனார்ச்சிதன்
மேலுமெத்தனைகோட்டேறிமேவினும்
வெகுதனபதிகர்மாதியுத்தமம்
வாலராகில்வருந்தாமற்பொன்வரு
மகிழ்பிதாவாதிமூன்றிற்றேறிப்புகிற்
சாலவேண்டிற்சகோதரரேதருந்
தர்மசற்குருத்தாளைவருந்துமே.

இ-ள். கர்மாதிபதி கர்மஸ்தானத்திலிருக்க அவனுடன் சுபக் கிரகம்கூடி பெலஷ்டராயிருந்தால் அந்தக் கர்மாதிபனுக்குள்ள அர்ச் சுனம் இவனுக்கு வெகுவிதமாய் வந்து சித்திக்கும். அந்தக் கர்மஸ் தானக் கிரகங் கர்மேசனுடன்கூடி சென்மலக்கினத்தி லிருந்தாலும் இலக்கினாதிபனுடனே கூடினும் இந்தக் கர்மாதிபன் இலக்கனாதிபனை பார்க்கினும் அந்தக் கிரகத்துக்குச்சொன்ன அர்ச்சுனங்களெல்லாம் வந்து சித்திக்கும். உத்தமஸ்தானத்தி லிருக்கில் பிரயாசமில்லாமல் வெகுதனம் வந்து சித்திக்கும். கர்மாதி தனாதிபனுடனே கூடினும் இந்தக் கர்மாதிபன் எந்த கிரகம் அவன் பிரபலனானால் அந்தக்கிரகத் துடனே ஆர்ச்சனத்தில் வெகுதனங்கூடும். அவனுத்தம ஸ்தானத்தி லிருந்தால் பிரயாசமின்றி வெகுதனங்கூடும். இந்தக் கர்மாதிபன் இந்தப் பிராதுருக்ஷேத்திராதிகளும் சேர்ந்தால் கர்மாதிபனுக்கு எது அர்ச்சனம் அந்த அர்ச்சுனத்தை பிராதுரு இவனுக்குத் தேடிக் கொடுக்கும். இவன் தர்ம சற்குருவாகிய வீமேசர்தாளை வருந்தவல்ல வன் எ-று. 4

இதுவுமது

வருந்துபத்தாதிநாலுறத்தேறிடில்
வாகனம்வித்தைபோசனமுஞ்சுக

மிருந்தநாலதிகர்ம்மாதிமித்திர
ரிசைந்தநற்கோட்கடேறியேநிற்கினும்
பொருந்துமாதாவுறவால்வெகுபொருள்
போதுநிட்சேபங்கொண்டுசீவித்திடும்
திரும்புகாமாதிநாலாதியுச்சமேற்
செருக்கினிட்சேபம்வந்துபாவிக்குமே.

இ-ள். கர்மாதிபன் 4-ஆமிராசியிலே தேறிநிற்கில் வாகனமும் ஞானமும் கல்வியும் போசன சவுபாக்கியமுண்டாம். அந்தநேசமித்துருவுஞ் சுபனுமானால் மாதாசம்பந்த வகையிலே சுயார்ச்சிதஞ் சித்திக்கும். நிக்ஷேபமுஞ் சித்திக்கும். பந்துகளாலே தனமும் வந்து சித்திக்கும். வித்தையினால் வெகுதனங்கூடிச் சீவிக்கும் கர்மாதிபதியும் மாதுராதிபதியுங்கூடி உத்தமஸ்தானத்தில் உச்சமாய்த் தேறிநிற்கில் நிதிநிட்சேபம் பாவிக்க வல்லவராம் எ-று. 5

இதுவுமது

விக்கினதீர்த்தருள்வார்விளம்புநூல்
விளங்குகர்மாதிபிதுர்புத்ரரோரையில்
தக்கநற்கிரகந்தேறியிருக்கினுந்
தந்தைபுத்திரர்சுபாவிகமுந்தரு
மிக்ககர்மேசனாறிலாறுதிபன்
மேவநீர்க்கோடனம்வருஞாதியாற்
புக்குநற்கோள்கர்மாதியேழாதிபாற்
பொருந்துநட்புச்சும்பொன்வரும்போதவே.

இ-ள். சர்வ விக்கினமுந் தீர்த்தருளும் சிவன்விரும்பு நூல்கள் பண்ணப்பட்ட கர்மாதிபன் பிதுர் புத்திரஸ்தானமாகிய 5-ஆம் இராசியில் சுபனாய் நட்பாட்சியுச்சம்பெற்றுப் பிரபலனாயிருந்தால் பிதுர் சுயார்ச்சிதம் புத்திரன் சுயார்ச்சிதம் தன் புத்தியினால் சுயார்ச்சுனம் இவைகள் வந்து சேரும். கர்மாதிபதியும் புத்திராதிபதியும் நட்பாய் உத்தமஸ்தானத்தி லிருந்தால் பிரயாசையின்றித் தேடிக்கொடுக்கும். இந்த கர்மாதிபன் 6-ஆமிடத்தில் நட்பாட்சியுச்சம் பெற்று பிரபலனாய்க் கூடினும் அந்த ஆறாமிராசியாதிபதியுடன் இப்படிக்கூடியிருப்பினும் ஞாதிசத்துருக்களால் தனம் வந்துசேரும். கர்மாதிபன் பாரியஸ்தானத்தில் சேர அந்தபாரியாதிபதியும் இவனும் நட்பாய்ச் சுபருமாய் பிரபலராய் நட்பாட்சி யுச்சம்பெற்று உத்தமஸ்தானத்தில் சேர்ந்திருந்தால் பாரியின் சம்பந்தத்தில் தனம் வந்து சித்திக்கும் எ-று. 6

இதுவுமது

போந்தகர்மாதியொன்பதிற்றேறியே
புக்கநல்லர்பாக்கியாதியைக்கூடினு
மேந்துபொன்குருத்தர்மங்களால்வரு
மிசையுங்கர்மாதிபாக்கியகேந்திரமுற
வாய்ந்தசெல்வம்பிரதாபநற்கீர்த்தியும்
வருத்தமின்றிவருந்தனபோகமுஞ்
சார்ந்தசூரியசிந்துசம்பந்தரேற்
றறுக்குமன்னராற்றுனுவுக்கான்பரே.

இ-ள். கர்மாதிபன் பாக்கியஸ்தானமாகிய 9-ஆமிராசியிலே நட்ப்பாட்சி யுச்சம்பெற்றுத் தேறுநிற்கினும் இந்த 9-ஆமிராசியாதிபனுடன் இப்படிக்கூடி உத்தமஸ்தானத்திலிருந்தால் பிரயாசையில்லாமல் தர்மத்தினுலும் குருதலத்தினுலும் இந்த அதிபதிக்குச் சொன்ன அர்ச்சுன்னங்கள் பிரயாசையின்றிச் சித்திக்கும். கர்மாதிபதி கர்மஸ்தானத்தில் சுபனுமாய்ப் பிரபலனுமாயிருந்தால் எக்கியாதி கர்மங்கள் பண்ணிவைத்துத் தனந்தேடும், இவன் தனலாபகேந்திரத்தில் உத்தமனுக பலம் பெற்றிருந்தால் பிரயாசமில்லாத அர்த்தலாபமும் ஐஸ்வரியமும் பிரதாபமும் கீர்த்தியினுலும் தனம் வந்து சித்திக்கும். கர்மாதிபன் வியஸ்தானத்தில் சேர்ந்திருந்தால் வியாதிபதியும் கர்மாதிபதியும் பிரபலருமாய்ச்சுபமாயிருந்தால் பிரயாசமில்லாமல்தேடிச் சத்கருமங்களில் செலவழிக்கும் கர்மேசன் இரவிமதியுடன் கூடி அவர்களாட்சி இராசிகளிருந்தாலும் அவர்கள் பார்வையுண்டானுலும் இவன் பட்டாபிஷேகமானவனைச் சேர்ந்து அவர்களாற் சீவித்துத் தானுவாகிய வீமேசர்க்கன்பராம் எ-று. 7

இதுவுமது

தானுமேனிசேய்சம்மந்தமாயுறத்
தருக்குஞ்சேனுபதியாற்புதனகம்
பேணுமன்னர்பெண்ணுங்குருத்தேவராற்
பிராமணஞானவித்தைப்பிரதானியாற்
பூணுங்கோவினுற்புத்திரசம்பத்துளான்
புகரின்சம்மந்தம் பண்ணியப்பெண்களா
ணுனுகோவசுவமங்கிசங்கெசம்
ரத்தினம்பொன்பிரதானியாலாளுமே.

இ-ள் கர்மாதிபன் குஜன் சம்பந்தத்துடன் கூடியிருந்தால் சேனுதிபதியினுற் சீவிக்கும், புதன் சம்பந்தஞ் சேர்ந்தால் குமாரத்தி

களாலும் ஸ்திரீ ஜெனங்களாலும் கணிதவித்தை லிபிகளாலே சீவிக்கும் குருசம்பந்தமானால் தெய்வங்களாலும் பிராமணராலும் பிரம வித்தையினாலும் பிரதானிபாலுங் கோவினாலும் புத்திரர்களாலும் வெகு தனதான்யம், சித்திக்கும். சுக்கிரன் சம்பந்தமானால் பாக்கிய ஸ்திரீகளாலும் கோவினாலும் அஸ்வ கெஜகனக ரத்னமாணிக்கக்கிரய விக்கிரயங்களினாலும் பிரதானிகளாலும் சீவிக்கும் எ-று. 8

இதுவுமது

நீடுகர்மாதிமந்தர்சம்பந்தமாய்
 நிற்கவீனத்தொழில்சூத்திரர்களாற்
சாடுபுக்கிப்புலைச்சிலம்பங்கொளும்
 கர்மவித்தைபோதித்துச்சீவிக்குமே
நாடுசேய்ராகுகேதுகர்மாதியை
 நயக்கக்கூடப்பவத்துறவேகொடும்
பாடலீனத்தொழிற்கர்மபாக்கியர்
 பரவுமந்தத்திசையிற்பலிக்குமே.

இ-ள். கர்ம ஸ்தானாதிபதி சனிசம்பந்தமாகில் சூத்திராண்டையில் சேவித்து வனவிருட்சங்களுக்குள்ளே இசை பண்ணிச் சிலம்பம் பழகிவித்துப் பாபகர்மங்களைப் போதித்துச் சோரவிருத்தியினாலே சீவிக்கும். குசன இராகுகேது கர்மாதிபனோடு கூடியிருந்தாலும் கர்மஸ்தானத்திலிருந்தாலும் கொடும்பாடுள்ளவனுமாய்க் கொடுங் கிருஷி செய்து அங்கினி வித்தையினாலும் விஷப்பிரயோகங்களினாலும் சர்வாங்க வித்தையினாலும் மாய யோகத்தினாலும் சீவிக்கும். இதுவெல்லாம் பாக்கியாதிபன் லாபாதிபன் கர்மாதிபன் இவர்கள் மகாதிசையிலிருந்தக் கர்மாதிபன் அந்தத்திசையிற் கூடி நின்றவர்கள் திசையிலாகிலுஞ் சித்திக்கும் எ-று. 9

இதுவுமது

பலிக்குமீசர்தாளன்பருக்கேயினி
 பாக்கியனத்திசைபத்திலிருந்தகோ
டிலக்குஞ்சேத்திரநாலாறுநாலாதிபன்
 றுய்யபத்துறப்பத்தினனாலுற
விலக்குஞ்சேய்சேந்திரந்திரிசோணமே
 யிலங்குதுபூமியிலேயதுநிட்சேப
நிலக்சொளகாமாதிலாபத்திலாபமே
 னீடிநிற்கவுமார்ச்சிதநேருமே.

இ-ள். வீமேசர்தாளைத் தொழுதெழு மன்பர்க்குப் பலிக்கும் பாக்கியாதினிட மகாதிசையில் கர்மஸ்தானத்தில் இருந்த் கிரகத்தி

னிட க்ஷேத்திரசம்பந்தமுமாகியது. 4-ஆம் இடபானால் அந்த 4-ஆம் இராசியாதிபதி கர்மஸ்தானத்திலிருக்ககர்மஸ்தானாதிபதி 4-ம் இடத்தில் குஜனிட ஆட்சி இராசிகளிலிருந்தால் அந்தந்த ஸ்தானத்துக்குத் திரிகோண இராசி நிட்சேபஞ் சித்திக்குமென்று பிரபலத்துக்கிடாய்ச்சொல்லக் கர்மாதி பிரபலனுப்லாபஸ்தானத்திலிருக்க அந்த லாபாதிபதி லாபஸ்தானத்தில் நட்பாயிருந்தால் இவனுக்கிரண்டு ஸ்தானக்கிரகங்கள் அர்ச்சுனங்களுஞ் சித்திக்கும் எ-று. 10

இதுவுமது

நேருங்கர்மலாபாதிதேசாதிபு
நிற்கக்கர்மிலாபத்திற்குருவுடன்
சாருகோளெத்தனையொன்றுகோடியாய்த்
தக்கவார்ச்சுனமெல்லாந்தருவரே
பாருஞ்சூத்திரர்பாம்புகள்பத்துறிற்
பலிக்கும்பாவார்ச்சுனம்பதினென்றுமூன்
றுறுமீராறிற்பாவர்துர்க்கர்மமே
யணுகும்வீமேசுரருக்காகார்களே.

இ-ள். கர்மஸ்தானத்தில் கர்மாதிபனும் லாபாதிபனும் தேசாதிபனும் நிற்கவும் கர்மலாபங்களில் குருகூடி நிற்கில் இவனுடன் எத்தனைக் கிரகங் கூடியிருந்ததோ அந்த கிரகத்துக்கு ஆர்ச்சுனங்கள் ஒன்று கோடியாய்ச் சித்திக்கும் அந்தக் கர்மஸ்தானத்தில் சூத்திரக் கிரகங்களும் இராகு கேதுவும் தேசாதிபதியும் கூடியிருந்தால் அந்த ஆர்ச்சுனங்களும் அந்தந்தப் பாபங்களும் சித்திக்கும். இந்தக் கிரகங்கள் க்ஷீணஸ்தமான நீசராயிருந்தால் பாவத்தை வர்த்திப்பார்கள். 11-3-6-ஆம் இடம் பாபக் கிரகமிருந்தால் துர் கர்மங்களைச்செய்து வீமேசர்க்காளாகாமல் நரகத்திற் சேதுவாவர் எ-று. 11

இதுவுமது

ஆனகர்மசம்மந்தரங்குற்றதோ
ளதமரோடுறநோக்கவவருடைத்
தானமேயுறவாறெட்டீராறினுந்
தக்கமுடம்பகைநீசத்தேரிற்றீங்
கீனபுத்திசங்கற்பவுதாசீன
னிடும்பன்சத்துருவுக்கேவல்செய்தனுஞ்
சேனைகர்மாதியாறெட்டீராறினுந்
தேறிலீசன்சிறிதுபொன்சேருமே.

இ-ள். கர்மஸ்தான சம்பந்தக் கிரகங்களும் கர்ம ஸ்தானத்திலிருந்த கிரகங்களும் அஸ்தயான நீசக்ஷீணராய் சத்துரு பாபார

யிருக்கினும் இப்படிப்பட்ட கிரகங்களுடன் கூடிநிற்கினும் இவர்கள் பார்க்கினும் இவர்கள் 6-8-12-ல் மூட நீசசத்துரு க்ஷீணராயிருந் தால் இந்த தேகிக்கு துர்க்கருமங்கள் சித்திக்கும். இவன் சத்கருமங் களை உதாசீனம்பண்ணுவன், இடும்பனுயிருப்பன். க்ஷீணபலமுடைய வன். சத்துருக்களுக்கு ஏவல் செய்துண்ணும். துர்க்கருமஞ் சித்திக் கும். கரும்மஸ்தானுதிபதி 6-8-12-ல் தேறிநிற்கில் அவர்களுக்குச் சொன்ன அர்ச்சுனங்கள் வீமேசுரருளால் சிறிது சேரும் எ-று. 12

இதுவுமது

சேர்கர்மாதிபன்மூடநீசத்துறத்
  தெரித்திரந்தாய்பிதாவாதிபாவராய்
மூர்க்கராயங்குறவிபசாரியாய்
  முபன்றிடும்பிதாப்பாரிகர்மாதியும்
பார்க்கவாறெட்டீராறுநிர்ப்பாக்கியர்
  பாவகர்மியாறெட்டுப்பன்னிரெண்டுற
வேர்க்கவீன்றவர்க்காளாய்ப்பொன்றேடியே
  யெந்தையன்பர்க்கிடர்வார்விதியிதே.

இ-ள். கர்மஸ்தானுதிபதி க்ஷீணமூட நீசமாயிருந்தால் இந்தத் தேகி தரித்திரவானுயிருந்துண்ணும் மாதுரு பிதுரு கிரகங்கள் பாபி களாய் இராகு கேதுவுமாய் அந்த ஸ்தானத்தில் நிற்கில் விபசாரத் தில் தேடிக்கொடுக்கும். பத்தாஸ்தானமாகிய 9-ஆம் இராசியாதிபதி யும் பாரியாதிபதியும் கர்மாதிபதியும் இந்த மூவரும் 6-8-12-ல் சேர்ந் திருந்தால் இவன் நியாயத்தில் உடைமைதேடும். இவர்களிருந்த இராசியாதிபதிக் கிரகங்களும் இப்படியிருந்தால் இவன் நிர்ப்பாக்கிய னென்று சொல்லப்படும். கர்மாதிபன் க்ஷீண மூட நீசமாய் 6-8-12-ல் இருந்தால் க்ஷீணனுக யிருந்து ஈனத்தொழிலினுல் சில தனந்தேடிச் சீவித்து எந்தையாகிய வீமேசர் அன்பருக்கிடர்செய்து நரகத்திற் சேதுவாய்ப் போவன் எ-று. 13

சீவனகாலம்

விதித்தபொன்புகர்கர்மலாபாதிகள்
  வெய்யநீசம்பகைமூடத்திலுறப்
பதித்தயாகம்பண்ணுர்கள்கர்மாதிபர்
  பாவராய்ப்பகைநீசராய்ப்பார்க்கினுங்
கொதித்தவீனத்தொழிலாற்சீவித்திடுங்
  கொடியர்பன்னென்றுமூன்றறத்தீயர்வாழ்
கதித்தமாதிசையிற்சுபர்நீயருங்
  காட்டுநன்மைதீமைக்கஞ்சைகூடியே.

இ-ள். குரு சுக்கிரன் கர்மஸ்தானாதிபதி லாபஸ்தானாதிபதி பாவாய்ப் பொல்லாத ஸ்தானங்களிலிருந்தாலும் இந்தக்கர்மஸ்தானத்தை பார்க்கினும் துர்க்கருமங்களுமுண்டாய் சூத்திர சம்பந்தத்தினிங்கிசைபண்ணி சனவிர்த்தியினால் சீவிக்கும் சுபக்கிரகங்கள் உத்தமஸ்தானத்தி லிருந்தாலும் பாபக்கிரகங்கள் 3-6-11-ல் இருக்க இந்தப் பாபக்கிரகங்களுக்குப் பாபார்ச்சுனங்கள் என்னவுண்டோ அவைகளெல்லாம் பிரபலனிட மகாதிசையில் காட்டும். பொல்லாத க்ஷேத்திரங்களிலிருந்தவன் திசையில் பொசிக்கிறபோது பலன்களை மத்திபமாசக்காட்டும். மித்துரு திசைக்குள்ளே அவனிட அந்தரத்தில் ஒன்று முக்காலாய்ப் பலன்காட்டும். சத்துருக் கிரக க்ஷேத்திரத்தில் அஸ்தமான க்ஷீணமாயிருந்த கிரகத்தின் அந்திர திசையில் அற்ப பலனைக் காட்டும். மகாதிசைக் கிரகமும் அந்திரதிசைக் கிரகமும் இரண்டுபேரும் பாபக்கிரகமுமாய் சத்துருக்களாய்ப் பொல்லாத ஸ்தானத்தில் கூடியிருந்தால் தன்னிட திசையில் நிட்பலன் காட்டும் தானிருந்த ஸ்தானத்துக்கு உத்தம ஸ்தானத்திலிருந்தால் மத்திபபலன் 6-8-12-ல் இருந்தால் வியாதியால் பீடிக்கும். சத்துருக்களாலேயாகிலும் பீடிக்குமென்று கங்கையைமுடிசூடிய வீமேசருளால் காண்பது.

பத்தாம்பாவம் முற்றிற்று.

---

## பதினோரும் பாவம்

### இலாபபலன்

கங்கைசூடியர்கண்லாபகர்த்தருங்
    கனத்தலாபாதிநட்பாட்சியுச்சராய்த்
துங்கள்சோடானகேந்திரபாக்கியந்
    தரணியாள்விக்குமேயொன்றுகோடியா
யிங்கிதங்கோளிருக்கினும்காரக
    மிலக்கினுங்கோடிசையிலெல்லாந்தருஞ்
செங்கதிர்லாபராகவளர்பிறைத்
    தேறிநோக்கத்தெசாதிபராகுமே.

இ-ள். கங்கைசூடிய வீமேசர்கண்களாகிய இரவிமதிகள் லாபாதிக்கிரகங்களென்றுபெயர். இவர்களும் இந்த லாபஸ்தானத்திலிருந்த கிரகமும் லாபஸ்தானாதிபதியும் நட்பாட்சி யுச்சம்பெற்று பெலஷ்டராய் உத்தமஸ்தானங்களிலிருக்க அல்லது உத்தமஸ்தான கிரகங்களுடன் கூடியிருக்கினும் இவர்கள் பார்க்கினும் இவர்களிருந்த இராசியாதிபதிக் கிரகங்களும் தனலாபகேந்திரத் திரிகோணங்களில் இருந்

தால் இந்த தேகிக்கு ஆயுசும் ஐஸ்வரியமும் வெகு இராச்சியமுமுண்டாகும். கிருஷிஸ்தானாதிபதி 3-மிராசியிலே நிற்கினும் 3-மிராசியாதிபதியுடன் கூடி நட்பனாயிருந்தால் இந்ததேகிக்குப் பிராதுரு லாபமுண்டு. ஐஸ்வரியமுண்டாய் எங்கோன் வீமேசர்க்காளாய் போட்சத்துக்கினியவராம் எ-று. 1

இதுவுமது

தேசிகன்முடிப்பூலாபர்பொன்புகர்
தேறிக்கூடநோக்கப்பெருஞ்செல்வமா
நேசதனலாபநற்கோளக்கோளதி
னிற்கநட்பர்நற்கோடேறிநோக்கினும்
பூசகன்வெகுபோகசம்பன்னராம்
பூமிலாபியுச்சம்முறப்பூணுமே
வாசகன்லாபியாட்சியின்மாதன
மற்றநட்புமுக்கால்வாசிமன்னுமே.

இ-ள். தேசிகராகிய வீமேசர் முடிக்கப்பட்ட மதியுடன் குரு சுக்கிரன் லாபாதியாய்க் கூடியிருக்கினும் இவர்கள் பார்க்கினும் வெகு ஐஸ்வரியமும் தனதான்னியமும் வஸ்திரலாபமுஞ் சிவபூசையுமாய் வாகன முதலாகிய வஸ்து லாபமுஞ் சம்பூர்ணமாக வுண்டு லாபாதிப னெந்தக் கிரகமோ அந்தக் கிரகத்தையாதல் தனலாபஸ்தானத்தை யாதல் சுபக்கிரகம் பார்க்கினும் நிற்கினும் உத்தம பலன் லாபஸ்தானக் கிரகம் உச்சஸ்தானமானால் முக்கால்வரிசை பலன் கொடுக்கும் எ-று. 2

இதுவுமது

மன்னும்லாபிதேகாதியைத்தேகியை
மகிழ்ந்துகூடத்தனபூமிலாபமு
முன்னுசந்தோடசம்பூரணாயுசு
முற்றலாபாதிபாக்கியநட்புச்சரேற்
பொன்னிலாபம்வெகுவாமிலாபியே
புக்சமூன்றினட்புச்சமாய்த்தேரிடத்
தன்னுடனபிறப்பேபெரிதாமுறத்
தழைக்குமெங்கோனடிமைத்திறங்களே.

இ-ள். இலாபாதிபதி நட்பனாகத் தேக லக்கினத்திலாதல் தேகாதியுடனாதல் கூடி நட்பனாயிருந்தால் இந்த தேகி ஐசுவரியமும் அர்த்தலாபமும் தேகபுஷ்டியுங் காந்தியும் சந்தோஷமும் பூர்ணாயுசுடையவனாய் இருப்பன். இந்த லாபாதிபதி மித்துருவாய் தனஸ்தானத்தில் தான் தனஸ்தானாதிபதியுடன் தான்கூடி நட்பனாயிருந்தால் தனலாப

முந் சௌபாக்கியமும் வெகு சம்பத்துமுண்டு. லாபாதிபதி நட்பாட்சியுச்சமாய் பிராதுருஸ்தானமாகிய 3-ஆம் இராயில் நிற்கினும் 3-ஆம் இராசியாதிபதியுடன்கூடி நட்பனாயிருந்தால் இந்ததேகிக்குப் பிராதுருலாபமும் ஐசுவரியமு முண்டாய் எங்கோன் வீமேசர்க்களாய் மோட்சத்துக் கினியவராம் எ-று. 3

இதுவுமது

ஏறுமூன்றதிலாபாதிதேறியம்
இருக்கப்பிராதுருவால்வரும்லாபமே
வீறுதேசாதிதேறலாபாதிபன்
மேவமூன்றின்மூன்றதிசோத்தனுக்
கூறுபோகிபொருட்டேபோசித்திடுங்
குலவுதேகிலாபாதியைமூன்றற
வாறுமூன்றதிபனிலனுக்கிடு
மவர்கட்கீசனளித்தக்குறிப்பிதே.

இ-ள். பிராதுருஸ்தானாதிபதியும் லாபாதிபதியும்தேறி நட்பாராய்ப் பிராதுருஸ்தானத்திலிருக்கில் பிராதுருலாபமுண்டு தேகாதிபதி பிரபலனாயிருக்க தேகியிட லாபாதிபதி பிராதுருஸ்தானத்திலிருக்கப் பிராதுராதிபதி க்ஷீணராயிருக்க இந்த தேகியிட தனத்தை இந்தப்பிராதுரு பொசிக்கும் இனிப் பிதுராதிபதி பிரபலனாய் தேகாதிபதி க்ஷீணனாயிருக்க தேகியிட லாபாதிபதி பிராதுஸ்தானத்திலிருந்தால் இந்தப் பிராதுரு தனத்தை இவன் பொசிக்குமென்று சர்வேசுரனாகிய வீமேசுரமூர்த்தி அவரவாக கமைத்தனர் எ-று. 4

இதுவுமது

குறித்தலாபாதிமூன்றிலிருந்துறக்
குணசகோதரர்வாகனவித்தைதீ
டெறிததலாபாதியெங்கணிருக்கினுந்
தேவிநின்றுரையாதிடும்பொன்றரும்
பறிக்கும்லாபர்பகையினிற்றேறிடப்
பகைமன்னீணராகிற்பலனிட்பலன்
சிறக்கவீயுமிலாபிதனமுறத்
தேகிக்காயுருதேவன்செலுத்துமே.

இ-ள். லாபாதிபன் பிராதுருஸ்தானம் பூர்விஸ்தானங்களில் மித்திரனாயிருக்கினும் அல்லது 4-ஆம் இராசியில் இந்தப்பதி இவனுக்கு நட்பனாயிருந்தால் 1-மிடத் ததிபதியுடன் கூடியிருக்கினும் அல்லது உத்தமஸ்தானங்களி லிருக்கினும் உத்தமஸ்தானாதிபதிக் கிரகங்களுடன் கூடி பிரபலனாயிருக்கினும் இவனிட சகோதரர்க்கு வாகன சௌக்கியமும் வித்தையும் புத்தியும் சம்பூர்ணமாகவுண்டு. இந்த லாபாதிபன் பிரபலனா யிருக்கவேணும். இந்த லாபாதிபன் எங்

தெந்த ஸ்தானங்களிருந்தான் அந்தந்த ஸ்தானத்திற் கடுத்தபேர் ஐசுவரியமும் அர்த்தலாபமும் இந்த ஸ்தாஞதிபதிக்குக் கொடுக்கும் லாபாதிபன் சத்துருஸ்தானம் சேது பிரபலனுயிருக்க சத்துரு ஸ்தாஞதிபன் பலக்ஷீணனுமாயிருந்தால் அந்தச் சத்துருதனம் இந்த தேகாதிபதிக்குச் சேரும். லாபாதிபன் பகை நீசக்ஷீணனுப் சத்துரு ஸ்தானத்திலிருக்க இந்த தேகியின் ஐசுவரியமும் அர்த்தலாபமுஞ் சத்துருவுக்கேசேரும். இந்த லாபாதிபன் தனஸ்தானஞ் சேர்ந்தால் இந்த தேகிக்கு சர்வேசுரனுகிய வீமநாதர் தீர்க்காயுசு கொடுப்பார்.

இதுவுமது

செலுத்துந்தேகாதின்பதினொன்றுறத்
தேறுநட்புறிற்றேகசவுக்கியம
பலிக்குமுன்னுள்ளவந்தத்தாஞதிபன்
பரிந்திலாபத்துறத்தனவான்பிதா
நிலத்தன்லாபத்துறலாபியொன்பதி
னிற்கத்தந்தையைப்பார்க்கத்தனுதிப
னிலைக்கொள்புத்திராதிலாபத்திற்றேறினு
நீடுமைந்தர்வீமேசருரைக்குமே.

இ-ள். தேகாதிபன் லாபஸ்தானத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்று நிற்கில் தேகசவுக்கியமும தேககாந்தியும் ஐஸ்வரியமும் இவனுள்ளமட்டுமுண்டாய் வாழும் தனஸ்தாஞதிபதி லாபஸ்தானத்தில் நட்பாட்சியுச்சம் பெற்று நிற்கில் வெகுதனம் தேடும். இந்த லாபாதிபதி பிதுருஸ்தானமாகிய 9-ஆமிடஞ் சேர்ந்தால் இவன் பிதாத்தேடின தனத்தைப்பார்க்கினும் அதிகமாகத் தேடும். இவன் புத்திராதிகளுக்கும் இவன் ஐஸ்வரியமும் அர்த்தலாபமுமுண்டு. இந்த புத்திரஸ்தாஞதிபதி லாபஸ்தானத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்றுச் சேரில் வீமேசர் கிருபையால் வெகு புத்திர புத்திரீலாப முண்டாம் எ-று. 6

இதுவுமது

நிரைக்குமுன்றுறிர்த்தேறிலாபத்துற
நீள்சகோதரசாறெட்டீராறுறத்
தெரிக்கலாபத்துறத்தன்றிசையினிற்
சிறக்குநன்மையேழாறிலாபத்துற
வுரக்கத்தேறநற்கோளுடனெத்தனை
யுறவரத்தனைப்பாரியுகப்பனே

விரிக்கவிப்படியீராறும்லாபனே
　　விரும்பியேஞானவேந்தனேவேண்டுமே.

இ-ள். பிராதுரு ஸ்தானமான 3-ஆமிராசியாதிபன் லாபஸ்தானத்தில் பிரபலனுயிருந்தால் அந்தப் பிராதுருஸ்தான பலமுண்டானது எல்லாம் இவனனுபவிக்குமு. இப்படியே எந்தஸ்தானுதிபதி சேர்ந்தாலும் வெகுலாபமுண்டு. சஷ்டாஷ்டம வியயாதிபதிக் கிரகங்கள் இப்படி லாபஸ்தானத்திலிருந்தால் தங்கள் திசையில் தங்கள் சம்பந்தமான பலன்களை நன்மையே பண்ணுவார்கள். பாரியஸ்தானுதிபதி பிரபலனுய் லாபஸ்தானஞ் சேர்ந்தால் அந்த லாபஸ்தானத்திலெத்தனே கிரகம் நட்பராய்க்கூடி யிருந்தார்கள் அந்தனேப் பாரியர்களுண்டாம். இப்படி அவரவர்க்கு 12-பாவத்துக்கும் லாபாதிபனிருக்கும் வகை நன்மை தீமைபார்த்து ஞான வேந்தராகிய வீமேசுரராருளாற் காண்பது எ-று. 7

இதுவுமது

ஞானவேந்தனிருவிழிலாபராய்
　　நயக்கமன்னர்பாற்செவ்வாய்வலுமையே
யானமால்வித்தியால்ராசமக்களா
　　லந்தணன்புத்திமைந்தர்பிரதானியால்
வானமாரிபிரதானிமிருகாதிகன்
　　வத்திரம்நவரத்தினவாத்தகஞ்
சூனசூத்திராற்பணியீனராற்
　　சோரத்தால்வெகுலாபமிலங்குமே.

இ-ள். ஞானவேந்தராகிய வீமேசர் கண்களாகிய இரவிமதிகள் லாபாதிகளானுல் சிங்காசனன் ஆனவனண்டையிலேசீவிக்கும். குஜன் வலிவினுல் தனம்வரும். பூமியினுலுமுண்டாம். புதனுல் வித்தையினுலுங் குமாரர்களாலும் பந்துக்களாலும் கெணித சாஸ்திர லிபிகளாலும் சாதி ஜனம் வந்துசேரும். குருவானுல் தன் புத்தியினுலும் மக்களாலும் பிரதானிகளாலும் வேதாப்பியாசங்களாலும் அர்த்தலாபமுண்டாய் சீவிக்கும். சுக்கிரனுல் பிரதானியாலும் ஸ்திரீசெனங்களாலும் மிருகாதிகளாலும் வஸ்திரங்களாலும் நவரத்னங்களாலும் சோ அசுவ கெஜாதிகிரய விக்கிரயங்களினுல் ஐசுவரியமும் அர்த்தலாபமுமுண்டாம். சனியானுல் சூத்திர களாலும் ஈனவித்தியினுலும் ஸ்தானபேதத்தினுலும் வனவிருட்சத்தில் சாஷ்டகிரய விக்கிரங்களினுலும் சோர புதநியாலும் இங்கிசைகளிலும ஈனரிடத்துச சேவகத்தினுலும் ஐசுவரியமுமுண்டு எ-று. 8

இதுவுமது

இலங்குதேகாதிலாபாதிநட்பரா
யிசைந்திலாபதேகம்முத்தமம்மதி
துலங்கிநிற்கவவ்வோரையதிபனுந்
துய்யதேறிற்சுகதேகிசெல்வரா
மலங்கதேகாதிலாபத்தினுதியு
மதினின்றோர்பகைநோக்கவந்துச்சார்ப்
பலன்கொள்ளுஞ்சிவயோகியுகந்தருள்
பாக்கியதேகியெனநூற்பகருமே.

இ-ள். தேகாதிபதியும் இலாபாதிபதியும் நட்பராய்க்கூடி இலாபஸ்தானத்திலேதான் தேகஸ்தானத்திலே தான் வுத்தமஸ்தானத்திலே தானிருந்து இவர்களிருந்த இராசியாதிபதியும் பால்பராகயிருந்தால் இவன் தேகமிருக்குமளவும் ஐசுவரியமும் அர்த்தலாபமுமுண்டாய் சுகியாயிருக்கும். உச்சனுயிருந்தால் மகா ஐசுவரியமும் அர்த்தலாபமுமுண்டு. இருவரும் நட்பரா யிருந்தவனிட லாபஸ்தானத்திலிருந்தாலும் உத்தமபலன். உச்சத்துடன் கூடியிருக்கினும் பார்வையுண்டானாலும்பூரணபலன். இந்தத்தேகாதிபதியும்லாபாதிபதியும்இவர்களிருவருடனேயும் எந்தெந்தஅதிபதிநட்பாட்சியுச்சமாகக்கூடியிருந்தார்களோ அவர்கள்லாபத்திலிருந்தால் எல்லாரு மவர்களிடமகாதிசையில்பலம் அந்திரதிசையிலும் பிரபலனுகில் தன்னிடஅந்திரதிசையில் சிவயோகியாய் யுகங்களைக் கடந்திருக்க வல்லவனுப் பாக்கிய தேகாதியாயிருக்கும் எ-று. 9

இதுவுமது

பகரும்லாபாதிமூடநீசாத்தராய்ப்
பரிந்துநற்கோளகத்துறமத்திப
நிகரும்லாபியாரெட்டுப்பனிரெண்டிலு
நீசமூடப்பகைசேரிற்பாவியே
சகலலாபாதிசத்துருமூடத்திற்
சாரச்சத்துருவுக்கேயிவன்றன
மிகலும்லாபிவியமுறவொன்னலர்க்
கியுமெங்கோனுக்காளாவதில்லையே.

இ-ள். லாபஸ்தானகிரகங்கள் மூடநீசராய் ஈனராய் உத்தமஸ்தானத்திலிருந்தால் மத்திபபலன். லாபஸ்தானக்கிரகங்கள் பலயீனராய் 6-8-12-ல் இருந்தால் நிஷ்பலன். லாபாதிபதி பகை நீசக்ஷீணமூடமாய் சத்துருஸ்தானத்தில் நிற்க இவன் தேடின தனமெல்லாம் சத்துருவுக்கேயிடும். லாபாதிபன் வியஸ்தானத்தில் சேரிற்

சத்துருக்களுக்கே தனமெல்லாங் கொடுக்கும். எங்கோனாகிய வீமேசர்க்காளாகாதவர்கள் பெறும்பேறு எ-று. 10

பதினோராம்பாவம் முற்றிற்று.

---

## பனிரெண்டாம் பாவம்

### தியாகி

இல்லவன்பரிதயம்வீமேசருக்
கிரங்குவார்க்குப்பதினொன்றிலிந்தரி
நல்லபாக்கியகேந்திரத்திரிகோணமு
நயக்கும்பன்னிரண்டோரையினுமமே
சொல்லும்பாவம்வியஞ்சத்துருநாசமாந்
துக்கச்சிந்தாசரீரம்வியாதிபன்
வல்லநற்கோணட்பாட்சியுச்சமதின்
மன்னதர்மமுந்தானம்வழங்குமே.

இ-ள். உள்ளமே பெருங்கோயிலாயிருக்கும் வீமேசர்க் கன்பராய் இரங்குவார்க்கு லாபஸ்தானத்தில் கிரகங்கள் இரவி மதி நட்பராய் தனலாபகேந்திரத் திரிகோணங்களிற்றேறி நிற்கில் வெகு நன்மையாமென்றறிக. இனி 12-ம் இராசிக்கு வியஸ்தானம் பாபஸ்தானம் சர்வநாசஸ்தானம் துக்கஸ்தானம் சிந்தாஸ்தானம் சரீரஸ்தானமென்று பெயர். இந்தவியஸ்தானாதிபதியும் வியஸ்தானத்திலிருந்தகிரகமும் சுபக்கிரகமாய் வியயாதிக் கிரகங்களாகிய சுபக்கிரகங்கள் நட்பாட்சி யுச்சம்பெற்று வியஸ்தானத்தில் நிற்கில் தர்மதானம் வழங்கித் தியாகியாம் எ-று. 1

### கிரகபலன்

வழக்கின்மாரிபொன்மாலும்பவத்தலம்
வலியலாபதனகேந்திரகோணமுந்
தழைக்கபாக்கியசம்பன்னராயிட்டுணுஞ்
சாற்றுபாபக்கோளிந்நெறிதங்குமேன்
முழக்கமாகப்பொன்றேடுமறஞ்செயார்
முயன்றசுத்தமுடன்சுகசீவியாங்
குழைக்கும்வியாதிபனெத்தனைகோளுடன்
கூடிலத்தனைமாளிகைகோலுமே.

இ-ள். சுக்கிரன் குரு புதன் இவர்கள் 12-ஆம் இராசிக்கிரகங்களாய் தனலாபகேந்திரத் திரிகோணத்தில் நிற்கில் பாக்கிய சம்பன்னராய் யிட்டுண்டுவாழும். மற்ற பாபக்கிரகங்கள் இந்நெறிசேரில் வெகு அர்த்தந்தேடி ஒருவருக்குந் தானதர்மஞ் செய்யாதவராய் மூர்க்க

ராய்த் தன் சுற்றமும் தானும் வாழும். வியயாதியனெத்தனேக் கிரகங் களுடன் கூடியிருந்தானே அத்தனேயிடத்தில் மாளிகைக்கட்டி வாழும் எ-று. 2

இதுவுமது

கோனுமேதிரந்தன்னூர்க்குளேசாங்
கோனுமேபரதேசத்துபயமேற்
கோனுமேதனதூரிலயலிலுங்
குருபுகர்வியந்தேறிற்பிராமணர்
பாலகம்பட்டவேந்தர்பிதுருக்கோள்
பாவமேவிடச்சூத்திரர்பாலகஞ்
சானுமாற்றிற்பிதுருபாக்கியர்வியந்
தருக்கிகிற்கவீமேசர்தருவரே.

இ-ள். வியஸ்தானமாகிய 12-ஆம் இராசி திராசியானுல் தன்னூரில் வீடுகட்டும். சாராசியானுல் பரதேசத்தில்வீடுகட்டும. உபய இராசியானுல் தன்னூரிலும் பரதேசத்திலும் வீடுகட்டும். குரு சுக்கிரன் வியஸ்தானுதிபதியாய் உத்தமஸ்தானத்திலிருந்தால் பிராமணரண்டையில் வீடுகட்டி பட்ட வேந்தனுகிய சிங்காசனமுடையவனுய்த் தனபாக்கியவானுயிருக்கும். வியயாதிபதி பிதுர்க்கிரகமாய் லாபஸ்தானத்தில் மித்துருவுமாயிருந்தால் சூத்திரக் கிராமத்தில்தான் சூத்திரசம்பந்தங்களில்தான் வீடுகட்டும். வியஸ்தானுதிபதி மாதுருக்ஷேத்திரத்திலேதான் பிதுருக்ஷேத்திரத்திலேதான் நட்பாகயிருந்தாலும் அந்த அதிபதியோடு கூடியிருந்தாலும் அந்தந்தக் கிரகங்களே அடுத்தபேர்க்கு பிராப்தியுண்டென்று வீமேசுரரருளினதுஎ-று.

விரயபலன்

வீமநாதரைப்போற்ருவியாதிபர்
வெய்யபாவப்பகைநீசமூடாய்த்
தாமிருக்கநற்கோட்டனபாக்கியஞ்
சாவீராரிற்சத்வநீசத்தாய்த்
தீமைகோளுறச்செல்வம்பொருளெலாஞ்
சினத்தகோணுக்கச்சோராரற்சேதமா
நேமநல்லர்பொல்லார்சர்வநாசமே
னீசவுச்சஞ்சரிகொடுதீங்கதே.

இ-ள். வீமநாதரைப்போற்ருமல் தூஷிப்போர்கள் ஜெனிக்கும் போது வியஸ்தானமாகிய 12-ஆம் இராசி சம்பந்தக் கிரகங்கள் பாப

சாய்ப் பகைநீசங்களாய் நீசக்ஷீணமுடரா யிருக்க நற்கோள் தனபாக்கியங்களிலிருக்க வியஸ்தானத்தில் பகைநீசராய் பாபக்கோட்கள் நிற்க அவன்செல்வமும் பொருளுமெல்லாஞ் சத்துருக்கள் கொண்டுபோம் இவன் திரவியமெல்லாஞ் சோரரால்சேதமாம் சுபக்கிரகம் நீசவுச்சராய் நிற்கில் நன்மையுந் தீமையுஞ் சரியாய் வாழுமென்று அவரவர் திசைவருங்கால் கிரகவலியறிந்து நிச்சயமாக 12-இராசிக்கும் பலன் சொல்வது எ-று. 4

பனிரண்டாம்பாவம்

ஜாதகப்படலம் முற்றிற்று.

---

## யோகப்படலம்

### அங்கிசபலன்

### இரவியங்கிசம் மதியங்கிசம்

தியாகியன்பன்சிவந்தகண்மெய்ப்பிறைச்
        செல்வன்கோபிமோவாய்ச்சிறியன்மெய்யன்
போகிகூந்தற்சுருண்டுநீளும்வழிப்
        போகவன்சான்புகழ்பகற்காலனே
வாகுமெய்க்குறள்செங்கண்முகவடு
        மத்தனசேர்ந்தவர்க்கன்பன்வாசாலகன்
மேகநீள்புனலாடவிரும்புவன்
        வீமர்பூணுஞ்சந்திரனங்கிசத்தனே.

இ-ள். சிங்கத்துக்கதிபதியான இரவியங்கிசத்தான் குணம் தியாகி அன்பன் சிவந்தகண்ணன் சிவந்தமேனியன் இரவி வலியனுகில் நாட்டுக்கு அரசனும். அல்லது ஊருக்கு அதிபனும் செல்வமுடையவன். முன்கோபி. மோவாய் சிறியன். மெய்விரும்பும் போகி. கூந்தற்சுருண்டு நீண்டவன். வழிநடைக்கஞ்சான். புகழுடையன். என்பன மதியங்கிசத்தான், குணம் அழகியன். குறளன், செங்கண்ணன் முகத்தில்வடுகன்மத்தன் சேர்ந்தவர்க்கன்பன் வாய்ச்சாலகன் எந்நேரமும் புனலாட விரும்புவன் என்பன எ-று. 1

### குஜன் அங்கிசம், புதன் அங்கிசம்

அங்கிகால்கோபிலோபியஞ்சான்பொலா
        னற்பன்றுக்கிவீரன்வென்மறுச்சேயன்
பொங்குசற்றாண்பிரயாசிகடுஞ்சொலன்
        புந்தியங்கிசனாதிகோள்பொய்சொலான்

நங்குதெய்வப்புலவன்றனபதி
தர்மன்சூரன்செய்நன்றிமறந்திடா
னெங்குமென்பிரகாசன்றெய்வம்பணிக்
கினியன்மேம்பாடுடையனிறைவனே.

இ ள். குஜன் அங்கிசத்தான் குணம் கோபிலோபி அஞ்சிடான் பொல்லாத குணமுடையன். அற்பன். என்னோமுந் தூக்கப்படுவன் வீரன். முதுகில் மறுவுடையன். சற்றாண்பிரயாசி. சொடுஞ் சொல்லன் என்பதாம் புதனங்கிசத்தான் குணம் ஞானி தெய்வீகப் புருஷன் பொய் விரும்பாதவன் தெய்வீகப் புலவன் தனபதி மர்மமுடையவன் சூரன் செய்நன்றி மறந்திடான் எங்குமான கீர்த்திப்பிரகாசமுடையன் தெய்வப் பணிவிடைக்கினியன் இறைவன் புலவன் என்பதாம் எ-று. 2

குரு அங்கிசம், சுக்கிரன் அங்கிசம்

இறைவனங்கிசத்தான்சுத்தமாதவ
னினியசொன்மந்திரதருமன்செல்வ
னறிவுநூனீதியன்செங்கணையன
னப்புத்தோய்வினீண்மோவாயனுருமே
செறியுஞ்சுக்கிரனங்கிசனுத்தமன்
செல்வன்பண்டிதன்றிண்ணியன்றீரனு
நிறையுமேனியன் பாவமுன்னுதவ
னீதிநன்றிமறவாதநெஞ்சனே.

இ-ள். குரு அங்கிசத்தான் குணம் மாதவத்தை யுடையவன் இனிய சொல்லன், மந்திரி தருமன் செல்வமுடையன், அறிவுநூலோதுவன் நீதியுடையவன், சிவந்தக் கண்ணன ஐயன் என்னோமுங் குளிக்கப்பிரியன் நீண்ட மோவாயன் என்பதாம். இனி சுக்கிரனங்கிசத்தான் குணம் உத்தமன் செல்வமுடையன், பண்டிதன் தன்னியன், தீரபுத்திரருடையன், பருத்தமெய்யன், பாவம் நினையாதவன் நீதியும் நன்றியும் மறவாதவன் என்பதாம் எ-று. 3

சனி அங்கிசம் அங்கிசம் பார்க்கும் வகை

மறக்கொணுவீமநாதர்தங்கண்மகன்
மந்தனங்கிசத்தான்குறளன்கள்ளன்
பிறக்குங்கீர்த்தியிலான்பெருந்திண்டியன்
பிறவடிப்பெரியன்னுடைபேணுவான்
சிறக்குங்கோளகன்கருத்தவுடம்பினன்
சீவவானியேசெய்யுந்தயையிலான்

குறித்தாராசியீராறுமேழ்கோட்களுங்
குலவுமவ்வாராட்சிகேடில்லையே.

இ-ள். வீமேசர் கண்ணுகிய இரவியினிடம் புதல்வனுகிய சனி அங்கிசத்தான் குணம் குள்ளன், கள்ளன், கீர்த்தியில்லாதவன், பெருந்திண்டியன், பிரவடி பெரியவன் ஆடைபேணுவன், சோளகன், கறுத்தமெய்யன் சிவஹானிசெய்யுந் தயையிலான் என்பதாம். அங்கிசம் பார்க்கும் அடைவு அசுவினிமுதல் மும்மூன்று நட்சத்திரமாக ஒரு நட்சத்திரம் 4-பாகமாக நட்சத்திரம், 3-க்கு 12-பாகமென்றறிந்து மேஷமுதல் 12-இராசியும் அந்த அதிபதி கிரக அங்கிசமென்றறிக. இப்படி அசுவினிமுதல் 27-நட்சத்திரமும் ஒட்டிக்சொள்வது எ-று. 4

## கிரகத்துக்குக் கிரணம் அறியும்படி

கேடில்லைப்பகைநீசசத்துறக்
கிரணமுண்டுகிரணரோகியெனு
நீடுமுச்சர்பகைநீசமேலுற
நீசரோகிக்கில்லைக்கிரகணங்களே
தேடுமாலைந்துசேய்சநியேழதாந்
தேறுபொன்னெட்டுத்திங்களுக்கொன்பதாந்
கூடும்பானுவுமாறியும்பத்ததாந்
குறைவினந்தொடுக்காடர்சொல்வாழ்வதே.

இ-ள். பகை நீசத்தைவிட்டு உச்சத்தே வருகிறதெல்லாம் உச்சரென்றுபெயர். இதற்கு கிரணமுண்டென்றறிக. உச்சத்தை விட்டு நீசத்தே வருகிறதெல்லாம் நீசரோகி யென்றறிக. நீசரோகிக்குக் கிரணமில்லை யென்றறிக. கிரணம் பார்க்கிறவகை புதனுக்கு கிரணம்-5 குஜனுத்கும் சனிக்கு கிரணம்-7 குருவுக் கிரணம்-8 மதிக்கு கிரணம் 9 இரவி சுக்கிரனுக்கு கிரணம்-10 எ-று. 5

## புஷ்களயோகம்

வாழுமெட்சியதிபன்றேகாதிபன்
மதியும்லாபதனகேந்திரகோணமுஞ்
சூழுநட்பாட்சியுச்சமாய்த்தேறிடத்
துய்யபுட்களயோகந்தேசாதிப
னீழும்வந்திமனுபிரம்யாஜ்ஞய
னிரைபடைத்திரஞ்செய்துகொண்டிருக்குமீ
ரேழுலோகமுமென்றப்புகழ்கொளு
மிறைவனன்பர்க்கிதஞ்செய்திலங்குமே.

இ-ள். இலக்கினுதிபதியும் தேசாதிபதியும் லாபஸ்தானத்தில் தான் கேந்திரத்திரிகோணத்தில் தான் நட்பாட்சியுச்சம் பெற்று நிற்கிற மதி பெலவானுயிருந்தால் இது புஷ்கள யோகமென்று பெயர். இதற்குப்பலன் தேசாதிபதியாய்ப் பலருந் தொழத்தக்க பவிஷ்பாக்கியமுள்ளவனுய் குதிரை யானை 1000-க்கு உள்ளவனுகத் தர்மஞ்செய்து ஈரேழுலகமும் புகழப்பட்டவனுகி இறைவராகிய வீமேசர்க்கன்பராம் எ-று. 6

வாசியோகம்

இலங்குவாசியோகம்ரவிமுன்குச
　　னியங்குவர்த்தன்றீரன்மகவுளான்
புலவன்றூனதர்மிப்போகிகல்விமான்
　　பொன்னன்வத்திரதானதர்பஞ்செயுங்
குலவுசுங்கன்பரதாரமோகிபூண்
　　குறைவில்பாக்கியன்சாத்திரசம்பன்னர்சுன்
னுலவுபாதாரசீலன்வெகுத்திரு
　　வுற்றவீமேசரேவற்குரியனே.

இ-ள். இரவிநின்ற இராசிக்கு முன் இராசியில் கிரகம் நிற்கில் வாசியோக மென்றுபெயர். குஜன்நிற்கில் வர்த்தகன் தீரன் பலவானுமாய் வெகுபுத்திரருடையவனுமாயிருப்பன். வித்துவானுவன், புத நிற்கில் தானதர்மமுள்ளவன் போகி கல்விமான் பிறருடமைக் குரித்தானவனுமாயிருக்கும் குரு நிற்கில் வஸ்திரதானம் அன்னதானம் பண்ணுகிறவனுமாய் இருப்பன். சுக்கிரன் நிற்கில் பரதாரமோகியாய் ஆபரணமுடையவனுய் மகா தைரியவானுய் சாஸ்திர சம்பன்னனுயிருப்பன், சனிநிற்கில் ஆசாரசீலனுமாய்ப் பலவானுமாய் அநேகம் ஸ்திரீயை யுடையவனுமாய் வீமேசருக்கு உரித்தானவனு யிருப்பன்.

வேசியோகம்

உருத்திரன்விழிப்பின்குசன்வீரிய
　　னொருவர்கீழ்ப்பணிபண்ணுவன்வன்கண
னருத்தமால்சோதிடனழகிய
　　னந்தணன்வானாசர்கள்பூச்சியன்
பெருத்தகிதநாதப்பிரியன்ரூபியன்
　　பிருகுபோகிதனவான்கலசனும்
பொருத்துமந்தன்பரதாரமோகனுப்
　　புண்ணியம்விலக்கும்வேசியோகமே.

இ-ள். இரவிக்குப்பின்னே கிரகங்கள்நிற்கில் வேசியோகமென்று பெயர், குஜன் நிற்கில் வீரியன் ஒருவர்க்குக் கீழ்ப்பணிந்திருப்பவன்

வன்கண்ணன். புதன்நிற்கில் ஜோதிஷசாஸ்திர வல்லவனுமாய் அழகுள்ளவனுமாய் ஆசாரமுள்ள கோத்திரனுமாய் யிருப்பன். குரு நிற்கில் தனவான் இராஜபூஜிதன் கீதநாதப்பிரியன் பந்துக்களை யிரட்சிக்கவல்லவனுமாய் அழகுள்ளவனுமாய் அற்பபோகியனுமா யிருப்பன் சுக்கிரன்நிற்கில் போகி தனவான் கலகப்பிரியன் துற்சனன் செறுவிகண்டன் சனிநிற்கில் பாதாரபோகியாய்ப் புண்ணியங்களை விலக்குவனும் எ-று. 8

## உபசரியோகம் கமலயோகம்

யோகபானுவிருபுறநல்லகோ
 ளோங்குமாகிலுபசரியோகமாம்
வாகனல்லோர்க்கினியன்றனபதி
 மன்னர்நட்பனடிமைத்திறமுள்ளான்
சாருங்கேந்திரங்கோட்கள்கலந்துறக்
 கமலயோகந்தனைமுளன்கீர்த்திமா
னுரும்வெற்றியுபாயன்பிறந்தசே
 யண்ணல்வீமேசுரரடிக்கன்பரே.

இ-ள். இரவிக்கு இருபுறமும் நற்கோள் நிற்கில் உபசரியோகம் இதற்குப்பலன் அன்பாக்கினியன் நிறை நிண்ணயமுள்ள தனவானுமாய் இராஜாக்களுக்கு சன்மானமுள்ளவனுமாய் அனேகம் போக்கிஷ்டமானவனுமாய்க் குலத்துக்கதிபதியுமா யிருப்பன் கேந்திரங்களில் சுபக்கிரகம் நிற்கில் கமலயோகம். இதற்குப்பலன் தன்மவான் கீர்த்திமான் வெற்றியுள்ளவன் உபாயி எ-று. 9

## வஜ்ரயோகம் முசலகர்மயோகம் நளயோகம் சசியோகம்

மன்னுவச்சிரயோகமுதயமேழ்
 மருவநற்கோளிளமைமூப்பின்னலன்
முன்னவன்முன்னமேழகோடிரமுற
 முசலயோகந்தன்சுற்றமிலச்சைமா
னென்னுந்தாதுநடையபிமானியா
 மினங்கடிதல்பாதேசவாழ்க்கையா
முன்னுமேநளயோகமுபயமே
 யூனவான்குறைதனவானிபுணனே.

இ-ள். உதயமுதல் 7 - இராசியிலும் நற்கோள் நிற்கில் வஜ்ரயோகம் இதற்குப் பலன் இளமையிலும் மூப்பிலும் செல்வ முடையன் நடுவில் தரித்திரவான் இரவி முதல் 7-கிரகங்களும் ஸ்திர ராசியில் நிற்கில் முசல கர்மயோகம். இதற்குப் பலன் தர்ம சுத்த முடையவன் லச்சையுள்ளவன் உபயராசியில் நிற்கில் நளயோகம் இதற்குப் பலன் தேகத்தில் ஊனமுடையவன் தனவான் நிபுணன் சரராசியில்

நிற்கில் சசியோகம் இதற்குப்பலன் நடக்கவல்லவன் அபிமானி இனங் கடிந்தவன் பரதேசங்களில் வாழவல்லவன் எ-று. 10

## அன்பர்யோகம் சுனபயோகம்

அன்பர்கோனிடக்கண்ணின்முன்னேநல்ல
ரமரரன்பனயோகம்வெகுபொரு
ளன்வலிவாற்சனனமாதர்ப்பிரி
யன்றர்மிராசாங்கன்வெகுகல்விமான்
முன்புதேய்பிறைமத்திபமுத்தம
முதியசோமன்வருஞ்சுபர்யோகமே
நன்குணத்தொடொழுக்கம்வீரங்கல்வி
நரிபத்திநயந்துநடக்குமே.

இ-ள். மதிநின்ற இராசிக்கு முன் இராசியில் நற்கோள் நிற்கில் அன்பர்யோகம் இதற்குப்பலன் பூர்வ திரவியமில்லாமல் தன் வாய் வலுவால் வெகு பொருள்தேடி ஆர்ச்சிக்க வல்லவன் தைரியவான் தர்மி இராஜாக்களுக்குச் சரிபொத்தவன் கல்விமான் வார்த்தை பேச வல்லவன் புண்ணியவானு யிருக்கும். இவை பூர்வபட்சத்து மதியா கில் உத்தமபலன் அமரபட்சத்து மதியாகில் மத்திபபலன் மதிக்குப் பின் இராசியில் சுபக்கிரகம் நிற்கில் சுனபயோகம் இதற்குப் பலன் சற்குணன் ஒழுக்கமுடையன் அநேக சாஸ்திரங்களுக்கு வல்லவனு மாய் சௌரியவானுய் ஸ்திரீவார்த்தை கேட்பவனுய் இருப்பன் எ-று.

## துரதுராயோகம் சுனபயோகம் அசுவயோகம் இராஜயோகம்

நடக்குஞ்சந்திரன்முன்பின்னுநல்லகோ
ளயந்துநிற்கிற்றுரதுராயோகமாம்
படைக்குமவீரன்பரிவாரகாவலன்
பரிகலங்கன்றுகாலிபடைத்தவன்
றொடுக்குமெட்டரிமுன்சுனபயோகமாஞ்
சொர்ன்னமுள்ளன்கிளைவாழ்வுபின்னர்மே
லடுக்குமேலசுவயோகந்தர்மிபின்
னுமுன்ராசயோகமிறைவனே.

இ-ள். மதிநின்ற இராசிக்கு முன்னும்பின்னும் சுபக்கிரகங்கள் நிற்கில் துரதுராயோகம். இதற்குப் பலன் படைத்தலைவனுக உயுத் திப முகத்துக்கு விளக்கமுள்ளவனுகப் பரிசனங்களைச் சன்மானிக்க வல்லவனுகக் கன்றுகாலி வெகுவாய்த் தேடவல்லவனுக போகியுமா யிருப்பன் இலக்கினத்திற்கு முன் சுபக்கிரகம் நிற்கில் அசுவயோகம்.

இதற்குப் பலன் தனவான் கிளைவாழ்வுள்ளவன் இலக்கினத்திற்குப் பின் சுபக்கிரகம் நிற்கில் இராஜயோகம் இதற்குப் பலன் இராஜாவாய்ப் பட்டத்துக்குத் தலைவனு யிருப்பான் எ-று. 12

### உபயோகம் வானயோகம் சமுத்திரயோகம்

இறைவரன்பர்க்குதயாதிநாலினு
மேழுகோனுமுறவுபயோகமா
மறையுதான்மூதலேழினிலேழுகோ
ளடையநிற்பதுவேவானயோகமாந்
திறைகொண்ஞானிதியாகிதேபூசிகன்
செய்யரெண்டுநாலாறெட்டீராறுபத்
துறையக்கோட்களோரேழுஞ்சமுத்திர
யோகம்போகியிராஜாவென்றோதுமே.

இ-ள். இறைவராகிய வீமேச ரன்பர்க்கு இலக்கினம் 2-3-4-இந்த 4-இராசியிலும் 7-கிரகமும் நிற்கில் உபயோகம் 4-5-6-7-இந்த 4-இராசியிலும் 7-கிரகமும் நிற்கில் வானயோகம். இந்தயோகம் 2-க்குப் பலன் ஞானவான் தியாகி சிவபூசைபண்ண வல்லவனுமா யிருப்பன் 2-4-6-8-10-12-இந்த 6-லும் 7-கிரகமும் நிற்கில் சமுத்திரயோகம் இதற்குப்பலன் போகபாக்கிய முள்ளவனுமாய் இராஜாவுமாய் இருப்பன் எ-று. 13

### சக்கரயோகம் அலகையோகம்

ஓதுமொன்றுமூன்றைந்தேழொன்பான்பதி
னொன்றிராறெழுகோளுறவேழுமுன்
போதில்பன்னிரண்டாமளவேழுகோள்
புனிதரெண்டிசைச்சக்கரயோகமா
மேதின்மன்னர்க்கினியனேழுவரு
மெட்சியன்றெண்டலகையோகமெனும்
பாதிமாமதிசூடுவர்க்கன்பராய்ப்
பயிர்களால்வெகுசம்பன்னராகுமே.

இ-ள். இலக்கினம் 3-5-7-9-11-இந்த 5-லும் 7-கோளும் நிற்கிலும் 7-8-9-10-11-12-இந்த 6-லும் 7-கோளும் நிற்கிலும் சக்கரயோகமாம், இதற்குப்பலன் இராஜாக்கள் வணங்கப்பட்ட நிபுணனுமாய்க் குறிப்பாடல்களுக்குச் சந்தோஷ முடையவனுயிருப்பன் 7-கிரகங்களும் இலக்கினத்திலும் 12-ஆம் இடத்திலும் நிற்கில் அலகையோகம். இதற்குப்பலன் பாலசந்திரனைச்சூடும் வீமேசர்க் கன்பராய் பயிர்த்தொழி லுடையவராய் வெகு சம்பன்னராய் வாழ்வார்கள் எ-று

## சந்திரயோகம் கந்தர்வயோகம்

ஆகுமேழ்கோளிரண்டடென்மூன்றுநா
லைந்துமாறுமேழெட்டுறச்சந்திர
யோகமேழ்கோளுமொன்றினிலாண்டுநா
லற்றவாறெட்டுபத்துபன்னிரண்டுற
வேகிநிற்கில்பிரதானியழகிய
னேழுகோட்களுநால்ராசியிலுற
வாகின்கெந்தர்வயோகம்பயிர்களால்
வாழுந்தர்மமருண்மகவாகுமே.

இ-ள். 7-கிரகமும் 2-3-4-5-6-7-8-ல் நிற்கிலும் 7-கிரகமும் 2-4-6-8-10-12-ல் நிற்கிலும் சந்திரயோகமாம். இதற்குப்பலன் பிரதானி அழகியன் 7-கிரகங்களும் 4-மித்திர இராசியில் நிற்கில் கந்தர்வயோகம், இதற்குப்பலன் பயிர்கள் செய்வித்துத் தானதர்மஞ்செய்து அருள் அடைந்த சற்குருவுக் கினியவனும் எ-று. 15

## அங்கியோகம் கோள்கையோகம்

அருட்கொணற்கோட்களேழொருராசிதொட்
டணியிருக்கவதுவங்கியோகமாம்
பொருட்கடல்சவுபாக்கியன்கிர்த்திமான்
போகிதர்மிதனவான்றீர்க்காயுவி
குருவுடனேழுகோளுமோராசியிற்
கூடிநிற்கவதுகொள்கையோகமா
மிருளின்ஞானிமிடியன்றேசாந்திரி
யிலகுரூபிசொற்கூரியனுகுமே.

இ-ள். 7-கிரகங்களும் ஒரு இராசிதொட்டு 7-இராசியு மடுக்காய் நிற்கில் அங்கியோகம் இதற்குப்பலன் தனவான் சவுபாக்கியமுள்ளகிர்த்திமான் போகிதர்மி தீர்க்காயுவி, கண் சிவந்திருக்கும் குலத்துக்கு அதிபதியுமாய் கல்விமானுமாய்ப் போகத்தையுடையவனுமாயிருப்பன் 7-கிரகங்களும் ஒரு இராசியிற் கூடியிருக்கில் கொள்கையோகம் இதற்குப்பலன் ஞானி மிடியன் சிற்பசாஸ்திர வல்லவன் ரூபவான் மிருதுவசனஞ் சொல்லவல்லவன் எ-று. 16

## அட்சயோகம் பத்திரயோகம் அங்கிசயோகம்

கூருஞ்சேயாட்சியுச்சிநற்கேந்திரங்
குலவுதலட்சயோகம்பெருத்தவ
னேருமபூமிதிடமேனிகிர்த்திமா
னேயஞானிபூடணம்விரும்புவன்

பாரின்மானுறப்பத்திரயோகமாம்
　　பாவுசோதிடங்கல்விசுத்தப்பிரியன்
சேரும்பொன்னுமிலங்குசையோகமாந்
　　தேவதோத்திரச்செல்வஞ்செருக்குமே.

இ-ள். குஜன் ஆட்சியுச்சங் கேந்திரங்களில் நிற்கில் அட்சயோகம் இதற்குப்பலன் பெருந்தபசுடையன் பூமிலாபமுடைய திடவான் ஞானி பூஷணமுடையன் சினேகவிரும்பவல்லவன் இந்தப்படி புதனிற்கில் பத்திரயோகம் இதற்குப்பலன் ஷோதிஷ வல்லவன் கல்விமான் பந்து உபகாரியாயிருக்கும் குருநிற்கில் அங்கிசயோகம் இதற்குப்பலன் தேவபூஜையுடையன் புத்திரருடையன் புண்ணியவானுயிருப்பன் எ-று. 17

## மாநுயோகம் கேசரியோகம்

செருக்குங்கேந்திரமாட்சியினுச்சியிற்
　　றேறிநிற்கமானுயோகஞானவான்
றருக்குஞ்செல்வப்ரதாபனற்கீர்த்திமான்
　　தர்மர்முத்திரைக்கர்த்தன்றீர்க்காயுவி
யிருக்குஞ்செவ்வாய்ப்பலன்சனியற்குமா
　　மிந்துகேந்திரமபொன்கேசரியெனும்
பெருக்கும்வித்தைபெலவானறஞ்செயும்
　　பிரியன்செல்வன்சிவம்பேறுடையனே.

இ-ள். கேந்திரங்களில் சுக்கிரன் ஆட்சியுச்சம்பெற்று நிற்கில் மானுயோகம் இதற்குப்பலன் ஞானவான் செல்வமுடையன் கிரகஸ்தன் கீர்த்திமான் பிரதாபமுடையன் முத்திரைக்கன்பன் தீர்க்காயுவி முன் குஜனுக்குச்சொன்ன பலன் சனிக்குமென்றறிக மதிநின்ற இராசிக்கு கேந்திரங்களில் குருநிற்கில் கேசரியோகம் இதற்குப்பலன் வித்தியாப்பியாசமுடைய பலவான் தர்மஞ்செய்யப் பிரியன் சிவப்பேறுடையன் எ-று. 18

## அமலயோகம் பாபயோகம்

உடையர்பூடணத்துச்சிநீர்தேறிட
　　யோகயோவமலந்தருமத்தொழி
னடையுடைப்பாவனையலங்காரிநீ
　　ணரிபோகநயந்தசுகித்திடுந்
தொடுமிலக்கினமேழினும்பாவக்கோ
　　டோன்றநான்கினும்பத்தினற்கோளுறக்
கொடியர்பாபயோகமுன்றரித்திரங்
　　குலவுசெல்வமபின்னுமெனக்கூறுமே.

இ-ள். மதிநின்ற இராசிக்கு 10-ஆம் இராசியில் சுக்கிரன் தேதி நிற்கில் அமலயோகம் இதற்குப் பலன் தருமத் தொழிலுடையன் நடைபாவனை யுள்ளவன் எவர்க்கும் அலங்காரமுள்ளவனுப் போக போக்கியமுள்ளவனுமா யிருக்கும் இலக்கினமுதல் 7-இராசியிலும் பாபக்கிரகங்களிருக்க 4-ஆம் இராசியிலும் 10-ஆம் இராசியிலும் சுபக்கிரகம் நிற்கப் பாபயோகம் இதற்குப் பலன் பால்லியத்தில் தரித் திரமாய்ப் பின்பு செல்வமுண்டாய் வாழும் எ-று. 19

நவயோகம் தர்மயோகம் பாசயோகம்

கூறுமெட்சிகொண்டேழினுமேழுகோள்
குலவுமேநவயோகஞ்சுமுகனுங்
தேறுகீர்த்திமான்சிக்கெனறவனினி
செப்புந்தர்ம்மயோகமமெழுகோட்களு
மாறிராசி தாதாவுபகாரிபா
லதிகபாசயோகமைந்திலேழுகோள்
வீறுபொன்னுளனுளடிமைச்சுகி
வீமநாதர்திருவடிமேவுமே.

இ-ள். இலக்கின முதல் 7-இராசியினும் 7-கோள் நிற்கில் நவ யோகம் இதற்குப் பலன் சுமுகனுயிருக்கும் கீர்த்திமான் ஜாக்கிரதை யுள்ளவன் 7-கிரகமும் 6-இராசியில் நிற்கில் தர்மயோகம் இதற்குப் பலன் தாதாவாய் பரோபகாரியாய்ப் பால்பாக்கியமுடையவனு யிருக் கும். இனி 5-இராசியிலும் 7-கிரகமும் நிற்க பாசயோகம் இதற்குப் பலன் தனவானுமாய் ஆளடிமையுள்ளவனுமாய் சுகியுமாய் வீமநாதர் திருவடிக்குரித்தாவர் எ-று. 20

இராஜயோகம்

மேவுசந்திரவர்க்குத்தமஞ்சரம்
வெய்யவன்வர்க்குநன்மையதாந்திரந்
தாவுமேயுதயநடுக்கூறுபின்
சந்திரனைப்புதன்முதனென்குதிக்
காவனேக்கரசன்னுதயாதியை
யமர்ந்துநோக்கவவகோளரசனு
மாவிசென்மாதிரீருடன்றேறியே
யமரராண்டிலிறையென்பர்கேசமே.

இ-ள். மதிக்கு வர்க்கோத்தமமாவது இரவிக்கு வர்க்கோத்த மமாவது திராசிக்கு நடுவிற்கூறு உபயராசிக்குப் பிற்கூறு சர ராசிக்கு முற்கூறு மதி நிற்க அவனைப் புதன் முதலாக 4-இக்கிலும்

நோக்கிலும் அதில் சுக்கிரன் நிற்க அது லக்கினமாக அவனை 6-கோள் நோக்கிலும் லக்கினுதிபதி நட்பாட்சி யுச்சம்பெற்று சுக்கிரனுடன் கூடி நிற்கிலும் இராஜனுவன் எ-று. 21

இதுவுமது

அரசனுமதிசேய்கூடிலோன்பதி
 லையிரண்டுறப்பொன்தேறிநிற்கினு
மாசனுஞ்சந்திரன்மித்திரமுற
 வந்தமித்திரனைப்புகாநோக்கிடி
லரசனிந்துவைநோக்கினுமன்னனு
 மந்தனைமாலைநோக்கநராதிப
னிரவிசிங்கத்தேழப்புதன்கன்னியி
 லீனரும்வேந்தராமிரையன்பரே.

இ-ள். மதி குஜன் கூடி இலக்கினம் 9-10-ல் நிற்க இவர்களுடன் குரு பெலவானு யிருந்தால் இராஜனுவன். குரு பெலவானு யிருந்து மதி நட்பாங்கிசத்தில் நிற்க அவனைச் சுக்கிரன் பார்க்கிலும் குரு மதியைப்பார்க்கிலு மிலக்கினம சிங்கமாக அதில் இரவியிருக்கப் புதன் கன்னியில் நிற்கிலும் செனித்தவன் நீசனுனும் இராசனேயாம் எ-று. 22

இதுவுமது

ஈசர்கண்புதனுனுறமந்தனு
 மிந்துபத்துறச்செனமர்சேய்மன்னரா
நேசமீனவியாழவங்கிசத்தி
 னிரிருக்கயமேலவேந்தரா
மாசினீள்பிறையொன்பதிற்சுன்னெறி
 மருவுபைத்தைந்தின்மேவிடமன்னராம்
பேசுசனமாதிசேந்திரநட்பரே
 பேணிநிற்கப்பெருந்திறல்வேந்தரே.

இ-ள். வீமேசர் கண்ணுகிய இரவியும் புதனும் 4-ல் நிற்க சனி மதி 10-ல் நிற்க இலக்கினத்தில் குஜனிற்கில் இராஜனுவன் குரு அங்கிசத்தில் சுக்கிரன் நிற்க மீனம இலக்கினமாகிலும் பூரணமதி 9-ஆமிடத்தில் நிற்க சனி குஜன் 5-ஆமிடம் நிற்கிலும் இலக்கினுதிபதி நட்பாகக் கேந்திரங்களில் நிற்க அவனுடன் மித்துரு கிரகங்கள் கூடி நிற்கினும் இராஜனேயாம எ-று. 23

இதுவுமது

வேந்தராஞ்சசிதேறிக்கேந்திரமுறில்
 வெள்ளிபொன்னேக்கசெனமாதியுச்சமேற்
போந்துதிங்களைப்பார்க்கவரசனும்
 புரிந்தசெனமாதியுச்சகேந்திரமுற

வாய்ந்தவின்மதிசிங்கத்திற்சேயுற
மன்னரிந்தளியிலலெழரெண்டுகோ
ணோர்ந்தவுச்சாய்நிற்கவரசராய்
நிமலர்வீமேசர்நேசராங்காணுமே.

இ-ள். மதி இலக்கினமல்லாமல் மற்ற கேந்திரங்களுக்குப் பூரண மதியாயிருக்க குரு சுக்கிரன் பார்க்கில் இராஜனுவன். தனுசிலாதல் மேஷத்திலாதல் சிங்கத்திலாதல் குஜன் நிற்கிலும் மதி கர்க்கடகத்தில் நிற்க அது இலக்கினமாக 2-கிரகங்கள் உச்சமாக நிற்கிலும் இராஜாவாய் நிமலராகிய வீமேசருக்கு அடியவர்களாய் வாழ்வர் எ-று. 24

இதுவுமது

காணுஞ்செவ்வாய்க்குமூன்றுறச்சந்திரன்
கனகனைந்துறபபானுவொன்பானுறப்
பூணுமாகிற்றனபதியோர்கிரகம
புரியவுச்சுறகோணேக்கப்பொன்பெறிற்
றேன்றுநற்சோல்பதிணைஅமூனறிறற்
றுன்னுமாறுறச்சென்மதிற்பததினி
னீணலன்பாகனகனாசனு
நிச்சயம்வீமநாதர்நிறைத்ததே.

இ-ள். குஜன் நிற்கின்ற இராசிக்கு 3-ஆமிராசியில் மதி நிற்க 5-ஆமிடம் குருநிற்க 9-ஆமிடம் இரவினிற்கல் தனபதியாம். ஒரு கிரகம் உச்சத்தில் நிற்க அவனை மித்துருககிரகம் நோக்கில் தனபதியாம். சுபக்கிரகங்கள் 10-1-3-4-ஆமிடம நிற்கில் பாடக்கிரசங்கள இலக்கினத்தில் 10-ஆமிடத்திலாதல் நிற்கில் ராஜனுமென்று வீமேசர் நிறைத்தது எ-று. 25

இதுவுமது

நிரைத்தவிற்பகல்பத்துறச்சேய்மதி
நிரவியலாபமேவாசாதிபர்
தரித்தமூன்றிலக்கினுதிலயச்சுபர்
சாலநோக்கத்தனவான்சேயுச்சிமேற்
செருக்கச்சனிபனிரெண்டொன்பதினுறச்
செங்கதிர்மதியேழுறவேந்தரைந்
தருக்கர்சேயுமுச்சம்புதன்சூரிய
னரிவைமேவவெஙகோனருண்மன்னனே.

இ-ள். தனுசில் இரவியிருக்க 10-ஆமிடம் குஜன் மதினிற்க சுக்கிரன் 12-ஆமிடமாவது 11-ஆமிடமாவது நிற்க இராஜனும். மதியும் சனியும் உசசத்திலிருக்கப் புதனும் இரவியுங் கன்னியிலிருக்கில் எங்கோனுகிய வீமநாதருள்பெற்ற ராஜனுய் வாழும் எ-று. 26

இதுவுமது

மன்னர்சுங்கன்றுலர்மறியிற்குசன்
மந்திரிகடகத்துறக்சோட்கடான்
முன்னவன்மடங்கன்ஞனரசர்சேய்
முடவர்கூன்பொன்றெறுக்கானரபதி
பொன்னர்வில்லுறப்பூவையின்மாலுறப்
பூமனுருறப்பூமதிமூன்றுறத
துன்னவன்மகரத்தெழசகீர்த்திமான்
துய்யவெங்கோன்றேடர்ந்தவாசனே.

இ-ள். சுக்கிரன் துலாத்திலிருக்க மேஷத்தில் குஜனிருக்க குரு கடகததிலிருக்க இராஜனுனவன் இரவி சிங்கத்திலிருக்க மதி ரிஷபத்திலிருக்க அதுவே இலக்கினமாக அல்லது சனி கும்பத்திலிருக்க குரு விருட்சிகத்திலிருக்கப் பிறந்தவன் இராஜனும். குரு தனுசிலிருக்க கன்னியில் புதனிருக்க குசல் 6-ஆமிராசியிலிருக்க மதி 3-ஆமிடத்திலிருக்க சனி மகரததிலிருக்க அதுவே லக்கினமாகப் பிறந்தவன் கீர்த்திவந்தனுப் சற்குணவானுமாய் எங்கோன் வீமநாதாருளடைந்த இராசனும் எ-று. 27

இதுவுமது

தொடர்ந்தசொக்கர்வீமேசர்பூம்பொன்றனுத்
துலங்குபெண்மால்குருமதிமாறிஞ
விடந்தனிலுறச்சேய்சனிமயைந்துற
யிறைவராங்கூன்சனிகலைசேயுறப்
படர்ந்தவெய்யோன்புலியுறவேக்தராம்
பகலவன்கறிபொன்னளிசேய்மதி
யடர்ந்தமால்புகரோனும்விடையுற
வவனியாளுமரசிவனுகுமே.

இ-ள். மதியும் குருவும் தனுசில் நிற்க கன்னியில் புதனிற்க குரு சுக்கிரன் 4-ஆமிடத்தில் நிற்க குஜன் சனி 5-ஆமிடத்தில் நிற்கில் இராஜனும். சனி கும்பத்தில் நிற்க மகாத்தில் குசனிற்க சிங்கத்தில் இரவி நிற்கிலும் ராஜனும இரவி மேஷத்தில் நிற்க அதுவே லக்கினமாகக் கர்க்கடகத்தில் குரு நிற்க இதற்கு 11-ஆமிடம் ரிஷபத்தில் புதன் சுக்கிரன் மதி நிற்கிலும் ராஜனும அவனியெங்கும் ஆள வல்லவனுமாம் எ-று. 28

இதுவுமது

அவனிமைந்தன்மறிபுதன்யாழளி
யம்புலியருணனரிசோல்புகர்

தவனர்சேய்கலையில்லெழமன்னராஞ்
சரமன்கன்னியிலெட்சிபன்னொன்றினிற்
சிவன்முடிப்பூவிறைபாட்டிற்சுன்குசன்
சோவைந்திலர்சிந்துமேமெல்லேசுன்
னிவர்குடம்மெரிமான்றலைபொன்றனு
வியங்கிநிற்கவிராசாங்கமாகுமே.

இ-ள். பூமி மைந்தனுகிய மேஷத்தில் குஜன் நிற்கில் மிதுனத்தில் புதன் நிற்க கர்க்கடகத்தில் மதிநிற்க சிங்கத்தில் ரவிநிற்க துலாத்தில் சுக்கிரன் நிற்க மகரத்தில் சனி நிற்க அதுவே இலக்கினமாக செனித்தவன் இராஜனும். புதன் கன்னியில் நிற்க அதுவே இலக்கினமாக 11-ஆமிடத்தில் சுக்கிரன் நிற்க மதி குரு 7-ஆமிடம் நிற்க சனி குசன் 5-ஆமிடம் நிற்கினும் இராஜனும். மதி மேஷத்திலும் சனி கும்பத்திலும் குசன் மகரத்திலும் குரு தனுசிலும் நிற்கினும் ராஜனும் எ-று. 29

இதுவுமது

ராசயோகந்துலாமாரிநாலுற
ராமனென்பதுமூன்றுரிலாபமேற்
போசனுமாடுறைந்தெட்டுப்பொன்குடிப்
புரிந்தவாறுபன்னொன்றினிற்சனியுறப்
பூசுரன்னான்கிற்பத்தரிசுன்னெழிற்
போந்தபன்னொன்றின்மற்றக்கோட்களுறத்
தேசமாளும்பிரபுநல்வேந்தராந்
தேவாரயன்சிவனேவல்செய்யுமே.

இ-ள். துலாத்தில் சுக்கிரனிற்க அது 4-ஆமிடமாக மதி 9-ஆமிடம் நிற்கில் மற்றக் கிரகங்கள் 3 6 11-ஆமிடத்தில் நிற்க இராஜனும். இலக்கினம் ரிஷபமாக மதி 8-ஆமிடம் நிற்க குரு 2-ஆமிடத்தில் நிற்கில் 3 6 11-ஆமிடத்தில் சனி நிற்கில் ராசனும். குரு 4-ஆமிடத்தில் நிற்க 10-ஆமிடத்தில் இரவியிருக்க சனி இலக்கினத்திலிருக்க 11-ஆமிடத்தில் மற்றக்கிரகங்கள்நிற்கில் இராசனுய்த் தேசங்களாண்டு பிரபலனுய் சிவனேவலுக் கினிமைசெய்யும் எ-று. 30

இதுவுமது

செய்யலக்கினம்பொன்கூடிச்சேய்புதன்
றேறுநான்கினிற்பத்தினிற்சந்திரன்
துய்யபன்னொன்றிற்சுன்னுறமன்னராஞ்
சொன்னரெண்டாதியாறிலொன்றுற்கோளும்

வெய்யவாறுதிரெண்டுறச்சத்துரு
விரும்பித்தேடுவதெல்லாமிவன்கொளு
முய்யுஞ்சாதகயோகமெண்பத்துநான்
கும்மாசர்க்கென்னுதர்சொல்லாகுமே.

இ-ள். இலக்கினத்தில் குருவிருந்து 4-ல் குசன் புதன் 10-ல் மதி 11-ல் சனியிருக்கில் இராசனும். 2-க்கு உடையவன் 6-லிருக்கில் இவன் தாரத்தைச் சத்துருக்கள் கொள்வர். 6-க்குடையவன் 2-ல் இருக்கில் சத்துருக்கள் தனத்தை இவன் கொள்ளுவன். ஆக யோகம் 84-ம் இராசயோகம் எ-று. 31

இராஜயோகம் முற்றிற்று.

---

## சகடயோகம், பட்சியோகம்

ஆகுமெட்சியீராறிலேழ்கோட்களு
மணுகிநிற்கச்சகடையலேச்சலா
யேகுநோயனிரந்துணுந்துர்க்குண
னிரண்டில்பத்திறுலேழுகோணிற்கினும்
போகுந்தேசாந்திரத்திற்கெடுகுணன்
புரிந்ததேயிதுபட்சியோகமெனுந்
தோகைபாகர்வீமேசரைப்போற்றியே
தொழுதபேர்க்குநல்யோகந்தொடருமே.

இ-ள். இலக்கினத்திலும் 12 ஆமிடத்திலும் 7-கிரகங்களும் நிற்கில் சகடயோகம் இதற்குபலன் அலேச்சலுண்டாய் நடந்து திரிந்து ஜீவனம்பண்ணுகிறவனுமாய்ப் பொல்லாத சிந்தையுடையவனுமாய் வியாதியஸ்தனுமாயிருப்பன் 2 4 10 ஆமிடம் ஆகிய 3 இராசிகளிலும் 7 கிரகமும் நிற்கில் பட்சியோகம் இதற்குப்பலன் தாதனுமாய்த் தேசாந்திரங்களில் சஞ்சாரமுடையவனுமாய்க் கலகப்பிரியனுமாயிருப்பன் இந்த அவயோகபலன் தீரத்தோகையாகிய நகை முகவல்லித்தாயாரை யிடப்பாகத்தில் வைத்த வீமேசரைத் தொழுதபேர்க்கு மகாபாக்கிய யோகபலன் சித்திக்கும் எ-று. 1

## திரிசங்கடயோகம் சத்தியோகம்

தொடர்ந்தலக்கினமைந்கேழிலொன்பதிற்
றுய்யவேழ்கோளுறத்திரிசங்கட
மடர்ந்தசிற்றின்பீரைந்தெட்டேழாறிற்கோ
ளணுகச்சத்தியோகமிடிநீசனும்
படர்ந்தவெட்சியீராறுபன்னொன்றிலோர்
பத்திலேழ்கோளுறத்தொண்டயோகமா

மிடைந்தவீனத்தொழிலீனமுமுளா
னெந்தைவீமேசர்தாட்கிரங்கார்களே.

இ-ள். இலக்கினம் 5 7 9 ஆமிடம் இந்த 4 இராசியிலும் 7 கிரகங்களும் நிற்கில் திரிசங்கடயோகம் இதற்குப் பலன் நெடுங்காலம் சிற்றின்பத்தை யுடையவனுமாய் மோகாந்தகனு யிருக்கும் 10 8 7 6 ஆமிடம் இந்த 4-இராசியிலும் 7 கிரகங்களும் நிற்கில் சத்தியோகம் இதற்குப் பலன் மிடியன் ஈனத்தொழிலுடையவனுமாய் சோம்பலுடையவனுமாய் தர்மங்களை விலக்கப்பட்டவனுமாய் வீமேசர் பாதத்துக் கிரங்காத பாவியுமா யிருப்பன் எ-று. 2

கூடயோகம் சூலயோகம் உகயோகம்

இரங்குநான்கைந்தாறேழெட்டொன்பத்தினி
லேழுகோளுமுறக்கூடயோகமாம்
பரந்தகோளன்கொடியன்முன்னேரையிற்
படியவேழ்கோளிருசூலயோகமாங்
கரந்தமெய்த்தழும்பன்மிடிபாதகன்
கருதுமேழ்கோளிருராசிமேவிட
வருந்துமேயுகயோகம்வீமேசரை
வணங்கிடார்மிடியார்நரகாகியே.

இ-ள். 4 5 6 7 8 9 10-ஆமிடமாகிய 7 இராசியிலும் 7 கிரகங்களும் நிற்கில் கூடயோகம். இதற்குப் பலன்கோள் சொல்லுகிறவனுமாய் யாவருக்கும் கொடியதாகிய இங்கிசை பண்ணுகிறவனுமாயிருப்பன் 3 இராசியில் 7 கிரகங்களும் நிற்கில் சூலயோகம். இதற்குப் பலன் சரீரத்தில் தழும்புடையவனுமாய் தனயீனனுமாய், மிடியனுமாயிருப்பன் 7 கிரகங்களும் 2 இராசியிலும் நிற்கில் உகயோகம். இதற்குப் பலன் வீமேசரை வணங்காதவனுமாய் மிடிபாதகனுமாய் நரகத்துற் கேதுவாவன் எ-று. 3

கத்திரியோகம் கேணயோகம்

நரகொழிக்கும்வீமேசர்தாணல்கிடார்
நாடுசென்மமிருபுறம்பாவரே
பரவல்கத்திருயோகந்தனமிலான்
பாவிதுக்கன்பரதேசற்பாயுச
னிரவிசெய்மதிகேந்திரமொன்பதா
னிசையவீராறதுகணயோகமாம்
விரவுபுத்திரவீனனுந்துக்கியாம்
வினைஞன்பிச்சைபொய்வேடம்விரும்புமே.

இ-ள். பாவிகள் சென்மிக்கும்போது இலக்கினத்திற் கிருபுறமும் பாபக்கிரகம் நிற்கில் கத்திரியோகம். இதற்குப் பலன் தன

யினனுமாய் வெகு துக்கத்தை யுடையவனுமாய்ப் பரதேசங்களில் சீவிக்கிறவனுமாய் அற்பாயுசுமாயிருப்பன். இரவி மதி குஜன் இவர்கள் கேந்திரத்தில் நிற்க 9-ஆமிடத்ததிபதி 12-ஆமிடத்திலிருந்தால் கெணயோகம். இதற்குப பலன் மந்தபுத்தியுமாய் தரித்திரவானுமாய் வெகு துக்கத்தையுடையவனுமாய் பிச்சையெடுத்து சீவிக்கிறவனுமாய் பொய்வேஷம் விரும்பித்திரிவன எ-று. 4

சாமுத்திரியோகம்

விரும்புமொன்பதாதிபன்வியமுற
மிக்கபன்னிரண்டாதிகுடியுறத்
திரும்புபாவக்கோன்மூன்றுமிடத்துறச்
செய்யசாமுத்திரியோகமாகுமே
வரம்பிலர்தான்பாதாரபோகியாம்
வருந்துமீனத்தொழிலன்கடன்படுந்
துரும்பன்பாபிபிறர்போசனங்கொளுஞ்
சோம்பன்வீமேசுரரையெண்ணுதவன்.

இ-ள். 9-ஆமிடத்ததிபதி வியஸ்தானமாகிய 12-ஆமிடத்திலிருக்க 12 ஆமிடத்ததிபதி 2 ஆமிடத்திலிருக்க 3 ஆமிடத்தில் பாவர் நிற்கில் சாமுத்திரியோகம் இதற்குப் பலன் வைப்பும் வரம்பும் அற்ற பாவியுமாய்ப் பரதார கமனமுடையனுமாய் ஈனத்தொழிலுடையனுமாய் வெகு கடன் படுகிறவனுமாய் ஒருத்தனிட அசனம் பண்ணுகிறவனுமாய் சோம்பலுடையனுமா யிருப்பன் எ-று. 5

வமிசக்ஷயயோகம் ஆவியோகம்

என்றுமாறெட்டிற்பாவக்கோட்களுற
வெட்சியாதிநீசத்திற்குளிகனின்
மண்ணினிற்பிறந்தார்களற்பாயுசு
வங்கிசக்கேடுதையாதிபன்விய
நண்ணப்பாவரீரைந்துறச்சேய்மதி
நாடலாவியோபம்பரதேசியாந்
திண்ணமாம்வீமகாதரைப்போற்றிடார்
செனிக்கிற்கோட்கடானிந்நெறிசெய்யுமே.

இ-ள். 6 8 ஆமிடத்தில் பாபக்கிரகங்கள் நிற்கில் இலக்கினம் நீசத்திலிருக்க குளிகனில் சென்மித்தால் வமிசக்ஷயயோகம். இதற்குப் பலன் அற்பாயுசுடையவன் இவன் பிறந்தது முதலாய் இவன் வங்கிஷம் க்ஷயமாம் இலக்கினாதிபதி 12 ஆமிடத்திலிருக்க 9 ஆமிடத்தில் பாவரிருக்க மதி குஜன் கூடி நிற்கில் ஆவியோகம். இதற்குப் பலன் பரதேசவாசனுமாய் தரித்திரவானுமாய் பாவியுமா யிருப்பன் எ-று. 6

நாசயோகம் மஹாகேதாயோகம்

செய்யவைந்தாறுதையமதில்ரவி
செம்பொன்மூன்றிற்செனித்தாருன்மத்தா
முய்யமான்மதிநாற்கண்டமீதுற
வுதயகர்த்தனைநறகோணேக்காடிடில்
வெய்யபித்தனிதுநாசயோகமாம
விந்துநீர்க்கண்டமைந்தெட்டிற்பாவரே
லையமின்றிமகாகெதாயோகமா
மணுகமெய்நோய்க்குமாகண்டமென்பர்.

இ-ள். 5-ஆமிடத்திலாதல் 6-ஆமிடத்திலாதல் இலக்கினத்திலாதல் இரவிநிற்க 3-ஆமிடத்தில் குருநிற்கப் பிறந்தவன் உன்மத்த பித்தங்கொண்டு போவன். புதன்மதி கேந்திரங்களில் நிற்க இலக்கினாதிபதியைச் சுபக்கிரகம் நோக்காதிருக்கில் உன்மத்த பித்தங் கொண்டுபோவன் இது நாசயோகம் என்பன பாபக்கிரகங்கள்1-4-5-8 ஆம் இடம் நிற்கில் மஹாகெதாயோகம் இதற்குப் பலன் குமாகண்ட வியாதி கொள்வன் எ-று. 7

சண்டாளயோகம் குமரகண்டயோகம்

என்னுமால்சுக்கிரன்சந்திரன்கேந்திரத்
திருக்கராகேழிற்சண்டாளயோகமா
மன்னர்சேயாபினும்விலையுண்டுபோ
மந்தர்சேயெட்டிலாறுறவட்டமே
பொன்னுமொன்பதிலைந்திலிராவிடிற்
போந்தயோகந்துமாகண்டமெனு
முன்னுமெய்நோய்மூயலகனும்வலி
யொழிக்கவீமேசுரர்தாளுகந்திடீர்.

இ-ள். புதன் சுக்கிரன் மதி கேந்திரங்களில்நிற்க இலக்கினத்தில் இராகுயிருக்கில் சண்டாளயோகமாம் இதற்குப்பலன் பட்டத்துக்குரிய இராஜனேயானலும் விலைபட்டுப்போய் ஈனத்தொழிலைச் செய்வன் சனி குஜன் 8-ஆம் இடத்திலிருக்க அப்பேர் பரிவேடமிட்டிருக்க குரு 5-9-ஆமிடம இல்லாதிருக்கில் குமரகண்டயோகம் இதற்குப்பலன் முயலகன்வலியுண்டாம் அவையொழிய வீமேசர் தாளை யுகப்பது எ-று. 8

பிணியோகம் கோமூத்திரியோகம்

உகந்தசேய்சனியெட்சியின்மேவிட
வோரையாதிபனேழிரண்டிலுற

வுகந்தகேந்திரனற்கோளிலாவிடி
லொழிவிலாப்பிணியோகமதிசனி
சுகந்தகேந்திரஞ்சேயரியெட்டினிற்
றுய்யவைந்துபன்னிரண்டுகோமூத்திரி
யுகந்தயோகம்பரதேசத்தேகுமென்
றுற்றநந்தொடுக்காடர்தானேதுமே.

இ-ள். குஜன் சனி இலக்கினத்திலிருக்க சனிநின்ற இராசிக்கதிபதி 7-2-ஆமிடத்திலிருக்க கேந்திரங்களில் சுபக்கிரகம் இல்லாதிருக்கிற் பிணியோகமாம் இதற்குபலன் பொல்லாத வியாதியாளனுகயிருப்பன் மதி சுக்கிரன் கேந்திரங்களில்நிற்க இரவி குஜன் 2-பேரும் 8-5-12 ஆம் இடத்திலிருக்க கோமூத்திரி யோகமாம் இதற்குப்பலன் ஜன்மபூமியிலிராமல் பரதேசம் போவன் எ-று. 9

## கடயோகம் கலமாங்கிசயோகம்

ஓதுகேந்திரநற்கோளிலாமலே
யுன்னுமாறெட்டிற்பன்னிரண்டிற்பாவக்கோள்
போதவேகடயோகஞ்சாதிப்புறம்
புரிந்தவொன்பதாதிப்பனிரண்டுறத்
தீதராஞ்சென்மாதிநற்கோமுறச்
சேய்சனிமதியோடுசினத்துற
மாதிலன்கலமாங்கிசயோகமே
மனேயிலான்மிடியன்னிறைமன்னிடான்.

இ-ள். கேந்திரத்தில் சுபக்கிரகமிராமல் 6 8 12 ஆமிடம் பாபர் நிற்கில் கடகயோகமாம். இதற்குப்பலன் சாதிக்கும் புறம்பானவன் 9 ஆமிடத்ததிபதி 12 ஆமிடத்தி லிருக்கினும இலக்கினதிபதி பாவருடன் சுபக்கிரகங்கள் கலந்து 7 மிடத்தில்நிற்க குஜனுடன் மதிகூடி நிற்கில் கலமாங்கிசயோகமாம் இதற்குப்பலன் தாரமிழக்கிறவனுமாய் தரித்திரவானுமாய் பரதேசவாசனுமாய் பாவியுமாய் வீமேசர்க்கிதமில்லாதவனுமா யிருப்பன் எ-று. 10

## ஈனயோகம் உயிர்ப்புயோகம் பரதேசயோகம்

இறைவர்கண்ணென்பதாதிபதியுங்கூ
டிரண்டுடைந்துஞ்சுபர்மூன்றிலாறினிற்
சறுவுகோளீனயோகமீனத்தொழிற்
கரியன்கேந்திரமெட்சியிற்சந்திர
னறிபொன்னீராறுயிர்ப்பியோகங்கள்சென்
மாதிக்காறெட்டிற்பாவவொன்பாதியுஞ்

செறியுமொன்பதினல்லரில்லாவிடிற்
செனித்தபேர்மிடிதேசாந்திரியனே.

இ-ள். இரவியும் 9 ஆமிடத்ததிபதியும் கூடிநிற்க 2 5 ஆமிடம் சுபக்கிரகங்கள்நிற்க 3 6 ஆமிடம் பாபக்கிரகங்கள் நிற்கில் ஈனயோகம் இதற்குப் பலன் ஈனத்தொழில் செய்வன் சனி கேந்திரத்திலிருக்கில் இலக்கினத்தில் மதியிருக்க குரு 12 ஆமிடத்திலிருக்க உயிர்ப்பிரயோகம். இதற்கு பலன் பிச்சையெடுத்து ஜீவிப்பன். இலக்கினாதிபதிக்கு 6-8-ஆமிடத்தில் பாபக்கிரகம் நிற்க 9 ஆமிடத்ததிபதியுஞ் சுபக்கிரகங்களும் 9 ஆமிடத்தில்லாதிருக்கில் பரதேசயோகம் இதற்குப் பலன் பரதேச வாசனாய்த் திரியும் எ-று. 11

ஊனயோகம்

தேசிகன்வீமகாதனைப்போற்றிடார்
செனிக்கிற்பொன்புகர்நீசஞ்சனியனர்
வாசமாகுமகவாங்கிசமேவிட
மதியருக்கனெழிற்சனிநோக்கிட
வாசைமைந்தருந்தாயும்விலைப்படு
மருக்கர்சேத்திரஞ்சுன்மதிசேத்திர
நேசபானுறச்சேயங்கவீனனு
நெடியவூனயோகமெனுநீதியே.

இ-ள். குரு சுக்கிராள் நீசஸ்தமானத்தில் சனி நவாங்கிசத்தில் நிற்க இவர்களை சனிபார்க்கில் பிள்ளையும் தாயும் விலைப்படும் இரவி க்ஷேத்திரத்தில் சனிநிற்க மதி க்ஷேத்திரத்தில் இரவி நிற்க இரண்டு பேரும் ஒரு இராசியிலிருக்கில் ஊனயோகம் இதற்குப் பலன் சரீரத்தி லூனமுடையவன் துர்ப்பலன் எ-று. 12

இதுவுமது

திச்சயமெட்சிக்கெட்டினிற்சூரிய
நீடியங்குறநற்கோட்கணிற்கினு
முச்சமாகிலிருவிழிமூடமா
முன்னுமூன்றைந்துமொன்பதுபன்னொன்றிற்
கச்சதிக்கோளிருக்கநற்கோட்களுங்
கனிந்துநோக்கினுநிற்கினுங்காதுநோ
யெச்சிப்பல்லறுமேழினிற்பாவக்கோ
ளிலங்கிநிற்கவீபேசரிசைத்ததே.

இ-ள். இலக்கினத்திற்கு 8 ஆமிடத்தில் இரவி பெலவானாய் உச்சமாயிருக்க அவனுடன் சுபக்கிரகங்கள் கூடிநிற்கினும் கண்ணாமாம் 3 5 9 11 ஆமிடம் பாபர் நிற்கில் சுபக்கிரகங்கள் நோக்கி

னும் பெலவானுயிருக்கினும் காது கெட்டுபோம். அல்லாதிருந்தால் காதுக்கூனமாம் 7 ஆமிடத்தில் பாபர்நிற்நிற்கில் பல்லூனமாமென்று வீமேசரிசைத்தது எ-று. 13

இதுவுமது

இசைத்தவெட்சிசுன்னேங்தெழிலொன்பதி
லெரியுற்பிக்கினுன்மத்தம்புகர்ச்குநா
லிசைத்தவெட்டிற்கடியர்நீர்முன்பினு
மெய்தபாபரெரிகயிற்றுற்றிரு
முசித்திடுமாங்கிராற்கோண்முன்பின்னு
முன்புறைத்தபிழையிலைநன்மையே
யிசைக்குமெங்குருவீமேசமூர்த்தியா
மெம்பிரான்மாகயிலாயவள்ளலே.

இ-ள். இலக்கினத்தில் சனிநிற்க 5 7 9 ல் குஜன் நிற்கப்பிறந்தான் உன்மத்த பித்தம் கொண்டுபோம், சுக்கிரனுக்கு 4, 8 ல் பாபர் நிற்க சுக்கிரனுக்கு முன்னும் பாபர்நிற்கில் அக்கினியிலாதல் கயிற்றினலாதல் அவனிட ஸ்திரீ மரணம், சுபக்கிரகங்கள் நோக்கினும் முன் சுக்கிரனுக்கு முன்னும் பின்னுஞ் சுபக்கிரகங்கள் நிற்கினும் முன்பு சொன்ன பிழையில்லையென்று மகா கயிலாசவாசராகிய வீமேசருளினது எ-று. 14

இதுவுமது

வள்ளல்வீமேசரைமதியாருக்கேழ்
மன்னுமெட்சியிற்பாவக்கோணீரரி
கொள்ளவைங்தொன்பதிற்பத்தினுநிபன்
குணமிலான்மிடியாமெனுமெட்சியில்
வெள்ளியுங்தெமொழிந்தார்க்குநாயகன்
வியத்திலேழினுதயத்தில்பாவகோள்
கொள்ளநாளரஸசந்தினின்மேவிடக்
குருந்திலாதவனென்றருள்கூறுமே.

இ-ள். வள்ளலாகிய வீமேசரைப் போற்றாத பாவிகள் ஜெனிக்கும்போது 7 மிடத்திலும் இலக்கினத்திலும் பாபக்கிரகங்கள் நிற்க இரவியுடனே கூட சுக்கிரனும் 5 9 ல் நிற்கில் தாரமில்லாதவனுய் பரஸ்திரீலோலனுய் தாத்திரவானு யிருப்பன். சனி இலக்கினத்திருக்க, சுக்கிரனல் மதியாதல் 7 ஆமிடத்தில் நிற்க கற்பழிந்து போனவர்களுக்கு பத்தாவாவன். 12 ஆமிடம் இலக்கினம் இவற்றில் பாபர்நிற்க 5 ஆமிடம் மதிநிற்கில் மலடனுமென்று கூறப்படும்.

இதுவுமது

அருட்கடற்கினியார்க்கேழினதிப
        னைந்துளானெழினற்பெண்டிருந்திலான்
பருக்குமெட்சியைங்தெட்டினிற்பத்தினிற்
        பன்னிரண்டிலவர்வங்கிசங்கெடுந்
தருக்குமேழ்மால்புகரைந்துபொன்பவர்
        தங்ககாலிற்பிறந்தார்குடிகெடு
மருக்கர்சுன்மதியீராறிற்கண்கெடு
        மருணாபாலெழப்பல்லறுமண்ணலே.

இ-ள். 7-ஆமிடத்துக் கதிபதி 5-ஆமிடத்திலிருக்கிலும் 5-ஆம் இடத்ததிபதி 7-ஆமிடத்திலிருக்கினும் சுயஸ்திரீயனுகும் புத்திர நாசமுண்டாம். இலக்கினம் 5 8 10 12-ஆமிடத்தில் பாபர் இருக்கில் இவன் வங்கிசநாசமாம். 7-ஆமிடம் புதனும் சுக்கிரனும் நிற்க 5-ஆமிடம் குரு நிற்க 4-ஆமிடத்தில் பாபர் நிற்கினும் இவன் வங்கிசம் நாசமாம். இரவி சனி மதி 12-ஆமிடத்தில் நிற்கில் கண்கெடும். 7-ஆமிடத்தில் இரவி பாபருடன் கூடிநிற்கில் பல்லூனமாம் எ-று. 16

இதுவுமது

அண்ணல்பூவாறிலெட்டுறப்பொன்விய
        மைந்துநாற்பாவர்நற்கோணேக்காவிடிற்
கண்ணிறும்வியமிந்துசேயேழ்குடிக்
        கதிருறக்குடித்தேகிவின்மானகய
னிண்ணபாவருடனமதிகுட்டநோய்
        நீடுமெல்லைவிடையளிகேதன்பவர்
நண்ணிநிற்கவுதயாதிகூடவே
        நலஙகிநிற்கப்பருங்குட்டநாடுமே.

இ-ள். அண்ணலாகிய வீமேசர் திருமுடியில் பூவாகச் சூடப்பெற்ற மதி 6 8-ஆமிடம் நிற்க குரு 12-ஆமிடம் நிற்க, 5 9-மிடம் பாபர் நிற்க இவர்களைச் சுபக்கோள் நோக்காதிருக்கில் பிறவிக் குருடனும், 12-ஆமிடம் மதி நிற்க குஜன் 7-ஆமிடம் நிற்க 2-ஆமிடம இரவி நிற்க சரீரத்திலூனமுடையவன். தனுசு மகரம் மீனங்களில் பாவருடன் கூடி மதி நிற்கில் குஷ்டவியாதி கொள்வன். மேஷம ரிஷபம் கர்க்கடகம் விருச்சிகம் இவைகளில் பாவருடன் இலக்கினதிபன் நீசம்பெற்று நிற்கில் பெருங் குஷ்டம் பிடிதது சீர்கேடனும் எ-று. 17

இதுவுமது

நாடுசோமன்பாவருடன்றேளளி
நண்ணிநிற்கக்குயநோய்மதிபவர்
கூடநாலுறக்குட்சிசெவியினோய்
குசன்புகரேழுறப்பவர்நோக்கிட
வாடுநோயுண்டிசேயரியொண்சனி
மன்னனெட்சியைந்திற்கேந்திரஞ்சுப
ரோடுநோக்கிடிற்சன்னியாசியாக்குந்தே
வுத்தமன்வீமநாதருரைத்ததே.

இ-ள். மதி பாபக்கிரகங்களுடன் கூடி விருச்சிகம் கர்க்கடகத்தில் நிற்கில் குயஸ்தானத்தில் நோயுடையவன், மதி பாபருடன் கூடி 4-ஆமிடம் நிற்கில் வயிற்றிலேயாதல் காதிலேயாதல் நோயையுடையவன். சுக்கிரனும் குஜனும் 7-ஆமிடத்தில் நிற்க பாவர் நோக்கில் உண்டி வியாதியுடையவன். குஜன் சனி இரவி குரு இவர்கள் 4 பேரும் இலக்கினத்திலிருக்க 5-ஆமிடம் கேந்திரங்களில் சுபரில்லாதிருக்கில் சன்னியாசியாய்த் திரிவன. தேவோத்தமரான வீமேசுரமூர்த்தி கட்டளையின்படி எ-று. 18

இதுவுமது

உரைத்தபொன்மதிசெங்கதிரெட்சியி
லொருவர்நின்றிடவிந்நெறிப்பத்துறத்
தரித்தசுன்வியஞ்சன்னியாசியல்லதுந்
தக்கவேந்தர்பகைபுகர்நீசமா
இருக்கவெய்யவர்க்கைந்தொன்பதிற்பவ
ரெய்தநற்கோளுதயநோக்காவிடிற்
பெருத்தசன்னியாசியாந்தொடுக்காடர்தம்
பெருமையாற்றிறன்முத்திபெறுவரே.

இ-ள். இரவி மதி குரு இவர்கள் கூடி இலக்கினத்தில் அல்லது 12-ஆமிடத்திலிருக்கினும சனி 12-ஆமிடத்திலிருக்கினும் சுக்கிரன் பகை நீசம்பெற அவனுக்கு 5 9-ஆமிடம் பாபிகள் நிற்க இலக்கினத்திசைச் சுபக்கிரகம் நோக்காதிருந்தால் சன்னியாசியாய் வீமேசராருளால் முத்திபெறுவர் எ-று. 19

இதுவுமது

பெறுவரேசனியெட்சியேழிற்குஜன்
பெற்றசேலளிதேளந்தத்தேயுறச்
செறியுமைந்தினற்கோட்கணோக்காவிடிற்
சேயற்பாவரொழவியம்லக்கினங்

குறையுஞசோமனேங்தெழின்மலடனுங்
கும்பமான்றேண்மறிக்கேழ்சுகன்மதி
யறியவாளனுக்குஞ்சோரம்போயிடு
மரியயன்வீமநாதரமைத்ததே.

இ-ள். இலக்கினத்தில் சனி நிற்க 7ல் குஜன் நிற்க சுக்கிரன் மீனம் கர்க்கடகம் விருச்சிகம் இந்த ராசிகளின் அந்தத்தில்நிற்க சுப க்கிரகங்கள் நின்று நோக்காதிருந்தால் மலடனும். 7 10 12-ஆமிடம் சுக்கிரன் நிற்க அமாபட்சத்து மதி 5 7-ஆமிடம் நிற்கினும் அதுவே யாம். கும்பம் மகாம் விருச்சிகம் மேஷம் இந்த ராசிகளில் சுக்கிரனும் மதியுங் கூடி 7 6-ஆமிடத்திலிருந்தால் இவனிட ஸ்திரீ பரபுருஷ னுடன் கூடித் தன் புருஷனுக்குத் தேடியிடும் எ-று. 20

இதுவுமது

அமைத்தசோமன்கடுங்கோணடுவுற
வருணனேமுறநோயரிசேத்திரஞ்
சமைத்தவிந்துறவிந்துசேத்திரம்ரவி
தங்கவேநவவங்கிசமிந்நெறிக்
குமித்தநோய்சயமிந்திடபத்துறக்
கொடியமூவர்கள்ராசியந்தத்துறத்
திமிர்த்தபூமனற்கோணேக்கப்பின்சொலுங்
தேவதேவர்வீமேசுரர்செப்புமே.

இ-ள். மதி பாபக்கிரகங்களுக்கு நடுவே நிற்க 7-ஆமிடம் இரவி நிற்க வியாதியாளன், இரவி க்ஷேத்திரத்தில் மதி நிற்க மதி க்ஷேத்தி ரத்தில் இரவிநிற்க நவாங்கிசமும் இப்படியாகில் க்ஷயரோகம் கொள் வன். மதி ரிஷபத்தில் நிற்க இராசி அந்தத்தில் பாபர் மூன்றுபேரிரு க்க ஊமையாவன். இவைகளை நற்கோள் நோக்கில் நாட்சென்று பே சுவனென்று தேவாதிதேவராகிய வீமநாதர் செப்பியது எ-று. 21

இதுவுமது

செப்புமாலாட்சிசேய்சனியேயுறச்
சிறுவர்பல்லுமுளைத்துச்செனித்திடு
மப்பர்பூக்கடகத்தெழவங்கிச
னமாநோக்கச்செவிடன்மான்மீனெழ
முப்பில்சேயறியாகின்முடவனு
முதல்வனிந்துசனியெட்சிநோக்கிட
வொப்பிலாமார்பிற்கெட்டிவன்வந்தசே
யுற்றவீமேசர்தாளையுகந்திரான்.

இ-ள். புதனிடக்ஷேத்திரத்தில் குஜன் சனி 2-பேரும் இருக்கப் பிறந்தவன் பல் முளைத்துப் பிறக்கும். மதி கர்க்கடகத்திலிருக்க அதுவே இலக்கினமாக இவர்களைச் சனி குஜன் பார்க்கினும் நிற்கினும் செவிடனாவன். மகம் மீனம் இலக்கினமாக அதில் இரவி குஜன் நிற்க முடவனாவன் இரவி மதி சனி இலக்கினத்தை நோக்கப் பிறந்தான் மெத்தக் கொடியவனாய் வீமேசர் பாதத்துக்கு அன்பில்லாதவனாய்ப் பிறப்பன் எ-று. 22

அவயோகப்படலம் 24-ம் முற்றிற்று.

---

## அரிஷ்டப்படலம்.

### புத்திராதிய அரிஷ்டம்

உகந்தவிந்துசிங்கத்திலுதித்தெழ
வுன்னுசேய்சனிநோக்கவிழிபிலான்
பதிந்தவெட்டேழ்பவருறப்பாவக்கோள்
பற்றநோக்கின்மகவுடன்றாயர்சா
மகிழ்ந்தவிந்தரிசுங்கன்பவர்நடு
மன்னர்நற்கோட்கணோக்கறத்தாயர்சா
மிகழ்ந்தசேயெட்சியேழரிபிள்ளைதா
மிறக்குமென்றுவீமேசரிசைத்ததே.

இ-ள். இரவி மதி சிங்கத்திலிருக்க அதுவே இலக்கினமாக அவர்களைக் குஜன் சனி பார்க்கில் பிறவிக்குருடனாம். 8 7 ஆமிடம் பாவர் நிற்க, அவர்களைப் பாபக்கிரகம் நோக்கில் பிள்ளையுந் தாயும் மரணம். இரவி மதி சுக்கிரன் பாபர்களுக்கு நடுவே நிற்க சுபக்கிரகம் நோக்காதிருக்கில் தாய் மரணம். இலக்கினத்தில் குஜன் நிற்க 7-ஆமிடத்தில் இரவி நிற்க பிள்ளையுந் தாயும் மரணமென்று வீமேசுரர் திருவுளம்பற்றினது எ-று. 1

### இதுவுமது

இசைத்தரெண்டில்வியத்திற்பவருற
விதனைப்பாவக்கோணோக்கிடிற்புத்திர
னிசைத்தசந்திராதித்தரைப்பாவக்கோ
ளிணங்கலக்கினமெட்டினிற்சேயுற
மூசிக்கும்போதிற்கிராணம்பிடித்திடன்
முடியிற்றாயுமகவுமுடிந்திடு

மசக்குமெட்சியேழெட்டிற்பவருற
மாதுரகண்டமயனூர்வரைந்ததே.

இ-ள். 2-12-ஆமிடம் பாபர்நிற்க இதனைப்பாபக்கோள்நோக்கிற் புத்திரமரணம், இரவி மதி பாபருடன்கூடி இலக்கினத்திலிருக்க இலக்கினத்துக்கு 8-மிடத்திற் குஜன நிற்க அப்போது கிரகணமுந் தீண்டுமாகில் தாயும்பிள்ளையு மரணம் இலக்கினம் 7-8-ஆமிடம பாவர்நிற்கில மாதருகெண்டமென்று பிரமாவரைந்தது எ-று. 2

இதுவுமது

வரைந்தசோமனுக்கைந்தொன்பான்மந்தனூர்
மைந்தர் தாய்ச்சாமமைக்கொன்பனைதந்துசேய்
பரிந்தமைந்தாபகலாகிற்றுயர்போம்
பருதிக்கேழ்சேய்பிதாசாகும்பாவனே
யருந்துகோளரிநீரவிடமாயுதத
தாலரும்பிதாச்சூரியன்றன்சரம்
விரிதததாதுசேய்நோக்கப்பகல்பிதா
விரவிந்தசம்போமவேதனுரைத்ததே.

இ-ள். மதிக்கு 6 9-ஆமிடம் சனிநிற்க இராத்திரிஜென்மிக்கில் மாதாமரணம் சுக்கிரனுக்கு 6 5-ஆமிடம் குஜன்நிற்க ஜென்மிக்கின் மாதாமரணம் ரவிச்கு 8-ஆமிடம் சனி குஜன நிற்கப் பிதா மரணம். இரவி பாவர்க்கு நடுவேநிற்க அவனுடன் பாவருங்கூடி நிற்கில் பிதா மரணம். இப்படி இரவியும் பாவருங்கூடி சரராசியில் நிற்கில் ஜலத்தி னுல், விஷத்தினுலாதல், ஆயுதத்தினுலாதல், பிதாமரணம் இரவி சரராசியில் நின்று குஜனபா க்கப் பகலில்ஜென்மிக்கில் பிதா பரதேச மென்று பிரமா விதித்தது எ-று. 3

ஔஷதசித்தி

உரைத்தவைந்தாதியொன்பதிற்பானுவே
லுரைத்தவப்பிரகசெந்தூரசித்தியாம்
விரித்தவான்கெமனமுமாநிந்தெனின்
மிக்கசாநதமாஞ்சேய்க்குநற்றும்பிர
நிரைத்தமான்மருநதாற்றருப்பொன்னினு
னீரன்வெள்ளியில்சுன்ரசவாதமாம்
பெருத்தவான்பணியோன்பதிற்றேறிடிற
பிரட்டுவித்தைகள்சித்தியாஞ்சிவர்க்கே.

இ-ள். 5-ஆமிடத்ததிபதி இலக்கினத்துக்கு 9-ஆமிடத்திலிரு ந்து அவன் இரவியாகில் அப்பிரகசெந்தூரமும் கெமனகுளிகையும்

சித்தியாம், மதியாகில் காந்தசெந்தூரமும் சித்தியாம். குஜனாகில் தாம்பிரபஸ்பம் சித்தியாம். புதனாகில் ஸ்வல்பௌஷத சித்தியாம் குருவாகில் ஹேமபஸ்பம் சித்தியாம். சுக்கிரனானால் இரகசிதபஸ்பம் சித்தியாம். சனியாகில் இரசவாதவித்தை சித்தியாம. இராகுகேது 9-ஆமிடத்தேறி நிற்கில் ஔஷதசித்தியின்றிச் சித்தியானவனைப் போதப் பேசும் புரட்டனும் எ-று. 4

மரணஹேது

சிவவேந்தன்விழிபத்தினாலினிற்
சேயவனுறக்கொண்டன்மேலேறிவீழ்ந்
தாவிபோக்குஞ்சனிநான்மதியமே
ழுங்கில்பத்திற்கிணற்றரிச்சந்திரன்
பூவையில்பவர்நோக்கவேபந்துவாற்
பூணுமேவுபயங்கண்மதிகதிர்
மேவத்தீக்கோள்பகையுடனேக்குற
விரும்பநீரினில்வீழ்ந்துமறிக்குமே.

இ-ள். இரவி 10-ஆமிடத்திலிருக்க 4-ஆமிடம் குஜன்நிற்க மலை மேலேறி விழுந்து மரணமாம் 4-ஆமிடம் சனிநிற்க 8-ஆமிடம் மதி நிற்க 10-மிடம் குஜன் நிற்கில் கிணற்றில்விழுந்து மரணம். இரவி மதி கன்னியில்நிற்க இவனுடன் பாபக்கிரகங்கள் கூடிநிற்கினும் பார்க்கினும் பந்துவினால மரணம். உபயராசிகளில் இரவிமதி இவர் களி லொருவர்நிற்கில் அவருடன் பாவர்பகையாகக் கூடிநிற்கினும் நோக்கினும் ஜலத்தினால் மரணம் எ-று. 5

இதுவுமது

மதித்தசந்திரன்மானுறச்சுன்னளி
வயிற்றுநோயான்மதிசேயுமாட்சியி
லிருக்கமூக்கரிருபுறமும்முற
வெரியிலாயுததானமதிகன்னியிற்
றிருக்கப்பாவரிருபுறமும்முறக
திரவிரதப்பிரமியத்தார்பவர்
நெருக்கச்சோமன்சனியாட்சியிலுயிர்
நெருப்பினாற்கொடுபோஞ்சிவனேசனே.

இ-ள். மதி மகரத்திலும், சனி கர்க்கடகத்திலும் நிற்கில் வயிற்று வ்யாதியால் மரணம். மதி குஜன் ஆட்சியிலிருக்க முன்னும் பின்னும் பாபக்கிரசங்களில்நிற்க அக்கினியிலாதல் ஆயுதத்தினாலாதல் மரணம. மதி கன்னியில்நிற்க பாபக்கிரகம் முன்னும் பின்னும் நிற்க இரத்தப்பிரமியத்தால் மரணம. மதி சனி ஆட்சி இராசியில் பாபக்கிரகங்களுக்கு நடுவேநிற்கில் கயிற்றினாலாதல் அக்கினியினாலாதல் மரணம எ-று. 6

இதுவுமது

கொடியரைந்தொன்பதிலுறப்புண்ணியர்
　　கூடநோக்கில்தேற்றலையாலுயிர்
மடியுமேகயிற்றாலக்கினத்தரி
　　மாரிமேடமதிகன்னிப்பாவக்கோ
ளுடனிருக்கமரணந்தெரிவையா
　　லுதயஞ்சேய்நாலிற்பத்தினிற்சனியுற
வடையைச்சந்திரனறிவரோடெட்டினி
　　லண்ணலாயுதத்தால்பிளப்பாகுமே.

இ-ள். பாபக்கிரகங்கள் 9-ஆமிடத்தில் 5-ஆமிடத்தில் நிற்க அவர்களைச் சுபக்கிரகம் நோக்காவிட்டால் விலங்கினாலாதல், கயிற்றினாலாதல், பாம்பினாலாதல், மரணம் இலக்கினத்தில் இரவியும் மேஷத்தில் சுக்கிரனும் 8-ஆமிடமாகிக் கன்னியில் மதி பாபக்கிரகங்களுடன் கூடிநிற்கில் ஸ்திரீ ஜெனங்களால் மரணம். இரவி குஜன் 4-ஆம்இடம் நிற்க சனி 10-ஆம் இடம் நிற்க மதி பாவக்கிரகத்துடன்கூடி 8-ஆமிடம நிற்கில் சூலத்தால் மரணம் எ-று. 7

இதுவுமது

பிளக்குந்தேய்பிறைநோக்கத்தீபத்துறப்
　　பெரியபானுறுமாகின்மரத்தினா
லளக்குமோரைசுன்னட்டமந்தேய்பிறை
　　யங்கிபத்தில்வளைதடியாலிறு
மிளைக்குமிந்துபத்தொன்பதிற்சேயரி
　　யிலக்கினமைந்தினன்குகோளுங்குசன்
களைக்குநாள்ரவியேழ்பத்திற்சுன்னுறக்
　　கருவியாலிறைகண்மகன்கொல்லுமே.

இ-ள். அமரபட்சத்து மதி 10-ஆம் இடம் குஜன் 4-ஆம் இடம் இரவி இவர்களைப் பார்க்கினும் கூடிநிற்கினும் மரத்திலேறிவிழுந்து மரணம். இலக்கினத்தில் சனிநிற்க 8-ஆம் இடம் அமரபட்சத்து மதியும் குஜனும் 10-ஆம் இடத்திலும் இரவி 4-ம் இடத்திலும் இருக்க வளைதடியாலே மரணம். அமரபட்சத்து மதி 10-ஆமிடம் 9-ஆமிடம் நிற்கில் இரவியும் குஜனும் இலக்கினம் 5-ஆமிடம் நிற்கப் பாசபந்தத்தினாலே மரணம். குஜன் 4-ஆம் இடம் இரவி 7-ஆம் இடம் நிற்கில் அக்கினியிலாதல் இராஜாக்கள் கையிலாதல் மரணம். 10-ஆமிடம் சனி தேரிநிற்கில் ஆயுதத்தினால் இறைவர் கண்ணாகிய இரவி புத்திரன் என்ற எமன் கொல்லுவான் எ-று. 8

இதுவுமது

கொள்ளுநான்மதிசெய்பத்திரண்டுசுன்
    கொல்லுபுன்புழுப்பத்தரினாலிற்சேய்
துள்ளும்வாகனத்தான்மரிக்குஞ்சய
    சோமன்பானுவுதிக்கச்சேயேழினில்
விள்ளுகொத்தளம்வாணத்தாற்போமரவி
    மேடஞ்சேய்துலையுந்துடமான்மறி
வள்ளநீகமரணம்வசூரியால்
    வழுத்தான்மாலயனார்வகுத்ததே.

இ-ள். 4-ஆமிடம் மதி 10-ஆமிடம் குஜன் 2-ஆமிடம் சனிநிற்கில் சரீரத்தில் விரணத்தினாலே புழுத்து மரணம். 10-ஆமிடம் இரவியும் 4-ஆமிடம் குஜனும் நிற்கில். வாகனத்திலேறி விழுந்து மரணம் அமாபட்சத்து மதியும் இரவியும் இலக்கினத்திலிருக்க குஜன் 7-ம் இடம் நிற்க கோட்டை கொத்தளத்திலே வாணத்திலே மரணம். இரவி மேஷத்திலும், குஜன் துலாத்திலும், மதி மகரகும்பத்திலும் இருக்க வசூரியால் மரணமென்று திரிமூர்த்திகளும் தானாகிய வீமே 9
சுரமூர்த்தி வகுத்தது எ-று.

இதுவுமது

வகுத்தபத்தினிற்றேய்பிறையேழரி
    மன்னுசேய்நான்கினீர்ப்பாட்டின்மாரணஞ்
சுகித்ததேய்பிறைசேய்பார்க்கவட்டமஞ்
    சன்குயத்தின்புழுவாற்கொலும்வினை
பகுத்தபானுசேயேழினாற்சந்திரன்
    பரவுசுன்னெட்டிற்பட்சிதோடங்கொலு
மிருந்தநாள்ராசிகோளண்டபிண்டமும்
    விதித்தவீசர்திருவிளையாட்டிதே.

இ-ள். 10-ஆமிடம் அமாபட்சத்து மதியும் 7-ஆமிடம் இரவியும் 4-ஆமிடம் குசனும் நிற்கில் நீர்ப்பாட்டில் மரணம். அமாபட்சத்து மதி பெலவானாய் குசன் பார்க்கில் 10-ஆமிடத்தில் சனி நிற்கில் குயஸ்தானத்திற் புண்ணாய்ப் புழுத்து மரணம். இரவியும் குசனும் 7-ஆமிடம் நிற்கில் 4-மிடம் க்ஷயமதி நிற்க சனி 8-ஆமிடம் நிற்கில் பட்சிதோஷத்தால் மரணம் இப்படி நாள் இராசி நவக்கிரகங்களால் அண்டபிண்டமும் படைத்தருளும் வீமேசுர மூர்த்தியின் திருவிளை 10
யாட்டு எ-று.

இதுவுமது

ஆட்ல்சூரியன்சென்மமொன்பான்பதி
    யமகியெட்டுச்சனியைந்தின்மேவிட

வீடிடிந்துசுவராவிடிகளால்
வெடித்தகல்லான்மலையேறிவீழ்ந்துசாந்
தேடுதில்லையர்தென்கயிலாயமாந்
திருவணுமலையார்சம்புநாதனூர்
கூடுகம்பருமானவீமேசுரன்
கூத்தனங்குருநாதனுரைத்ததே.

இ-ள். இரவி இலக்கினத்திலும் மதி 9-ஆமிடத்திலும் குஜன் 8-ஆமிடத்திலும் சனி 5-ஆமிடத்திலும் நிற்கில் வீட்டிலிருந்தால் இடிவிழுந்தாதல் கல்விழுந்தாதல் மலைமேலேறி விழுந்தால் மரணம். திருத்தில்லையில் நடேசரும் திருவண்ணுமலையில் அருணசலேசரும் சம்புநாதத்தில் சம்புமாகேசுரரும் திருக்கச்சியில் ஏகாம்பரரும் ஆகிய வீமேசுரமூர்த்தி என்னும் எமது குருதேசிகருரைத்ததாம் எ-று. 11

இதுவுமது

நாதர்முன்னுவாபத்திற்சேய்நோயதா
நன்று தாய்ரெண்டின்முற்பத்திற்றந்தைநோய்
சேதநாற்பதின்மாமனேற்பதினிற்
சேயிறுமாறுபத்தினினன்மையே
போதுமாமகமூலமுற்காலினிற்
புதல்வர்நோயிருகான்மூலமாதுருந்
தீதுறும்பொருண்மூன்றினலல்லதே
செய்யவீமேசர்தாளுறத்தேடுமே.

இ-ள். அமாவாசைநாள் புத்திரர் பிறக்கில் முதற்பத்து நாழிகையிற் பிறந்தபிள்ளைக்குத்தோஷம். 2-ஆம் 10-ல் தாய்க்கு 3-ஆம் 10-ல் பிதாவுக்கு 4-ஆம் 10-ல் மாமனுக்கு 5-ஆம் 10-ல் பிள்ளைக்கு 6-ஆம் 10-ல் நன்மையென்றறிக. இனி நட்சத்திரம் கண்டறியும்படி அசுவினி மகம் மூலம் முதற்காலில் புத்திரதோஷம். மூலம் 2-ஆம் கால் மாதாவுக்குத் தோஷம். 3-ஆம் கால் புத்திரனுக்குத்தோஷம் 4-ஆம் கால் நல்லது. சிவகுரு வீமேசர்திருவடியை நினைந்து அபிஷேகமும் ஓமசாந்தியும் பண்ணினல் தோஷந்தீரும் எ-று. 12

இதுவுமது

தேறுகோட்டைமுன்றினிற்றுயருஞ்
செய்யரெண்டினிற்றுய்ப்பாட்டன்மூன்றினிற்
கூறுமாமனுலந்தினின்மைந்தர்போம்
குருவுமாறிற்பொருட்சேதமேழினில்

வீறுவங்கிசஞ்சேதமாமெட்டினின்
மிக்கமூத்தான்றமக்கைமரிக்குமே
சீறுமொன்பதிற்பாரியின்றந்தையாஞ்
செய்யபத்தாறிற்றந்தைகோன்சாற்றுமே.

இ-ள். கேட்டைமுதல் 6-நாழிகையில் தாய்க்குந் தாயைப்பெற்ற பாட்டிக்கும் தோஷம் 2-ஆம் 6-ல் தாயைப்பெற்ற பாட்டனுக்குத் தோஷம் 3-ஆம் 6-ல் மாமனுக்குத்தோஷம். 4-ஆம் 6-ல் 5-ஆம் 6-ல் பிள்ளைக்குத்தோஷம் 6-ஆம் 6-ல் பொருட்சேதம். 7 ம் 6-ல் வங்கிசக்ஷயம் 8 ஆம் 6ல் தமயன் தமக்கைக்குத் தோஷம், 9 ஆம் 6ல் பெண்கொடுத்த மாமனுக்குத்தோஷம் 10 ஆம் 6ல் பிதாவுக்குத் தோஷம் எ-று. 13

இதுவுமது

சாற்றுமாயிலியமுதற்காலலந்
தனமறும்ரெண்டின்மூன்றிற்றாய்தந்தைநா
லேற்றரேவதிநாற்காலிற்றந்தைநோ
யினியவுத்திரமுன்காற்பிதாவிறு
தேற்றபூரமணியுங்கான்மூன்றினிற்
செய்யவான்பிதாபெண்பெறிற்றாயர்நோய்
போற்றுநற்கோணோக்கிடிற்கேடிலைப்
புனிதர்நந்தொடுக்காடர்புரிந்ததே.

இ ள். ஆயிலிய முதற்கால் நன்மை 2 ஆம்கால் பொருட்சேதம் 3 ஆம் கால் மாதுருகெண்டம் 4 ஆம் கால் பிதுரு கெண்டம் இரேவதி 4 ஆம் சால் பிதுருகெண்டம் உத்திரம் முதற்கால் பிருதுகெண்டம் ஆயிலியம் பரணி 3ஆம் கால் பிள்ளை பிறக்கில் பிதுருமரணம் பெண்பிறக்கில் மாதுருமரணம் உடனுயிரை நற்கோள்நிற்குதல் நோக்குதல் செய்யில் கண்டதோஷங்களில்லையேன்று வீமேசுர ரருள் புரிந்தது எ று. 14

இதுவுமது

புரிந்தரேவதியந்தமுன்னாண்முதற்
போந்தகேட்டையுமூலமுமிந்நிலை
தெரிந்தபாம்பந்தமாகிமுன்னாழிகை
செய்யரெண்டிற்பிறந்தவர்தீயரே
தெரிந்துவாவின்பின்கானடுமுன்னுறச்
சேயைவாங்கித்தேசத்தானமீந்துபின்
வருந்திவீமேசர்தாளைவணங்கியே
வளர்ந்தபிள்ளைமகத்தாம்வகுத்ததே.

இ-ள். இரேவதி அந்தத்தில் 2 நாழிகையும் ஆயிலியம் 4 ஆம் கால் அந்தம் 2 நாழிகையும் மகம் முன் 2 நாழிகையும் அசுவினி முதற்பாத முன் 2 நாழிகையும் கேட்டை அந்தம் 2 நாழிகையும், மூலம் முன் 2 நாழிகையும் இந்த வேளைகளிற் பிறந்தபிள்ளைக்கு வெகுதோஷமுண்டு. இந்த தோஷம் தீருதற்குப் பரிகாரம் சாதுவான கறவைப்பசுவைப் பின்னங்கால் நடு அடிமூலே தாங்க முன்னங்கால் நடுவாகப் பிள்ளையைவாங்கி பசுவின் முகத்தில் வைத்து இந்த பிள்ளையைப் பசுவீன்றதாகப் பார்த்து ஈன்றமாத்திரம் பசுவைத் தானமீந்து இப்படிக் கோமுக சாந்தி பண்ணினல் நன்மை எ-று. 15

இதுவுமது

வருத்தநோய்மரணமாறும்மெட்டுமே
மருவிற்றீயர்பகைநீசமாற்றெணுச்
செருத்தகோயுடையோர்பகைநீசமே
சேரினும்பிணிதீராமரணமே
ககத்தின்ராசிபிணிபதிகவிற்றீயகோள்
கவிழ்ந்தராசிகவிப்பினுநோய்விடா
மிருத்தசோமனரவுறில்வெம்பிணி
மிக்கவீமேசுரர்தீர்ப்பர்வேண்டினே.

இ-ள். உதயத்துக்கு 6ம் இராசி பிணிக்காயறென்றும் 8 ஆம் இராசி மரணக்கயறெனறும் சொல்வது யாதாமொருவன் வந்து வினவில் உதயத்துக்கு 6 ஆம் இராசி ஆரூடமாகில் பிணித்திறம் 6 ஆம் இராசியைப் பாவக்கோள் பகை நீசமாகப்பார்க்கில்தீராதபிணியென்க. உதயத்துக்கு 8 ஆமிராசியாகில் மரணமென்று சொல்வது உதயத்துக்கு 6 ஆமிராசி பகைநீசங்களில் அஸ்தமானத்தில் நிற்கில் பிணிதீராது மரண மென்க. தலைக்கீழா யுதிக்கப்பட்ட இராசியில் ஒரு இராசி ஆரூடமாகவும் அவ்விராசிகளிலே ஒரு இராசி அவனை கவிக்கினும பிணி தீராது அதனைப் பாவக்கோள் நோக்கினும் உதயகண்டங்களில் பாவக்கோள் நிற்கினும் பிணிதீராது பிணிக்கயிற்றில் மரணக்கயிற்றில் ஆரூடமாக வந்து நிற்கினும் பிணிதீராது மரணமென்க இதில் பாபக்கிரகங்கள் நிற்கினும் மரணமென்க இவர்கள் உதையாரூடக் கவிப்பில் நிற்கில் இராசியுடையவனாக நிற்கினும் வினவினவனுக்கு நாடோறும் சத்துரு உண்டென்றும் பாம்புகடித்ததென்றும் தீயப்பட்டதென்றும் சொல்க இந்தப் பிணிதீர உருத்திராபிஷேகம் திருவிளக்கும் மகேசுர பூசையும் பண்ணத் தீரும் எ-று. 16

இதுவுமது

வேணுமேதலைசேப்முகம்வெள்ளியே
மேதைகண்டமதிபுபமாறபமி

காணுமேபொன்வயிறரைசுன்றுடைக்
கடியர்கீழ்தலைகொச்சையினீறதாய்
பூணுமேமுகம்வாய்ப்பணேமார்முலை
போதுகல்லுதாம்வென்னரைதுடை
பேணுஞ்சங்குயர்கீழ்க்காலிராசியின்
பேரதாகவீமேசனைப்பேசுமே.

இ-ள். சரீரம் நவக்கிரகத்தாலும் இராசியாலும் அமைத்தபடி தலை குஜன் முகம் சுக்கிரன் கண்டம் புதன் தோள் மதி மார்பு இரவி வயிறு குரு துடை சனி இராகு கணைக்கால் இனி இராசியில் மேஷம் தலை ரிஷபம வாய் மிதுனம் தோள் கடகம் மார்பு சிங்கம் முலை கன்னி வயிறு துலாம் முதுகு விருட்சிகம் அரை தனுசு துடை மகரம் கணைக்காலும விழிகளும் கும்பம் புறவடி மீனம் உள்ளபடி இப்படி இராசி நிலைபெற பிணிகளென்றும் வந்தக் கோட்களால வீமேசர் அருள்பெற்றோர் வலிகொண்டு பேசுவது எ-று. 17

இதுவுமது

பேசுமக்கோடனுடவினிதாகவே
பெற்றசென்னிசேயந்தம்பிறித்தநோய்
பூசல்சேய்தலைநோய்சுரமூலர்பொன்
புந்நிகைக்கீழ்சழலைப்புகர்விழி
தீசெய்தாநிற்கக்கொட்புறுமேமதி
சேதஞ்சிதஞ்சனிவாதயினோயே
யூசலின்கொட்பாமபுந்திநோய்பானரை
யுற்றுவீமேசுரர்கழலோதுமே.

இ-ள் இனி நவக்கிரகங்களால் தேகத்தில் வியாதி நிச்சயிக்கும் படி குஜன் தலைநோய் வெதுப்பு இருணி குரு மூலரோகம் வயிற்று நோய் உதிர்ப்பாடென்றும புதன் வாயுவும் கைக்கீழ் சழலையும் கண்ட மாலையும் என்று சுக்கிரன் கண்ணோய்குலைப்பும வெப்பும் நீர்க்கொப் புளமும் என்றும் மதிக்கு சேற்றுமம சீதம் சனிக்குவாதம் சூலை ஈளை வியாதியென்றும் இராகுவுக்கு சோடை நஞ்சிட்ட பீடையும் ரவிக்கு வயிற்றுநோ யரையாப்பு இவை முதலானவை வியாதி தீருகைக்கு அவரவர் வாரங்களில் அவரவர் சாமங்களிலும் சகஸ்ரநாமத்தால் உருத்திராபிஷேகமும் நூற்றெட்டு நெய்யினுல் திருவிளக்கும் பஞ்ச முகத்திலும் பஞ்சமூர்த்திகட்கும் திருப்தியாக அமுது ஆறுதிக்கத் தீரும் எ று. 18

இதுவுமது

ஓதுசுந்துதலொண் தருவங்கண்
ணுற்றவானனமேலுநட்டிடோடிறந்

தீதின்மோவாய்வலமிடங்கைவிரற்
றிகழ்ந்தகண்முராமுலையுந்தியாம்
வேதிமெல்லிடைவென்னரையாமுயிர்
விளங்குதண்டுகுதங்குறங்காமிரண்
டோதுவார்முழந்தாள்கணைக்காலடி
யுள்ளும்வீமேசுராடியோதுமே.

இ-ள். கார்த்திகைமுதல் பரணியீராக 27-நாளும் அங்கக்குறிக் கொள்ளும்படி கார்த்திகைக்கு தலை ரோகணி நெற்றி மிருகசிரிடம் புருவம் திருவாதிரை கண் புனர்பூசம முகம் பூசம் மேலுதடு ஆயிலியம கீழுதடு மகம் மோவாய் பூரம் வலக்கை உத்திரம இடக்கை, அஸ்தம கைவிரல் சித்திரை கழுத்து சுவாதி மார்பு விசாகம் முலை அனுஷம் வயிறு கேட்டை இடை மூலம் முதுகு பூராடம் அரை உத்திராடம் பீஜம் திருவோணம் ஆண்குறி அவிட்டம குதம் சதயம் வலத்துடை பூரட்டாதி இடதுதுடை உத்திரட்டாதி முழந்தாள் இரேவதி கணைக்கால் அசுவினி புறவடி பரணி உள்ளங்கால் இந்தஸ்தானததில் நல்வினை தீவினை கிரக நிலையாற்கண்டு சொல்லுவது எ-று. 19

இதுவுமது

ஓதுமாறேழினிற்கடுங்சோட்களே
யுறையுற்றிங்களதற்காறுநோய்விடா
போதுவிற்பறிவேடம்பெரிதுநோய்
பொன்புதன்புகாபோக்குமபிணியையே
நீதிகோண்மதிசேருநாளெததனை
நேருபொன்பதுபத்துதயந்தனிற்
சாதுவானகோடேறினுநோபறுந்
தம்பிரான்வீமநாதர்தாள்சாற்றுமே.

இ-ள். ஒருவன் வினவினபோது உதயத்திற்கு 6-ஆம் இராசியிலும் 7-ஆம் இராசியிலும பாவக்கோள் நிற்க அதற்கு 7-ஆம் இடத்தில் மதி நிறகப் பிணி தீராதென்க. இந்திரதனுசு பரிவேடம் அந்தரத்தே தோன்றில் பெருநோய் தீராதெனறு குரு புதன் சுக்கிரன் இவர்கள் பிணிக்கிருன 6-ஆமிராசியினும் மரணகயிற்றினும் நிறகினும் நோக்கினும நோய் தீரும. மரணமில்லையென்று நிச்சயம் பண்ணுவது. எத்தனைநாட் செலலுமென்றால் பிணிக்கயிற்றில் நற்கோள் நிற்கினும் நோக்கினும் இவர்களுடன் மதிவந்து கூடுகிற நாளை அறிந்து எண்ணி அதுதொகை எததனை கண்டதோ அத்தனை நாளென்று சொல்வது. உதயததுக்கு 9 10 5-ஆம் இடம் நற்கோள் நட்பாட்சியுச்சத்திலும் வலிபெற்று நிற்கில் நோய் தீருமென்று வீமேசராருளிவது எ-று. 20

இதுவுமது

சாற்றுமெய்ப்பிணிக்கோள்வலிகாலமுந்
  தக்கவீமேசுராபிடேகமே
சேர்க்குமாகேசுரர்க்கன்னசாந்தியுஞ்
  செய்யநோயறுஞ்சீவனுந்தேறுமே
பார்க்கின்பாரணமேறரிதேள்குடம்
  பற்றியேதமைத்தாழுடினுச்சியே
கோற்குவின்மரணநீசர்கொச்சையாழ்
  கூறநீசங்குளிர்பெண்மரணமே.

இ-ள். யாதொருவன் வந்து பிணித்திறம் வினவில் உதயாரூடக் கவிப்பினும் நாற்கண்டத்தினும் வலிபெற்று நிற்கிற கோளின் காலமென்றறிவது. ஆண்டு மாதம் பட்சம் நாள் முன் சொன்னபடி இரவிக்கு 6-மாதம் மதிக்கு 15-நாழிகை குஜனுக்கு ஒருநாள் புதனுக்கு 2-மாதம் குருவுக்கு ஒருமாதம் சுக்கிரனுக்கு 15-நாள் சனி பாம்புக்கு ஒருவருடம் இப்படி நட்பாட்சி யுச்சங்களில் நாற்கண்டத்திலும் தேறி நின்ற கோட்களால் அவரவர் வாரத்தில் பிணிதீருமென்க. பிணிக்கயிற்றைக் கண்ட கோளின் வாரத்திலும் சாமத்திலும் தம்பிரானாகிய வீமேசுரருக் கபிஷேகஞ் செய்தால் பிணிதீருமென்பது. இனி மரணகண்டமறியும்படி ரிஷபம் சிம்மம் கும்பம் விருட்சிகம் இவை தன்னைத்தானே கவிக்கில் உச்சம், நன்மை துலாத்தை தனுசு கவிக்கில் நீசம், மிதுனத்தை மேஷம் கவிக்கில் மரணம். கர்க்கடகத்தை கன்னி கவிக்கில் நீசம் கன்னியை கர்க்கடகம் கவிக்கில் மரணம் மகரத்தை மீனம் கவிக்கில் நீசம். மீனத்தை மகரம் கவிக்கில் மரணம் எ-று. 21

இதுவுமது

மரணநீசமுமற்றதுமிங்கிலை
  வலியஞாயிறுதீய்மதிநீர்சனி
முரணவற்பம்புகர்குலைபாம்புதன்
  முரணவாயுக்கருவிசேய்நஞ்சதா
மரணநோயின்மதியுறத்தீயகோள்
  வலியாயுடனிற்கினுநோக்கினுங்
கருணைசேருயிர்போமெனுங்காலமே
  கண்டுகொள்கவீமேசர்கருதியே.

இ-ள். கர்க்கடகம் கன்னி மகரம் மீனம் நீசமரணம் முன் விருத்தியானது. இனி வலிபெற்ற கோட்களால் மரணம். இரவி நெருப்பால் மதி நீரால் சனி கருவிபால் சுக்கிரன் குலைப்பு 10-ஆம் ஒரையில்

பாவக்கோள் நிற்க 3 ஆம் ஓரையில் இரவி நிற்க 10 ஆம் நாள் மரணம். இந்நிலே குருவும் சுக்கிரனும் 3 ஆமிடத்தில் நிற்க 7 ஆம்நாள் மரணம். 8-ஆம் ராசியில் 4-ஆம் ராசியில் பாவக்கோள் நிற்க 8-ஆம் நாள் மரணம். இப்படி கர்மவழிபட்டுப் போகாமல் வீமேசர் தாளைப் புகழுக என-று. 22

மறுமைப்பலன்

கூறுமோரெண்டினுலீரேழுநாள்
குடியிலெட்சியுமூன்றுநாள்சந்திரன்
சாருயோரையாருடக்கவிப்பினுஞ்
சகலதீயர்வலிபெறிற்பத்திலே
காரிசேயேழ்மரணமுதயமே
காணநீசநரகமபகைவிலாங்
சாருமெட்சியுநட்பெனவுச்சிமே
லயர்வீமேசுரரடிசகாலரே.

இ-ள். 2-ஆம் இராசி 4-ஆம் இராசியில் பாவக்கோள் நிற்கில் 14-ஆம நாளில் மரணம். 2-ஆம ராசியில் லக்கினத்தால் நிற்கில் 3-ஆம் நாளில் மரணம். மதி உதயாரூடக்கவிப்பில் நிற்கில், பாவக்கோள் நிற்கினும் வலிபெற்று நோக்கினும் மரணம். 10-ஆமிடத்தில் பாவக்கோள் நிற்க உதயத்துக்கு 7-ஆமிடம் சனி குஜன்நிற்க மரணம். மரணகாலத்தில் உதயராசியைப் பாவக்கோள் நற்கோள் நீசனுக நோக்குதல் நிற்குதல் செய்யில் நரகத்தில்வீழ்வர். பகைக்கோள் நோக்கில் விலங்குசாதியாய்ப் பிறக்கும். நட்பாட்சியாகில் மானிடராயச் செனிக்கும். பாவக்கோள் நட்பாகில் மூர்க்கராய்ச் செனிக்கும். சுபக்கிரகங்களாகில் தேவராய் பிறப்பர். உச்சக்கோள் நோக்குதல் செய்யில் வீமநாதர் பாதம்பெறும். மரிக்கும்காலம் வலிபெற்ற கிரகத்தின் அகத்திலே அவரவர்களுக்குச் சொல்லுங் காலங்களில் செனிக்கும். நற்கோள் நாற்கண்டங்களில் நிற்கில் ஒரு நற்கோளுச்சமாக நோக்குதல் செயில் பரிபூரணமான பதி சேர்வர் என-று. 23

அரிஷ்டப்படலம் முற்றிற்று.

---

## மகாதிசைப் படலம்

### மகாதிசைப்பார்க்கும் அடைவு

ஆதவனுவிரந்துபார்சேய்மும்மீ
னாவுசெங்கைபொன்மாலேசுன்றையதே
தூதுவன்பணிக்கேதுவுக்கேமகஞ்
சுக்கிரன்பூரமொன்பதுமாதிசை

யோதுமுத்திரமுன்குளமந்தமா
யுத்திராடமுன்பூரமீறுகவே
போதுமொன்பதுகோட்கண்மூவேழுநாள்
புரியும்புத்தியிரவிமுன்னுகவே.

இ-ள். இரவி கார்த்திகை மதி ரோகணி குஜன் மிருகசீரிஷம் இராகு திருவாதிரை குரு புநர்பூசம் சனி பூசம் புதன் ஆயில்யம் கேது மகம் சுக்கிரன் பூரம் இந்த 9-நட்சத்திரமும் 9-கிரகமும் ஆம் இப்படியே உத்திரமுதல் பூராடமீறுகவும் உத்திர முதல் பரணி ஈறுகவும் கொண்டு மகாதிசை பார்ப்பது எ-று. 1

## மகாதிசை ஆண்டும் அந்திராந்திரம் அந்திரசூட்சுமம் பிராணன் இவைகளைப் பிரிக்கும் அடைவும்

இரவிக்காறுண்டுமீசர்பூப்பத்ததா
மெரியவர்க்கெழுமூவாறிராகுபொன்
மருவுபன்னாறுமந்தர்பததொன்பது
மால்பன்னேழ்கேதுவேழ்மீரிருபதே
யருணர்மாதிசைமூன்றிற்பெருக்கியே
யதனையாறிற்பெருக்கந்திரதிசை
வருவதந்திரநூற்றிருபத்திலீ
மன்னுமந்திராந்திரஞ்சூட்சமம்பிரமாணம்.

இ-ள். இரவிக்கு ஆண்டு 6 மதிக்கு 10 குஜனுக்கு 7 இராகுவுக்கு 18 குருவுக்கு 16 சனிக்கு 19 புதனுக்கு 17 கேதுவுக்கு 7 சுக்கிரனுக்கு 20 ஆகப் பரமாயுசு 120 இனி அந்திரம்பார்க்கும் அடைவு இரவி திசை வருஷத்தை 3-ற்பெருக்க 18 ஆகும் இதனை மேற்படி திசை வருஷத்திற் பெருக்க 108 ஆகும். இந்த 108ம் இரவி மதி திசையில் இரவி அந்திரநாள் என்றறிக. இப்படியே மற்றவையும் அந்திராந்திரம் அறியும்படி முன் இரவிக்குச் சொன்ன நாள் 108-ம் பரமாயுசாகிய 120-க்கிய ஓராண்டுக்கு வருநாள் முக்காலே மூணும்மாவுக்கு நாழிகை 54 இதனை இரவி ஆண்டாகிய 6ல் பெருக்க இரவிக்கு அந்திராந்திரதிசை நாள் 5 நாழிகை 24 இப்படி நவக்கிரகங்களும அவரவர் வருஷத்துக்கு வரும் விழுக்காடு 120-க்கிந்து ஈந்தநாளை அவரவ ராண்டிற் பெருக்கில் அந்திராந்திரமாம். சூட்சுமம் அறியும்படி இரவி அந்திராந்திர நாள் 5-ம் நாழிகை 24யும் 125க்கிய வருநாளை இரவி ஆண்டில்பெருக்கிற் இரவி சூட்சுமம் 16 நாழிகையும் 12 விநாடி யென்றறிக மற்றுமுள்ள கிரகங்களுக்கும் அவரவர் வருஷத்தை அந்திராந்திரம பார்த்த அடைவே பார்ப்பது இனி பிராணன் அறியும்படி

முன் இரவிக்கு சூட்சுமம் வரும் நாழிகை 16-விநாடி 12-டையும் 120க்கேய ஓராண்டுக்கு வரும் பலனை இரவி ஆண்டு 6-ற் பெருக்க இரவிக்கு பிராணன் விநாடி 48 தற்பரை 36 இவ்வடைவே அவரவர்க்குப் பார்ப்பது எ-று. 2

### இரவி திசாபலன்

மாறுமேலருக்கன்றிசையூர்பொன்போ
மருவுபித்தமதியூண்மிகநலஞ்
சீறுசேய்பகைதீப்பிணிராகுவூண்
சிறைபடுங்கணேநோயாம்வியாழமு
ணேறுதண்டுந்தவந்தானமந்தனூ
னிரணநோய்மிடிமான்ஞானங்கல்வியுங்
கூறுகேதுகொடுமைப்புகர்நலங்
கொண்டுபாவர்வீமேசுரர்கூறவே.

இ-ள். இரவி திசைப்பலன் ஊர்விட்டுப்போம். அர்த்தஹானியுண்டாம். உளைப்பும் பித்தமும் வரும். மதி திசைப்பலன். அடியாரும் பந்துக்களும் ஆர்த்தலாபமும் ஸ்திரீயும் உண்டாம். குஜன் திசைப்பலன் பகையும் பசியும் பூசலும் வியாதியும் அக்கினி பயமுமுண்டாம். ராகுதிசைப்பலன் மரணமும் மாதுரு பிதுரு மாதுலன் கண்டம் பந்து மரணம் சிறை அர்த்தஹானி விஷகண்டமுண்டாம். குரு திசைப்பலன் அர்த்தலாபம் வாகன சவுக்கியமும் இராஜசிநேகமுமுண்டு. சனிதிசைப் பலன் க்ஷேத்திரங்களும் அர்த்தமும் அடியாரும் கன்றுகாலியும் பொய்ப்பசியும் பகையும் தேசாந்திரமுமுண்டாம். புதன் திசைப்பலன் அறிவும் கல்வியும் தர்மமும் தவமும் புத்திரரும் உண்டாம. கேது திசைப்பலன் பிணியும் மாணமும் விஷப்பிரயோகமு மிருத்திவுமுண்டாம். சுக்கிரன் திசைப்பலன் தர்மமும் ஸ்திரீ சேர்த்தியும் புத்திரோற்பத்தியும் வேளாண்மையும் உண்டாம். இவையெல்லாம் ஜென்மலக்கினத்திற்குத் தனலாபகேந்திர திரிகோணங்களில சுபக்கிரகங்கள் தேறிநின்றால் வெகு நன்மையாம் பாபக்கிரகங்கள் தேறி நின்றால் சிறிது நன்மை கொடுப்பார்கள். 6 8 12 ஆம் இடம் பகை நீசம். அஸ்தமானங்களில் இருந்த சுபக்கிரகம் சுபலன் பாபக்கிரகமாகில் அற்ப பலன் எ-று. 3

### இரவி அந்திரபலன்

ஈசர்கண்டிசைக்கேடுசிலவுநோ
யிந்துவெற்றியெரிலாபமாம்பிடர்ப்
பூசனற்குப்பிணிகேடுபொன்னழி
போதுமந்தன்பகைபுத்ரநாசநோய்

பேசுபுந்திமால்பிரபுவானேய்களாற்
பேதங்கேதுதேசாந்திரநோய்புவி
வாசமாரிதவநோயிடுக்கணும்
வரும்வெதுப்புமனமிடிகூறுமே.

இ-ள். இரவி அந்திரநாள் 108-க்கு பலக்கேடும் பொருட்செலவும் உற்றாரழிவும் மதிநாள் 108-க்கு பலன் வெற்றி தனலாபஸ்திரீபேறு காரியலாபம். குஜன் நாள் 126-க்கு இராசாக்களால் அர்த்தலாபம் தேசம்பெறும் வெற்றியுண்டாம். இராகுவுக்கு நாள் 324-க்கு பலன் பகை மனத்திடர் வியாதி அர்த்தஹானி பயம். குருநாள் 288க்கு பலன் வியாதிபீடை தனம் விரோதமுண்டாம். சனி பொசிப்பு நாள் 342-க்கு பலன் இராஜபயம் புத்திரநாசம் சத்துருக்களுண்டாம். புதனுக்கு நாள் 306-க்கு பலன் பிரபுக்களால் வியசனம் சரீரவாதை வயிற்றுநோய் குஷ்டம். கேதுநாள் 126-க்குப் பலன் தேசாந்திரம் க்ஷயவியாதி கிராணியுண்டாம். சுக்கிரன் நாள் 360-க்குப் பலன் தலைநோய் வெதுப்புமிடியும் உண்டாம் எ-று. 4

மதியந்திர பலன்

கூருஞ்சந்திரனிற்சசிகோதைசேய்
கூறற்றிரத்திடர்பகைபாம்பிடர்
சாருஞ்சாவுபொன்ஞானமரப்பொன்பசு
சனியநோய்மிடிசாவுபெண்மாத்துயர்
சேருஞானமாந்தர்த்துகில்கல்வியுஞ்
செய்யகேதுவிடபித்தம்பொன்னெழ
வாருசீர்பெண்மணிகதிர்வாழ்வுநல்
லார்கடப்புமளிப்பர்வீமேசரே.

இ-ள். மதி திசையில் மதி அந்திரநாள் 300-க்குப்பலன் ஸ்திரீசேர்த்தி புத்திரலாபம், வஸ்திராபரணலாபம். குஜன் நாள் 120-க்கு பித்தம் களவு பழி சரீரவியாதி அக்கினிபயம். இராகுநாள் 540-க்கு சத்துருக்களுண்டாம். தேசாந்திரம் சோரநாசம் அர்த்தநாசம் மனமிடி. குருநாள் 480-க்கு தனலாபமும் யானை குதிரை கன்று காலி வஸ்திராபரணம் பூஷணம் வித்தியாப்பியாசமுண்டாம். சனிநாள் 570-க்கு மனோதுக்கம ஸ்திரீமரணம் வியாதி வியசனம். புதன்நாள் 510-க்கு வஸ்திரம் ஞானம். கேதுநாள் 2.0-க்கு வஞ்சனை அர்த்த ..ம் யாத்திரை. சுக்கிரன்நாள் 600-க்கு ஸ்திரீபேறு இரத்னபாண ..ள் பெறும். இரவிநாள் 180-க்கு இராஜசேவை பட்டாபிஷேகம் ..வரியம் வியாதிநாசம் சத்துருநாசமாக அருளுவர் எ-று. 5

## குஜன் அந்திரபலன்

அளிக்குஞ்சேயூணில்வாதபித்தம்பகை
யரவுதிவிடமாயுதமரணமு
மொளிப்பனல்விணக்கந்தேவர்சேவைசுன்
னூர்பொனன்கேடுமானுறவுமன்சே
யிளைப்பர்கேதிடிதீவபல்சுங்கரளோ
யெய்துபுன்மைவிதனமிருத்தாரற்
களைப்பர்பானுவழக்கிடர்வான்மதி
கனத்தவாழ்வுதருந்தொடுக்காடரே.

இ-ள். குஜன் திசையில் குஜன் அந்திரநாள் 147-க்கு இராஜ ஸ்திரீபயம் பந்துபயம் களவு வாதம் பித்தம். இராகுநாள் 378-க்கு சிறை பகை அக்கினிபயம் வியாதி அர்த்தஹானி ஆயுதம் விஷம் ரணம் இவற்ருல் பயம். குருநாள் 336-க்கு தேவசேர்த்தி பிரமா மணசேர்த்தி தீர்த்தயாத்திரை நல்லார் அடைவு பிரபு உறவு. சனி நாள் 399-க்கு ஊழியும் பந்துநாசம் அர்த்தஹானியும். புதன்நாள் 357-க்கு புத்திரலாபம் இராஜசேவையுண்டாம். கேதுநாள் 147-க்கு படையிலாதல் இடியிலாதல் நெருப்பிலாதல் கள்ளராலாதல் மரணம். சுக்கிரநாள் 420-க்கு வியாதி புன்சொல் அர்த்தஹானி சத்துருக்க ளால் விபசனம் மிருகங்களால் அழிவு. இரவிநாள் 123-க்கு தர்மதா னஞ் செய்யும். மதிநாள் 210 க்கு முத்துமாணிக்கம் தானியம் காசு பெருக்க வாழ்வுதரும் எ-று. 6

## இராகு அந்திரபலன்

தொடைக்கிசைந்தவீமேசர்பூணூன்புவிச்
சுற்றம்பெண்கோபங்குருச்சுகம்பெண்பொருள்
படைக்குஞ்சுன்கலகம்வாதபித்தமால்
பார்பொன்செய்யுறுங்கல்வியுங்கேதுவூ
ணடைக்கும்பேர்மரணம்பகைவெள்ளியுற்
றூர்சிறைமகவுண்டாரியூர்குள
மெடுக்குஞ்சோமனுணெய்துபெண்ணால்போ
ரெழுபபுங்கேடும்பகைத்தீப்பிணிகளே.

இ-ள். வீமேசர் பூரணமான இராகுதிசையில் இராகு அந்திர நாள் 972 க்குப் பலன் பந்துநாசம் ஸ்திரீநாசம் வியாதிபயம் பூமி விட்டுப்போம். குருநாள் 864 க்குப் பலன் சுகம் இன்பம் அர்த்த லாபம் ஸ்திரீ கூட்டும், சனிநாள் 126 க்கு கலகம் வழக்கு வாத

முண்டாம். புதன்நாள் 918 க்குப் பலன் அர்த்தவரவு தேவதாபக்தி பசுலாபம். கேதுநாள் 378 க்குப் பலன் அக்கினிபயம் மரணம் பகை வெதுப்பு அர்த்தஹானி. சுக்கிரன்நாள் 180 க்கு உற்றார்வரவு வியாதி வியசனம் புத்திருண்டாம். இரவிநாள் 324 க்கு பூமிபேறு குளமெடுக்கும் சத்துருஹானி. மதிநாள் 540 க்கு ஸ்திரீ சேர்த்தி பந்துக்கள் சேர்த்தி அர்த்தம் வந்து செலவழியும். குஜன்நாள் 378 க்கு கருவிகளால் மாயும் அக்கினிபயம் களவு வியாதி எ-று.

## குரு அந்திரபலன்

பிணியறும்வீமநாதர்பொற்றாளுறப்
பெற்றபொன்னரசாடைமணிபுவி
பணிசுன்பாரழிவாமிடுக்கண்பகை
பன்னுமால்கல்விபத்திஞானந்தருந்
துணியுங்கேதுபிணிதுக்கம்வெள்ளியூண்
டுய்யசெல்வம்பருதிக்கரசர்நட்
பணியுஞ்சோமன்பகைபோமெரிக்குநோ
யரவுதானசிறையாருயிர்போக்குமே.

இ-ள். குருதிசையின் குரு அந்திரநாள் 768 க்குப் பலன் இராஜப்பிரியம் வஸ்திராபாணம் பூமி அழிவுண்டாம். சனிநாள் 912 க்குப் பலன் களவு இடுக்கண் வெதுப்பாலழிவு. புதன்நாள் 816 க்கு அர்த்தலாபம் பட்டமும் கல்வியும் புத்திரரும் தேவபூசையுமுண்டாம். கேதுநாள் 336 க்கு களவு வியாதி யாத்திரை விஷபட்சணம். சுக்கிரநாள் 960 க்கு அர்த்தமும் பூமியும் ஸ்திரீயும் கன்றுகாலியும் அடியாரும் பெருக்கவுண்டாம். இரவிநாள் 288 க்கு இராஜ பூசிதமுண்டாம். மதிநாள் 480 க்கு சத்துருக்களெல்லாம் நன்மையாம் குசன் நாள் 336 க்கு பலன் சிறங்கு சொறி. இராகுநாள் 864 க்கு மரணமுண்டாம் எ-று. 8

## சனி அந்திரபலன்

போக்குங்காரிபெண்புத்திராண்டினோர்
புந்திசுத்தகீடானதர்மஞ்செயு
மூர்க்கம்பொன்பித்தநோய்புகர்யெண்டிற
மூதியம்வெற்றிசுத்தங்கதிர்மக
நீர்க்குஞ்சோமன்வழக்கிடர்சாவுதீ
நீடுகுட்டமாவுகைகாலினும்
காக்கும்பொன்னடியாரையுறவினை
கருணையாற்ஒருடுக்காடர்தாள்காணுமே.

இ-ள். சனிதிசையில் சனி அந்திரநாள் 1083 க்கு பெண்டீர் கேடு மக்கள்மரணம் கன்றுகாலி அடியார்கெடும் துக்கம் வியாதி அபி மானம் தேசாந்திரம் வியசனம். புதநாள் 969 க்கு உறவுசுகம் அர்த் தலாபம் தர்மதானம் பண்ணும். கேதுநாள் 399 க்குப் பகை ஸ்திரீ ரோய் பொருளழிவு வியசனம். சுக்கிரன் ஊண்நாள் 1140 க்கு ஸ்திரீ கூட்டம் வெகு திரவியம் வெற்றி பந்துக்கள் சேர்வர். இரவி நாள் 342 க்கு ஸ்திரீபேறு திரவியலாபம். மதிநாள் 570 க்கு வழக்கு வியசனம் ஸ்திரீ மரணம் பறிகொடுக்கும். உற்றூர்கேடு. குஜன் நாள் 399 க்கு குஷ்டம் ஜ்வரபீடை வாதம் துக்கம் வியாதி சிறைநோய். இராகுநாள் 1026 க்கு இடக்கை கால் அழிவு ஸ்திரீவழக்கு அர்த்த ஹானி. குருநாள் 912 க்கு உறவு அடியார்கேடு அர்த்தலாபம் தர்ம தானஞ்செய்து வீமேசுரரைத் தொழும் எ-று. 9

புதன் அந்திரபலன்

காட்டும்புந்தியிற்புந்திபூண்கல்வியுங்
கருத்துஞானமுங்கேதுவூண்போம்பொரு
ளூட்டும்வெள்ளிபொன்பேறுகதிர்பொரு
ணயக்குமின்பமதிகுடஞ்சேய்பயம்
பூட்டுந்தீதலைநோய்ராகுதேசமேற்
போகும்பெண்களாற்பொன்றீமையின்பமுங்
கூட்டுஞ்சுனனேய்சிறுகுவழக்கிடர்க்
குருகுநந்தொடுக்காடர்தாள்கூறவே.

இ-ள். புதன் திசையில் புதன் அந்திரநாள் 867-க்கு சகலவித் தை அர்த்தலாபம் பூமிப்பேறு தேவபூசை வெற்றி. கேதுநாள் 357 க்கு தேசாந்திரம் அர்த்தஹானி இராஜ்பயம் கிலேசம். சுக்கிரன் நாள் 1020 க்கு புகழ் ஸ்திரீபேறு அர்த்தலாபம் சுகமுண்டாம். இர விநாள் 306 க்குப் பலன் அர்த்தார்ச்சனை. மதிநாள் 510 க்கு க்ஷய வியாதி குஷ்டம் பகை இராஜபயம். குஜன்நாள் 357 க்குப் பலன் காமாலை தலைநோய் துக்கம். இராகுநாள் 918 க்கு பலன் ஸ்திரீபொ ருட்டால் பரதேசம்போம் அர்த்தஅழிவு உற்றூர் கேடு. குருநாள் 816 க்குப் பலன் இராஜசன்மானம் சுகம் இன்பம் அர்த்தலாபம். சனிநாள் 969 க்குப் பலன் மிடிசிறுகு வியாதி வழக்கு இவைதீரத் தொடுக்காடரைப் போற்றுவது எ-று. 10

கேது அந்திரபலன்

கூறுகேதுவூண்மக்கள்பெண்டீர்கெடும்
குலவுசுங்கன்வழக்குக்குடிகெடு

மேறும்பானுபெண்டீர்வழக்கிந்துபொன்
விழக்கும்பிள்ளையெரிக்குமாற்றுநெழுஞ்
சீறும்பாம்பிடர்திதுபொன்வேதியர்
சேர்த்திசல்விசனிபொருட்சேதமே
தேறுமான்மைந்தர்பொன்றுவரேயெனத்
தேசிகரடியாரசெப்பினர்களே.

இ-ள். கேது திசையில் கேது அந்திரநாள் 147 க்குப் பவன் பெண்டீருமக்களும் பிரிந்துபோவர் சத்துருக்களுண்டாம். சுக்கிரன் ஊண் 420 வழக்குக்காட்டும், வங்கிசஹானி அழிவுண்டாம். இரவி நாள் 126 க்கு வெதுப்பு வழக்குக்காட்டும் புண் அக்கினிபயம் பவி ரோதம் துக்கம் மதிநாள் 210 க்கு அர்த்தம்பெற்றிழக்கும் சுகமா யிருக்கும் சிறிது சிலுகுமுண்டு. குஜன்நாள் 147 க்கு கோடிகட்டு வார் சரீரவியாதி பொருளழிவு மனமிடி. ராகுநாள் 378 க்கு இடி க்ஷயம் அக்கினிபயம் வெட்டு சிரங்கு சொரி சகோதரசேர்த்தி மரண முண்டாம. குருநாள் 336 க்கு புகழ் அர்த்தலாபம் பிராமணசேர் த்தி ராஜாக்கள் நோக்குண்டாம். சனிநாள் 399 க்கு வழக்கு அர்த்த ஹானி வாதம் பித்தம் பரதேசம்போதல். புதன் நாள் 357 க்கு மக்களழிவு மரணமுண்டாம் பூமிவிட்டுப்போம் வெதுப்பு வியசன மென்று தேசிகராகிய வீமேசர் செப்பினது எ-று. 11

## சுக்கிரன் அந்திரபலன்

செப்புவெள்ளியில்வெள்ளியூண்ஞானம்பெண்
சேதனம்பெறுஞ்செங்கதிர்நோய்மிடி
யப்பர்பூப்பகைகுற்றம்பிணியுட
னபோகம்பொருட்பேறுபாம்பிடர்
மூப்பிணித்திறம்பொன்பொருட்பேறதா
முதியசுன்றுனரசர்பெணபோகமா
மிப்புதன்மிகுமர்த்தலாபம்பிணி
யிடறதாமந்திரதிசையென்னுமே.

இ-ள். சுக்கிரன் திசையிலே சுக்கிரன் அந்திரநாள் 1200 க்கு ஞானம் ஸ்திரீகூட்டம் இனிய பெண்பெறும் அர்த்தலாபம் பூமி பேறு புகழுண்டாம். இரவிநாள் 360 க்கு கண்ணோய் வயிற்றுநோய் மனமிடி தலைசிறை. மதிநாள் 600 க்கு ஞானம் ஸ்திரீகூட்டம் வியா திகொடுமை குற்றமுண்டாம். குஜன் நாள் 420 க்குப் போகபாக் கியமுண்டாம். ஸ்திரீபேறு அர்த்தலாபம் வாதபித்தம். இராகு நாள் 1080 க்கு வியாதி காமாலை தலைவியாதி அர்த்தநாசம் பாதக முண்டாம். குருநாள் 960 க்கு அர்த்தலாபம் இராசப்பிரியம் மன ப்பிரியம். சனி நாள் 1140 க்கு நன்மை ஸ்திரீகூட்டம் இராசாம்

களாலேபலம் சத்துருக்கள் பிரபுக்கள்சேர்த்தி. புதன்நாள் 1020-க்கு இராசாக்கள் அர்த்தலாபம் சத்துரு நாசம் தோழமை உறவுநினைத்த காரியமெல்லாம் முடியும். கேதுநாள் 420-க்கு கலஹம் பந்துநாசம் அர்த்தஹானி காரியச்சேதம் குழப்பம் எ-று. 12

அந்திரலாபன் முற்றிற்று.

## இரவியாதி அந்திராந்திரபலன்

என்னும்ரவியயந்திராந்திரத்திற்றிசைசுர
மிந்துமாநலஞ்சேயானிகேடுபொன்
மன்னராகுபொருட்கேடுமாபய
மகிழ்வுதானதர்மஞ்சுன்னயனநோ
யுன்னுமால்வாகனஞானங்கேதுவே
லுட்பகைவிடரோகம்புகர்மணி
மன்னுசோனங்தேறனகோட்களால்
வருகைநல்துவர்மாகயிலாயரே.

இ-ள். அந்திராந்திர பலனறியும்படி இரவிகருச் சத்துருக்களால் பீடை தேசாந்திரம் மதிப்பிரம்மை ஜ்வரம் மதிக்கு ஆரோக்கியம் சம்பத்து அர்த்தலாபம் ராஜதரிசனை தேவதாபக்தி ஓமசாந்தியுமுண்டாகும். குஜனுக்கு பந்துக்களால் நாசம் மனசஞ்சலம் ஸ்திரீநாசம் சத்துருபயம் பரதாரசேர்த்தி. இராகுவுக்கு விவாஹம் தர்மவிரோதம் அர்த்தவிரயம் தைரியம் தேசாந்திரம் பயம். குருவுக்கு நயனரோகம் தலைநோய் புத்திரநாசம் பலஹீனம். புதனுக்கு ஞானவிற்பன்னமும் பண்டிதமும் வேதசாஸ்திரமும் ஆகமமும்வரும். கேதுவுக்கு சத்துருபயம் ரோசபயம் க்ஷயரோகம் விஷரோகம் சுக்கிரனுக்குவிவாகமும் மாணிக்கலாபமும் ஸ்திரீசேர்த்தி பகாசவுக்கியமும் புத்திர சுகம் இவையெல்லாம் ஜனனகாலங்களில் தேறின கோளாகிற் குறைவின்றிப் பலனைத்தரும் எ-று. 13

அந்திராந்திரபலன் முற்றிற்று.

## இரவியாதி சூட்சுமபலன்

நேயர்வீமேசர்கண்சூட்சுமத்திசை
நிருத்தாற்பபஞ்சோமற்குருதவங்
தியருக்குச்சிறைபூமிகேடுபூண்
டீங்குநோயிறையோமஞ்சிவார்ச்சனை
சாயுநீலனறிரிபோக்குப்பிச்சையூண்
கருணைநன்னூற்குருச்சேவைகேதுவேற்
றேயமுன்றுஞ்சுகன்நடாகந்தவங்
துய்யவாலபஞ்சோபனம்பண்ணுமே.

இ-ள். சூட்சும பலனறியும்படி இரவிக்கு இராஜபயம் மிருத்தீவு அர்த்தஹானி மித்துருநாசம் வயிற்றுவியாதி சிரோவியாதி. மதிக்கு குருசேர்த்தி தபசு பூமிலாபம் தேகசுகம். குஜனுக்கு சிறை பூமி நாசம் வனவாசம் மனஸ்தாபம். இராகுவுக்கு பிரயாசம் காசரோகம் சிதவாதை பொல்லாதநோய். குருவுக்கு ஓமசாந்தி சிவார்ச்சனை சத்துருநாசம் வாகனசவுக்கியம் புத்திரோற்பத்தி. சனிக்கு ஸ்திரீநாசம் இரந்துண்ணும் காவியாதியுண்டாம் குலம் க்ஷயம் மனோதுக்கம். புதனுக்கு சாத்மீகம் வித்தியாப்பியாசம் குருசேவை தனதான்யலாபம். கேதுவுக்கு மதுமாங்கிசம் பொசித்து ஈனமும் மான ஹானியும் வமிச ஹானியும் சிறைதனையம் அடையும். சுக்கிரனுக்கு தடாகமும் தான தர்மமும் பலவுபகாரமும் தேவாலயமும் செய்யும் சாஸ்திர சாதகமுண்டாம் கலியாணமுமுண்டு எ-று. 14

சூட்சுமபலன் முற்றிற்று.

## இரவியாதி பிராணபலன்

பன்னுசெங்கதிற்பிராணத்திசைதனிற்
பாவவாதைசசியோகஞ்சேய்விட
மன்னலாபாபரணஞ்செலகண்ட
யரசன்வாழ்வுசுன்கேடுமால்வித்தைதூ
னண்ணுமேகொடியனக்கினிபய
நல்லமாரிவெகுசெல்வகாட்டுமே
யென்னுமைந்துதிசையினிற்றேறியே
யிருந்தகோளினங்கண்டுரையுமே.

இ-ள். பிராண பலனறியும்படி இரவிக்கு பாவவாதை விஷப்பிரயோகமாய் மரணம். மதிக்கு யோகாப்பியாசம் ஆரோக்கியம் திரேக சவுக்கியம் சகலவசியமுண்டாம். குஜனுக்கு சர்ப்பங்களாலும் மிருகங்களாலும் வாதைப்படும் வியாதி விஷப்பிரயோகத்தால் மரணம். ராகுவுக்கு சத்துருவாதை அக்கினிபயம். குருவுக்கு புத்திரலாபம் மனோசவுக்கியம் அர்த்தலாபம் வித்தியாப்பியாசம் வினோத சவுக்கியம் சனிக்கு ஜ்வரபயம் பெருங்கேடு. புதனுக்கு புத்திரலாபம் ஸ்திரீலாபம் அர்த்தலாபம் வித்தியாலாபம் கிருஷிலாபம். பூமிலாபம் கேதுவுக்கு அக்கினிபயம் சத்துருபயம் தேவதா பிரார்த்தனை அர்த்த ஹானி. சுக்கிரனுக்கு ஞானம் தவம் புத்திரலாபம் ஈசுரபக்தியோகாப்பியாசம் தனலாபம் இந்த ஐந்துவகைப் பலமும் ஜனனகாலங்களில் தனலாப கேந்திர திரிகோணங்களில் வலிபெற்று நின்றகோளின் திறமறிந்து வீமேசர் பாதாரவிந்தத்தை நாடிச்சொல்வது எ-று. 15

மகாதிசைப்படலம் முற்றிற்று.

## ஷட்வர்க்குப் படலம்

### ஸ்வயாங்கலக்நம் ஹோராலக்நம் நவாங்சலக்நம் துவாதசாங்சலக்நம்

எந்தராசியெழும்லக்கினதிபூ
ணெல்லைமுன்னரிபிற்பாதிசோமனான்
மூந்துமாணரியிந்துபெண்முந்துமுன்
மமாத்தைதமுன்றனுவீறுநவாங்கிச
மெத்தைதவாகனமானமுன்பெண்ணிற்ரு
பெட்சியீராறிலக்கினதிபன்முதல்
வந்திடுங்கோனுவாதசவங்கிச
மன்னுமெங்கள்வீமேசாதொடுத்ததே.

இ-ள். யாதாமொருவன் ஜெனித்த இராசியை இராசியாதிபதியே காத்தனாகப் பொசிப்பன் என்றறிக. இனி இராசியை 2-கூறு செய்து, ஆண் இராசியாகில் முற்கூறு. இரவி பிற்கூறு. மதி பெண் இராசியாகில் முற்கூறு மதி பிற்கூறு இரவி பொசிப்பரென்றறிக. இனி நவாங்சம பிரிக்கும் அடைவுமேஷம் உதிக்கில் அந்தராசியை 9-கூறு செய்து மேஷமுதல் தனுசீறாக அதிபதிக்கோட்களடைவே பொசிப்பரென்றறிக. ரிஷபம் உதிக்கில் மகரமுதல் கன்னி யீறாகக் கொள்க. மிதுனம் உதிக்கில் துலாமுதல் மிதுன மீறாகக்கொள்க. கர்க்கடகம் உதிக்கில் கர்க்கடகமுதல் மீனமீறாகக்கொள்க. சிம்மத்துக்கு மேஷமுதல் தனுசீராகக்கொள்க. கன்னிக்கு மகரமுதல் கன்னி யீறாகக்கொள்க. துலாத்திற்குத் துலாமுதல் மிதுனமீராகக்கொள்க. விருட்சிகத்துக்கு கர்க்கடகமுதல் மீனமீறாகக் கொள்க. தனுசுக்கு மேஷமுதல் தனுசீறாகக்கொள்க. மகரத்துக்கு மகரமுதல் கன்னி யீறாகக்கொள்க. கும்பத்துக்குந்துலாமுதல் மீனமீறாகக்கொள்க. மீனத்துக்கு கர்க்கடகமுதல் மீனமீறாகக்கொள்க. இப்படி ராசியாதிபதிக் கோள் உண்பரென்றறிக. இனி துவாதசாங்கம பிரிக்கும் அடைவு உதயராசியை 12-கூறுசெய்து எந்த இராசி உதித்ததோ அந்தஇராசி முதல் 12-இராசியுமடைவே அதிபதிக்கோளுண்பர் எ-று. 1

### திரேகாணலக்நம்

தொடைக்கிசைந்தபதிதொடேகாடர்தோ
டோன்றுமோரைத்திரமுதலொன்பதாம்
படைத்தவண்ணச்சனனைபைந்தாஞ்சரம்
பாவின்முற்கூறுபதிதானைந்தானிடை
முடித்தவந்தமொன்பானுபபங்களேன்
மூன்றுமைந்தர்நடுவொன்பதந்தமே

யடைக்கலாதிபன்கோடிரேகாணமு
மாழ்ந்துகோளின்வலிகண்டறிவதே.

இ-ள். எடுத்த ஆகமநூற்பத்திக்செல்லாம் எடுத்தகையாய் நின்று இருவினை நடத்தும் பரப்பிரம்மமான தொடுக்காடர் இடை பிங்கலை சுழிமுனையாய் இயங்குகின்ற நாடியில் 21600-சுவாசமும் நாழிகைக்கு 360-சுவாசமாக 5-நாழிகைக்கு 1800-சுவாசங்கூடும் அதுவொரு இலக்கினமென்றறிக. இப்படி 12-இராசியும் மாறி ஒடு தல் கிரகமாய்நிற்கும். இதில் மேல்நோக்கினவாயு தேவரென்றும் கீழ் நோக்கினவாயு பூமியில் மச்களென்றும் கும்பவாயு முத்திச்கதவென் றும் இப்படியறிக. உதயம் திரராசியாகில் அந்த இராசியை மூன்று கூறுக்கிமுற்கூறில் 9-ஆமிராசியாதிபதிக்கோளும் நடுக்கூறில் இலக்கி னாதிபதியுங் கடைக்கூறு 5-ஆமிராசியாதிபதிக் கோளும் யோசிப்பன். சரராசியாகில் முற்கூறு இலக்கினாதிபன நடுக்கூறு 5-ஆமிராசியாதி பன் கடைக்கூறு. 9-ஆமிராசியாதிபன் பொசிப்பன் உபயராசியாகில் முற்கூறு. 5-ஆமிராசியாதிபன் நடுக்கூறு 9-ஆமிராசியாதிபன் கடைக் கூறு, இலக்கினாதிபன் பொசிக்கும் இப்படி திரேகோணம் மூன்றும் தேறின கோளறிந்து திகையாமல் நன்மை தீமை வினவினபோர்க்கு சொல்வது எ-று. 2

திரிங்சாங்சலக்கம்

தேறும்ராசியாண்முப்பதுபங்கதிற்
செங்கனற்கைந்துமைந்துசன்னெட்டுபொன்
வீறுமெட்டுப்புதனேழுமைந்துநீர்
மிக்கபெண்ணோரைசுங்சனுக்கைந்துமால்
கூறுமேழுந்தணனெட்டுமைந்துசன்
குலவுசேயைந்துகோடிரிங்காங்கிச
மாறுவர்க்கம்பவர்கொடிதாஞ்சுப
ரையர்வீமேசர்தான்மெய்யருளுமே.

இ-ள். திரிங்சாங்சம் பிரிக்கும் அடைவு உதிக்கிற இராசியை 30-கூறுசெய்து அப்போதுதிக்கிற இராசி ஆண் இராசியாகில் முதல் 5-கூறும் குஜன்மேல் 5-கூறும் சனிமேல் 8-கூறும் குருமேல் 7-கூ றும் புதன்மேல் 5-கூறும் சுக்கிரன் இனி பெண்ணிராசி உதிக்கில் சுக்கிரன்முதலாக குஜன யீறுசக்சொள்வதாம் அவைவருமாறு சுக்கி ரனுக்குக்கூறு 5 புதனுக்குக்கூறு 7 குருவுக்குக்கூறு-8 சனிக்கு கூறு 5 குஜனுக்கு கூறு 5 இப்படித் திரிங்சாங்ச பலனென்றறிவது. இந்த ஷட்வர்க்கத்தில் பாபக்கிரகமாகில் தீமை. சுபக்கிரகராகில் சுபப்பல முண்டாய் வீமேசர்பாதத்துக் குரித்தாவர் எ-று. 3

ஷட்வர்க்குப்படலம் முற்றிற்று

# அஷ்டகவர்க்குப் படலம்

## இரவி அஷ்டகவர்க்கு

அருணர்நின்றோரைமுன்பனிரண்டினு
மந்தக்கோள்சன்மமட்டகவர்க்கமுன்
னிரவின்னொன்றிரண்டடனாலேழு
மெட்டுமொன்பதுபத்துப்பன்னொன்றுமாம்
பாவுசந்திரமூன்றாறுபத்துடன்
பத்துமொன்றுமாஞ்சுன்னொன்றிரண்டுமே
யுருகுநாலேழெட்டொன்பதுபத்துட
னுண்ணுபன்னொன்றுமெங்கோனுரைத்ததே.

இ-ள். அஷ்டகவர்க்குப் போடும்படி ஆரூடசக்கரம்போல் 12-அறையாகக்கீறி இரவிமுதலாக 7-கிரகமும் இரவிவாக்கிய முதலாகப் போடவும். எங்கெந்தக் கிரகங்கள் எங்கெந்த இராசியில் இருந்தார்கள் அந்தந்த இராசிமுதலாகப் போட்டுவரவும் இரவியில் இரவிநின்ற இராசிமுதல் 1 2 4 7 8 9 10 11, இரவில் மதிநின்ற இராசி முதல் 3 6 10 11; இரவியில் குஜனின்ற இராசிமுதல் 1 2 4 7 8 9 10 11.

## இதுவுமது

உரைத்தமான்மூன்றுமைந்தாறுமொன்பது
மூற்றபத்துபதினொன்றீராறுமட்
டிருத்தலைந்தாறுமொன்பான்பன்னொன்றுமீ
ரினியவாறுமீராறேழ்பனிரண்டு
முருக்குசுன்னொன்றிரண்டுநாலேழுமெட்
டுய்யவொன்பதுபத்துப்பன்னொன்றடுத்
தரிச்குமெட்சிக்குமூன்றுநாலாறுபத்
தானபன்னொன்றுமீராறும்விந்துவே.

இ-ள். இரவியில் புதனின்ற இராசிமுதல் 3 5 6 9 10 11 12, இரவியில் குருநின்ற இராசிமுதல் 5 6 9 11, இரவியில் சுக்கிரநின்ற இராசிமுதல் 6 7 12, இரவியில் சனிநின்ற இராசிமுதல் 1 2 4 7 8 9 10 11, இரவிபில் இலக்னமுதல் 3 4 6 10 11 12, இரவி முதலாக அவரவர்நின்ற ராசிமுதல் சொன்ன இராசியில் ஒவ்வொருபலகரையைப் போட்டுவரவும் ஆக இரவிக்கு பிந்து 48 எ-று.

### மதி அஷ்டகவர்க்கு

இந்துமூன்றாறுமேழெட்டுப்பத்துட
னினியபன்னொன்றிரவிநின்றோரைமுன்
சந்திரனொன்றுமூன்றாறுமேழ்பத்து
தக்கபன்னொன்றுசெய்ரெண்டுமூன்றுமோ
ரைந்தொடாறொன்பான்பத்துப்பன்னொன்றுமே
யானமாலொன்றுமூன்றுநாலைந்தொடேழ்
முந்துமெட்டுடன்பத்துப்பன்னொன்றுமே
முக்கணர்வீமநாதர்மொழிந்ததே.

இ-ள். மதியில் இரவிநின்ற இராசிமுதல் 3 6 7 8 10 11, மதியில் மதிநின்ற இராசிமுதல் 1 3 6 7 10 11, குஜன்நின்ற இராசிமுதல் 2 3 5 6 9 10 11, மதியில் புதன் நின்ற இராசிமுதல் 1 3 4 5 7 8 10 11 எ-று. 3

### இதுவுமது

மொழிந்தபொன்னொன்றிரண்டுநாலேழுடன்
முற்றுமெட்டுமோர்பத்துப்பன்னொன்றுநீ
ரெழுந்தமூன்றுநாலைந்தேழுமொன்பது
மிலங்குபத்துப்பன்னொன்றுமேசுன்றனக்
கழுந்திராசிமூன்றைந்தாறுபன்னொன்று
மம்புலிசென்மமூன்றாறுபத்துட
னெழிந்தபன்னொன்றுநாற்பத்தோடொன்பது
முற்றவிந்துவீமேசருரைத்ததே.

இ-ள். மதியில் குருவுக்கு 1 2 3 4 7 8 10 11, மதியில் சுக்கிரனுக்கு 3 4 7 9 10 11, மதியில் சனிக்கு 3 5 6 11, மதியில் இலக்கினத்திற்கு 3 4 5 7 9 10 11, மதியில் சனிக்கு 3 5 6 11, மதியில் இலக்கினத்திற்கு 3 6 10 11, இப்படி அவரவர் நின்ற இராசிமுதல் அவரவர்க்குச்சொன்ன இராசியில் ஒவ்வொரு பலகறை வைத்துவரவும் ஆக மதிக்கு கூடினபந்து 49-என்று வீமேசருரைத்தது எ-று. 4

### குஜன் அஷ்டகவர்க்கு

தேறுசேயதிமூன்றைந்தோடாறுமே
செய்யப்பத்துப்பதினொன்றுசந்திரற்
கேறுமூன்றாறுபன்னொன்றெரிக்கினி
இலங்குமொன்றுமிரண்டுநாலேழுமே
கூறுமெட்டுடன்பத்துப்பன்னொன்றுமால்
குலவுமூன்றைந்துமாறுபன்னொன்றுபொன்
னாறுபத்துப்பதினொன்றீராறுமா
மையர்வீமேசான்பரமைந்ததே.

இ-ள். குஜனில் இரவிக்கு 3 5 10 11, குஜனில் மதிக்கு 3 6 11, குஜனில் குஜனிக்கு 1 2 4 7 8 10 11, குஜனின் புதனுக்கு 3 5 6 11, குஜனில் குருவுக்கு 9 10 11 12 இவை வீமேசரமைத் தது எ-று. 5

இதுவுமது

அமைத்தசுங்கனாறெட்டுப்பன்னொன்றுமீ
ராறுநன்னொன்றுநாலேழெட்டொன்பது
நிமைத்தபத்துப்பதினொன்றுசென்மமே
நீடுமொன்றுடன்மூன்றுமோராறுமே
சமைத்தபத்துப்பதினொன்றுவிந்துவே
தக்கதாமுப்பத்தொன்பதுமாகுமே
யுமைக்குவந்ததொடுக்காடரெந்தைநல்
லுத்தமரென்னுளத்திருந்துன்னுமே.

இ-ள். குசனில் சுக்கிரனுக்கு 6 8 11 12, குசனில் சனிக்கு 1 4 7 8 10 11, குசனில் இலக்கினத்திற்கு 1 3 6 10 11, ஆக பிந்து 39 என்று உமாமகேஸ்வரி சமேதராகிய தொடுக்காடர் அடியாருள்ளத்திருந் துரைத்தது எ-று. 6

புதன் அஷ்டகவர்க்கு

உன்னுபுந்தியிற்பானுவைந்தாறுமே
யொன்பதுப்பதினொன்றுமீராறுமிந்
தென்னிரண்டுநாலாறெட்டுப்பத்துட
னினியபன்னொன்றுசேயொன்றிரண்டுநால்
பன்னுமேழெட்டொன்பான்பத்துப்பன்னொன்றும்
பரவுமாலொன்றுமூன்றைந்தாறொன்பது
மன்னுபத்துப்பன்னொன்றுபனிரெண்டும்
வைக்கவீமெசர்தானேமனத்திலே.

இ-ள். புதனில் இரவிக்கு 6 9 11 12, புதனில் மதிக்கு 2 4 6 5 8 10 11, புதனில் குசனுக்கு 1 2 4 7 8 9 10 11, புதனில் புதனுக்கு 1 3 5 6 9 10 11 12 எ-று. 7

இதுவுமது

மனைப்பொன்னாறெட்டுப்பன்னொன்றீராறுசார்
மன்னுமொன்றுபையமூன்றுநாலொடைந்
தினவுமெட்டொன்பதுபதினொன்றுசுன்
னென்னவொன்றிரண்டுநாலொடேழுமெட்
டினியவொன்பதுப்பத்துப்பன்னொன்றுமே
லெட்சியொன்றுமிரண்டுநாலாறுமெட்
டனையபத்துப்பதினொன்றுவிந்துவைம்
பதுவுநாலுமெங்கோனனுபூதியே.

இ-ள். புதனில் குருவுக்கு 6 8 11 12, புதனில் சுக்கிரனுக்கு 1 2 3 4 5 8 11, புதனில் சனிக்கு 1 2 4 7 8 9 10 11, புதனில் இலக்கினத்திற்கு 1 2 4 6 8 10 11, ஆக புதனுக்கு கூடின பிந்து 54 என்று எங்கோனாகிய வீமேசுரமூர்த்தியின் அனுபூதியாலறிவது.

## குரு அஷ்டகவர்க்கு

ஏயபொன்னிலரியொன்றிரண்டுமூன்
றெய்துநாலேழெட்டொன்பதுபத்துட
னாபபன்னொன்றுமிந்திரண்டைந்தோடே
பூாகுமொன்பதுபன்னொன்றுசேய்க்கினி
தோய்விலொன்றுபயநாலுமேழொடெட்
டென்னுபத்துப்பதினொன்றுமாலொன்று
பாயிரண்டுநாலைந்தாறுமொன்பதும்
பத்துப்பன்னொன்றுமெங்கோன்படைத்ததே.

இ-ள். குருவில் இரவிக்கு 1 2 3 4 7 8 9 10 11, குருவில் மதிக்கு 2 5 7 9 11, குருவில் குசனுக்கு 1 2 4 7 8 10 11, குருவில் புதனுக்கு 1 2 4 5 6 9 10 11 என்று படைத்தது எ-று. 9

## இதுவுமது

படைத்தபொன்னொன்றிரண்டுடன்மூன்றுநால்
புரியுமேழெட்டுப்பத்துப்பன்னொன்றுநீ
ரடுத்தரெண்டைந்தாறொன்பதுபத்துமே
யானபன்னொன்றுசின்மூன்றைந்தாறீரா
றெடுத்தராசியேகமிரண்டுநாலைந்தா
றேகுபொன்பதுபத்துப்பன்னொன்றுமே
விடுத்தவிந்துவுமன்பத்தாறுகுமே
வீமநாதரடியைவிருப்பவே.

இ-ள். குருவிற் குருவுக்கு 1 2 3 4 7 8 10 11, குருவிற் சுக்கிரனுக்கு 2 5 6 9 10 11, குருவிற் சனிக்கு 3 5 6 12, குருவில் இலக்கினத்திற்கு 1 2 4 5 6 7 9 10 11 ஆக பிந்து 56 வீமநாதர் திருவடியை நாடி விரும்பும் எ-று. 10

## சுக்கிரன் அஷ்டகவர்க்கு

விரும்புசுக்கிரனிற்கதிரெட்டுமே
மிக்கபன்னொன்றுமீராறுசோமனுக்
கரும்பியேகமிரண்டுடன்மூன்றுநான்
கைந்தெட்டொன்பதுபன்னொன்றுமாறிரண்

டிருப்புசெய்மூன் றுகாலாறுமொன்பது
மெய்துபன்னொன் றுமீருறுபுந்திமூன்
றெருங்குமைந்தாறுமொன்பதுபன்னொன்றே
யுற்றவீமேசர் தாளையு கப்பதே.

இ-ள். சுக்கிரனில் இரவிக்கு 8 11 12 சுக்கிரனில் மதிக்கு 1 2 3 4 5 8 9 11 12 சுக்கிரனிற் குசனுக்கு 3 4 6 9 11 12, சுக்கிரனிற் புதனுக்கு 3 5 6 9 11, என்று வீமேசுரரருளினாலறிவது. 11

இதுவுமது

உகந்தபொன்னைந்துமெட்டுடனொனபது
முற்றபத்துப்பதினொன்றுமீரினி
ரகழ்ந்தவொன்றுபயமூன்றுநாலுட
னைந்தெட்டொன்பானும்பத்துப்பன்னொன்றுசுன்
பகர்ந்தமூன் றுநான்கைந்தெட்டொன்பான்பத்தும்
பன்னொன்றோர்பொன்றிரண்டொருமூன் றுடன்
மிகுந்தநாலைந்தெட்டொன்பத்துபன்னொன்று
மேவும்விந்தன்பத்தெட்டிறைமெத்துமே.

இ-ள். சுக்கிரனில் குருவுக்கு 5 8 9 10 11, சுக்கிரனிற் சுக்கிரனுக்கு 1 2 3 4 5 8 9 10 11, சுக்கிரனிற் சனிக்கு 3 4 5 8 9 10 11, சுக்கிரனில் இலக்கினத்திற்கு 1 2 3 4 5 8 9 11, ஆக சுக்கிரனுக்கு பிந்து 52, இறையவராகிய வீமேசர் தாளை வருந்துசொல்வது. 12

சனி அஷ்டகவர்க்கு

மெத்துசுன்னில்வெய்யநோனொன்றிரண்டுநான்
மிக்கவேழெட்டுப்பத்துப்பன்னொன்றுமீந்
துய்த்தமூன்றுறுபன்னொன்றுசேய்க்குமூன்
றுய்யவைந்தாறுபத்துப்பன்னொள்றிரா
றெத்துமாலாரெட்டொன்பதீரைச்துமே
யென்னுபன்னொன்றுபன்னிரண்டிறைவனைந்
தொத்துவாறுபன்னொன் றுபன்னிரண்டுமே
யுமையவள்கேள்வனனபர்சொல்லோங்குமே.

இ-ள். சனியில் இரவிக்கு 1 2 4 7 8 10 11, சனியில் மதிக்கு 3 6 11, சனியிற் குஜனுச்கு 3 5 6 10 11 12, சனியிற் புதனுக்கு 6 8 9 10 11 12, சனியிற் குருவுக்கு 5 6 11 12 எ-று. 13

இதுவுமது

சொல்லுநீராறுபன்னொன்றீராறுசுன்
றுய்யமூன்றைந்துபாறுபன்னொன் றுமே

நல்லசென்மமொன்றுமொறுமூன்றுநா
　　லுமொறுபத்துப்பதினொன்றுமே
செல்லும்விந்துமுப்பத்தொன்பதுவெனத்
　　தேறும்வாக்கியமன்பத்தாறேழுகோள்
வல்லபானுவுமற்றக்கோளோமைமுன
　　வைக்கவீமேசுரர்தாளும்வாழ்த்தியே.

இ-ள். சனியிற் சுக்கிரனுக்கு-6-11-12, சனியிற்சனிக்கு-3-5-6 11, சனியில்இலக்கினத்திற்கு-1-3-4-6-10-11, ஆகசனிக்குமீந்து 39 அந்தந்தக்கிரகங்கள் நின்ற இராசிமுதல் வீமேசர்தாளை வாழ்த்தி பிந்துகள் போட்டுவருவது எ-று. 14

### திரிகோணசோதனையும் ஏகாதிபத்தியசோதனையும்

உறுவதாடரிவின்மாடுபெண்கலை
　　யுற்றவியாழ்துலைசாலளிதேன்கயல்
செறிவதேதிரிகோணவிந்திற்சரி
　　சேரின்மீட்கக்குறையிற்சரிசெய
மறிதறிக்கான்மகரஞ்சால்கன்னியாழ்
　　மாடுகோற்றனுமீன்சரிசோதனை
கிரகராசியில்விந்துவைவைத்திடு
　　கிளைத்தகாரிவையிதிற்கிட்டிடா.

இ-ள். மேஷம் சிம்பம் தனுசு ரிஷபம் கன்னி மகரம் மிதுனம் துலாம் கும்பம் கடகம் விருச்சிகம மீனம் இவ்வடைவில் மும்மூன்றி ராசியாக எடுத்து திரிகோண சோதனை சோதிக்கும்படி 3-வீட்டிலும் பிரிந்து சரியாயிருந்தால் எல்லாமெடுத்துப்போடவும். ஏறியுங் குறைந்துமிருந்தால் குறைந்தபடிவைக்கவும். 2 வீட்டில் பிந்துயிருந்து ஒரு வீட்டில் பிந்தில்லாவிட்டால் சோதியாமல் வைக்கவும். ஒரு வீட்டில் பிந்திருந்து 2-வது வீட்டில் பிந்து யில்லாவிட்டாலு மப்படியேயாம். இனி ஏகாதிபத்தியசோதனை மேஷம் விருச்சிகம் மகரம் கும்பம் கன்னி மிதுனம் ரிஷபம் துலாம் தனுசு மீனம் இந்த அதிபதி யிராசியில் ஒரு இராசியில் பிந்து ஏறி ஒருராசியில் பிந்துகுறையிற் குறைந்தபடிவைக்கவும். 2-இராசியிலுங் கிரகமிருந்தால் 2-இராசியிற் கிரகமிருந்து ஒரு இராசியிற் கிரகமில்லாவிட்டால் பிந்து சரியாயிருந்தால் கிரகமில்லாத வீட்டு பிந்தை எடுத்துப்போடவும் கிரகமில்லாத வீட்டில் பிந்து அதிகமாய் கிரகமிருக்கிற வீட்டில் பிந்து குறையயிருந்தால் குறைந்த பிந்தைவைத்து அதிகமா யிருக்கிற பிந்தை எடுத்துப் போடவும். கிரகமில்லாத வீட்டில் பிந்து குறையயிருந்தாலும் எல்லாம் எடுத்துப்போடவும். 2-இராசியிலும்

கிரகமில்லாமல் பிந்து சரியாயிருந்தால் எல்லா மெடுத்துப்போடவும் கர்க்கடகத்துக்கும், சிம்மத்துக்கும் ஏகாதிபத்திய சோதனையில்லை இருந்தபடியே வைப்பது எ-று. 15

## அஷ்டகவர்க்கப் பலாபலன்

கிட்டுமிராசியில்வில்துநாலிற்சமன்
கீழ்ப்படியிற்கெடுமேற்படினன்மையா
மிட்டபானுப்பிதாமதிதாயெரி
யிசைபிரப்புப்புதன்மாமன்மைந்தர்பொன்
மட்டுமாரிபெண்மந்தனுக்காயுசு
மன்னுகோள்குறைவிந்திராசிவரி
னட்டம்விந்தேறும்ராசியினன்மையே
நல்கும்வீமேசர்தாண்மிகக்கிட்டுமே.

இ-ள். இரவி முதல் 7-கிரகத்துக்கும் அவரவர்க்குப் போட்டுக் கண்ட பிந்து இராசி 12-லும் திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் சோதியாமுன் அந்தந்த இராசியில் 4-பிந்து இருக்கிறது. சமபலன் 4-க்கு மேற்படில் நன்மை. இன்னம் சுபக்கிரகமானாலும் பாபக்கிரகமானாலும் பிந்து இருந்தப்படிக்குப் பலாபலன் பிந்து 1-ஆகில் திரவியநாசம், மனஸ்தாபம, துக்கம். 2-ஆகில் அவமானம் பீடை துவேஷம் 3-ஆகில் சஞ்சலம் வித்தைநாசம். 4-ஆகில் இலட்சுமீகரம், காரியசித்தி. 5-ஆகில் தனப்பிராப்தி, விவாகசவுக்கியம். 6-ஆகில் வித்தைலாபம், இலட்சுமீகரம், 7-ஆகில் ஐசுவரியம், அதிக லாபம். இப்படிப் பலன் காண்பது. இரவிக்குக் கண்ட பிந்துவில் அந்தந்த பிந்து அதிகமான இராசியில் இரவி வருகிறபோது வெகு நன்மைதரும். பிந்து குறைந்திருந்த இராசியில் இரவி வருகிறபோது தீமையுண்டெனக. இந்த இராசி இரவிக்குப் பகை நீசமாகில் வெகு நஷ்டம். இப்படி அந்தந்தக்கிரகங்களுக்கும் அவரவர்க்குப் போட்டுப் பார்த்து கண்டபிந்து 4-க்கு குறைந்தால் நஷ்டம் 3-6-ஆனால் அந்தந்தக்கிரகங்கள்பிந்து அதிகமான ராசியில் கிரகங்கள் வருகிறபோது தனதானியம் வெகு நன்மைதரும். திரிகோணசோதனையும இராசியாதிபதி சோதனையும சோதித்துக் கழிப்பட்டு மிருந்தபிந்து எத்தனை கண்டதோ எவன் வாக்கியத்துக்கும அந்தந்தக் கிரகங்கள் நின்ற நட்சத்திர முதலாக எண்ணிக் கண்ட கடைசி நட்சத்திரத்தில் சனிவருகிறபோது அந்தந்தக் கிரகத்துக்கு அடுத்தபேர்க்கும் பீடை. சுபக்கிரகம்வந்தால் நன்மை. இரவி, பிதா, மதி, தாய், குஜன், பிராதா, புதன் மாதுலன் குருமக்கள் சுக்கிரன் பெண்டீர் சனி தனக்கு இப்படி

அவரவர்க்கு அந்தந்த இராசிகளில் பிந்து குறைந்த இராசிகள் அந்தந்தக் கிரகத்து நட்பாட்சி யுச்சமானால் சிறிது நன்மையுண்டு. பகை நீசமானால் பெரும்பான்மையும் துன்பம். ஏறின இராசி அந்தந்தக் கிரகங்களுக்கு நட்பாட்சி யுச்சமாகில் அப்போது வெகு நன்மைதரும் பகை நீசமாகில் சிறிதுநன்மை. சுபக்கிரகம் வரில் நன்மை. பாபக்கிரகம்வரில் தீது இவையெல்லாம் வீமேசர்தானே நினைந்து சொல்வது.

## இராசிகுணகாரம்.

கிட்டுமோரைகுணகாரமாடுகோல்
　　கிளக்குமேழிலெருதரிபத்தில்யாழ்
துட்டனெட்டளிநால்கலைகன்னியுஞ்
　　சொல்லுமைந்துவில்லொன்பதுகும்பமே
இட்டபன்னொன்றுமுந்நான்குமீனமே
　　யிருத்தவிந்திவ்வடைவேபெருக்கியே
திட்டமாய்த்தொகையொன்றாக்கிநெஞ்சமே
　　தேசிகன்வீமநாதனைச்சிந்தியே.

இ-ள். இராசி குணகாரம் பண்ணுகிற அடைவு மேஷத்திலும் துலாத்திலும் இருந்த பிந்தை 7-ல் பெருக்கவும், ரிஷபத்திலும் சிங்கத்திலும் இருந்த பிந்தை 10-ல் பெருக்கவும் மிதுனத்திலும் விருட்சிகத்திலும் இருந்த பிந்தை 8-ல் பெருக்கவும் கர்க்கடகத்திலும் இருந்தபிந்தை 4-ல் பெருக்கவும் மகரம் கன்னியில் இருந்த பிந்தை 5-ல் பெருக்கவும், தனுசில் இருந்த பிந்தை 9-ல் பெருக்கவும், கும்பத்தில் இருந்த பிந்தை 11-ல் பெருக்கவும் மீனத்தில் இருந்த பிந்தை 12-ல் பெருக்கவும் ஆகப்பெருக்கின இலக்கமெல்லாம் ஒன்றாய்க்கூட்டித் தேசிகராகிய வீமேசரைச் சிந்திப்பது எ-று. 17

## கிரக குணகாரம்

சிக்கையேவீமநாதரிருகணுஞ்
　　செய்யமால்சுன்னிருந்தோரைவிந்துவை
யைந்தினாற்பெருக்கீர்க்குசனெட்டினா
　　லந்தணனொருபத்துநீரேழுகா
விந்தக்கோளின்குணகாரம்ராசயி
　　லெய்துமத்தொகையேகமாய்க்கூட்டியே
இந்தமுந்நூற்றிருபத்துனலினி
　　லேற்றிமுந்நூற்றறுபத்தைந்துக்கியே.

இ-ள். கிரகுணகாரம் பண்ணும்வகை இரவி மதி புதன் சனி இவர்களிருந்த இராசி பிந்தை 5-ல் பெருக்கவும். குஜன் இருந்த இராசி பிந்தை 8-ல் பெருக்கவும். குருயிருந்த இராசி பிந்தை 10-ல்

பெருக்கவும். சுக்கிரன் இருந்த ராசியிந்தை 7-ல் பெருக்கவும். அந்தந்தக் கிரகங்கள் இருந்த ராசி பிந்தை அவரவர்க்குத் தனித்தனியே பெருக்கி ஆக இத்தனையென்று கூட்டி முன் இராசி குணகாரத்துக்கு பெருக்கின தொகையையும் ஆக இந்த 2-தொகையும் கூட்டி 324-ல் பெருக்கி 365-க்கீவது எ-று. 18

அஷ்டக வர்க்காயுசு

ஈந்துமீந்தஇருபத்தேழிற்கழி
யிலங்குவட்டங்களத்தனையாண்டதா
மீந்தசேடமீராறிற்பெருக்கியே
மிக்கழுவொன்பதின்வட்டமாதமாம்
போந்தசேடமையாறிற்பெருக்கியே
புரியுமொன்பதுமூன்றிற்கழித்தநா
ளாய்ந்தசேடமறுபதிலேற்றியே
யண்ணறந்தருணுடிவிநாடியே.

இ-ள். 365-க்கு ஈந்து ஈயாதசேஷம் 27-ல் கழித்த வட்டம் எத்தனை கண்டதோ அத்தனையும் வருஷமென்றறிவது. 27-ல் கழித்து மீந்தசேஷத்தை 12-ல் பெருக்கி 27-ல் கழித்த வட்டங்கள் மாதமாம் முன் 27-ல் கழித்து மீந்தசேஷத்தை 30-ல் பெருக்கி 27-ல் கழித்த வட்டம் நாள் 60-ல் பெருக்கி 27-ல் கழித்தவட்டம் நாள் 60-ல் பெருக்கி 27-ல் கழித்தவட்டம் நாழிகை இப்படியே விநாடி தற்பரையும் விதற்பரையும் கண்டுகொள்க எ-று. 19

இதுவுமது

நாடுமிவ்வடைவேயெழுகோட்களு
நண்ணுமவ்வவராண்டுக்கீயாயுசு
கூடுமோரையிலாண்டுகோடேறிடிற்
குலவுமாயுசுபாதிதண்ணீசமே
நீடுமோர்கிரகநிற்கினுமிந்நெறி
நின்றகோளாண்டிற்றேறிநற்குள்ளதே
தேடுமீந்தோரைரெண்டுகோள்பாதிதள்
செய்யநந்தொடுக்காடர்சிறப்பதே.

இ-ள். வருடம் மீ நாள் நாழிகை விநாடி யென்றடைவே 7-கிரகங்களுக்கும் அவரவர்க்கு ஆயுசு கூட்டுமடைவு 1-இராசியில் 2 கிரகங்கள் கூடியிருந்தால் முன்கண்ட வருடம் மீ நாள நாழிகைகளிற் பாதி தள்ளிப்போடவும். 1-கிரகம் நீசமாயிருந்தாலும் பாதி தள்ளிப்போடவும். கூடினகிரகம் பெலஹீனனுனல் பெலவானுக்குள்ள வருடமேபெறும். மதி ஆட்சியில் 2-கிரகமிருந்தால் பர்திவாங்கிப்போடவும் என்று வீமேசர் சிறப்பித்தது எ-று. 20

### இதுவுமது

சிறக்குமோர்கோளுறமூன்றத்தொன்றுதள்
செய்யசோமனிருக்கினும்பாதிதள்
ளொறுக்கும்பாவர்பகைநீசமெட்டிலொன்
ஞெழிக்கத்தோற்றக்கோட்கோர்மூன்றிலொன்றுதள்
பிறக்குமட்டகவர்க்கவருடமே
பெலமுளோர்கேந்திரமுறமுன்வரும்
பறக்கும்பாவத்திரிகோணந்தேறுகோள்
பாதியாய்வீமநாதர்தாளண்டுமே.

இ-ள். மதி ஆட்சியில் ஒரு கிரகமிருந்தால் கண்ட ஆயுசு ஆண்டில் மூன்றத்தொன்று தள்ளுவது. மதிநின்றால் கண்ட வருடத்திற் பாதிதள்ளுவது. பாபக்கிரகம் பகைநீசமாயிருந்தால் 8-லொன்று தள்ளுவது. படையிற்றேற்ற கிரகமென்றதினால் சிங்கமுதல் 6-இராசியில் முன்வந்த கிரகத்திற்குக் கும்பமுதல் 6 இராசியிலிருந்து பின்வந்த கிரகம் தோல்வை. கும்பமுதல் 6 இராசியில் பின்வந்த கிரகத்துக்கு சிங்கமுதல் 6 இராசியிலிருந்து முன்வந்தகிரகம் தோல்வை என்றறிவது. இப்படி தோற்றக்கிரகத்துக்குக் கண்ட ஆயுசில் மூன்றத்தொன்று வாங்கிப்போடவும். இப்படி 7-கிரகத்துக்கும் அவரவர்க்குக்கண்ட ஆயுசு ஆண்டிற்றள்ளி நின்றது அவரவர்க்குத் தனித்தனியே இத்தனை ஆண்டென்று 7 கிரகத்துக்கும் கண்டுகொள்வது. அஷ்டகவர்க்கத்தில் சுபம்பெற்ற கிரகம் சேந்திரமாகிய இலக்கினம் 4-ஆமிடம் 7 ஆமிடம் 10-ஆமிடத்திலிருந்தகிரகத்தின் ஆண்டு முந்தி ஜெனனகாலத்தில் வருமென்றறிவது. சர்வபாபமொழிக்கும் திரிகோண ஸ்தானமாகிய 5 ஆமிடம் 9 ஆமிடம் 11-ஆமிடம் இருந்த கிரகம் பலவானாயிருந்தால் அவன் அஷ்டகவர்க்கம ஆண்டு நிசை ஜெனனகாலம் துவக்கி ஆதியாகிய வீமநாதர் பாதார விந்தத்தை நாடிவரும் எ-று.

21

### அஷ்டகவர்க்கின் முன்பின்

ஆண்டுபன்னொன்றிரண்டிற்றேறினார்முன்
னுதிரண்டிநாலாறுமூன்றிற்கோள்
கொண்டுதேறிற்பின்னாயுசுகூட்டுகைக்
கோளின்மூப்பிளமைநயங்கூறுமே
கண்டுநட்பாட்சியுச்சம்நீசம்வகைக்
கடியகோள்சுபக்கோளெழுகோட்களு
மூண்டவட்டகவர்க்கம்வீமேசாதா
ளூடத்துறக்கண்டவர்போலுரையுமே.

இ-ள். 11-மிடம் 2-ஆமிடத்திலிருந்த கிரகம் பலவானுகில் அவன்றிசை ஜெனனசாலத்தில்வரும். இதிற் கிரகமில்லாவிட்டால் 12-8-6-3 ஆமிடத்திலிருந்த கிரகம் பலவானுகில் அவன்றிசை அஷ்டகவர்க்கம் வருஷமந்தத்தில் வரும். இப்படி கிரகபலன் கண்டு மூப்பிளமையறிந்து ஆயுசு கூட்டுவது. அப்போது நட்பாட்சியுச்சம் பகை நீசம் அறிந்து சுபக்கிரகமாகில் சுபபலன் பாபக்கிரகமாகில் நிஷ்பலன் அந்தந்தக் கிரகங்கள் பலாபலன் கண்டு அஷ்டகவர்க்கு ஆயுசு இன்னதென்று வீமேசர் பாதாரவிந்தத்தை தமதுள்ளத்தில் நாடி முன்கண்டவர்போ லுரைப்பது எ-று. 22

இதுவுமது

உரைத்தசூரியனுக்கொன்பதோரையி
லுற்றவிந்துகளெத்தனையத்தனை
நிரைத்ததந்தைசகோதரர்தாதையே
நீடுமோரைக்கெட்டாமோரைக்கோளுறத்
தருக்குமைநதன்பிதாநாலாதிபனித்
தயைபினுமபதிதோன்றிற்சென்மத்துற
விருத்தநற்கோள்பிதாக்கருமஞசெயு
மெந்தைவீமேசர்தாளுக்கினியனே.

இ-ள். இரவி அஷ்டகவர்க்குப் போட்டுத் திரிகோணசோதனையும் ஏகாதிபத்தியசோதனையும் சோதியாததற்குமுன் இரவிக்கு 9-ஆமிராசியில் எத்தனை பிந்திருந்ததோ அத்தனையும் பிதாவுடன்பிறந்த சகோதரமென்றறிக. பெண்கோளுக்கு வந்த பிந்துகளெல்லாம் பெண்ணென்றும் ஆண்கோளுக்கு வந்த பிந்துகளெல்லாம் ஆணென்றறிவது. பிதா பிறந்த இராசிக்கு 8-ஆம் இராசியாதிபதி அந்த இராசியிலிருக்க அதுவே இலக்கினமாகப் பிள்ளை பிறக்கில் அந்தப் பிள்ளை பிதுருகாமம் பண்ணுவன். பிதா இராசிக்கு 2-ஆமிராசியாதிபதி மதியுடன் கூடியிருக்கினும் 11-ஆமிடத்திலாதல் செனமத்திலாதல் சுபக்கிரகங்களுடனாதல் கூடியிருக்கினும் பிதுரு கர்மஞ்செய்து எந்தையாகிய வீமேசுரா பாதத்துக்கினியனும் எ-று. 23

இதுவுமது

இனியதந்தையிராசிக்கிரண்டினி
லெழுந்தசேய்பிதாவின்பொருள்கொள்ளுமே
தனையனபானுவுக்கொன்பதிற்றேனறினேன்
றந்தையொப்பனக்கோளுறமிஞ்சுவான்
கனியுமக்கோளவ்வோரையைநோக்கினுங்
கதித்துலாழுமவன்கிளைசூரியன்

வினவிராசியதிபனற்கோளுமாய்
மிக்கசேயோரைநோக்கிறையன்பனே.

இ-ள். பிதுர் கிரகமாகிய இரவிக்கு 2-ஆமிராசியிற் பிறந்தால் பிதுர்தனமெல்லாம் பிதாவினுதிபத்தியமெல்லாம் இந்தப்பிள்ளை கொள்ளும். இந்தப்பிள்ளை பிதுர்கிரகத்துக்கு 9-ஆமிராசியிற் பிறந்தால் பிதுருக்குச் சமானமாயிருப்பன். பிதுர் கிரகத்துக்கு 9-ஆமிடத்ததிபதி இந்தப் பிள்ளைபிறந்த இலக்கினத்திலிருந்தால் பிதுரினு மிஞ்சியிருப்பன். பிதுருல்தானுதிபதி லக்கினத்தைப் பார்த்தால் அவன் வங்கிசம் வர்த்திக்கும். இரவியிருந்த ராசியாதிபதி பிள்ளை லக்கினத்தைப் பார்த்தால் இவன் வங்கிசம் வர்த்திக்கும். இரவியிருந்த இராசியாதிபதி பிள்ளை இலக்கினத்தைப் பார்த்தால் பிதுரிலும் பிரபலனாக வீமேசர்க்கன்பனும் எ-று. 24

இதுவுமது

இறைவர்கண்விந்திலாவோரைமாதர்மேல்
யாத்திரைநற்கருமமெடுக்கொணு
மறிமுன்மூன்றுமும்மூன்றுநால்வட்டமே
மலியவீந்தோரைதிக்கிற்பொன்வைப்பிடஞ்
செறியுமார்த்தாண்டருற்றநவாங்கிசஞ்
சேருமக்கோட்டினசயந்திரமபிதா
மறியுமோரையதிபன்பகையுற
மாணநிச்சயமென்னுமறைகளே.

இ-ள். இரவி திரிகோணசோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் சோதித்து பிந்தில்லாத இராசி மாதங்களில் சுபகாரியங்களும் சுப முகூர்த்தங்களும் யாத்திரையும் போகவொண்ணுது. மேஷமுதல் 3-இராசியில் பிந்துவும் கர்க்கடகமுதல் 3-இராசியில் பிந்துவும் மகாமுதல் 3-இராசியில் பிந்துவும் இப்படி மும்மூன்று இராசியிலும் பிந்துக்கள் அதிகமானதில் தேவபூசைகள் பூஷணங்கள் வைப்பிடம் சயனத்தலத்திற்கும் ஆமென்றறிக. இரவி எந்த நவாங்கிசத்திலிருந்தான் அந்த நவாங்கிசாதிபதி மகாதிசை அந்திராந்திரதிசையில் பிதுருவுக்குப்பீடைவரும். அந்தந்த நவாங்கிசாதிபதி பகையாயிருந்தால் அவன மகாதிசை அந்திராந்திரதிசையில் பிதுருவுக்குப் பீடைவரும்.

இதுவுமது

என்னுஞ்சந்திரவர்க்கிந்துவுக்குநா
லாமிராசியினின்றேரைவிந்துவு
மன்னுமாண்கோள்பெண்கோள்விந்துவெத்தனை
வளருந்தன்றுய்சகோதரர்க்கோட்களு

முன்னுசந்திரசோதனைக்கண்டபின்
னுடுபதிக்குநால்விந்துவாலேற்றியே
பன்னிரண்டிற்கழிவுறும்விந்திலாப்
பதிசுதன்றுய்பாமர்தாள்பற்றுமே.

இ-ள். மதி அஷ்டகவர்க்கு மதிநின்ற ராசிக்கு 4-ஆம் இராசியில் பிந்து எத்தனை இருந்ததோ அத்தனையும் மாதா சகோதரம். மதிக்கு 4-ஆம் ராசியில் ஸ்திரீகிரக பிந்தெத்தனை யிருந்ததோ அத்தனையும் ஸ்திரீ சகோதரம். புருஷக்கிரக பிந்து எத்தனை யிருந்ததோ அத்தனையும் ஆண் சகோதரம். அவர்களுக்கு அந்தந்தக்கிரகங்களுக்குண்டான குணம் மதிக்குச் சோதனை சோதித்தபின்பு 4-ஆமிராசியிலிருந்த பிந்துவாற் பெருக்கி 12-ற் கழித்து நின்ற சேஷமெத்தனை அத்தனை மாதத்தில் மாதுருகெண்டம். பிந்தில்லாத சூன்யராசியில் சனி வருகிறபோது மாதாவுக்குப பீடை. இவை தீரும்படிக்கு விமேசர் பாதாரவிந்தத்தை நாடுவதாம் எ-று. 26

இதுவுமது

பற்றுசெவ்வாய்க்குமூன்றிலும்ரண்டிலும்
பரந்தவிந்துசகோதரமத்தனை
யுற்றபன்ளென்றீராறினுநல்லகோ
ளோங்குவிந்துச்சகோதரமுற்றபேர்
நற்றுசெவ்வாயிருந்தநவாங்கிச
ராசிவிந்துச்சகோதராத்தனை
பெற்றமேடாதிமூன்றுமுன்னோரையிற்
பெருக்கவந்ததிசைநலம்பித்தரே.

இ-ள். குஜன் அஷ்டகவர்க்குள் குஜன் நின்ற இராசிக்கு 3-ஆமிராசியிலும் 2-ஆமிராசியிலும் இருந்தபிந்து எத்தனையோ அத்தனையும் சகோதரர். குஜன் நின்ற இராசிக்கு 11-12 ஆமிடம் சுபக்கிரகமிருந்தால் அந்த இராசிகளிருந்த பிந்து அத்தனையும் இவனுக்கு முன்பிறந்த சகோதரமென்றறிக. குஜன் எந்த நவாங்கிசத்திலிருந்தான் அந்த இராசியிலிருந்த பிந்து சகோதரமென்றறிவது. மேஷாதி மீனந்தமாக மும்மூன்றிராசியில் இருந்த பிந்து அதிகமான திக்கில் பூமிலாபம் வஸ்திரலாபம் சகல வஸ்துவும் வரும் எ-று. 27

இதுவுமது

பித்தர்சேய்நிறைராசிக்கெட்டாதிபன்
பெருத்தவுச்சக்கோளுற்றசகோதா
ருத்தமர்பூமிலாபமுடையபே
ருற்றநீசக்கோளாகிற்சீர்கேடரே

மெத்தவாரல்பலவீனந்தியரே
மிக்கநட்பாட்சியுற்றூர்திர்க்காயுசு
முத்தரங்கிருந்தவ்வோரைதேறிடின்
முதிர்சகோதரார்முக்கணர்க்காகுமே.

இ-ள். குஜன் இருந்த இராசிக்கு 8-ஆமிராசிக்கதிபதிக் கிரகம் உச்சமாய்ப் பெலன்பெற்றிருந்தால் சகோதரர் தீர்க்காயுசுண்டாய் பூமி லாபமும் தானியலாபமும் கிரிஷி ஒன்று கோடியாய்ப் பலிக்கும். அந்தக் கிரகம் பகை நீசமானல் சகோதரர் சீர்கேடபால் கிருஷி பலிப்பும் இல்லை. குஜன் பெலஹீனனுகில் சகோதரர்க் கற்பாயுசும், குஜன் பெலவானுகில் சகோதரர்க்குத் தீர்க்காயுசுண்டு. குஜன் இருந்த இராசியாதிபதியும் பெலவானுபிருந்தால் சகோதரர் தீர்க்காயுசுடன் வீமேசர்க்காளாம் எ-று. 28

இதுவுமது

ஆகுமாலட்டவர்க்கினில்விந்துக
ளதிகமாகவதிற்கரியோன்வரி
லாகுமேபெருஞ்செல்வமகவுளா
னணிவிந்தில்லாவதிற்சனிவந்திடிற்
போகுஞ்செல்வஞ்சட்டாட்டவியாதிபன்
புந்திசத்துருவாகமகாதிசை
யாகுமாறெட்டீராறிற்சனிவரி
லவன்கிளைத்திறமெல்லாமடங்குமே.

இ-ள். புதன் அஷ்டகவர்க்கம்போட்டு பிந்ததிகம் வந்த இராசியில் சனி வருகிறபோது சர்வ பாக்கியமும் புத்திரலாபமுண்டாம். பிந்தில்லாத இராசியிற் சனி வருகிறபோது புத்திரமித்திரர் நாசமாம் புதனிருந்த இராசிக்கு சஷ்டாட்டமவியாதிபதி புதனுக்குப் பகையர் யிருந்தால் அவன் அந்திராந்திரதிசை வருகிறபோதும் மாதாபிதா பாட்டன் பாட்டி முதலான பந்துக்களுக்கு மரணமாம். இவை புதன் அஷ்டகவர்க்கில் திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் சோதித்துக் கழிபட்டுற பிந்துக்களாற் சொன்ன பலன் என்பதாம் எ-று. 29

இதுவுமது

அடர்ந்தபொன்னுக்கைந்தோரைவிந்தெத்தனை
யத்தனைமகவாம்பகைநீசக்கோ
டொடர்ந்துநிற்கின்மகவெவர்க்குமிலை
துய்யபொன்னேரைவிந்தைந்தில்விந்துவும்
படர்ந்தபொன்றேறிற்பாக்கியமைந்தராம்
பரவுபொன்னட்டவர்க்கத்திற்சோதிய

நடந்தசெய்சனிவிந்துவிலாதெலா
நன்றுமைந்தர்வீமேசர்தானுடுமே.

இ-ள். குரு அஷ்டகவர்க்குப்போட்டு குரு இருந்த இராசிக்கு 5-ஆமிராசியிலிருந்த பிந்து எத்தனை அத்தனைபேரும் புத்திரர்கள். அந்த இராசியிற்பகை நீசக்கிரகங்களிருந்தால் புத்திரநாசம். குரு யிருந்த இராசியிலிருந்த பிந்துவும் குருவுக்கு 5-ஆமிராசியிலிருந்த பிந்துவும் புத்திரராம். அந்த இராசியிற் பகை நீசக்கிரகங்களிருந்தால் புத்திரநாசம். அப்போது குரு தேறிநிற்கில் பாக்கிய மைந்தருண்டாம். குரு அஷ்டகவர்க்குப் போட்டுத் திரிகோண சோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் சோதித்தபிறகு நின்ற பிந்துக்களில் இரவி மதி குஜன் சனி இவர்களிருந்த இராசியில் பிந்துக்களை வாங்கிப்போட்டு நின்ற இராசிகளில் இருந்த பிந்தெல்லாம் புத்திரராக வீமேசர் பாதத்தை நாடும் எ-று. 30

இதுவுமது

நாடுமன்றிரிகோணவிந்துச்சம
னண்ணிற்சேயிலைக்கோள்ராசியைந்திலு
நீடுபாலட்டகவிந்துவேறின
னெடியபொன்னனட்பங்கிசமெய்தியே
கூடுநட்பாட்சியுச்சத்திற்றேறினூற்
கொடுமைநீக்குங்குமரர்வந்தெய்துமே
தேடுமால்வர்க்குவிந்தேறுமோரைசுன்
சேரிற்சேயுள்னென்னும்வீமேசனே.

இ-ள். குரு இருந்த இராசியும் அதற்கு 5 9-ஆமிராசியுமாகிய 3-ஆமிராசி பிந்தும் சமனாகயிருந்தால் சந்தானம் அற்பம். குரு இருந்த இராசிக்கு 5-ஆமிடத்தில் புதன் அஷ்டகவர்க்கு பிந்துராசியோடதிகமாயிருந்து குரு நட்பாங்கிசத்திலும் ஆட்சி உச்சத்திலும் பெலவானாயிருந்தால் சர்வதோஷமும் பரிகாரமாய் மகத்தாகிய கொடுமையெல்லாம் நீங்கி தீர்க்காயுசுள்ள புத்திரருண்டாம். புதனஷ்டகவர்க்கில் அதிக பிந்திருந்த இராசியிற் சனி வருகிறபோது புத்திரசந்ததியுண்டாய் வாழும் எ-று. 31

இதுவுமது

எண்ணும்வேந்தர்க்கிராறெட்டோராறினு
மிந்துறவங்கிசச்சயமாகுமைந்
துன்னபாவருறவைந்துமிந்திலை
யுற்றசேயிலன்பொன்னெந்தவங்கிச
மன்னவாண்டதிற்சோபனமாகுமே
வத்திரமைந்தருண்டென்றறிவது

பன்னுமிவ்வகைபோல்வருமப்பலன்
பகர்ந்துசொல்லும்வீமேசர்பதங்களே.

இ-ள். குருயிருந்த இராசிக்கு சஷ்டாஷ்டமவியத்தில் மதிஇலக்கினமாக அவன் வங்கிசம் க்ஷயமாகும். 5-ஆமிடத்திற் பாபக்கிரகம் இருந்து அதில் பிந்துவுங் கொஞ்சமாகில் புத்திரரற்பமாம். குரு எத்தனையா மங்கிசத்திலிருந்தான் அத்தனையாம் வருஷத்தில் விவாகமாம். அத்தனையாம் வருஷத்திற் புத்திருற்பத்தியாம் எ-று. 32

இதுவுமது

பதந்தரும்வீமநாதர்சடைமதி
பாவுநீர்சுக்கிரனட்டகவர்க்க
மிதந்தருமாகில்லட்சணங்கார்முக
னிருந்தராசிக்கேழாதியுற்றோரையின்
முதிர்த்தமானார்முயலுமவ்வோரையின்
மொழிந்தெழாவிடிற்பெண்பிறவாதென
விதிந்தவாண்பெறின்மாதுருநோய்கொளும்
வீமநாதரடியார்விதித்ததே.

இ-ள். சுக்கிர னஷ்டகவர்க்கில் ஸ்திரீலட்சணமறியும்படி சுக்கிரனிருந்த இராசிக்கு 7-ஆமிராசியாதிபதி எந்த இராசியிலிருந்தான் அந்த இராசியில் அவனிட ஸ்திரீ சென்மிக்குமென்றறிக. அந்த ஸ்திரீக்கு இவன்புருஷனுகில் தேசாதிபதியான பிரபலவேந்தனுனவன் அந்த இராசியிலில்லாவிட்டால் அந்த ஸ்திரீக்குப் பெண்சந்ததியில்லை ஆண்கோள் நோக்கப் பிள்ளைப் பிறந்தால் அந்தமாதுருவுக்குப் பீடை என்பனவாம் எ-று. 33

இதுவுமது

விரித்தசுக்கிரற்கைந்தோரையெத்தனை
விந்துவெத்தனையத்தனைபெண்சொளுந்
தரித்தசுங்கன்சனியின்வாங்கிசந்
தங்கமந்தன்றனுட்சியாய்ச்சாருனுஞ்
செரிக்குநீசத்தெரிவையைச்சேருமே
சேயினுட்சிநவாங்கிசஞ்சேயிழை
யிருக்கவப்பெண்பலர்தோளுஞ்சேருமே
யெம்பிரான்வீமநாதரிசைத்ததே.

இ-ள். சுக்கிரனிருந்த இராசிக்கு 5-ஆமிராசியில் எத்தனை பிந்திருந்ததோ அத்தனையும் விவாசங்கள் சுக்கிரன் சனி நவாங்கிசத்தில் சனியுடன் கூடியிருந்தாலும் சனி ஆட்சி இராசிகளிலிருந்தாலும் நீசஸ்திரீயுடன் புணர்ச்சியுடையன் சுக்கிரன், குஜன் ஆட்சிகளில்

இருந்து குஜன் நவாங்கிசத்திலும் குஜனுடன் கூடியிருந்தால் அவள் விபசாரி மேற்படி 3-விதமுந் தோற்றுவிடில் சொன்ன பலன் நன்மையாம் எ-று. 34

இதுவுமது

இசைத்ததிங்கள்பாவாங்கிசத்தினி
 லெய்தநீரேழீராறிற்பவருடன்
முசித்திருக்கப்பெண்ணுளனைக்கொல்லுமே
 முதிர்ந்தமாரியெவ்வங்கிசமேறினு
னுசித்தமாட்சியின்கோள்வடிவாகுமே
 யுற்றசோதனைப்பாவர்விந்தொட்டியே
யசப்பில்வந்தத்தனைப்பாரியாளுமே
 யண்ணல்வீமேசுரர்க்கடியார்களே.

இ-ள். மதிபாவாங்கிசத்திலிருந்து இலக்கினத்துக்கு 7-ஆமிடத்திலாதல் 12-ஆமிடத்திலாதல் பாபக்கிரகங்களுடன்கூடி சுக்கிரன் இருந்தால் அவனிட ஸ்திரீ இஷ்டகிருத்தியள் போலிருந்து பிரம்மையாய் புருஷனைக்கொல்லும், சுக்கிரன் எந்த அங்கிசத்திலிருந்தான் அந்த அங்கிசாதிபதி கிரகத்தின் குணன் உருவன் முதலானவை யெல்லாமுண்டு. அந்த ஸ்திரீக்குத் திரிகோணமும் ஏகாதிபத்திபமுஞ் சோதித்த பிறகு இரவி குஜன் சனி மதி இராகு கேது இந்த இராசி பிந்துக்களை எடுத்துப்போட்டு மற்ற இராசி பிந்துக்களெத்தனை அத்தனை ஸ்திரீகளுடையவனாய் வாழும் எ-று. 35

இதுவுமது

அடியார்கோன்வீமநாதர்கண்மைந்தர்சுன்
 னமர்ந்தராசியளவுதன்னோரைமுன்
படியும்விந்தத்தனையாண்டிற்றத்துறும்
 பருதிசேய்தொடுத்தோரைமட்டெண்ணியே
முடியுமாயுசுசுன்னவன்சோத்திய
 முந்துவிந்தெத்தனையாமிலக்கினத்
தடைவுமெட்டினில்விந்துவிலேற்றியே
 யானமூவேழினிற்கழிசேடமே.

இ-ள். சனி அஷ்டகவர்க்குப்போட்டு ஆயுசுபார்க்கும் அடைவு ஜென்மலக்கின முதல் சனிநின்ற இராசிமட்டில் எத்தனை பிந்திருந்ததோ அத்தனையாம் வருஷத்தில் தத்து சனி இருந்த இராசி முதல் சென்மலக்கின மட்டெண்ணி இந்த இராசிகளில் பிந்தெத்தனை யிருந்ததோ அந்தனையாம் வருஷத்தில் அர்த்த சேதமும் தேகபீடையும் சனி அஷ்டகவர்க்கத்தில் திரிகோணசோதனையும் ஏகாதிபத்திய

சோதனையும் சோதித்துக் கழிபட்டுநின்ற பிந்துவெல்லாம்கூட்டி ஆக இத்தனையென்று கண்டு இலக்கினத்துக்கு 8-ஆமிராசியில் பிந்தில்லாவிட்டால் திரிசோணசோதனையும் ஏகாதிபத்திய சோதனையும்சோதித்துக்கழிபட்ட பிந்துவைகூட்டி இந்த 8-ஆமிராசி பிந்துவாற் பெருக்கி 27-ற்கழித்து நின்ற சேஷம் பிந்து எத்தனையென்று காண்பது எ-று.

இதுவுமது

கருத்தசேடமதனைப்புரவிமுன்
சாணவென்றுற்றநாளிற்சனிவரி
லொழிக்குங்காபத்தைவிந்தில்லாவோரையி
னுற்றசந்திரசூரியரோங்கினு
மழிக்குமீலனதில்வரிற்சீணமாய்
மாய்குவாருயிரட்டகவர்க்குநோ
யொழிக்குமவீமேசுரர்க்கபிடேகமே
யுற்றுமுத்திவிரும்பென்றுரைபுமே.

இ-ள். முன் 27-ல் கழித்துநின்ற சேஷம் பிந்துஎத்தனை என்று கண்டு அசுவினிமுதல் இந்த பிந்து மட்டமாக வெண்ணி அந்த நட்சத்திரத்திற் சனி வருகிறபோது தத்து பிந்தில்லாத இராசியில் இரவி மதி வந்தாலும் சனி வந்தாலும் க்ஷீணமாம் இந்த அஷ்டகவர்க்குத் தோஷம்நீர வீமேசுரர்க்கு ருத்திராபிஷேகம் பண்ணினால் சகல தோஷமும் நீங்கி முத்திக்காளாவார் எ-று. 37

இதுவுமது

உரைத்தகண்டாதிகண்டமருக்கனுக்
குற்றசோதனைபானுறுமோரைமுன்
பொருத்தவொன்பதில்விந்துவைச்சூரியன்
பெற்றசோத்தியவிந்தெத்தனையாமதிற்
பெருக்கிமூவொன்பதாலேகழித்தநாள்
பிதுர்மரிக்குஞ்சனியொன்பதொன்பதி
னிரைத்தபூர்வமூன்றுநாட்புள்ளுக்தேள்பிறை
நேசர்வீமேசர்தானைநினைப்பதே.

இ-ள். கண்டாதிகண்ட மறியும்படி இரவிக்குத் திரிகோணசோதனையும் ஏகாதிபத்தியசோதனையும் சோதித்து நின்ற பிந்து இத்தனையென்றறிந்து இரவியிருந்த இராசிக்கு 9-ஆமிராசியிலிருந்த பிந்துவினாற் பெருக்கிக் கண்ட தொகையை 27-ற் கழித்து மீந்த சேஷம் இத்தனையென்றறிந்து ஜெனனகாலம் பூர்வபட்சமாகில் அசுவினி முதலாக எண்ணிக்காண்பது அமாபட்சமாகில் அவிட்டம் முதலாக என்னிக் காண்பது கண்ட நட்சத்திரத்திலும் அதற்குத் திரிகோண நட்சத்திரத்திலும் சனிவருகிறபோது பிதுர் கண்ட

ஜெனனகாலத்தில் இரவி பகை நீசத்தில் நின்று அந்த காலங்களில் இரவி அஷ்டவர்க்காயுசு புத்தியாகில் அப்போது பிதுர்கண்டம் இரவி நட்பாட்சி யுச்சம்பெற்று இரவி அஷ்டகவர்க் காயுசுவரிற் பிதாவுக்குத் திரவியநாசம் மகத்தாகிய பங்கம் வந்துதீரும் மற்ற சுபக்கிரகங்கள் அஷ்டவர்க்காண்டு புத்திவரில் நன்மைதரும் எ-று. 38

இதுவுமது

நினைத்தசந்திரசோதனைவிந்துவை
நீடுசோரனுலாமோரைவிந்துவைத்
தனைப்பெருக்கிகாண்மூவொன்பதிற்சழிச்
சார்ந்தநாட்சுன்வரிற்றாய்மரிப்பது
சினத்தசெய்சோதனைவிந்தைச்சேயுறுஞ்
செய்யமூன்றோரைவிந்தாற்பெருக்கிநாள்
பினைக்கழித்துவிடுமனைசுன்வரிற்
பிராதுர்கோயெம்பெருமான்விழித்ததே.

இ-ள். மதிக்குத் திரிகோணசோதனையும் ஏகாதிபத்தியசோதனையும் சோதித்து நின்ற பிந்தை எத்தனையென்று கண்டு மதி நின்ற இராசிக்கு 4-ஆம் இராசியில் இருந்த பிந்தை மூன் மதி சோத்தியத்திற் கண்ட பிந்துவாற் பெருக்கி 27-ற்கழித்து மீந்தசேஷம் இத்தனையென்று கண்டு பூர்வபட்ச அமரபட்சமென்றறிந்து அசுவினி முதலாகவும் அவிட்ட முதலாகவும் எண்ணிக்கண்ட நட்சத்திரத்திலும் அதற்குத் திரிகோணத்திலும் சனி வருகிறபோது மாதுருகண்டம். இனி குஜனிட சோத்தியத்தில் கண்ட பிந்து எத்தனையென்றறிந்து குஜன் நின்ற இராசிக்கு 3-ஆம் இராசியில் இருந்த பிந்தை மூன் சோதித்துக்கண்ட பிந்துவினாற் பெருக்கி 27-ற் கழித்து மீந்ததிற் கண்ட நட்சத்திரத்திலும் அதற்குத் திரிகோண நட்சத்திரத்திலும் சனி வருகிறபோது பிதுருகெண்டம் எ-று. 39

இதுவுமது

விதித்தமால்சோதனைவிந்துபுத்தியே
மேவுமோரைக்குப்பத்தோரைவிந்துவாற்
றுதிக்கவெற்றிமூவொன்பான்கழித்தநாள்
சுன்வரிநண்பர்சுற்றங்கேடாமென
வதுத்தமன்சோதனைவிந்தையபொன்னினுக்
கைந்தில்விந்தாற்பெருக்கிதற்கீந்திட
மதித்தநாள்சுன்வரின்மைந்தாகோயதாம்
வள்ளலெங்கள்வீமேசர்வகுத்ததே.

இ-ள். புதன் அஷ்டவர்க்கில் சோதித்து நின்ற பிந்து இத்தனையென்று கண்டு புதன் நின்ற இராசிக்கு 10-மிராசியிலிருந்த பிந்தை

முன் சோதித்துக்கண்ட பிந்துவினாற் பெருக்கி 27-ற் கழித்து மீந்த சேஷம் அசுவினி முதலாக எண்ணிக்கண்ட நட்சத்திரத்திலும் அதற்குத் திரிகோண நட்சத்திரத்திலும் சனி வருகிறபோது பந்துமித்துரு நாசமாம். குரு அஷ்டவர்க்குச் சோதித்துநின்ற பிந்தித்தனையென்று கண்டு குரு நின்ற இராசிக்கு 5-ஆமிராசி பிந்துவை முன் சோதித்துக்கண்ட பிந்துவினாற் பெருக்கி 27-ற் கழித்து மீந்துகண்ட நட்சத்திரத்திலும் அதற்குத் திரிகோண நட்சத்திரத்திலும் சனிவருகிறபோது புத்திரநாசமாம் எ-று. 40

இதுவுமது

வருத்தநீர்சோதனைவிந்தைச்சுக்கிரன்
மருவுமோரைக்கேழ்விந்துவிலேற்றியே
பகுத்தவொன்பததனிற்கழித்தநாள்
பானுமைந்தனுறப்பாரிநோயதாம்
தகர்த்தகூன்சோதனைச்சனிக்கெட்டினிற்
சாருங்விந்திற்பெருக்கிழுவொன்பதின்
மிகுத்தநாள்கரியோன்வரத்தான்கெடும்
வீமநாதரடியைவிரும்புமே.

இ-ள். சுக்கிரன் அஷ்டவர்க்குச் சோதித்துக்கண்ட பிந்தித்தனையென்று சுக்கிரன் இருந்த இராசிக்கு 7-ஆமிராசியில் இருந்த பிந்தினாற் பெருக்கி 27-ற் கழித்து மீந்ததிற்கண்ட நட்சத்திரத்திலும் அதற்குத் திரிகோண நட்சத்திரத்திலும் சனி வருகிறபோது பாரியர் கிலேசம், சனியின் அஷ்டகவர்க்கு சோதித்துக் கண்டபிந்து இத்தனையென்று சனியிருந்த இராசிக்கு 7-ஆமிராசியில் இருந்த பிந்தினாற் பெருக்கி 27-ற் கழித்து மீந்ததிற் கண்ட நட்சத்திரத்திலும் சனி வருகிறபோது சரீரக்கிலேசம். இப்படி முன்சொன்ன 7-கிரகங்களும் அவரவர்களுக்குச் சொன்ன நட்சத்திரங்களில் சனி வருகிறபோது அவரவர் அஷ்டகவர்க்காயுசு புத்தி அப்போது அந்தக் கிரகமும் ஜெனனகாலத்தில் பகை நீசமாய் சுபக்கிரகங்கள் நோக்காதிருக்கில் அந்தக் கிரகத்திற்கடுத்தபேர் நாசம் நட்பாட்சியுச்சம்பெற்று தனலாபத் திரிகோண கேந்திரங்களில் நிற்கில் அந்தக் கண்டாதிகண்டங்கள் அடுத்தபேர்க்கல்லாமலும் அவரவர்க்குப் போருட்சேதமும் திரேகாலஸ்யமும் உண்டாம். இவை தீர வீமநாதர் திருவடியைத் தியானித்தல் வேண்டும் எ-று. 41

இதுவுமது

விரும்புசென்மத்துக்கோளாதிகாலவன்
மேவுமெந்தெந்தவங்கிசராசியில்

விரும்புமாயுசுக்கோளின்றிசைவரின்
மிக்காளிற்சனிவரக்கேடுநோய்
விரும்புமெட்சிமூதற்சனிமட்டெண
மிக்கவிந்தந்தமத்தனையாண்டினைப்
வரம்புசுன்சென்மமட்டெணவிந்தந்த
மருவுமாண்டினைய்வீமேசர்மாற்றுமே.

இ-ள். இலக்கினதிபதி இலக்கினத்திற்கு 4-ஆமிராசியாதிபதி எந்தெந்த இராசியில் எந்தெந்த அங்கிசத்தில் இருந்தார்களோ அந்தந்த அங்கிசாதிபதி அஷ்டகவர்க்காண்டு வருகிறபோது அந்தந்த நட்சத்திரத்திற் சனிநின்றால் கண்டம் ஜெனனகாலத்தில் ஜென்ம இராசிமுதல் சனி நின்ற இராசி மட்டாக எண்ணி அதில் எத்தனை பிந்திருக்கிறதோ அத்தனையாம் வருஷத்தில் ஒருகண்டம் சனிநின்ற இராசிமுதல் சென்மராசிமட்டும் எண்ணி அந்த இராசிக்கு எத்தனை பிந்திருந்ததோ அத்தனையாம் வருஷத்தில் ஒருகண்டம் இவை நீர அவரவர் சாமங்களில் உருத்திராபிஷேகம் பண்ண வீமேசுராருளினாற் சர்வ தோஷமும் நீங்கும எ-று. 42

இதுவுமது

மாற்றுமேழ்கோள்விந்தீராறும்வைத்தபின்
மருவுசென்மோரைமுன்னாலதிகமே
யேற்றசெல்வநாடுநாலதிகமே
யினியபின்னுலுமந்தத்திற்செல்வமாஞ்
சாற்றும்லாபவிந்தேறக்கர்மம்வியந்
தாழ்ந்திடராஜராஜாங்கயோகமே
யேற்றுமேல்விளையாடும்வீமேசர்தா
ளிறைஞ்சுசர்வாட்டகமீதுரைப்பதே.

இ-ள். சர்வாஷ்டகவர்க்கு அறியும்படி இரவிமுதல் 7-கிரகத்துக்கும் அவரவர்க்குக் கண்ட பிந்துக்களைக்கூட்டி 12-ஆமிராசியிலும் இலக்கினமுதல் 4-ஆமிராசியிலும் பிந்ததிகமானால் இவனுக்கு ஆதியில் மகா ஐசுவரியமுண்டாம். 4-ஆமிராசிமுதல் 8-ஆமிராசிபரியந்தம் பிந்து அதிகமானால் நடுவயதில் ஐசுவரியமுண்டாம். இலாபஸ்தானமாகிய 11-ஆமிராசி பிந்து அதிகமாய் 10 ஆமிராசி பிந்தும் 12-ஆமிராசி பிந்தும் குறைந்திருந்தால் ராஜயோகமாம். 11-ஆமிராசி பிந்து குறைந்து 12-ஆமிராசிபிந்து ஏறியிருந்தால் வெகுசெலவாகும் என்றறிக. 11-ஆம் இராசி பிந்து ஏறி 10-ஆமிராசி பிந்து குறைந்திருந்தால் இவன் செய்யும் தொழில் பழிப்பில்லாமல் நினைத்த கருமமும் முடியாமற்போம் ஜென்ம இராசி முதல் 12-இராசிக்கும்,

இவ்வடைவே பலனென்று ரிஷபவாகனரூடராகிய வீமேசுரருளிச் செய்தது எ-று. 43

அஷ்டகவர்க்குப்படலம் முற்றிற்று.

---

## காலசக்கரப்படலம்

### காலசக்கரம் பிரிக்கும் அடைவு

உரைத்தசக்கரமைந்தாண்டுசூரிய
　　னெருங்குமாண்டிருபதொன்றுசந்திரன்
பருத்தசெயேழுமொன்பதுமாலிறை
　　பத்துவெள்ளிபன்னூறண்டுநால்சனி
தரித்தகான்குமிரண்டேகால்ராசியாய்த்
　　தங்களோரையிற்றுமுண்பாராண்டினைத்
தெரித்தசென்மநாள்சென்றகாணுழிகைச்
　　சென்றதாண்டதாநின்றனவாயுசே.

இ-ள். கால சக்கரத்துக்கு இரவி முதல் சனி ஈறாகப் பரமாயுசு அறியும்படி சிம்ம இரவிக்கு ஆண்டு-5 கடகமதிக்கு ஆண்டு-21 மேஷ விருட்சிகக் குஜனுக்கு ஆண்டு-7 மிதுனம் கன்னிபுதனுக்கு ஆண்டு-9 தனசு மீன குருவுக்கு ஆண்டு-10 ரிஷபம் துலாம் சுக்கிரனுக்கு ஆண்டு-16 மகரம் கும்பம் சனிக்கு ஆண்டு-4 இவ்வகையால் அவரவர் ஆட்சியிலுண்பர். இனி ராசி 1-க்கு 9-காலும் $2\frac{1}{4}$-நாளென்று மறிக. இன்ன நட்சத்திரம் இத்தனையாங் காலென்று அறிந்து அக்காலுக்குற்ற இராசி 9-லும் உண்ணுங் கோட்களில் தீர்வன பரமாயு சென்றறிவது. இதில் முதலிராசி உண்ணுங் கோட்களின் ஆண்டை 15-க்கீந்த ஈவு ஒரு நாழிகைக்கு ஆண்டு கழிவென்றவதனால் சிங்கம் இரவிக்கு ஆண்டு 5-க்கும் வாரம் எத்தனையென்றால் ஓராண்டின் வாரமாவது வாக்கியம் குணம் விகுண முன்கூறில் ஏதென்னில் 365-வாரமும் 15-நாழிகையும் 31-விநாடிகையும் 15-தற்பரையுமென்றறிக. இதனை இரவி ஆண்டாகிய 5-ல் பெருக்க 1327-நாளும் 17-நாழிகையும் 36-விநாடியும் 15-தற்பரையுமென்றறிவது. பாதமாகியநாழிகை 15-க்கீந்தசேஷம் எத்தனையென்றால் நாள்-121 நாழிகை-45 விநாடிகை-6 தற்பரை-24 விதற்பரை-40 இவை ஒரு நாழிகைக்கு வருவதென்றறிந்து சென்ற நாழிகைக்கு இவ்வடைவே ஆண்டைக் கழித்துநின்றது பரமாயுசென்றிந்து இப்படி 7 - கிரகத்துக்கும் அவ்வவராண்டை அவ்வவர்க்கீந்து அந்தப் பாதங்களிற் சென்றநாழிகைக்கீந்து நின்ற

கிந்து அந்தப் பாதங்களிற்சென்ற நாழிகைக்கிந்து நின்ற நாழிகை முதல் 9-இராசயாதிபதிக் கிரகங்களின் ஆண்டெல்லாம் பரமாயுசு.

இதுவுமது

தேசிமுற்கான்மறிவிடையாழளி
சிங்கமாதுநிறைதெறுக்கால்வில்லூ
ணேசமான்சால்கயற்றெறுக்கானிறை
நீடுபெண்ணளிசிங்கமியாழ்ரெண்டுகால்
வாசமேநாடுமீன்சான்மகரம்வின்
மறியுங்குண்டைமிதுனமுமூன்றுகாற்
பேசுகாரியன்பெண்டுலேதேள்வின்மான்
பெற்றசான்மின்னுல்பாதஞ்சரியதே.

இ-ள். காலச்சக்கரம் அறியும்படி மேஷம் ரிஷபம் மிதுனம் கர்க்கடகம் சிம்பம் கன்னி துலாம் விருச்சிகம் தனுசு இந்த அதிபதிகள் அசுவினி முதற்காலே உண்ணும் மகரம் கும்பம் மீனம் விருச்சிகம் துலாம் கன்னி கர்க்கடகம் சிம்மம் மிதுனம் இந்த அதிபதிக்கோட்கள் அசுவினியின் இரண்டாங்காலே உண்ணும். ரிஷபம் மேஷம் மீனம் கும்பம் மகரம் தனுசு மேஷம் ரிஷபம் மிதுனம் இந்த அதிபதிக்கோட்கள் அசுவினி 3-ஆம்காலே உண்ணும். கர்க்கடகம் சிம்மம் கன்னி துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் மீனம் இந்த அதிபதிகோட்கள் அசுவினி 4-ஆம் காலே உண்ணும் எ-று. ௧

இதுவுமது

பரணிதேள்கோல்கன்னிக்குளிர்சிங்கம்யாழ்
பரமர்சேய்சமீன்முதற்பாதமாங்
கருணேசான்மான்றனுமறிகோவிடைக்
கருதும்யாழளிசிங்கம்பெண்ரெண்டுதாள்
விரவுகோற்றேடனுமான்குடங்கயல்
விருச்சிகஞ்செட்டிகன்னிமூன்றும்பத
மருவுகொண்டலரிவீணேசேய்கயன்
மறிகுடமான்றனுவுநாற்பாதமே.

இ-ள். விருச்சிகம் துலாம் கன்னி கர்க்கடகம் சிம்பம் மிதுனம் ரிஷபம மேஷம் மீனம் இந்த அதிபதிகோட்கள் பரணிமுதற்காலே உண்ணும் 2-ஆம் காலே கும்பம் மகரம் தனுசு மேஷம் ரிஷபம் மிதுனம் கர்க்கடகம் சிம்மம் கன்னி இந்த அதிபதிக்கோட்கள் உண்ணும்

3-ஆம் காலே துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் மீனம் விருச்சிகம் துலாம் கன்னி இந்த இராசியாதிபதிக்கோட்கள் உண்ணும் 4-ஆம் காலே கர்க்கடகம் சிம்மம் மிதுனம் ரிஷபம் மேஷம் மீனம் கும்பம் மகரம் தனுசு இந்த அதிபதிகோட்கள் 4-ஆம் காலே உண்ணும்.

இதுவுமது

பாரின்முற்காற்றனுமான்குடங்கயல்
பகர்தகர்விடைதண்டரிகொண்டனூண்
சேரும்பெண்கோல்விருச்சிகமீன்குடந்
தெரிசுறுத்தனுதேணிறைரெண்டுகொ
ணுரியேயரிகண்டுத்தார்சேமறி
நடுவின்மான்குடமுடிமூன்ரும்பதங்
கூருமீன்குடமான்றனுத்தேடுலாங்
கோதைசிங்கங்குளிரிறைகொள்ளுமே.

இ-ள். தனுசு மகரம் கும்பம் மீனம் மேஷம் ரிஷபம் மிதுனம் சிம்பம் கர்க்கடகம் உரோகணி முதற்காலே உண்ணும். கன்னி துலாம் விருக்சிகம் மீனம் கும்பம் மகரம் தனுசு விருச்சிகம் துலாம் இவை 2-ஆம் காலே உண்ணும். கன்னி சிம்பம் கர்க்கடகம் மிதுனம் ரிஷபம் மேஷம் தனுசு மகரம் கும்பம் இவை 3-ஆம்காலே உண்ணும் மீனம் கும்பம் மகரம் தனுசு விருச்சிகம் துலாம் கன்னி சிம்பம் கர்க்கடகம் இவை 4-ஆம் காலே உண்ணும் எ-று. 4

இதுவுமது

இறைமுடிமீன்மறிவிடையாழளி
யினியகார்மகள்கோற்றேண்முற்பாதவூண்
குறிதண்டேறுமறிதனுமான்குடங்
குலவுமீன்கிடாய்குண்டையூண்ரெண்டதாஞ்
செறியும்யாழறிகார்மகள்செட்டிதேள்
சேலுஞ்சான்மானுஞ்செப்புமூன்ரும்பத
நிறைவிற்றேள்கோன்மகளரியாரனு
நின்றயாழ்விடைமேடநற்பாதமே.

இ-ள். மீனம் மேஷம் ரிஷபம் மிதுனம் சிம்பம் கர்க்கடகம் கன்னி துலாம் விருச்சிகம் இவை மிருகசீரிடத்து முற்காலே உண்ணும். மிதுனம் ரிஷபம் மேஷம் தனுசு மகரம் கும்பம் மீனம் மேஷம் ரிஷபம் இவை 2-ஆம் காலே உண்ணும். மிதுனம் சிம்பம் கர்க்கடகம் கன்னி துலாம் விருச்சிகம் மீனம் கும்பம் மகரம் இவை 3-ஆம் காலே

உண்ணும் தனுசு விருச்சிகம் துலாம் கன்னி சிம்பம் கர்க்கடகம் மிது னம் இடபம் மேஷம் இவை 4-ஆம் காலே உண்ணும் எ-று. 5

இதுவுமது

பதமும்ரோகணியின்னிறைமுற்பதம்
பற்றுமான்றலேரெண்டுமூன்றந்தநா
ளுதவுடன்னெறியோட்டுமேகவினிக்
கோட்டுகொற்பதங்கார்த்திகைக்கோட்டுகே
முதியமாமுதன்மூன்றுமுயிர்கல
முந்துதோமுதன்மூன்றுமுடலிடங்
குதிரைமூன்றுமுரோணிமும்மூன்றதாய்க்
குறிக்கவீமேசர்தாளுளங்கொள்ளுமே.

இ-ள். உரோகணி 4-ஆம் காலுக்கு ஒட்டினுற்போல் திருவாதிரை முதற்காலுக்கு ஒட்டுவது, மிருகசீரிஷம் 2-ஆம் காலுக்கு ஒட்டினுற்போல் திருவாதிரை 2-ஆம் காலுக்கு ஒட்டுவது மிருகசீரிஷம் 3-ஆம் காலுக்கு ஒட்டினுற்போல் திருவாதிரை 3-ஆம் காலுக்கு ஒட்டுவது மிருகசீரிஷம் 4-ஆம் காலுக்கு ஒட்டினுற்போல் திருவாதிரை 4-ம் காலுக்கு ஒட்டுவதுமுதல் வலவோட்டுக்கு அசுவினிக்கு ஒட்டினுற்போற் கார்த்திகைக்கு ஒட்டுவது அசுவினி முதல் 3-ஆம் வலவோட்டு உயிரென்றும் உரோகணிமுதல் 3-ஆம் இடவோட்டு உடலென்றும் இப்படி மும்மூன்ருக 27-நாளேயும் வீமேசர்தாளே நினைந்து ஒட்டிக்கொள்வது எ-று. 6

காலசக்கரப் பலன்

கொள்ளுமேடமுதல்வலவோட்டெலாங்
குலவுமூனறுமிடவோட்டுத்தேள்சொள்ளுந்
துள்ளுவினமறிவீணேதேள்சிங்கம்யாழ்
துய்யபெண்ணளிநண்டரிதாண்டுகோள்
வள்ளாதிபொருட்போங்கடியரேன்
மரணம்பாவருஞேய்மிடிபாதகந்
தள்ளுவார்வினேநற்கோளின்சக்கரந்
தருக்கிவாழ்வுதருஞானவாதியே.

இ-ள். வலவோட்டெல்லாம் மேஷம் முதலாக இடவோட்டெல்லாம் விருச்சிகம் முதலாகத் தனுசில் நின்று ஷேமத்திற்பாயும். மிதுனத்தில் நின்று விருச்சிகத்திற் பாயும். சிங்கத்தில் நின்று மிதுனத்திற்பாயும். கன்னியில்நின்று சர்க்கடகத்திற் பாயும். கர்க்கடத்தில் நின்றுசிங்கத்திற்பாயும். இவை வந்தித்தபொழுது தீக்கோளாகில் மரணம். நற்கோளாகில் வியாதி. அர்த்தஹானி கிரகப்பாச்சல் சுபமாய் நடக்கில் நன்மை இராசி ஒன்றுவிட்டு முன்பாச்சலில் மண்டுகெகதி

இவை மத்திபபலன் இராசி பின்னொருராசிவிட்டு ஒரு இராசியிற் பாயில் மிருகேந்திர லோகார்ப்பனம். இவை அதமபலன் 4-ராசி 6-ராசி விட்டுபோயில் துரகதலோகார்ப்பனம் இவை பிராணகண்டம்இந்தஇரா சிக்கிரகங்கள் சுபக்கிரகங்களாய் சுபக்கிரக இராசியுமாய் அந்த இராசி நட்பாட்சி யுச்சமாய்ப்பாயிற் சிறிது பீடைவந்து மீளும் பாபக்கிரகமு மாய் பாபக்கிரக இராசியுமாய் அந்த இராசியிற்பகை நீசமாய்ப்பாயிற் பொருட்சேதமும் திரோகபீடையும் வரும் பிராணபயமும் வரும் இப் படிநின்ற கிரக இராசிகள் நயமறிந்து சுபக்கிரகமாய் சுபாவமாய் நடக்கில் வெகு நன்மைதருவர் எ-று. 7

இதுவுமது

ஆரியன்விழிபூணுகில்வேந்தரா
லலையுழைப்புமதிவேசிசோபனஞ்
சாருமால்சுரமக்கினிபயஞ்
சாமன்சந்தானவித்தைலாபம்மினற்
சேருமேதனம்வெள்ளிக்குவாழ்வுறுஞ்
செங்கதிர்க்குமாரற்குஞ்சிறைதளை
கூருமேபேழுகோட்களினற்றிறங்
குலவுமந்திராந்திரசக்கரங்கூறுவாம்.

இ-ள். இரவி சக்கரவருடம் 5-க்குப் பலன் இராஜ வுபத்திரம் உழைப்பு அலைவுபீடை மதி சக்கரவருடம் 21-க்குப் பலன் விவாகம் பலஸ்ரீ சேர்த்தியும். குஜன் சக்கரம் வருடம் 7-க்குப் பலன் ஜ்வர மும் அக்கினிபயமும். புதன் சக்கரம் வருடம் 9-க்குப் பலன் புத்திர லாபம் ஞானம் வித்தியாலாபமும். குருசக்கரம் வருடம் 10-க்கு தன லாபம் சத்துருசேவை. சுக்கிரன் சக்கரம் வருடம் 16-க்குபலன் ஸ்திரீ லாபமும் சந்தானமும் ஐசுவரியமும். சனி சக்கரம் வருடம் 4-க்குப் பலன்சிறை தளை வாதைப்படுதல் இவைகளாம். அந்திரசக்கரம் அந் திராந்திரசக்கரம் சூட்சுமசக்கரம் பிராணசக்கரம் இவைகள் சொல்லு வாம் எ-று. 8

அந்திர அந்திராந்திர சூட்சுமபிராண சக்கரங்கள் வருமாறு

கூறுமவ்வவர்சக்கரவாண்டினைக்
குலவுநாட்கால்சளாயுசுக்கீந்ததை
யேறுமப்பலனோராண்டுக்காதொகை
யிலங்குமவ்வவராண்டிற்பெருக்கிடத்
தேறுமந்திரசக்கரமாமதைத்
தெரிந்தவாயுசுக்கியவந்திராந்திர

வீறுமித்தொகையாயுசுக்கீந்திட
விரும்புசூட்சுமப்பிராணநெறியிதே.

இ-ள். அந்திரசக்கரமறியும்படி ஜென்மித்தகாலையில் இன்னநட்சத்திரம் இத்தனையாம் காலுக்கு இன்ன சக்கரம் வருமென்று முன்சொன்ன அடைவே அறிந்து அதற்குச் சொல்லும் பரமாயுசு இன்னதென்று கண்டு அதற்கோரோர் கோட்களுக்குள் உண்ணும் ஆண்டைப் பரமாயுசுக்கீந்தால் அந்த ஈவு ஓராண்டுக்கு ஊணும் அதன்படி கோட்களுக்கும் முன்சொன்ன ஆண்டுகள்தோறு மேற்றிவிட ஒரு இராசியில் அந்த இராசியுடையான் முதலாக 9-இராசியாதிபதிக் கோட்களும் பகுந்துண்ணும் இனி அந்திராந்திர சக்கரமறியும்படி ஒரு கோளுக்கு அந்திரசக்கரம் கண்டதினத்தை அவரவர் பரமாயுசுக்கீந்த ஈவு ஓராண்டுக்கு ஊணும ஓரிராசியில் மற்றோரிராசியுடையான் ஆண்டிற்பெருக்க 9-ராசியாதிபதிக் கோட்களும் பகுத்துண்ணுமென்றறிக. இனி சூட்சும சக்கரமறியும்படி அந்திராந்திர சக்கரத்துக்குக் கண்டதினத்தை அவரவர் பரமாயுசுக்கீந்த ஈவு ஓராண்டுக்கு ஊணுமென்றறிந்து 9-இராசியாதிபதிக் கோட்களும் பகுந்துண்பரென்றறிக. இனி பிராண சக்கரமறியும்படி சூட்சும சக்கரத்துக்குக் கண்டதினத்தை பரமாயுசுக்கீந்த ஓராண்டுக்கு வரும்பலனை ஓரிராசியில் மற்றோரிராசியுடையான் முதலாக 9-ராசியாதிபதிக் கோட்களும் பகுந்துண்ணும் இவை தீக்கோளுண்ணும்போது வியாதியும் அர்த்த ஆனியுமுண்டாம். நற்கோளுண்ணும்போது அர்த்த லாபங்களுண்டு சன்மித்த காலையில் நட்பாட்சியுச்சம்பெற்று நின்ற கோட்களின் திறமறிந்து நன்மைதீமை சொல்வது எ-று. 9

தறிக்கால் இராசிநிலையறியும்படி
மேஷமுதல் தனுசுவரையிலும் தறிக்கால்

என்னுமேடமுற்காலாரன்மால்புக
ரிந்துகுண்டைசன்பொன்செவ்வாய்வெள்ளியாழ்
மன்னுசேய்சனிதிங்கள்வெய்யோனளி
மதிபுதனளிமாரிசிங்கம்வெய்யோன்
சுன்னனனீரெரிதோகைபொன்சுன்னரி
துகளில்சேய்நிறைகார்மதிசேய்புதன்
சொன்னதேள்குஜன்சுன்னரிபொன்சிலை
துய்யதீபுதனயானிறைதோற்றமே.

இ-ள். மேஷமுதல் 12-இராசிக்கும் தரிக்காலறியும்படி மேஷமுதற்கால் குஜன் ஊண் 2-ஆமகால் புதன் ஊண் 3-ஆம்கால் சுக்கிரன் ஊண் 4-ஆம்கால் மதி ஊண் ரிஷப முதற்கால் சனி 2-ஆம்கால்

குரு 3-ஆம்கால் குசன் 4-ஆம்கால் சுக்கிரன் மிதுனமுதற்கால் குசன் 2-ஆம்கால் சனி 3-ஆம்கால் மதி 4 ஆம்கால் இரவி கர்க்கடக முதற் கால் மதி 2 ஆம்கால் புதன் 3 ஆம்கால் இரவி 4 ஆம்கால் சுக்கிரன் சிம்பம் முதற்கால் இரவி 2 ஆம்கால் சனி 3 ஆம்கால் சுக்கிரன் 4 ஆம்கால் குஜன் கன்னி முதற்கால் குரு 2 ஆம்கால் சனி 3 ஆம்கால் இரவி 4 ஆம்கால் குசன் துலாம் முதற்கால் சுக்கிரன் 2 ஆம்கால் மதி 3 ஆம்கால் குசன் 4 ஆம்கால் புதன் விருட்சிகம் முதற்கால் குசன் 2 ஆம்கால் சனி 3 ஆமகால் இரவி 4 ஆம்கால் குரு தனுசு முதற்கால் சன் 2-ஆம்கால் புதன் 3 ஆம்கால் இரவி 4 ஆம்கால் குரு எ-று. 10

மகரமுதல் மீனம் வரையிலும் தறிக்கால் இராசிநிலை

தோற்றுமான்பொன்சனிகதிர்சுன்குடஞ்
சுங்கன்றிங்களரிபுதன்மீன்குரு
சாற்றுமந்தன்சனிமறையோன்றறிக்
கால்கிழக்குமறிவிடைதண்டெரி
போற்றுநண்டரிதெற்குநிருதிமேற்
பூவைகோற்றேள்புனேமேற்குவில்வளி
மாற்றுமான்சால்வடதிசைமீனமே
வடகிழக்குமருவனுற்றேங்குமே.

இ-ள். மகா முதற்கால் குரு 2 ஆம்கால் சனி 3 ஆம்கால் இரவி 4 ஆமகால் சனி கும்ப முதற்கால் சுக்கிரன் 2 ஆம்கால் மதி 3 ஆம் கால் இரவி 4 ஆமகால் புதன் மீன முதற்கால் குரு 2 ஆம்கால் சனி 3 ஆமகால் சனி 4 ஆம்கால் குரு இப்படி 12 இராசியிலும் 48 தறிக் காலும் அறிவது மேஷமும் ரிஷபமும் கிழக்கு மிதுனம் தென்கிழ க்கு கற்கடகமும சிம்பமும் தெற்கு கன்னி தென்மேற்கு துலாமும் விருட்சிகமும் மேற்கு தனுசு வடமேற்கு மகாம் கும்பம் வடக்கு மீனம் வடகிழக்கு இப்படி 12-இராசிக்கு நிலையறிவது எ-று. 11

காலச்சக்கரப்படலம் முற்றிற்று.

## சடங்கப்படலம்

நாமகரணம்

ஓங்குமந்தணர்க்கிராறுசூத்திரர்க்
குற்றமுப்பதினுமகரணஞ்சொன்
மூங்கிற்றேன்றிரைமொய்மீனகம்பனே
மூன்றுமீனுத்திரங்கள்பறவையார்

தேங்குகண்டிலதிபத்திரட்டைகள்
செப்புமூன்னுவானவமியுந்தீயதாம்
பாங்கதுச்சிமுகினட்டமசுத்தியாய்ப்
பகைவர்நோக்காதிதியோரைபாருமே.

இ-ள். நாமகரணம் பண்ண ஜன்மித்த 12 ஆம்நாள் பிராமணருக்கு 30 ஆம்நாள் சூத்திரர்க்கு இதற்கு நாள் திருவோணம் மூலம் இரேவதி பூசம் மகம் அஸ்தம் அனுஷம் மிருகசீரிஷம் உத்திரத்திரயம் அவிட்டம் உரோகணி சதயம் சுவாதி இந்நாளில் நாமகரணம் பண்ணலாம் இரட்டித்த திதிகளும் நவமியும் விலக்கப்படும் உச்சிக்கு முன்னே அஷ்டமசுத்தியாகப் பாபக்கிரக நோக்கில்லாத திதி இராசியில் பண்ணுவது எ-று. 1

## அன்னப்பிராசனம் காதுகுத்தி

பாரின்வேந்தர்நற்கோட்கள்கேந்திரம்பசு
பானுவைச்சோமனைத்தெரிசிப்பது
மூரினன்னப்பிராசனங்கட்குமுன்
னுண்ணுநாளுமுவாவினற்காலமாஞ்
சாறுமீராறுநான்கினிற்சாற்றிய
தக்கமாதமாறெட்டினிலக்கிரக
மாரும்பூசமறிவானுலக்கையு
மையர்வீமேசாதிரைநல்லதே.

இ-ள். உத்திரட்டாதியில் சுபக்கிரகங்கள் நிற்க அது இலக்கினத்துக்கு தலாபகேந்திரத் திரிகோணங்களாக நிற்கப் பிள்ளையைப் பசுவை இரவி மதியை பெரியோரைத் தெரிசனம் பண்ணிவைத்து அன்னப்பிராசனத்துக்கு நாள் உபகிட காலமென்று பெயர். காதுகுத்த 6 ஆம் மாதம் 8 ஆம் மாதம் இவைகளில் பூசம் உத்திரட்டாதி திருவோணமும் எ-று. 2

## காது குத்த

நல்லரேவதிசித்திரையத்தமு
நாடுமோன்றலைகாக்கைநல்வாரமு
மெல்லைநற்கோளெழுத்திரிரண்டுமூன்
றினியவைந்தாறுமேழ்பனிரண்டுமே
வல்லபன்மூன்றுதேளரிகூன்பொலா
மகரமேடமுமத்திமமற்றைநன்
றெல்லேரெண்டுதிதியிருநாட்பொலா
செய்துமட்டமசித்திக்குமுன்னமே.

இ-ள். இரேவதி சித்திரை அஸ்தம் மிருகசீரிஷம், அவிட்டம் சுபவாரத்திலும் சுபக்கிரக உதயத்திலும் துதிகை திரிதிகை பஞ்சமி

சஷ்டி சப்தமி துவாதசி திரியோதசி நன்று, இராசிகளில் விருட்சிகம் கும்பம் சிம்பம் ஆகாது, மகரமும் மேஷமும் மத்திபம் மற்ற இராசிகள் நன்று, திதி இரட்டித்ததெல்லாம் விலக்கப்படும் அஷ்டம் சுத்தியாக உச்சிக்குமுன காதுகுத்துவது எ-று. 3

இதுவுமது

முன்னமேமதிரெண்டுமூன்றைந்துமும்
மூன்றுபன்னொன்றுமேழுநலன்குருப்
பன்னுமாறெட்டுபததுமலானலன்
பார்க்கவனெட்டுமேழுமலானல
னன்னந்தியனெட்டல்லாதெலானல
றுபன்னொன்றுமூன்றுகடியகோள்
மன்னுவார்காதுகுத்திவளர்த்திட
வள்ளல்வீமேசுராடிவாழ்த்துமே.

இ-ள். மதி 2-3-5-7-9-11 ஆமிடம் நிற்கில் நன்மை குரு 6-8-10 பொல்லான் மற்றிடம் நன்மையினிப்பாவர் 11-3-6 ஆமிடம் நல்லவர் அப்போதப்போதுதிக்கிற இலக்கினத்துக்கு இந்தக் கிரகங்கள் நிற்கப் பிள்ளைகளுக்குக் காதுகுத்தி வள்ளலாகிய வீமேசுராடியை வாழ்த்துவது எ-று. 4

அன்னப்பிராசனம்

திங்களாறெட்டோடாண்டில்வளர்பிறைத்
தெளிதல்வான்புதன்பொன்புகர்வாரந்தேர்
பொங்குபூசங்கடோணிமாமாலையும்
புள்ளுச்சோதிபனையுத்திரங்களு
மங்கையாடையுலக்கைசுண்டினல
மறிநல்லதேளிரட்டித்தபக்கமுந்
தங்துவாக்கணவமிவிட்டன்னமெய்த்
தக்கசேய்க்கிடரீசர்தற்காக்குமே.

இ-ள். 6-மாதம் 8-மாதம் பூர்வபட்சத்தில் ஆகாச நிர்மலமென்பது புதன் குரு சுக்கிரன் இந்த வாரங்களிலும் உரோகணி ரேவதி பூசம் அசுவினி மிருகசிரிஷம அவிட்டம் சுவாதி அனுஷம் உத்திரத்திரயம் அஸ்தம் சித்திரை திருவோணம் சதயம் நன்மை மேஷம் மீனம் விருட்சிகம் ஆகாது மற்ற இராசிகளெல்லாம் 'இரட்டித்த பக்கங்களும் உவா 2-ம் நவமியும் ஆகாது. ஒற்றத்த திதியில் அன்னப்பிராசனம் பண்ணுவது எ-று. 5

பொன்னரைஞாண் சிற்றுடை

மேதைபொன்பதிராறுபொன்னுக்குநாள்
விரவுமாறெட்டுவெள்ளியாமேரா

ரூ துசோமனுடையவவைபுந் தள்
ளூற்றபன்ஞென்றுமூன்ரு றுமேயலாற்
றீதுபாவர்கள்பத்திலெலாம்பொலார்
சேய்பிரந்தநாண்முந்நூற்றறுபதிற்
போதுபுண்ணியம்பொன்னரைஞாணிடப்
பிறந்தநாட்களிற்சிற்ருடைப்போர்ப்பதே.

இ-ள். புதன் 9-2-ஆமிடம் குரு 4-6-8-ஆமிடம் சுக்கிரன் 7-12 ஆமிடம் மதியுடையவையெல்லாம் விலக்கப்பட்டன பாவர் 3-6-11-ஆமிடம் நனமை மற்றிடம் தீமை 10-ஆமிடம் நவக்கிரகமும் பொல்லார். பிள்ளைபிறந்த 360-ஆம்நாள் குளிப்பாட்டி புண்யாசனமும் பண்ணி பொன்னரைஞாண் கட்டுவது பிள்ளைபிறந்தநாளிற் சிற்ருடை உடுப்பது எ-று. 6

சவுளம்

போற்றுபங்குனியாடிமுன்ஞனுநாள்
போந்தவேந்தர்முன்முன்னுதேர்மான்றலை
யேற்றபூசங்கள்கோளினன்வாரகன்
திருந்தையாழெட்டுவாவொழிப்பிள்ளையாண்
டாற்றுமேமூன்றைந்திற்சவுளமாத
மரிவைமால்சேயாழாமளிநனனுநீர்
காற்பரேழாமிடமல்லவோரையுங்
கர்த்தரெங்கள்வீமேசர்கருணையால்.

இ-ள். உத்திரமுதல் 4-நாளும் உரோகணி·மிருகசீரிஷம் புநர்பூசம் இந்தநாளினும் சுபவாரங்களும் நன்மை. விருஷ்டி அஷ்டமி உவாப் பிரதமையும் ஒழிந்த திதியிலும், ஜன்மித்த 3-ஆம் ஆண்டிலும் 5-ஆம் ஆண்டிலும சவுளமபண்ணுவது மகரம் கன்னி துலாம் ரிஷபம் மிதுனம் கர்க்கடகம் இவை நல்லன். சுக்கிரன் 7-ஆமிடம் பொல்லான் மற்றிடம் நன்மை எ-று. 7

இதுவுமது

ஆலமுண்டாரிடக்கண்ணீராறினு
மாறுமந்திரிபன்னிரண்டிந்நெறி
மாலுந்தீயர்மூன்ருறுபன்ஞென்றிலு
மன்னுவார்பாவர்மற்றெல்லோருந்தீயர்
கோலமாரிதென்பாலத்தமானம்பெண்
கொண்டமாண்டுதிரிகெர்ப்பமட்டமா
மேலின்மாதஞ்சவுளம்பண்ணார்நலா
ரெம்பிரான்வீமநாதர்தாட்சேர்வதே.

இ-ள். மதி குரு 12-ஆமிடம் பொல்லர் மற்றிடம்நல்லவர் பாவர் 3-6-11-ஆமிடம் நல்லர் மற்றிடம் பொல்லார். 8-ஆமிடத்தில் எல்லோ ரும்பொல்லர். குருசுக்கிராள் பிரகாசமில்லாதநாளும் தெட்சணாயனத் திலும் தனக்கு விவாகம் பண்ணின ஆண்டும் தனது ஸ்திரீ கெர்ப்ப முண்டான நாளும் அஷ்டமராசியிலும் மாசிமாதத்திலும் பிறந்த நாட்களிலும் மேலோர்கள் சவுளம் பண்ணார்கள் எ-று. 8

## வித்தியாரம்பம்

சாருஞாயிறுவேதியர்திங்கள்பெண்
டக்கவேந்தர்செவ்வாய்ச்சனிசூத்திரர்
பாருமுன்சவுளங்கட்குச்சொன்னநாள்
பகல்விளக்கும்பகலோனுங்கன்னியிற்
சாருமத்திதிமூவைந்துபாகமே
தங்கப்புந்திநாடான்வாணியோகமாஞ்
சாரவித்தைவரந்தரும்பிள்ளையார்
தந்தைவீமேசநாதரைப்பூசியே.

இ-ள். ஞாயிறு பிராமணர்க்காகும், திங்கள் ஸ்திரீகளுக்காகும், செவ்வாய்க்ஷத்திரியர்க்காகும், சனி சூத்திரர்க்காகும், வெள்ளி பிதா க்களுள்ளவர்க்கு விலக்கப்பட்டன. சவுளத்துக்குச்சொன்ன காலங் களில் இரவி கன்னியில் நிற்கப் புதன் கன்னியில் 15-ஆம் பாதத்தில் நிற்க, இரவி மதி உதயமாகப் புதன்கிழமையில் சாஸ்வதி யோக மென்று பெயராம். அந்தநாளில் சர்க்கரையும் பாற்சோறுமாக மகா கணபதிக்கும் சாஸ்வதிக்கும் பூசித்து அமுதுசெய்விக்க எல்லாவித் தையும் பலிக்கும் எ.று. 9

## இதுவுமது

பூசித்தேவீமநாதரருளினாற்
புத்திரர்கையாண்டுத்தாராயனமதில்
வாசிபாரிருபூசமிறைபணி
மாவுலக்கைபுள்செக்கத்தஞ்சித்திரை
நேசந்தோணிதேர்மூன்றுத்திரநல
நேருவாவிருத்தைத்திரயோதசி
தேதிசெவ்வாய்ச்சனிதிராசியிற்
செப்பொணாதுநன்னூலின்றிறங்களே.

இ-ள். ஜென்மித்த 5-வயதுக்குமேல் உத்தராயனம் பிறந்தகாலே யில் ஆசாரியனைப் பூசித்து வித்தியாரம்பம் தொடங்குகிறநாள் புனர் பூசம் திருவாதிரை அனுஷம் அசுவினி திருவோணம் அவிட்டம் சது

ஷம் அஸ்தம் சித்திரை ரேவதி ரோகணி உத்திரத்திரயம் இந்த நாள் நல்லது. உவாவும் இருத்தையும் திரயோதசியும் துவாதசியும் செவ்வாய் சனிதிரராசிகளும் வித்தியாரம்பத்துக்கு விலக்குவது எ-று. 10

இதுவுமது

திறக்குமாறுபத்தீராறுதயமுந்
திங்கண்மாலாறுவெள்ளியாறேழினு
முறக்கும்பாபர்மூன்றாறுபன்னொன்றினு
முகப்பர்கோளெல்லாமட்டமந்தியரே
சிறக்குஞ்சத்தம்பெரிதுசாமுத்திரியந்
தேறுகாந்தர்வத்துநீதிமாலை நூல்
பிறக்கும்வேதாகமங்களுக்குப்புள்ளாம்
பெரிதெனச்சிவனன்பர்பிணைத்ததே.

இ-ள். 6-10-12-ஆமிடம் உதயமும் மதி பொல்லான், புதன் 6-ஆமிடம் பொல்லான், சுக்கிரன் 6-7-ஆமிடம் பொல்லான், பாவர் 3-6-11-ஆமிடம் நல்லர், அஷ்டமத்திற் கிரகங்களெல்லாரும் பொல்லார் சப்தசாஸ்திரம் சாமுத்திரிக சாஸ்திரம் காந்தருவசாஸ்திரம் நீதிசாஸ்திரம் இவற்றிற்குப் புனர்பூசம் நன்று. வேதாகமம் முதலிய சர்வ சாஸ்திரங்களுக்கு அவிட்டம் நல்லது எ-று. 11

உபநயம்

தருக்குமைந்தராண்டேழினின்முப்புரிக்
காகும்மத்தம்பனையாடைதேர்பரி
யிருக்குமத்திரங்கள்சோதிமான்றலை
யரேவதியிருபூசமுநன்றுவா
நெருக்குமெட்டுபிரதமையேகாதசி
நிகழிருத்தையும்பின்னுவாவைந்தின்மே
லருக்கன்சுன்னெரிபாவநாள்ராசிதெற்
காயனம்விலக்கென்றார்நம்மையனே.

இ-ள். 7-வயதில் உபநயனம் பண்ணுவது அஸ்தம் அனுஷம் சித்திரை உரோகணி அசுவினி உத்திரங்கள் 3-ம் சுவாதிமிருகசிரிஷம் இரேவதி பூசம் புனர்பூசம் இவை நல்லது. உவாவும் அஷ்டமியும் பிரதமையும் ஏகாதசி இருத்தையும் விலக்குவது. அமாபட்சத்து பஞ்சமிக்குப்பின் பாபவாரங்களும் அவரிட ராசியிலும் தட்சணாயனமும் விலக்கப்பட்டன எ-று. 12

இதுவுமது

ஐயர்செஞ்சடைப்பூவிற்குடையவை
யாறிற்பொன்புகர்நிற்கமதியெழ

வெய்யரீராறுமெட்டிலெல்லாம்பொல்லார்
வெள்ளிபொன்மூடவந்நாள்குருட்டுநா
டெய்யயோககரணநற்சோட்சஞு
மூவந்துநோக்கவாகாசந்துலங்குநா
ளுய்யுமைந்தர்க்குபநயனங்கள்பண்
ணுற்றல்வீமேசுராருளோங்கவே.

இ-ள். மதிக்குடையவையும் குருவும் சுக்கிரனும் 6-ஆமிடத்தில் நிற்க 6-ஆமிடத்தில் மதி உதயமாக 12-ஆம் இடம் பொல்லான். அட்டமததிலெல்லோரும் பொல்லரா. சுக்கிரன் குரு மூடங்களிலும் பிறந்த நாளும் குருட்டுநாளும் தவறப்படும். சுபயோக கரணங்களிலும் சுபக்கிரக நோக்குண்டாக ஆகாச நிர்மலமாக உபநயனம் பண்ணுவது எ-று. 13

## சமாவர்த்தனம்

ஓங்குசிங்கத்துலாவோணங்கன்னியி
லுற்றகைம்மீனுவாக்கானமத்தன்னதாந்
தாங்குமுன்சவுளங்கட்குச்சொன்னநாள்
சவரந்தேர்பனையோணமத்தமும்மீன்
றேங்குமுத்திரங்களிருபூசமுஞ்
செய்யதாலநன்றெட்டிருத்தைபுவா
தேங்குமுற்றிதிசேய்சனிதேண்மறி
திங்கள்வீமேசர்செய்நெறிசொல்லவே.

இ-ள். ஆவணிமாதத்தில் பௌர்ணமியோடு கூடின திருவோணமும், புரட்டாசி மாதத்தில் அஸ்தமும், உவாக்கர்மத்துக்குத் தனதாங் கிரநங்களில் முன் சவுளங்களுக்குச் சொன்ன காலங்களில் ரோகணி அனுஷம் திருவோணம் மிருகசீரிஷம அஸ்தம் உத்திரத்திரயம் புனர்பூசம் இரேவதி இவை நல்லது. அஷ்டமி இருத்தை உவாப்பிரதமை செவ்வாய் சனி விருட்சிகம் மேஷம் திங்கள் இவை ஆகாது. அஷ்டமசுத்தியாகவும் ஆகாச நிர்மலமாகவும் சமாவர்த்தனம் செய்து.

## கூறை உடுக்க பூஷணம் பூண

சொல்லுமாவுத்திரங்கள்பூசங்கடேர்
தோணிமாசிமும்மீன்சுபவாரமா
மெல்லேகூன்கோலரிதேளிருத்தையெட்
டிவைகள்வாயுவிடத்துடுகூறையே
சொல்லும்வாசிபயறத்தங்கதேர்பனை
தோணிபூசமுமமீன்புதன்வெள்ளிபொன்
நல்லதிங்கள்சனிநந்தைபின்னுவா
நாரிவிற்கயல்யாழ்விடைசாற்றுமே.

இ-ள். அசுவினி உத்திரத்திரயம் புனர்பூசம் மகம் இரேவதி மிருகசீரிஷம் சுபவாரமும் சுபக்கிரக வுதயமும் நன்மை. மேஷம் கும்பம துலாம் சிம்பம் விருட்சிகம் இவையொழிந்த மற்ற இராசிகளில் நன்மை. திதிகளில் இருத்தை அஷ்டமியும் தீதென்பது. வாயுவிடத்திற் பிருதிவு அப்பு நடக்கும்போது கூறையுடுப்பது. அசுவினி சித்திரை அஸ்தம் உரோகணி அனுஷம் இரேவதி பூசம் மிருகசீரிஷம் புதன் வியாழம் வெள்ளி திங்கள் சனி இந்த வாரத்திலும் பவுர்ணமி நந்தை ரிஷபம் மிதுனம் தனுசு மீனம் கன்னி இவை பூஷணம் பூண நன்மை எ-று. 16

அப்யங்கநம்

சார்ந்தசென்மத்திரயநல்வெள்ளிபொன்
றபனன்சேய்வாரம்வாணியோணம்மிறை
போந்தவுத்திரங்கள்பூரமட்டமி
பூணுவார்சதுர்தசிதுவாதசிச்
சேர்ந்தவிட்டிபிரதமைசங்கிரந்
தீண்டொணுவெண்ணைநோயர்விருத்தர்சே
யாந்தயிலமிடக்கொளலாகுமே
யையர்வீமேசர்சொற்படியானதே.

இ-ள். ஜென்மத்திரயங்கள் வெள்ளி வியாழம் ஞாயிறு செவ்வாய் கேட்டை திருவோணம் திருவாதிரை உத்திரத்திரயம பூரம் அஷ்டமி பவுர்நமி சதுர்த்தசி துவாதசி விருட்டி பிரதமை சங்கிரம காலங்களில் தலைக் கெண்ணெயிடலாகாதென்றறிக. நோய்கண்டபேர்க்கும் விருத்தர்களுக்கும் பிள்ளைகளுக்கும் காலமில்லை எந்தவேளையுமாம் எ-று. 16

இதுவுமது

ஆனமானிடர்சாதமாதங்களோ
ராயிரஞ்சென்றபோதுத்தராயன
மானதோருக்திரங்களத்தம்மக
மணியுமோணங்கடைநாட்சதயமு
மானநற்கிரகங்கள்வாரங்களி
லாயிரமபிறையுந்தொழுவாரவர்
தானம்பண்ணிச்சதாவபிடேகராந்
தர்மர்வீமேசாதாளிணைக்காணுமே.

இ-ள். மானிடர் ஜாதகமான ஆயிரமாதஞ் சென்றவாறே உத்தராயனம பிறந்த உத்திரங்கள் மூன்றும் திருவாதிரை திருவோணம் இரேவதி சதயம் இந்த நாட்களிலும் நற்கோள் வாரங்களிலும் ஆயிரம் பிறையுந் தொழுத புண்ணியரொன்று இவர்க்குச் சதாபிஷேகம் பண்ண வீமேசுரரடி சேரும் எ-று. 17

### அக்கினி பரிகரிக்க

காணுமுத்திரக்கடோகணிச்சித்திரை
கார்த்திகைமுறங்தேங்காயுரோகணி
பேணுமான்மிதுனங்குடமிராசியிற்
பிருதிவுசேய்சனிவாராங்கிசமே
மூணுமேறினிற்றைசுபகோட்கணட்
புகந்துநோக்கப்பெரியோர்பிராமணர்
காணவக்கினிபரிகரிகிக்கவே
கருதும்வீமேசர்கண்ணங்கியேறவே.

இ-ள். உத்திரங்கள் மூன்றும் ரேவதி சித்திரை கார்த்திகை விசாகம் மிருகசீரிஷம் உரோகணி இந்நாட்களிலும், மகரம் மிதுனம் கும்பம் இந்த இராசிகளிலும், சாம் பிரிதிவியங்கச் செவ்வாய் சனி வாரத்திலும் இந்த உதயாங்கிசத்திலும் இருத்தையாகிய திதிகளிலும் சுபக்கோள் நட்பாட்சி உச்சத்தில் நின்று நோக்கம் பெரியோர் பிராமணரில் விசேஷித்து உள்ள வித்துவாமிசர் அனுக்கிரகிக்க அக்கினி பரிக்கிரகம் பண்ணுவது எ-று. 18

### பவுஷ்டிகம் கேஜசாந்தி

எங்கள்கோன்றேரிருபூசந்தோணிசெக்
கியலுமூன்றுத்திரங்கண்மககலம்
பொங்குசோதிமொய்ம்மீன்பூர்வபட்சமாம்
புந்திசேய்சனியெட்டிருத்தையுவாத்
தங்குமீதொழிச்சாந்திசவுடிகஞ்
சதயமுத்திரங்களபூசந்தோணிதே
ரங்கமாம்புணமகஞ்சோதியத்தமு
மன்பரப்பனேக்கூகெஜசாந்தியே.

இ-ள். உரோகணி புநர்பூசம் பூசம் இரேவதி சதயம் அனுஷம் உத்திரம் இம்மூன்றும் மகம் சுவாதி அஸ்தமும் பூர்வபட்சமும நன்று புதன் செவ்வாய் சனி அஷ்டமி இருத்தை உவாக்களும் ஒழியச் சாந்திபவுஷ்டிகம் பண்ணுவது. சதயம உத்திரத்திரயம் பூசம இரேவதி உரோகணி அசுவினி அவிட்டம் மகம் அஸ்தம சித்திரை சுவாதி அனுஷம் இந்த நாளில் கெஜசாந்தி பண்ணுவது எ-று. 19

### தீட்சை

கூறுதேருத்திரங்கண்மகம்பனே
கொக்குப்புள்ளிருபூசங்கைமீனிறை
வீறுமோணம்விளக்காடைரேவதி
மிருகசீரிடஞ்செவ்வாய்திரோரையிற்
பூர்வ்பட்சத்திலாகாசநிர்மலம்
புதல்வர்நாள்புண்யயோகவசங்கமம்

வேறிருத்தையுவாவட்டமிகளில்
விற்பெண்மாசிவிலக்கானதீர்ப்பதே.

இ-ள். உரோகணி உத்திரத்திரயம் அனுஷம் மூலம் அவிட்டம் புனர்பூசம் அஸ்தம் திருவாதிரை திருவோணம் சுவாதி சித்திரை மிருகசீரிஷம் செவ்வாய்க்கிழமை திரராசியில் பூர்வபட்சத்தில் ஆகாச நிர்மலமானவிடத்து சீஷன் பிறந்தநாளும் புண்ணிய யோகமும் இருத்தையும் உவாவும் அஷ்டமி ஆடி மார்கழி புரட்டாசி மாசி இவை ஒழித்து அஷ்டமசுத்தியுண்டாகக் கொள்வது. சீஷன் பிறந்த நாட்களில் சங்கிரம காலங்களில் மகா வேதியர் பாதங்களிலாதல் மற்றும் புண்ணியர் பாதங்களில் சீஷனைச் சரீரசுத்திப் பண்ணுவித்து தீட்சை பண்ணுவது எ-று. 20

பட்டாபிஷேகம்

தேறுமான்றலைதேருத்திரங்கண்மாச்
சித்திரையிருபூசங்கோணியவிட்டம்
வீறுமொணம்பனையத்தந்தீபமு
மிக்கமூன்றுடனைந்தாறுபன்னிரண்
டேறுபன்மூன்றிரண்டுநற்கோவதி
னிலங்குநட்பாட்சிகன்னிகோற்கள்வினை
யாறுமெட்சிகற்கோடேறிநிற்றல்பட்
டாபிஷேகம்வீமேசர்தாள்போற்றுமே.

இ-ள். மிருகசீரிஷம் உரோகணி உத்திரத்திரயம் அசுவினி சித்திரை புனர்பூசம் பூசம் இரேவதி அவிட்டம் திருவோணம் அனுஷம் அஸ்தம் சுவாதி இவை நன்று. திரிதிகை பஞ்சமி சஷ்டி திரயோதசி விதியையும் சுபவாரங்களும் சுபக்கிரகங்களும் நட்பாட்சி உச்சமாகக் கன்னி• துலாமொழிய மற்ற இராசி நன்று. அபிஷேகம்பண்ணும் போது குரூர இராசியுடைய கோளை நற்கோள் மாதுருஸ்தானதிபதியாகத் தேறி நட்பாட்சி உச்சம்பெற்று நோக்கினும் இலக்கினதிபன் தனலாபகேந்திர திரிகோணத்தில் நிற்கினும் நோக்கினும் பட்டாபிஷேகத்துக் குரியவனுகி வீமேசர்க்கன்பனும் எ-று. 21

இதுவுமது

பட்டவர்த்தனாசிகோளுச்சமோர்
பாக்கியத்தனகேந்திரதிரிகோணமு
மிட்டநற்கோளிருக்கநோக்கப்பவ
ரியங்கிமூன்றுரிற்பனொன்றினண்புற
வட்டதிக்காளுமுததிக்காளாகுவ
ரந்தக்கோள்பகைநீசத்தலைவுறத்

துட்டநற்பெருகோயினுன்மாய்வரே
சுவாமிவீமேசுரர்புகலங்கமே.

இ-ள். அபிஷேகம் பண்ணுகிறவனிட இராசியுடைய கோள் தன லாபகேந்திர திரிகோணங்களில் மித்துரு சகிதனாய் நட்பாட்சியுச்சம் பெற்று நிற்கினும் பாபக்கிரகம் 3-6-11 ஆமிடம் நிற்கினும் பிறா நாடெல்லாங் கொண்டு அஷ்டதிக்கு மாண்டு மோட்சத்துக்காளாவன். அந்த கோள் பகை நீசத்து நிற்கினும் நின்றகோளைப் பார்க்கினும் நோய்கொண்டு மரணமாய் நரகத்துக்காளாவன். சத்துருஸ்தானத்தில் நின்று சத்துருஸ்தானக்கோளை நோக்குமாகில் நாடோறுஞ் சத்துரு க்களால் பல வருத்தமுண்டாம் எ-று. 22

## பூதரிசனம்

அங்கிநற்பனேபுத்திரத்திரயங்தே
ராடைமூலமகஞ்சோதிமுற்றிறை
பொங்கடுப்புலக்கைகன்னிதேள்விடை
போதுமீன்மறியாழ்நிலம்பத்திரை
செங்கதிர்ச்சனிவாரநவமியுந்
தீதுமட்டமசுத்தியதாகவே
யங்கியோசனேயாஞ்சதகோடிபூ
ணம்மைபூமியைப்போற்றித்தரிசியே,

இ-ள். திருவாதிரை அனுஷம் உத்திரத்திரயம் உராாகணி சித்திரைமூலம் மகம் சுவாதி விசாகம் பூசம் பாணி திருவோணம் கன்னி விருட்சிகம் ரிஷபம் மீனம் மேஷம் இவை நன்று. பத்திரை ஞாயிறு சனிவாரமும் நவமியுந் தீது. அஷ்டமசுத்தியுண்டாக நூறுகோடி யோசனே பிரமாண்டமுடையதாகிய அம்மை பூமிதேவியை தரிசனம் பண்ணுவது எ-று. 23

## பொன்னேர் பூட்ட

போற்றுமுத்திரங்கண்மூலம்ரேவதி
போந்தவத்தமிருபூசமுங்நல
மாற்றுமான்கடகம்விடையாழ்கய
வாகுமேயினிரெட்டித்தபக்கமுஞ்
சாற்றுருநவமிச்சனிஞாயிறுந்
தவிர்ந்துபூர்வபக்கத்துச்சத்தோடரா
யேற்றமாம்புவியர்ச்சித்துழுவரே
யிறைவனண்ணன்மறையோரிலங்கவே.

இ-ள். உத்திரங்கள் மூன்றும், மூலம் இரேவதி அஸ்தம் புனர் பூசம் மகரம் கர்க்கடகம், ரிஷபம் மிதுனம் மீனம் இவை நன்று. இரட்டித்த பக்கங்களும் நவமியும் சனியும் ஞாயிறும் ஒழிந்த நாட்

களில் பூர்பட்சத்தில் கந்தோஷசித்தனுய்த் தானஞ்செய்து சில புஷ் பங்களால் பூமியை அர்ச்சித்துழுவது எ-று. 24

பொன்னேர்பூட்ட, எருவிட, விதைவிதைக்க

இலங்குமுத்திரங்களிருபூசமு
மிறைவராடைபனையோணந்திபமுந்
துலங்குதிங்கள்வியாழஞ்செவ்வாய்புதன்
றுய்பபொன்னேருழவெருப்போடவும்
விலங்குவாவட்டமியுமிருத்தையும்
விசாகமூலம்பனையத்தம்ரேவதி
நலங்கொளுத்திரங்கள்சோதிமாசிதேர்
நாடுசெக்நலக்கைப்பூசநல்லதே.

இ-ள். உத்திரத்திரயம் புனர்பூசம் பூசம் திருவாதிரை அனுஷம் சித்திரை திருவோணம் சுவாதி விசாகம் திங்கள் செவ்வாய் புதன் ஞாயிறு இதில் பொன்னேருழ எருவிட நன்றென்பது, உவாவும் அஷ்டமியும் இருத்தையும் தீதென்பது, விதைவிதைக்க விசாகம் மூலம் அனுஷம் அஸ்தம் இரேவதி உத்திரத்திரயம் சுவாதி மகம் உரோகணி சதயம் திருவோணம் பூசமும் நல்லது எ-று. 25

விதைவிதைக்க

நல்லதைந்துமேழ்ப்பன்மூன்றேகாதசி
நாடுமூன்றுடுமுன்னுவாமான்கயல்
வெல்லும்வீமேசர்வாகனஞெண்டரி
விதைக்கநன்மைதேங்கெய்விட்டமூங்பின்மாச்
சொல்லுமாறுந்துதிகைதசமியுந்
தூங்கல்கூனியாழ்மத்திபமாகுமற்
றல்லதையதமஞ்சுபவாரநன
ருகும்வாரங்களட்டமஞ்சுத்தியே.

இ-ள். பஞ்சமி சப்தமி திரயோதசி ஏகாதசி திரிதிகை பவுர்ணமி மகரம் ரிஷபம் மீனம் கர்க்கடகம் சிம்பம் இவையெல்லாம் விதை விதைக்க உத்தமம், மிருகசீரிஷம் அவிட்டம் புனர்பூசம் அசுவினி சஷ்டி துதிகை தசமி துலாம் கும்பம் மிதுனம் இவை மத்திபம், மற்றதெல்லாம் அதமம் என்பது சுபவாரங்கள் நன்மை, அஷ்டம சுத்திபுண்டாக உத்தமத்துக்குச் சொன்னநாளில் விதைப்பது எ-று.

இதுவுமது

அட்டதிக்சோள்ரிபாருதயநல்
லருணசேய்வாரமுச்சியெள்பூமகள்

கட்டுவாரமுதயங்கடுகுகொள்
கருப்புமாக்கொடிகால்பணிமூலமு
மட்டுவெள்ளுச்சதயமனுடமு
மரங்கடோட்டம்வழுதுணைவைக்கவுந்
தொட்டமால்பொன்மதிவாரமெட்சியுந்
துய்யதாகும்வீமேசுரர்சொன்னதே.

இ-ள். ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் நெல்விதைப்பது, சனிக்கிழமை உச்சியில் எள்விதைப்பது, செவ்வாய்க்கிழமை உதயத்தில் வரகும் கொள்ளும் விதைப்பது, கரும்பு நடுவது. அசுவினியில் கொடிக்கால் வைப்பது, ஆயிலியம் மூலமும் எள் விதைப்பது, சதயம் அனுஷம் மரங்கள் தோட்டங்கள் வைப்பது. உரோகணி வழுதுணை முதலானவைக்கும் பயறு விதைக்கவும் சித்திரை நல்லது. புதன் வியாழம் திங்கள் இவர்கள் உதயத்திலும் அஷ்டமசுத்தி புண்டாக விதைப்பது நல்லதாம் எ-று. 27

நவபோஜனம்பண்ண, கதிரறுக்க

சொன்னவேறறிதேளளிசாலதிற்
றுலக்கலாமிருத்தை தயாகாநவ
மன்னுபோஜனமாறிருபூசந்தேர்
மருவுதாலமுதக்கைநல்லத்தங்கோக்
குன்னுமுத்திரங்கள்சதயம்பய
முற்றதேங்சாய்நட்கோளெட்சிவாரநன்
றென்னுவாமீன்மறிதேளிருத்தைபோக்
கினியவூணிதிலேகதிர்கொய்யுமே.

இ-ள். ரிஷபம் சிம்பம் விருச்சிகம் கர்க்கடகம் கும்பம் இவை நன்று. இருத்தையும் நவமியும் ஆகாது. புனர்பூசம் உரோகணி அனுஷம் பூசம் திருவோணம் மூலம் அஸ்தம் உத்திரத்திரயம் சதயம் சித்திரை மிருகசீரிஷம் இந்த நட்சத்திரங்களிலும் சுபவாரங்களிலும் சுபக்கிரகங்களிலும் நன்மை, உவாவும் மீனம் மேஷம் விருச்சிகம் இருத்தையு மொழிந்து மற்றவையெல்லாம் நவபோஜனத்திற்கு நன்று, கதிர் கொய்வார்க்கும் இதுவே காலமாகக் கொள்வது எ-று.

நவதானியம் கட்டிவைக்க

கொய்யுமார்கழிதோடப்பத்தமும்
குலவுமுத்திரங்கள்பணிமான்றலை
துய்யவோணஞ்சனிகுருவாரமுந்
துற்றபொன்சுன்குளிகனலஞ்சரம்
வெய்யவோரையிருத்தையுந்தள்ளியே
மிக்கர்கெர்ப்பிணிகன்னிபப்பெண்களால்
வையுமேநவதானியம்வீமேசுரன்
வல்லியென்றுமறத்தைவளர்க்குமே.

இ-ள். திருவாதிரை உரோகணி பரணி உத்திரத்திரயம் அனுஷம் மிருகசீரிஷம் திருவோணத்திலும் வியாழம் சனி இந்த வாரத்திலும் குளிகனிலும் நன்று, சரராசியும் விருஷ்டியும் தீது, இருத்தையு மாகாது. இதுவன்றி மற்றுள்ளவற்றில் கெர்ப்பிணியாதல் கன்னிகையாதல் நவதானியம் கட்டிவைக்க வீமேசர் பாகத்திற் பொருந்திய நகைமுகவல்லித்தாயார் 32-ஆகிய தருமத்தையும் வளர்ப்பள்.

## தானியம் செலவிட

வளர்க்குமாவுத்திரங்கள்புட்சோதிதேர்
மங்கையவிட்டமுறமிருபூசமு
மளக்குந்தோணிமகமூலஞ்சித்திரை
யனுடமான்றலையோணமிறைபணி
விளக்கும்பொன்சுன்னுதயவாரங்களின்
மிக்கதானியம்பெண்களெடுப்பதே
யிளக்குமின்றிதிருக்காற்கிரககோக்
கிருக்கநன்னுதொடுக்காடரண்டவே.

இ-ள். அசுவினி உத்திரத்திரயம் அவிட்டம் சுவாதி அஸ்தம் விசாகம் புநர்பூசம் இரேவதி மகம் மூலம் சித்திரை அனுஷம் மிருகசீரிஷம் திருவோணம் திருவாதிரை ஆயிலியம் இந்த நட்சத்திரங்களிலும் சனி வியாழம் இந்தவாரங்களிலும் நன்று. இவர்கள் வார உதயாங்கிசத்தில் வைத்த தானியம் கன்னியப்பெண் வாங்குவதென்றறிக. தனுசு வாங்கினது கொடுக்க அவிட்டம் இருத்தை நந்தை இவர்கள் பக்கமாக சனி வியாழம் இந்த வாரங்களில இவர்கள் உதய இரவி முகூர்த்தமான அனுஷம் 2-ஆம் காலில் மதிசிற்க மதியை சுபக்கிரகங்கள் நோக்க அந்நாளிலே தானியம் செலவிடலாம் எ-று.

சடங்கப்படலம் முற்றிற்று.

---

# உண்டிப்படலம்

## ஊட்டினர் உண்கலம் உணவின் விகற்பம்

அண்டியூட்டினருண்டவரொண்கல
மடிசிலன்னங்கறிசாதிபாடையுங்
கண்டுசொல்வதுஞாயிறெறியுவாக்
கனலவன்வரகேதினேவெங்கறி
பண்டிதன்றெய்ப்புழுங்கல்சுன்சுழெண்ணே
பஞ்சையன்னங்கறிச்சோறுபாம்புமே

விண்டுபொன்பாலடிசிற்பருப்புநெய்
வீமநாதரருள்பெறவெற்றியே.

இ-ள். உண்டி வினவில் அப்போது வலிபெற்ற கோளினுலுண்டியும் சுவைகளு மடிசிலு முண்கலமும் உவப்பு வெறுப்பு அக்கோளின் வடிவு கொண்டுசொல்க. இரவி வலிபனுகில் சுடுசோறும கறியுமென்க குஜனுக்கு வாகு தினையடிசில் பொரிக்கறியுமென்க. புதனுக்கு நொய் அடிசில் புழுங்கலடிசில் சனிக்குக்கூழ் பஞ்சையன்னம் பாம்புக்குக் கறிச்சோறு குருவுக்கு நல்லடிசில் பருப்பு நெய் பால் பழம் நற்கறி இது வீமேசரருளினல் விளம்புவது எ-று. 1

இதுவுமது

வெற்றிசேர்புகர்தேன்பாலடிசிலாம்
வீமர்பூக்காய்கனிபூக்கிழங்குமா
மற்றதீக்கோள்புதன்சரமெண்ணைபொன்
மதியுநெய்புகரோனுறில்வெண்ணையே.
பற்றுசோணிறநற்றுகினற்கலம்
பரியுநண்பர்பகைவெறுப்பாகுமே
மற்றைதீச்சுவையுங்கலமோடிலை
மாசுளாடைவீமேசர்முன்வைத்ததே.

இ-ள். சுக்கிரனுக்குத் தேன் பால் நல்லடிசில் தயிர் மதிக்கு காய் பழம் பூ கிழங்கு உண்டாமென்க. தாதுவான சுராசிகளில் தீக்கோளான இரவி குஜன் சனி பாம்புநிற்க புதன் நிற்கிலும் நல்லெண்ணெய் குரு மதி நெய் சுக்கிரன் வெண்ணை இட்டுண்டபென்க. நற்கோளாகில் நற்கலங்களிலும் நற்சோறு நல்லாடையுடுத்தும் ஊட்டினுரென்க பாபக்கோளாகில் ஈனமான கலங்களிலும் ஈனச்சோறுமாய் இலைக்கறியுமாய் மலினவஸ்திரம் அணிந்து ஊட்டினுரென்க எ-று. 2

இதுவுமது

வைத்தமேடமிலைகாயெருதுபால்
வருவில்கார்மலையீதிலிரைச்சியு
மெத்துதேளளிமீன்மகரம்பழம்
வீறுகாய்துலைகைப்பழங்கன்னிசா
லொத்தசாறேடடிசிலுண்டாயென
வுரையினெட்சிவலிபெறிலோதுமே
சித்தமிப்படிவீமேசர்சேரவே
தேறுகோள்ராசியாலுணசெய்புமே.

இ-ள். மேஷம் வலிபெறில் இலைக்கறிகாய் ரிஷபம்பால் தனுசு மிதுனம் சிம்பம் மீனம் இறைச்சியும் கர்க்கடகம் மீனம் மகரம்

விருச்சிகமும் பழமும் காய்கறியும் துலாம் கைப்பான பழம் கன்னி கும்பம் கறியும் அடிசிலும் பெற்றாயென்க எ-று. 3

உண்டிப்படலம் முற்றிற்று.

---

## கனாப்படலம்

### கனவின் விகற்பம்

செம்மையெட்சிநீர்தேரிக்கனாமறி
தேவர்மாளிகைசெய்சின்கதிருற
யின்மையேறிடபம்விலங்கானவை
யெய்துகற்பரியேமிதுனந்துகிற்
றம்மையாய்க்தோர்வணிகர்மறைபவர்
தசையின்கீழ்வெளிநெற்புல்பறித்தென
வெம்மைகான்மலைவேடருஞ்சிங்கமே
வீடகாதரருளால்விளையுமே.

இ-ள். கனாநிலை வினவில் உதயத்திலும் நீர்க்கீழிலும் மேஷம் வலிபெறில் தேவரையும் மாடமாளிகையும் கண்டாயென்க. இரவி குஜன் நிற்குதல் நோக்குதல் செய்யில் இன்மையை நோக்குமென்க. ரிஷபமாகில் விலங்குசாதிகள் குதிரையும் கண்டாயென்க. மிதுனமாகில் பிடவை வாணிபரையும் பிராமணரையும் தபசுடையாரையும் ரிஷிகளையும் கண்டாயென்க எ-று. 1

இதுவுமது

விளையுமேகன்னிநீர்வேட்டல்பொன்னுற
மிக்ககோன்மன்னர்பொன்வணிகேசருங்
களருந்தேளளிசேரினும்பாம்புதேள்
கணறுவிற்பூபழங்காயுமாகுமே
துளிர்கோண்மானாறுபெண்சால்கண்ணாடிநீர்
துய்யமீன்மனைகோல்கொள்கிழவியே
யிளகுநெஞ்சினிலெய்தும்வீமேசரை
யெய்துவாரிவரீசுரமூர்த்தியே.

இ-ள். கன்னி தண்ணீர்மிடாவும் மொண்ணைப்பெண்ணும் கண்டாயென்க, துலாம் பொன் வணிகரைக் கண்டாயென்க, விருச்சிகம் கடகமுதிக்கக் குஜன் நோக்கிலும் தேள் பாம்பு கண்டாயென்க, மகரம் ஆறும் பெண்ணும் கண்டாயென்க, கும்பம் கண்ணாடியும் நீரும் கண்டாயென்க, மீனம் நீர்க்கீழிலும் உதயத்திலும் வலிபெறில் மனைவியும் வீடும் கிழவிகளையும் கண்டாயென்க, பாவக்கோள் பகை நீசக்

சேரள் நோக்சாமல் இராக்கண்ணுள்ளது பகற்கண்ணுள்ளது உதயம் நீர்க்கீழ்ப்பாடுச்சியில் வலிபெறில் இராசிகளுக்கு முன்சொன்ன விதிப்படியே பலனறிந்து சொல்வது எ-று. 2

இதுவுமது

ஏழ்பரித்தேரிரவியுலர்மா
மிறந்தமானிடசிந்துவுமாமழை
யாழ்புனற்புகுந்தேநீந்திவாரலு
மாணபச்சையிறைச்சியுதிரமு
நீள்குருக்காயும்பூவுநல்லாலய
நிகழ்ந்தசுங்கன்றவளவெண்மாடமா
மாழைவிற்சுகர்வீமேசர்தம்மருண்
மருவுநீர்க்கிழ்வலிகொண்டிரைப்பதே.

இ-ள். இரவி நீர்க்கீழான 4-ஆமிடத்தில் வலிகொண்டு நிற்கில் தெரிசனை உலர்ந்தமரங்கள் மேலேறி விழவும் பிணங்களும் உயுத்தமும் கண்டாயென்க, மதியாகில் மழையில் நனையவும் தடாகத்தில் நீந்தவும் பீடைப்பட்டாயென்க குஜன் இரத்தமும் இறைச்சியும் கண்டாயென்க. குரு பழம் கனி பூ நல்லோர்களைச் சிவாலய முதலானவைகளைக் கண்டாயென்க. வீமேசுரரருளினால் நீர்க்கீழ்வலி கண்டு சொல்வது எ-று. 3

இதுவுமது

உரைத்தபுந்தியுயர்தவத்தோரையு
முற்றமைந்தரைத்தேடுஞ்சனியுறிற்
றிரைத்தநீரிற்றிகழ்ந்திடுமூன்றருந்
திறமிலீனர்மிருத்திறங்கள்பாம்
புரைத்தவாதைதளைப்படதேடுத
லுற்றுநீர்க்கிழ்வலிகொண்டுரைப்பதே
சிரத்திலேகங்கைதங்கும்வீமேசர்தாள்
சென்னிசூடித்திறமுறப்பற்றுமே.

இ-ள். புதன் நீர்க்கீழ் வலிபெறில் பெரிய தனத்தோரைக்கண்டு மற்றோரைத் தேடி விசனப்பட்டாயென்றும் சனி வலிபனுகில் நீர் வாழுமுயிர்களையும் நாற்கால் மிருகத்தையும் ஊனவாளியையும் ஈன சாதியையும் கண்டாயென்க. பாம்பு வலிபெறில் வாதைப்பட்டுத் தளைபடக் கண்டாயென்க. பகை நீசத்திலும் அஸ்தமானமும் அன்றி நீர்க்கீழ்ப் பெலமுடையாரை அறிந்து அப்போது கண்ட கனவும் காணப் போகிற கனு உதயத்தாலும் சொல்வது எ-று. 4

கனுப்படலம் முற்றிற்று.

# காமப்படலம்

## கற்புடைமை கற்பின்மை அன்பின்மை

பற்றுகாமமதியுடனல்லகோள்
பார்க்கினுமுச்சநட்பாட்சியாயினு
ஈற்றுபெண்குலமாம்பகைநீசமே
நாணில்சாதிபகைநீசமாகுமே
ஊற்றபாவர்கள்கூடியேதேறினு
மொண்ணுதன்மதியாண்மறிதேறியே
நிற்றல்கோள்வலிதில்லேயெல்வாக்கிலார்
நேசர்வீமேசர்தாளுறநீடுமே.

இ-ள். ஒருவன் வந்து ஸ்திரீகூடம் வினவுமிடத்து மதியுடன் குரு கூடிநிற்கில் பாவர் நோக்காதிருக்கில் அவனிட ஸ்திரீ பதிவிரதையென்க. மற்றும் சுபக்கிரகங்கள் கூடி நட்பாட்சியுச்சத்தில் தேறி நிற்கில் நன்மங்கை இவர்கள் பகை நீசமாகில் விணக்குணக்காரி மதி பகை நீசமாய்ப் பாவக்கோள் தேறிநிற்கில் ஸ்திரீ அவனை வேண்டி இராள் மதி தேறிநிற்கில் அவனுடன் பாவக்கோள் பகை நீசமாகில் அவளைப் புருஷன் வேண்டி இரான் எ-று. 1

### இதுவுமது

நீடுமூன்றேழ்பதிஞென்றுபத்தின்மே
னின்றசோமனைப்பொன்புகர்நேசமேற்
கூடில்வீமேசராருடக்கோதையாங்
கொடியர்கன்னிலேநோக்குறச்சோரியா
மீடில்கண்டமேற்சோமனைச்சாரினு
மினியவான்மகளாயினுங்கற்பிலா
டேமொண்சோள்பலர்மதிசேரினுஞ்
செய்யமாதுபலர்தோளுஞ்சேருமே.

இ-ள். உதயத்துக்கு 3-7-11-10-ஆமிடம் மதியுடனே குரு சுக்கிரான கூடி நிற்கில் வினவின ஸ்திரீ பதிவிரதையென்க, இராகு நிற்கினும் நோக்கினும் சோரி நாற்கண்டங்களில் பாம்பு நிற்கினும் நோக்கினும் அவள் தேவதா ஸ்திரீயானாலும் சோரி ஆண்கோள் பலர் மதியுடன் கூடி நிற்கினும் நோக்கினும் பலர்தோளுஞ் சேர்வள் எ-று. 2

### ஸ்திரீ விகற்பம்

நீசம்பகையேழ்மதிபாதச்சேரிதிரிக
டோட்புணர்ந்தாயெனவேபெறும்

போதயமாங்கதிர்பொன்னுறவான்மகள்
　　போதுமீந்தங்கிசத்திரிகோணமு
நேரிநட்பர்மேநோக்கினுகன்யக
　　ணீரினிற்பகன்மன்மகனூலிலாள்
கூருமக்கோர்ணிறம்வளர்வங்கிசங்
　　கோட்கள்வீமேசுரராருள்கூறுமே.

இ-ள். மதி 7-ஆமிடத்திற் பகை நீசமாக நிற்கில் பாவக்கோள் பகை நீசமாகப் பார்க்க பாஸ்திரீகளைக் கூடி வந்தாயென்க. தேறி நின்ற மதியை இரவி குரு கூடி நிற்கினும் நோக்கினும் தெய்வக்கன் னியைச் சேர்ந்தாயென்க. மதி தன்னங்கிசத்திலும் திரிகோணமாகிய 5-9-ஆமிடத்திலும் மதி நிற்க நட்புக்கோள் நோக்கினும் குலமங்கை சுக்கிரனும் இரவியும் கூடி நிற்கினும் இராஜப்பெண்ணைப் புணர்ந்தா யென்க. குஜன் நிற்குதல் நோக்குதல் செய்யில் விதவைவையைப் புணர்ந் தாயென்க. இந்த நோக்கின்கோளும் அங்கிசமும் குணமும் அறிந்து சொல்வது எ-று. 3

இதுவுமது

கூட்டுமேசுன்மதியுறப்பாவியாங்
　　சொடியரிங்நிலையைந்தொன்பதேழியராக்
கேட்டின்வேசிபவர்விழிக்கீழ்மகள்
　　கிளத்துஞ்சத்துருசத்துருப்பெண்ணதா
மீட்டுமுச்சமேலானதைந்தேழொன்பா
　　னிந்ததைச்சேய்சுன்பணிநோக்கச்சோரியே
நாட்டும்போகஞ்சமனென்றையொக்கவே
　　நங்காவீமேசர்தாளுகந்தேத்துமே.

இ-ள். மதியுடன் சனி நோக்குதல் கூடுதலால் பாபஸ்திரீகளைக் கூடினையென்க. தாசிகளைக் கூடினையென்க. பாபக்கிரகம் நோக்கினும் இந்நிலை நட்புக்கோள் நோக்கில் கீழ்சாதி பகைக்கோள்நோக்கில் பகை வர் பெண்ணைக் கூடினையென்க. உச்சக்கோளாகில் மேலான குலத்தா ளென்க. உதயத்தில் 5-7-9-ஆமிடம் மதி நிற்க சனி குஜன் இராகு நோக்குதல் தேறி நிற்கினும் இராத்திரி சோர நாயகியைக் கூடினை யென்க. இரட்டித்த கோள் நோக்கில் இருகால் புணர்ந்தாயென்க. ஒற்றித்தகோள்நோக்கில் ஒருகால் புணர்ந்தாயென்க. பலகோள்நோக் கில் பெலனறிந்து இத்தனைதரம் புணர்ச்சியென்க எ-று. 4

உடலும் உகையும்

உகந்தராசியறுவிதவைசே
　　யுற்றகோட்குலம்பெற்றவரிந்துசெய்ப்

பருத்தவேசிவெறுப்பசுசுன்புகர்
　　பாரியோடுபுதன்மூன்றுபத்தெரி
புகுந்தவேழிற்றனை துயிலின்தெழப்
　　பூமன்சுன்குடிசேர் தரினஞ்சினர்
மிகுந்தவாருடன்சுன்மதிவேசிப்பெண்
　　மிக்கமேகோள்விமனா தாவிடுத்ததே.

இ-ள். உதயவிராசி அறுதியில்வந்தவன் விதவைப்பெண் போகம். அப்போது வலிபெற்று நோக்கின கோளின்குணமே அவள் பிதாவின்குணம். மதி குஜன் கூடிநிற்கினும் நோக்கினும் தன்குலமங்கையை வெறுத்து வந்தாரென்க. 3-ஆமிடம் புதன்நிற்க 7-ஆமிடம் குஜன்நிற்க, ராத்திரி பாயிலின்றித் தரையிற் கிடந்தாயென்க. மதி உதயமாக 3-ஆமிராசியில் சனி குஜன்நிற்கில் ராத்திரி அகத்தில்துயிலாமல் பயந்து புறம்போனயென்க ஆரூடத்தில் மதி சனி நிற்கில் வேசியுடன் இராத்திரி கலந்து வந்தாயென்க எ-று. 5

இதுவுமது

விடுத்தலேந்துநான்கேழெட்டுமூன்றிலும்
　　வெள்ளிசோமனேநோக்கினுநிற்கினு
மடுத்துமாதுடன்சிறிபேகூறையை
　　யலையப்பீறினுபாரூடந்தீயசோ
டொடுத்துநோக்கிலிழிகுலததோருடைத்
　　தொழில்செய்வோர்களவரிடத்தோகையை
நடக்கவீமேசுாரூருடுசோ
　　ணன்மைதீமையுநாடுமெய்நாவலோர்.

இ-ள். 5-7-8-2-ஆமிராசியிலும், மதியும் சுக்கிரனும் கூடிநிற்கில் தன்னிட ஸ்திரீயுடன் வழக்காடி உடுத்த கூறையைப் பீறிவந்தாயென்க. குஜன் சனி மதியுடன் கூடிநிற்கில் வேசியுடன்வெறுத்து வந்தாயென்க. பகைநீசமாகில்திராதவெறுப்பென்க. நட்பாட்சியில்நிற்கில் பின்கூடுமென்க. சனி சுக்கிரனுடன் கூடினும் அவரிட ஆரூடத்தைப் பாவக்கோள் நிற்குதல் நோக்குதல் செய்யில் ஈனஸ்திரீ இழிகுலத்தாருடன் சேர்ந்துவந்தாயென்க எ-று. 6

சாமப்படலம் முற்றிற்று.

---

## சுரிகைப்படலம்

### சுரிகை பின்னுபின்னங்கள்

நாலவர்க்கருணல்கும்வீமேசர்தா
　　னுடுதற்கோளுதயவாரூடமு

மேவுகேந்திரமீதுறவாயுத
மிக்கநன்றுங்கொடியகோள்வின்னமாந்
தாவுமெட்சியேழ்தீயர்பிடிப்பிறுஞ்
சாற்றுமொன்பதிலேந்நடிபத்துநால்
பாவரோநடுப்பன்னொன்றிரண்டிலும்
பாருமேமுனைப்பண்புளர்நன்றிதே.

இ-ள். சுபக்கிரகங்கள் உதயவாரூடத்தினும் கண்டங்களிலும் தேறிநிற்கில் ஆயுதம் வினவில் மிகவும்நன்று. இவ்விடங்களில் பாவக்கோள் நிற்கில் மரணம். உதயம் 7-ஆமிடத்தில் தீக்கோள் நிற்கில் பிடியிறும். 5-9-ஆமிடம் அடியிறும். 10-ஆமிடம் நடுவிறும். 11-ஆமிடம் முனை முறியும எ-று. 1

சுரிகைப்படலம் முற்றிற்று.

---

## படைவரவுப்படலம்

### படைவரத்தின் இடம்

நன்றுமுச்சியில்வேந்தர்பானட்பரி
நாடுசுத்தநட்பாட்சியிற்றன்னதே
நின்றகோட்பகையொன்னலர்நீசர்பா
னேயமாகுமிராசிவினைரதா
மொன்றுமோர்பிருட்டோதயம்மேழ்பவ
ருற்றதாயுரைக்கும்வலிபெற்றகோ
நின்றகோணிறந்தியகோடீயதா
நிமலரெங்கள்வீமேசருரைப்படி.

இ-ள். உயயாரூடத்தி லுச்சக்கோள் வலிபெறில் இராஜாக்கள் பக்கலிலும், நட்பாகில் நட்பர்பக்கலிலும், ஆட்சியாகில் தன்பக்கலிலும், பகையாகில் பகைவரிடத்திலும் நீசமாகில் நீசரிடத்திலும் வந்ததென்க. பிருஷ்டோதயம் 7-ஆமிடம் பாபக்கிரசம் பார்க்கினும் கேடதாம். இனிக் குதிரைக்கும் அப்போது வலிபெற்ற கிரகங்கள் நிறமும் குணமும் அததிசையில் வந்ததென்க. தீக்கோள் வலிபெறில் தீது

### படைவரவும் வரவின்மையும் சந்தும் சந்தின்மையும்

உரைப்பதேஉபயந்திரம்போரவ
ருற்றபாவருறவருமேசா
நிரைப்புமால்கதிர்பன்னிரண்டைந்துயிர்
நிற்கவேமுச்சிபின்பவர்நோவே
யிருக்கினும்படைநல்லகோளித்திற
மெய்தப்பின்னுறவாம்புகராறுபோர்

பரப்பிநட்பர்தொடுக்காடர்தம்மிடப்
　　பாதநெஞ்சிலுறைந்திடப்பன்னுமே.

இ-ள். படைத்திறம் வினவில் உபயவிராசி உதிக்கில் படைவரவில்லை. திராசி உதிக்கப் படைவந்துமீளும். இதிற் பாவக்கிரகங்கள் நிற்கினும் சரராசி உதிக்கில் படைவந்ததுண்டு. புதன் இரவி 11-5-உதயத்திலும் நிற்கப் படைவரவுகண்டு இவர்கள் 7-ஆமிடம் தேறி நிற்கில் பின்னுறவாம். சுக்கிரன் 9-ஆம் இடத்தில் நிற்கபடையுண்டு. இந்நிலத்தில் குருநிற்கினும் நோக்கினும் சுபக்கிரகங்கள் நோக்கினும் உறவுகாட்டும் எ-று. 3

இதுவுமது

பன்னுமந்தணனுறப்போரிலைப்
　　பாவுமெட்சியைந்திராறுபன்னொன்று
மன்னுமுச்சியும்வந்தவர்க்கேடதா
　　மருவரெண்டினிற்சந்தாகுமற்றதே
யென்னவிந்தரிகூடினுநட்புமா
　　வியன்றவெள்ளியெழுந்திடப்போரிலை
துன்னநல்கதிர்வந்தவர்வெல்லுமே
　　சுத்தவீமேசுராடிதோற்றமே.

இ-ள். குரு 4-ஆம் இடத்தில் போரில்லை. மதி உதயத்திலும் 5-11-10-ஆமிடத்தில் நிற்க வந்தவன் தோற்கும் மற்றிடங்கள் நிற்கில் நின்றவன தோற்கும். இரவிமதி ஒரிராசியில்கூடிநிற்கினும் போரில்லை புதன் சுக்கிரன் உதிக்கினும் போரில்லை. சனி குஜன் இரவி உதயமாகில் வந்தவன் வெல்லுவன் எ-று. 4

இதுவுமது

தோற்றுமாருடந்தெறிநின்றூர்வெல்லுந்
　　துய்பதானங்கவிப்பில்வந்தோர்வெல்லும்
சாற்றுமுச்சியோடாறுநின்றூர்வெல்லுந்
　　தக்கநீர்முதலாரும்வந்தார்வெல்லும்
போற்றுசேயுடனெட்சிநின்றூரலாற்
　　போதுவார்வெலுமிந்துநட்பானுவேன்
மாற்றலர்கெடுமோறுறநின்றவர்
　　வல்லிபாகர்வீமேசர்வகுத்ததே.

இ-ள். ஆரூடத்தில் நட்பாட்சி உச்சக்கோள் தேறிநிற்க நின்றவன்வெல்லும். கவிப்பிலுண்டாகில் வெந்தவன்வெல்லும். உதயத்துக்கு 10-ஆமிராசி முதலாக 6-இராசியும் தேறிநின்ற கோள் நிற்கில் நின்றவன்வெல்லும். 4-ஆமிராசிமுதலாக 6-இராசியும் தேரிநின்ற வலியகோள் நிற்கில் வந்தவன்வெல்லும். குஜன் ஆரூடத்திலும் உதயத்திலும் வலிபெறில் நின்றவன் வெல்லும். மற்ற இராசிகளில்குஜன்

வலிபெறில் வந்தவன் வெல்வன், மதிநாளில் இரவிநிற்கில் நின்றவன் வெல்லும். இரவிநாளில் மதிநிற்கில் வந்தவன்வெல்லும் எ-று. 5

இதுவுமது

வருத்தசுன்றசம்போரிலேரெண்டுடன்
மன்னுமைந்தமீராறுபன்னொன்றுமே
மிகுத்தபெண்பொன்பெறுவர்வந்தோர்களே
மிக்கவேழிச்பலனில்லையிந்துவேல்
புகுத்தலாறுபடைவருமைந்துறப்
போரிலேப்புதன்மூன்றுறப்பானுவே
மிகுத்தவைந்துறநின்றவர்வெல்லுவர்
வீமநாதாருள்விளக்காகவே.

இ-ள். சனி 10-ஆமிடம் தேறிற்போரில்லை. 2 5 11 12-ஆமிடம் நிற்கில் வந்தவன் பொன்னும் பெண்ணும் பெறுவன். 7-ஆமிடம் நிற்கினும் பலனில்லாமல் திரும்பிப்போவன். மதி 6-ஆமிடம்பாவக்கோளுடன் நிற்கினும் படைவரும், 5-ஆமிடம் மதிநிற்கில் போரில்லை புதன 3-ஆமிடம் இரவி 5-ஆமிடம் தேறிநிற்க நின்றவன் வெல்லும் எ-று 6

இதுவுமது

விளங்கும்வீமேசர்கண்மூன்றுமைந்தினு
மேவமால்குடிமூன்றரிவெல்லுவர்
துளங்குநால்சனிரெண்டுதன்றேல்வையே
துப்பபன்னொன்றுறவருவோர்படும்
வளங்கோள்பானுப்பகைநின்றவன்கெடு
மாலிரண்டுரவன்பொன்பெறுவனுங்
களங்கொளச்சிமுந்நான்கிற்பன்னொன்றிலாங்
கருதுமைந்துபொன்றந்தாண்டேகுமே.

இ-ள் இரவி 3 5-ஆமிடத்தில் நிற்கப் புதன் 2 ஆமிடம் இரவி 3 ஆமிடத்திலும் நிற்கவந்தவன் வெற்றி. இரவி 4 ஆமிடம் 12 ஆமிடம் தேறிநிற்கில் வந்தவன்தோல்வை. 11 ஆமிடம் இரவி தேறிநிற்கில் வந்தவன் படுவன். இரவி இந்நிலத்தில் பகை நீசமாகநிற்கில் நின்றவன்கெடும். புதன் 2 ஆமிடம் புதன்தேறிநிற்கில் வந்தவன் பொன் பெறும். 10 11 12-ஆமிடம் புதன் தேறிநிற்க வந்தவன் சோவன். 5-ஆமிடத்தில் புதனிற்க வந்தவன் பொன்னுங் கொடுத்துப் பின் சென்றுபோவன் எ-று. 7

படைவரவுப்படலம் முற்றிற்று.

# யாத்திரைப்படலம்

## யாத்திரையும் யாத்திரையின் விகற்பமும்

கண்டமெய்ப்பொருளானவீமேசர்தாள்
சருதும்யாத்திரைதேறியகோள்சர
முண்டெனினுதயாதிகண்மூன்றினல்
லுதவுநோக்கநிலையினுமுச்சிக்கோள்
கொண்டவாட்சிநட்பாயிடினட்பர்பாற்
கொடியவாகிற்பகைஞர்பாற்கோட்களாண்
பெண்டுசுற்றம்பெறுமெனப்பத்தின்மேற்
பேணுநற்கோளுறினும்பெருமையே.

இ-ள். யாத்திரை வினவில் சரராசி உதிக்கினும் உதயாரூடக் கவிப்பினும் நற்கோள் தேறிநிற்கில் யாத்திரை உண்டு. இந்நிலையில் உச்சக்கோள் வலிபெறில் இராஜாக்கள் பக்கல், நட்பாகில் நட்பர் பக்கல், ஆட்சியாகில் சுற்றத்தார் பக்கல், பகையாகில் பகைஞர் பக்கல், நீசமாகில் அன்னியர்பக்கல், ஆண்கோள் வலிபெறில் ஆண்பக்கல், பெண்கோள் வலிபெறில் பெண்பக்கல் என்றும் 10-ஆமிடம் நற்கோள் தேறிநிற்கில் பெருமையுண்டு எ-று. 1

### இதுவுமது

பெருமையுற்றனசேய்வீமநாதர்கண்
பிள்ளையுமுபயந்திரம்போக்கிலை
சிரமெழுந்திடிற்றன்னிலம்பின்னெழச்
செலவிடம்வால்வலியிருதிக்கினு
மருவுமுன்குடிமக்களாயெழ
மன்னுசீவக்கோணோக்கினுமாள்வரும்
பிருதுசோமனதிறுச்சிசேரினும்
பெறுதிகொண்டுவருமபிரியாமலே.

இ-ள். இரவி குசன் சனி உபயராசி திரராசியில் நின்று உதிக்கில் போக்கில்லை. பகல்வலிய ராசி உதிக்கில் நன்மை. இராவலியராசி போனயிடம் நன்மை, இரவும் பகலும் வலியராசி உதிக்கில் இரண்டு தலங்களும் நன்மை. 3-2-ஆமிடம் மானிட இராசியான புதனும் உதிக்கில் குருவும் நோக்குதல் நிற்குதல் செய்யில் ஆள்வரும் ஓலைவரும். சுக்கிரனும் மதியும் இவ்விராசியில் நிற்பினும் உச்சி சேரினும் வெகு பெறுதி எ-று. 2

இதுவுமது

பிசிவிலாதநிலையர்வீமேசர்தாள்
பெற்றநற்கோள்பிணியினுநீரினுந்
தெரியநன்மைவராவிடுந்தீயகோள்
சேரினும்பசிநோயைந்துமிந்நிலே
யரியகண்டங்கண்மீதுநற்சோணல
மாகுமெட்டிலதிற்பவர்தீமையே
பெரியசோமனும்பின்னெழுவார்சரம்
பேணினும்வருமேழ்பெண்கோள்செப்புமே.

இ-ள், நற்கோள் 6-1-5 ஆமிடம் தேறிநிற்கில் நன்மை ஆள் வரும். இந்நிலத்தில் தீக்கோள் 6-ஆமிடம் நோய் 4-ஆமிடம் பசியால் மெலியும் 5-ஆமிடம் இந்நிலே நாற்கண்டங்களினும் நற்கோள் நிற்கில் நன்மை. நாற்கண்டங்களினும் 8-ஆமிடத்திலும் பாவக்கோள் நிற்கில் வாதைகளும் பொருட்செலவும் உண்டென்க. பிருஷ்டோதயமான இராசிகளும் சரராசிகளும் உதிக்க மதி நோக்கினும் நிற்கினும் ஆள் வரும் 7-ஆமிடம் பெண்கோள் நிற்குதல் நோக்குதல் செய்யில் ஸ்திரீயுடன் கூடிவருவார் எ-று. 3

யாத்திரைக்குத் தடையும் தடையின்மையும்

செப்பலாகுமேபோதுசனுநிலேத்
தேறிநிற்கக்கழிவதுபாட்டினுற்
றப்பிலாமேல்வருவதுதயமேற்
சகுனமேலுபயந்தடையாகுமே
யொப்பிலாத்திரம்போய்வழிமீளுமே
யோடுமேசரந்தான்பேறுமையுமே
யப்பனும்வீமநாதருளினு
லானகோளின்வலியால்வழங்குமே.

இ-ள். நீர்க்கிழால் நிகழ்காலக்கனவும் பாட்டால் இறந்தகாலக் கனவும் உதயத்தால் எதிர்காலக்கனவும் சொல்க. யாத்திரை வினவில் உபயராசி உதயமானல் சகுனம் தடுக்கும் போக்கில்லே, போனபேர் வருவரோவென்னில வருவதில்லே. திராசி உதயமானல் போக்கில்லே போனுலும் வழியில் மீளுவர். சராசி உதயமானல் போக்கும் பொருட்பேறும் உண்டு. வருவரோவென்னில் வருவர், படை வரவும் மழை வரவும் உண்டு எ-று. 4

யாத்திரை சேல்காலம்

வழக்கர்சொற்றெடுக்காடர்மெய்யாரன்முன்
வந்தவேழுநாணந்தைசெவ்வாயினுவ்

கிழக்குமாசிமுன்னேழ்பத்திரைசனி
    கிள்த்துமிந்துவுந்தெற்கனுடமொடா
ஞெழுக்குப்புந்திபொன்சயையுமேற்கானியே
    மூவாவுஞாயிறுவெள்ளிவடக்கதா
மழைக்கிரகணக்காலஞ்சூல்சங்கிரமம்
    வட்டம்விட்டியிடிதும்மறியதே.

இ-ள். கார்த்திகைமுதல் 7-நாட்களும் நந்தையும் செவ்வாய்க் கிழமையும் கிழக்குதிக்குப் பிரயாணம் நன்று. மகம் முதல் 7-நாட்களும் பத்திரையும் சனிக்கிழமை திங்கட்கிழமையும் தெற்குத்திக்குப் பிரயாணம் நன்று. அனுஷமுதல் 6-நாட்களும் சயையும் புதன்கிழமை வியாழக்கிழமையும் மேற்குதிக்குப் பிரயாணம் நன்று. அவிட்ட முதல் 7-நாட்களும் பவுர்ணமி அமாவாசியும் ஞாயிற்றுக்கிழமை வெள்ளிக்கிழமையும் வடக்குத்திக்குப் பிரயாணம் நன்று. பிரயாணகாலத்தில் மழை கிரஹணம் சூற்காலம் சங்கிரமகாலம் பரிவேடம் இடுதல் விஷ்டி இடி மின்னல் தும்மல் முதலாதி உண்டாகில் தீங்குண்டாம். 5

இதுவுமது

தீதும்பாம்பிறைமுப்பூரங்கார்த்திகைச்
    சித்திரைமுறஞசோதிமகமிளி
பூதஞாயிறுசெவ்வாய்புதன்றிரம்
    போதுவாக்களிருத்தையொடட்டமி
யோதும்யாத்திரைக்காகாதனவோரைக்
    குப்புரிந்தவொன்றும்மூன்றும்பன்னொன்றிற்
போதனன்றுபகைவர்ச்செயித்திடப்
    போகலாம்வியமட்டமம்போதவே.

இ-ள். ஆயிலியம் திருவாதிரை பூரத்திரயம் கார்த்திகை சித்திரை விசாகம் சுவாதி மகம் கேட்டை பரணி ஞாயிறு செவ்வாய் புதன் ஸ்திரவிராசி; உவாக்கள் இருத்தை அஷ்டமி இவைகளெல்லாம் யாத்திரைக்கு விலக்கப்பட்டனவாம். தன்னுடைய இராசிக்கு 2 4 11 ஆமிராசிகளில் யாத்திரை செய்யில் சுபமுண்டாம. சத்துருவை செயிக்கப்போகையில் அவனுடைய இராசிக்கு 12 8 ஆம இராசியில் புறப்படுவதாம் எ-று. 6

இதுவுமது

ஏதிலாடையடுப்புத்திரங்கள்பாம்
    பிறைவல்லாரைசெக்கத்தம்பதுமடீ

ரொதுவன்றுளிருத்தையுவாவொழிந்
துபயமானபெண்ணரிதனுவெட்சியிற்
கோதிலட்டமசுத்தியிற்கோமுதற்
கொள்ளலாகுங்கொடுக்கவும்யாத்திரைப்
பாதிமாமதிசூடும்வீமேசுரர்
பரமகல்யாணிபாகர்பகர்ந்ததே.

இ-ள். சித்திரை பரணி உத்திரத்திரயம் ஆயிலியம் திருவாதிரை கேட்டை சதயம் அஸ்தம் சுவாதி இந்த நாட்களும், வெள்ளி புதன் இந்த வாரங்களும், இருத்தை உவா இந்த திதிகளும் தீது மற்ற திதி வாரநட்சத்திரங்களும், மகரம் கன்னி சிம்பம் தனுசு இந்த லக்கினங்களும், அஷ்டசுத்தியும் இருக்க பசு முதலானவை கொள்ளக் கொடுக்க யாத்திரை செய்வதென்று பரமகல்யாணி யென்னும் உமாமஹேஸ்வரியை இடப்பாகத்தில் வைத்த சந்திரஜடாமுடியை உடைய வீமேசுரமூர்த்தி திருவுளம் பற்றினது எ-று. 7

யாத்திரைக்கு நட்சத்திர பட்சணம்

பகருமாப்பயற்றஞ்சோறுபூதமே
பாவைவெந்திலைத்தீதயிர்தேரெண்ணை
மகசிரம்வெண்ணையாதிரைமான்சதை
மாலைரத்தமாலைப்புடல்பாம்புநெய்
திகழுமாசியபாற்சோறுபூரமே
சிச்சிலிச்சதைபங்குனிச்செந்நெலா
நிகழ்கைம்மீன்பால்பணியாரஞ்சாகமு
நித்தர்வீமேசர்தாடொழுநேசமே.

இ-ள். அசுவினிக்குப் பயற்றஞ்சோறு பரணிக்குப் பாகல் இலைக்கறி, கார்த்திகைக்குத் தயிர், உரோகணிக்கு எண்ணெய், மிருகசீரிஷத்திற்கு வெண்ணெய், திருவாதிரைக்கு மானிறைச்சி, புனர்பூசத்திற்கு இரத்தம், பூசத்திற்குப் புடல், ஆயிலியத்திற்கு நெய், மகாத்திற்குப் பாற்சோறு, பூரத்திற்குச் சிச்சிலிக்குருவியின் இறைச்சி, உத்திரத்திற்குச் செந்நெற்சோறு, அஸ்தத்திற்குப் பால் பணியாரம் இலைக்கறி இவை நட்சத்திர பட்சணமாம். இவற்றை பட்சணம் செய்து வீமேசுரமூர்த்தியின் திருவடியை நினைந்து யாத்திரை செய்யில் சகல காரியமும் சித்தியாம் எ-று. 8

இதுவுமது

நெஞ்சமேவீமநாதர்விடம்பர
நிகழ்த்துமன்னம்பதுமநெல்லிக்கனி

கொஞ்சுமுற்றின்மாநீர்பனைகொள்ளுமெள்
கூர்ந்தநீரளிதான்சிறுமூலகந்
தஞ்சமாமூலமேற்றுதுமாதுளந்
தக்கவாவிகழுநீர்முடிமது
விஞ்சுமால்விட்டமக்காரம்பன்றியூன்
மிக்கதுண்கப்பருப்புநெய்பாலதே.

இ-ள். சித்திரைவர்ன்னச்சோறு, சுவாதி நெல்லிக்கனி, விசாகம் மாக்கரைத்தநீர், அநுஷம் கொள் எள் இவை கழுவின நீர், கேட்டை சிறுமூலம், மூலம் தாது மாதளை, பூராடம் கழுநீர், உத்திராடம்தேன் திருவோணம் அவிட்டம் சர்க்கரை, சதயம் பன்றி யிறைச்சி, பூரட்டாதி பருப்பு, உத்திரட்டாதி நெய், இரேவதி பால் இவை நட்சத்திர பட்சணமாம். இவற்றைப்பட்சணம்செய்து வீமேசுரமூர்த்தியின் திருவடியை நினைந்து யாத்திரை செய்யில் சகல காரியமும் சித்தியாம் எ-று. 9

யாத்திரைக்குத் திதிபட்சணம்

பார்க்குமுன்றிதிப்பின்னுவாவீறதாய்ப்
பகரெருக்கினரிசிநீர்நெய்யுட
னார்க்கோளன்னநீருப்பிடுஞ்சோறுபொன்
னுரைத்தநீர்மதுமாதுளங்காய்தணீர்
காக்குங்கோநீரரிசிபாற்சோறுநற்
கருப்பங்கட்டித்தயிருளுந்தாமென
விர்க்குமன்பரிதயாரவிந்தமே
யிருக்குமெங்கள்வீமேசரிசைத்ததே.

இ-ள். பிரதமைக்கு எருக்கரிசி, துதிகைக்கு ஜலம், திரிதிகைக்கு நெய், சதுர்த்தி குர் கஞ்சி, பஞ்சமிக்கு உப்பிட்ட அன்னம், சஷ்டிக்குப் பொன்னுரைத்தநீர், சப்தமிக்குத் தேன், அஷ்டமிக்கு மாதுளங்காய், நவமிக்குத் தண்ணிர், தசமிக்குக் கோமியம், ஏகாதசிக்கு அரிசி, துவாதசக்குப் பாற்சோறு, திரயோதசிக்கு வெல்லம், சதுர்த்தசிக்கு தயிர், பவுர்ணமிக்கு உளுந்தஞ்சோறு, இவை திதிபட்சணமாம். இவற்றைப் பட்சணம்செய்து யாத்திரைச்செய்யச் சகல காரியமும் சித்தியாம் என்று அன்பர்களின் இதயகமலத்தில் வாசஞ்செய்கின்ற வீமேசுரமூர்த்தி திருவுளம் பற்றினர் எ-று. 10

### யாத்திரைக்கு வாரபட்சணம் திக்குபட்சணம்

இசையுஞாயிறுநெய்மதிபால்குச
ணெய்துசக்கரைபுந்தியெள்பொன்றயிர்
கசியுமாரிநெல்சுன்னுளுந்தாந்திசை
கருதுநெய்யெள்ளுப்பால்சர்க்கரைவெய்யோ
னசையுங்காலைபாலுச்சியிலாந்தயி
ரந்தியெள்ளர்த்தராத்திரியின்மதுப்
பொசியுமென்றனர்யாத்திரைக்கேயெலாம்
புண்ணியரேத்தும்வீமேசுரமூர்த்தியே.

இ-ள். ஞாயிற்றுக்கிழமைக்கு நெய், திங்கட்கிழமைக்குப் பால், செவ்வாய்க்கிழமைக்குச் சர்க்கரை, புதன்கிழமைக்கு எள், வியாழக்கிழமைக்குத் தயிர், வெள்ளிக்கிழமைக்குநெல், சனிக்கிழமைக்கு உளுந்து இவை வாரபட்சணமாம். கிழக்குதிசைக்கு நெய், தெற்கு திசைக்கு எள், மேற்குதிசைக்குப் பால், வடதிசைக்குச்சர்க்கரை, இவை திக்கு பட்சணமாம். உதயகாலத்திற்குப் பால், மத்திபான காலத்திற்குத் தயிர், அஸ்தமான்காலத்திற்கு எள், அர்த்தராத்திரிக்குத் தேன் இவை காலபட்சணமாம். இவற்றைப் பட்சணஞ்செய்து யாத்திரை செய்க என்று மகாத்துமாக்கள் துதிக்கின்ற வீமேசுரமூர்த்தி திருவுளம்பற்றினர், எ-று. 11

### யாத்திரைக்கால தோஷநிவர்த்தி

புண்ணியக்கடல்வீமேசர்பாதமே
புகழ்ந்துபன்னோரடியிற்போய்ஞாயிறி
லெண்ணுமிந்தேழரைகுஜனொன்பதி
லேழரைப்புதன்பொன்னெட்டுவெள்ளியே
னண்ணுமைந்துமுக்கால்சுன்னுக்கைந்தடி
நல்லவார்த்தைகடத்தனீர்சுற்றுதல்
வெண்மைநீறிடச்சந்தனம்பூசுதல்
வெள்ளைசுள்ளிக்கிளற்குடற்பூவதே.

இ-ள். கருணைக்கடலாகிய வீமேசுரமூர்த்தியை நினைந்து ஞாயிற்றுக்கிழமையில் 11-அடி நடந்துபோய் நல்லவார்த்தை சொல்லியும், திங்கட்கிழமையில் $7\frac{1}{2}$-அடி நடந்துபோய் கடந்தும், செவ்வாய்க்கிழமையில் 9-அடி நடந்துபோய் நீர்சுற்றியும், புதன்கிழமையில் $7\frac{1}{2}$-அடி

நடந்துபோய் திருநீறு பூசியும், வியாழக்கிழமையில் 8-அடி நடந்து போய் சந்தனம் பூசியும் வெள்ளிக்கிழமையில் ஐந்தேமுக்கால் அடி நடந்துபோய் சுள்ளியைக் கிள்ளியும், சனிக்கிழமையில் 5-அடி நடந்துபோய் பூச்சூடியும், யாத்திரைசெய்யில் சகலதோஷமும் நிவர்த்தியாய் நினைத்தனவெல்லாம் முடிந்து சுகமேவந்துசேர்வர் எ-று. 12

இதுவுமது

பூவைபாகர்வீமேசரைப்போற்றியே
போதுவார்கள்வடக்கேஅறுதயமாந்
தேவர்சோன்றிசையுச்சியிற்செல்வது
தென்றிசைக்கந்தியப்போதின்மேற்றிசை
யோவதாமர்த்தராத்திரிப்பூசுரர்
புனிதர்தம்மையும்தீயைவணங்கியே
மூவர்கோன்புதன்வெள்ளியுநோக்கவே
முயலுவார்கருமநன்றறியுமே.

இ-ள். பார்வதாதேவியாகிய நகைமுகவல்லியம்மனை இடப்பாகத்திலேவைத்திராநின்ற வீமேசுரமூர்த்தியை மனோவாக்குகாயங்களினாலே வணங்கியும் வாழ்த்தியும் தியானித்தும் வடதிசைக்கு உதயத்திலும், கிழக்குதிசைக்கு மத்தியானத்திலும், தெற்குதிசைக்கு அஸ்தமானத்திலும், மேற்குதிசைக்கு அர்த்தராத்திரியிலும், தேவப்பிராமணரை, பெரியோர்களை, இவர்களில்லாதவிடத்து அக்கினியையாதல் வணங்கி யாத்திரைசெய்யில் சகலதோஷமும் நிவர்த்தியாய் நினைத்தனவெல்லாம் முடிந்து சுகமே வந்துசேர்வர். புத குரு சுக்கிராள் பார்க்கத் தனலாபகேந்திர திரிகோணங்களில் நட்பாட்சி யுச்சக்கிரகங்கள் இருக்கில் அதிக நன்மையாய் இந்த யாத்திரையை வடநூலார் வச்ரயோகப்பிரயாணம் என்பர் எ-று. 13

யாத்திரைப்படலம் முற்றிற்று.

---

வீமேசுர உள்ளமுடையான் முதல் ஐந்நூறு முற்றிற்று

---

☞ இந்நூலை ஐந்நூறு ஐந்நூறாக அச்சிட்டு வெளிப்படுத்த உத்தேசித்தமையால் இதனை முதல் ஐந்நூறு என முடித்தனம்.

## சீர்திருத்தலின் அவையடக்கம்

நேரிசை வெண்பா.

வரம்பாகு மோர்கானமற் றோர்காற் றிருத்திற்
றிரம்பாயும் புன்செய் நன்செய் பின்னும்—கரம்பாகும்
பார்திருத்த லன்றோ புலவீர் பனுவல்களைச்
சீர்திருத்த லந்தச் செயல்.

வல்லின மெல்லினமோ டிடைத்தோன் றிலொற்று நில்லாது என்னும் விதியின்படி, இச்செயுளிற் புன்செய் என்றதின் ஈற்றிலும், பனுவல் என்றதின் ஈற்றிலும் இருக்கிற யகர லகர மெய்களை நீக்கி முறையே கூவிளங்காயாகவும் கருவிளங்காயாகவும் கொண்டு தளை பிரித்துக் கொள்க.

கடவுள் துணை

# பஞ்சாங்கவாக்கியம்

1 வித்தோகாதன்
2 வைத்தோநீத்தான்
3 வாணாபூலோகம்
4 வீமீதேநற்கம்
5 வைத்தவன்கோமான்
6 கையோநீதங்காண்
7 திடம்பெற்றாலாவர்
8 விதியோமதியோபோம்
9 வைப்போநீவானில்
10 தேடும்பெண்ணோநீ
11 சேலுறவாரீர்
12 தேனோநூற்பொருள்
13 தூரால்போம்வாரும்
14 நீடிர்சீரோநூல்
15 பாலோசைதநூல்
16 குலமின்னோபெண்
17 ஆனால்செல்வப்பெண்
18 செகநண்போமேல்
19 பண்போசுகமே
20 கையாதேபால்தேன்
21 வாழ்த்தீர்வள்ளலை
22 ஓதீர்நீண்டானை
23 சிவாசெம்பொற்கொளா
24 ஆளுடையரோகண்
25 சொல்லவாசொற்பனம்
26 ஐயன்னீதக்கடல்
27 வீமானுலாம்நலம்
28 பூண்டாரேன்போவோம்
29 கோழிக்கோமனோ
30 வேபிலாக்கோலம்
31 உருகீரதரோ
32 பிராணென்நாதன்
33 வீணோகோபந்தான்
34 போபோநில்லாதான்
35 ஞானம்பூணோதில்
36 கைவிளோகனியோ
37 சலாவிச்சொல்லீர்
38 சுபதெப்வமீதோ
39 கோமான்களோதும்
40 கிளிபுகழும்போனம்
41 வருகைவாழ்த்தும்
42 போகமீந்தபூவோ
43 எலாம்வேதாதூலோ
44 செய்கிற்றானஞ்செய்
45 வைகிற்கூடாதென்
46 சோதிப்போமங்கே
47 செஞ்சொல்மீதரமே
48 வைப்பாயென்கொங்கை
49 சுகியோநாளைப்போம்
50 ஊராநிரோபோகம்
51 தாதோகூடப்போடல்
52 கூறார்தேனாவோரம்
53 போதீர்பொன்னம்பலம்
54 கூடீர்தாழாத்தலம்
55 வைத்தீர்நீரோடொன்
56 வாழுஞ்சூலக்கோன்
57 நேருங்கேளாயோன்
58 போசந்தாவல்லோன்
59 அறிடிற்காலம்போம்
60 முத்தோபூவோமான்
61 நாடுவேறற்றால்
62 குருவல்லோன்மிக்கோன்
63 நீதப்புகமின்னோ
64 வெற்றீரேவாழ்வீர்

65 உற்றிடானந்தீர்
66 நீடி நூல்பாரீர்
67 நீத்திரோபற்றும்
68 நையும்நீராடும
69 எண்கலையோநால்
70 ஊரில்விட்டாரூண்
71 அருளெங்கோவென்றோம்
72 வேறுபடாதென்போம்
73 குருமுன்கோடேன்
74 போற்றீர்சைவனே
75 போதறிவோரை
76 மூத்தார்தூமழை
77 சீமான்கைமாலை
78 ஏனோராஜயோகம்
79 கையில்நீங்கப்போகம்
80 சேருமூரோவர்க்கம்
81 வேலோனைகப்பவனம்
82 சாலநண்டுபோசொல்
83 குலச்சிவன்பொன்னோ
84 ஐயங்துடாரோ
85 எட்டாரென்போம்
86 விட்டிரைம்மலபோ
87 மோகவாண்போதான்
88 வைத்தீர்திரமால்
89 கிட்டிரெட்டாதான்
90 திருவோபணிவோம்
91 தேறநீர்காணிலோ
92 சேருமென்றோதீர்
93 ஆடுவன்பாடீர்
94 ஊர்புகும்போதும்
95 வேண்டோமோயாதும்
96 பூண்டாய்நீர்பொற்பூண்
97 புக்கீர்வேதனூர்
98 ஆமோவிடோமென்
99 தீரமென்பதென்னோ
100 மெய்த்தவம்போக்கேன்
101 மேலேகுணமே
102 வென்றீர்சேன்மானே
103 சோலாமனையோ
104 தேடரும்மானை
105 கடலேறோபோசம்
106 மேனீரோநாடோலம்
107 வீமலிங்கோன்பதம்
108 வேதாமுகமலர்
109 கூறில்மெய்யானந்தம்
110 தைப்பிறைபோமோ
111 பற்றீர்கற்றுரோ
112 கூடீர்பின்கோலம்
113 சேருஞ்சுகமன்னோ
114 தேவரேசாலமோ
115 போதுபோமன்பாம்
116 ஊரினிற்சார்வாம்
117 தெளிநூலொளியோ
118 சீருவைமணியோ
119 நூறுகிற்போகீர்
120 ஆடல்செகவீடோ
121 அம்பரம்போதும்
122 வைமன்புகழும்
123 வீறிசையாமுன்
124 வானுஞ்சிவனூரோ
125 போகவேந்தர்பூண்
126 புமாநாதரென்றோ
127 மிடிபூதாதென்
128 நானிப்போகண்டேன்
129 தேவனீதானே
130 ஓறுத்தென்பொய்யை
131 பெற்றோம்நல்லாரை
132 தேனோசிரோமோனம்
133 நீடுநூல்பத்தோதல்
134 மூத்தானைச்சார்போகம்
135 மூர்த்திநண்பன்கழல்
136 தேடுமின்மாதம்
137 மின்னோநீர்கோள்
138 முன்னோவேலன்
139 தேவோகோவோகண்
140 பூதநாடகனோ
141 சோதில்சிராகன்
142 பூணநூலோதான்
143 ஏரிகைவல்லானோ
144 பூவாதாம்பொழில்

145 நீதிக்குணமிக்கோன்
146 பெறும்பேறுகில்
147 கூடினூற்கண்டீர்
148 மெய்யாநூல்பாடீர்
149 பதியோபற்றும்போம்
150 பாடீர்சீராகும்
151 வைத்துடேன்போடேண்
152 ஏர்திதவாய்நூல்
153 சூலியங்கோவென்
154 தேடீர்கற்றுவென்
155 பாகுறுசொல்லே
156 கூறீரையனே
157 கூறுளிககோதை
158 கருவூர்க்கதையோ [லம்
159 கற்றோர்சொற்பொற்கோ
160 குருஞானக்கோலம்
161 சீரிதுவாம்போகம்
162 கண்டோதேனோகவான்
163 செல்வரோவாழ்பவர்
164 உற்றூர்தாமோ
165 ஐபாசீலம்
166 ஆறிவூறுதேர
167 நூறிலேயோகம்
168 நூலீடோகாலம்
169 உற்றோதில்போற்றான்
170 ஊரில்புகலான்
171 ஓடாதேபாலா
172 வையகம்பதியோ
173 நீடிற்சீரானியோ
174 நீரோமேலொண்டீர்
175 கைசீர்பந்தாடீர்
176 பூணீர்முத்தோடுபொன்
177 இடுகைகத்திங்கோன்
178 வேரோர்நீரோபூ
179 வெண்பாவேதநூல்
180 உட்சீராஞ்சொற்கென்
181 போமோசெசப்பெண்
182 போதகஞ்சொல்வேன்
183 தையோசுகமே
184 என்றுவேதாவேன்
185 ஓதினோர்மறையோர்
186 பைகிறும்பாவை
187 மாதுசேலோலோகம்
188 நவச்சிவமாம்போகம்
189 பிறவீரோவள்ளல்
190 நீதிநூல்கண்டனம்
191 கூறீர்வேதாகமம்
192 ஆரும்போகமொன்றோ
193 உற்றுப்பாராயோ
194 தேறுசீர்க்கோலம்
195 சீர்கோள்மெய்த்தவம்
196 தேவரைக்காண்பன்
197 வாரீர்மடமான்
198 தேவநீவாவா
199 பைம்பொனென்கோடி
200 துறவோர்க்காணில்
201 தெளிகிலோதீரோ
202 தீர்தவன்சென்சண்டீர்
203 உற்றோதப்போதும்
204 செஞ்சொலுணரும்
205 செஞ்சடைகாணும்
206 சீரினிநன்னூல்
207 திருமெய்யாமூர்
208 கடலாங்கண்ணென்
209 வீழான்மூவான்வெய்யோன்
210 சைவாயோகண்டேன்
211 சித்தாசீமானே
212 குன்றுமென்கொங்கை
213 ஆதிநற்பாவை
214 தீர்சீரோலோகம்
215 ஓதிர்செல்வரோலம்
216 வந்தார்கொண்டோதவம்
217 வைக்கீர்நாதக்கடல்
218 பூண்டோர்குணப்பலன்
219 நீதமென்போமோ
220 வேலனைக்கண்டோம்
221 பொன்னுதனகோலம்
222 குன்றுவிரத்தரோ
223 நீடிந்துவர்மரோ
224 தருமமெய்யோதான்

225 சண்டாபோகாய்காண்
226 வீடோமுன்கோயில்
227 பாலோபூங்கனியோ
228 முத்தரைவாழில்லோ
229 இந்நீர்பால்கண்டீ
230 பெற்றூர்நூறுஞ்சீர்
231 தாதாவோநல்கும்
232 ஐயாசீராடும்
233 காணீரேபொற்பூண்
234 நோற்போர்தின்னுருன்
235 ஐயரெங்கோவென்
236 கூடியவாறென்னே
237 கூறீர்முன்போலே
238 கூறீர்சைவன்பேர்
239 குடியின்பேர்வைத்தோம்
240 கண்கள்வெங்கணையோ
241 அறிவோர்சொல்லோலம்
342 குறிப்பிடபோடல்
243 உற்றூநூரங்கோட்டம்
244 சொல்லோடையோமனம்
245 காட்டாதசாரணம்
246 சுகியின்பேர்சொல்சொல்
247 கண்டீர்சுகமோ
248 வீமீசர்வானோர்சோன்

ஆக வாக்கியம் 248

பஞ்சாங்க வாக்கியம் முற்றிற்று.

---

## வாக்கியம் பிழைதீர்க்கும் வகை

☞ எந்த வாக்கியம் பிழையாக இருக்கிறதோ அந்த வாக்கியத்தை 248-ற் கழித்து, மீந்த சேடத்தின் எண்ணையுடைய வாக்கியத்தைக் கடைசி வாக்கியத்திற் கழித்துக்கண்டது பிழைதீர்ந்த வாக்கியமாம். கடைசிவாக்கியத்தில் எடுக்கக்கூடாமற்போமாயின் இராசித்தானத்தில் 12-கூட்டிக்கொண்டு எடுக்கவும்.

உ

கடவுள் துணை

# பொருள் அட்டவணை


| பொருள் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அக்கினி பரிகரிக்க | 238 |
| அங்கிசபலன் | 156 |
| அங்கியோகம் கொள்ளை யோகம் | 163 |
| அஷ்டகவர்க்குப்படலம் | 203 |
| அஷ்டகவர்க்காயுசு | 211 |
| அஷ்டகவர்க்கு முன்பின் | 212 |
| அஷ்டகவர்க்கப்பலாபலன் | 209 |
| அட்சயோகம் பத்திரயோகம் அங்கிசயோகம் | 163 |
| அந்திர அந்திராந்திர சூட்சும பிராணசக்கரங்கள் வருமாறு | 228 |
| அப்பங்கனம் | 237 |
| அமலயோகம்பாபயோகம் | 164 |
| அரிஷ்டபடலம் | 180 |
| அற்றைப்பஞ்சாங்கவாக்கியம் | 22 |
| அன்பர்யோகம்சுனபயோகம் | 161 |
| அன்னப்பிராசனம்காதுகுத் | 231 |
| **ஆ** | |
| ஆக்கினையின் அவயவம் | 96 |
| ஆண்பெண் அலி ஒற்றைஇரட் | 63 |
| ஆண்சகோதரம தீர்க்கசகோதரம் வெகுசகோதரர் | 112 |
| ஆகாயம் அறியும்படி | 35 |
| ஆயுசும் மரணகாலமும் | 134 |
| ஆரூடதிக்கின்பலன் | 89 |
| ஆறாமிடப்பலன் | 102 |
| ஆறாம்பாவம | 120 |
| **இ** | |
| இரவுநாழிகை அறியும்படி | 15 |
| இரத்நவர்க்கம் | 71 |
| இரச்சுப்பொருத்தம் | 83 |
| இரண்டாமிடப்பலன் | 99 |
| இரண்டாம்பாவம் | 109 |
| இரவியங்கிசம் மதியங்கிசம் | 156 |
| இரவிதிசாபலன் | 193 |
| இரவி அந்திரபலன் | 193 |
| இரவியாதி அந்திராந்திரபல | 199 |
| இரவியாதிசூட்சுமபலன் | 199 |
| இரவியாதி பிராமணபலன் | 200 |
| இராசி உரிச்சொல் | 11 |
| இராசிநாழிகை அறியும்படி | 18 |
| இராசி விஷசடிகை வார விஷசடிகை | 30 |
| இராஜாதிபதி மந்திரி சேனாதிபதி மேசாதிபதி தானியத்திற் கதிபன் இராசாதிபதி நீரசாதிபதி மேகாதிபதி அர்க்காதிபதி அறியும்படி | 33 |
| இராசிவலிதும் கிரகவலிதும் | 58 |
| இராசிவடிவம் | 59 |
| இராசிநிலையும் கோள்நிலையும் அறியும்படி | 60 |
| இராஜயோகம் | 165 |
| இராகு அந்திரபலன் | 195 |
| இராசகுணாகாரம் | 210 |
| இலக்கினபாவம் | 94 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| இலக்கினபலன் | 98 |
| இராசிப்பலன் வாரப்பலன் முதலானவை | 89 |
| இலக்கினபாவம்செல்லவான் அழகுடையவன் | 107 |
| இலாபபலன் | 148 |
| ஈ | |
| ஈனயோகம்உயிர்ப்புயோகம் பரதேசயோகம் | 174 |
| உ | |
| உண்டிப்படலம் | 243 |
| உதயவலிது | 57 |
| உதயகவிப்பும்ராசிநோக்கும் | 61 |
| உதயவலிதும்கிரகவலிதும் | 62 |
| உபசரியோகம் கமலயோகம் | 160 |
| உபயோகம்வானயோகம் சமுத்திரயோகம் | 162 |
| உபநயனம் | 235 |
| ஊ | |
| ஊடலும்உவகையும் | 248 |
| ஊட்டினூர்உண்கலம் உணவின் விகற்பம் | 243 |
| ஊர்வன தாழ்வன நடப்பன கிடப்பன | 75 |
| ஊனயோகம் | 145 |
| எ | |
| எட்டாமிடம்பலன் | 104 |
| எட்டாம்பாவம் | 132 |
| எதிர்க்கயிறு | 60 |
| ஏ | |
| ஏழாமிடப்பலன் | 103 |
| ஏழாம்பாவம் | 121 |
| ஐ | |
| ஐந்தாமிடப்பலன் | 102 |
| ஐந்தாம்பாவம் | 117 |
| ஒ | |
| ஒன்பதாமிடப்பலன் | 104 |
| ஒன்பதாம்பாவம் | 135 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| ஓ | |
| ஓரறிவாதிய சீவன்கள் | 74 |
| ஔ | |
| ஔஷதசித்தி | 181 |
| க | |
| கடகயோகம்கலமாங்சயோக | 174 |
| கணப்பொருத்தம் | 80 |
| கணிதப்படலம் | 25 |
| கத்திரியோகம் கணயோகம் | 171 |
| கருவி அறியும்படி | 70 |
| கலியுகவருடம் சென்றதறிய | 20 |
| களத்திரம் இளத்திருப்பள் சோரஸ்திரீ சோரநாயகர் | 129 |
| கற்பு, கற்பின்மை அன்பின் | 247 |
| கனவின் விகற்பம் | 245 |
| கனுப்படலம் | 245 |
| கா | |
| காதம் அறியும்படி | 65 |
| காதுகுத்த | 231 |
| காமப்படலம் | 247 |
| காமாதிபஞ்சக்கிரகநிலையறியும்படி | 54 |
| காலசக்கரப்படலம் | 224 |
| காலசக்கரப்பலன் | 227 |
| கால் அறியும்படி | 58 |
| கி | |
| கிரகபலன் | 123 |
| கிரகபலன்சவுபாக்கியபலன் | 124 |
| கிரகபலன் | 154 |
| கிரகத்துக்கு கிரணம் அறியுப்படி | 158 |
| கிரகதுணுகாரம் | 210 |
| கிரக உரிச்சொல் | 11 |
| கிரகவடிவம் கதிரும் அறியும்படி | 64 |
| கு | |
| குஜன் அம்சிசம புதன் அம்கிசம் | 156 |

பொருள் பக்கம்

குஜன் அந்திரபலன் 195
குருபலன் தர்மபலன் 139
குருஅம்சம் சுக்ரனம்சம் 157
குரு அந்திரபலன் 196
குருவுக்கு சட்பூசை 48
குருபுத்திரனும் குருபுத்திரனல்லாமையும் 116
குலம் அறியும்படி 63

கூ

கூடயோகம் சூலயோகம் உபயோகம் 117
கூறைஉடுக்க பூஷணம்பூண 236

கெ

கெடுதிநிலை அறியும்படி 67
கெடுதிநிலை அகத்திற் குறிக்கும் அடைவு 67
கெடுதிசேரும் காலவளவும் கெடுதியான சாமமுதலிய 68
கெடுதிசேரும் காலவளவு 69

கே

கேது அந்திரபலன் 197
கேந்திரங்களும் கேந்திரக்களால் சொல்வனவும் அறியும்படி 58

ச

சகடயோகம் 170
சகோதரமின்மை சகோதரமடிவு 111
சகோதரலாபம் ஆண்சகோதரம் சகோதரசங்கை 111
சக்கரயோகம் அலகையோகம் 162
சங்கிராந்தி புருடலட்சணம் 37
சங்கிராந்திபுருடன் அவயவங்கள் 41
சடங்கப்படலம் 230
ஷட்வர்க்குப்படலம் 201

பொருள் பக்கம்

ஸ்திரீவிகற்பம் 247
ஸ்வயாங்கலக்கம் ஹோராலக்கம் நவாங்கலக்னம் துவாதசாங்கலக்கம் 201
சண்டாளயோகம் குமரகண்டயோகம் 173
சத்ருவின்மை பிணியின்மை 120
சத்துருவின்மை ஜேஷ்டனுக்கும் பிதுருவுக்கும் சத்துருத்துவம் 120
சற்கருமம் 140
சத்கருமவிகற்பம் 141
சந்திரயோகம் கந்தர்வயோகம் 163
சமாவர்த்தனம் 236
சவுளம் 233
சனிக்குத் திரிபூசையும் சட்பூசையும் 50
மேற்படி சட்பூசை 50
மேற்படி பூசைகளின்சோதனை 51
சனிஅம்சம் அம்சம் பார்க்கும்வகை 157
சனி அந்திரபலன் 196

சா

சாமுத்திரியோகம் 172
சாரநிலை அறியும்படி 42
ஜாதகப்படலம் 94

சீ

சீமந்தம் 92
சீமான்குணரூபமுதலியன 108
சீவதாது 75
சீவன்பலன் 141
சீவனகாலம் 147

சு

சுக்கிரனுக்குத்திரிபூசையும் சட்பூசையும் 49
சுக்கிரன் அந்திரபலன் 198
சுத்ததினம் எடுக்கும்படி 20
சுவைமறு அறியும்படி 66

| பொருள் | பக்கம் |
|---|---|
| சுரிகைப்படலம் | 249 |
| சுரிகை பின்னுபின்னங்கள் | 249 |
| சோ | |
| சோபனமுகூர்த்தம் | 86 |
| சோரஸ்தானம் | 130 |
| த | |
| தசப்பொருத்தத்தில் தினப் பொருத்தம் | 80 |
| தரித்திரம்ஆயுதம் அக்கினி இவற்றால்வாதைப்படுவன் பரிகொடுப்பன் குருபுத்திரன் | 97 |
| தறிக்கால் இராசிநிலை அறியும்படி | 229 |
| தனப்பிராப்திவாகனம் | 111 |
| தனப்பிராப்தி இன்மை தனப்பிராப்தி ஆயுரு ஈனகளத்திரம் | 128 |
| தா | |
| தாதுமூலசீவன்கள் அறியும்படி | 70 |
| தானியம் செல்விட | 243 |
| தி | |
| திதி அறியும்படி | 28 |
| திதி விஷகடிகை | 31 |
| திதிப்பலனும் இராசிப்பலனும் | 88 |
| திபாகி | 154 |
| திரிச்சங்கடயோகம் சத்தியோசம் | 170 |
| திரிங்சாங்சலக்னம் | 202 |
| திரிகோணசோதனையும் ஏகாதிபத்தியசோதனையும் | 208 |
| திரேகாணலக்னம் | 201 |
| தீ | |
| தீட்சை | 238 |
| தீர்க்களத்திரம் களத்திரத்தினல் திதிநிட்சேபலாபம் | 122 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| தீர்க்காயுசு தன்மை | 132 |
| து | |
| துரதுராயோகம் சுனபயோகம் அசுவயோகம் இராஜயோகம் | 161 |
| தே | |
| தெருட்சிப்படலம் | 87 |
| ந | |
| நடுக்சந்தாயமும் கடைக்கந்தாயமும் | 36 |
| நடப்பன பறப்பன தவழ்வன | 59 |
| நட்சத்திர உரிச்சொல் | 8 |
| நட்சத்திர விஷகடிகை | 29 |
| நட்சத்திர அமிர்தகடிகை | 32 |
| நட்பாட்சியுச்சம் பகைநீசம் | 55 |
| நட்சத்திர பலன் | 87 |
| நஷ்டசாதகம் | 98 |
| நரவாகனப்ராப்தம் | 122 |
| நல்லபுத்திரிபுத்திரர்களைப் பெறுவள் பதிவிரதை | 127 |
| நவயோசம் தர்மயோசம் பாசயோகம் | 165 |
| நவபோசனம்பண்ண கதிர றுக்க | 242 |
| நவதானியம் கட்டிவைக்க | 242 |
| நா | |
| நாசயோசம் மசாகெதா யோகம் | 173 |
| நாமகரணம் | 230 |
| நான்காம் இடப்பலன் | 101 |
| நான்காம்பாவம் | 118 |
| நி | |
| நிர்பாக்கியன்நேத்திரரோகி | 509 |
| நிவாசஸ்தலம் | 133 |
| நோ | |
| நோக்கினியல்பு | 62 |
| நோக்குதிசை | 62 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| **ப** | |
| பகல்நாழிகை அறியும்படி | 13 |
| பஞ்சபூதப்படலம் | 74 |
| படைவரவுப்படலம் | 250 |
| படைவரத்தினிடம் | 250 |
| பட்டாபிஷேகம் | 239 |
| பணிவிகற்பம் | 71 |
| பதினோராம்பாவம் | 148 |
| பதினோராமிடப்பலன் | 105 |
| பவுஷ்டிகம் கெஜசாந்தி | 238 |
| பனிரெண்டாம்பாவம் | 154 |
| பனிரெண்டாமிடப்பலன் | 106 |
| பர்வதாரோகணம் சிரோவியாதி பரிமளாதிவஸ்திரகிரய விக்கிரயங்களாற் சீவனம் பாபிசாஸ்திரி | 132 |
| **பா** | |
| பாக்கியபலன் | 135 |
| பால்லியத்திலே மாதாமரணமும் அதற்குக் காலமும் | 115 |
| பாவபலன் | 107 |
| **பி** | |
| பிணிதுர்க்கருமம் சிறைபாக்கினை தரித்திரம் | 96 |
| பிணியோகம் கோமூத்திரீயோகம் | 173 |
| பிதாபலன் புத்திரபலன் விவேகபலன் | 117 |
| **பு** | |
| புஷ்களயோகம் | 158 |
| புணர்ச்சி | 91 |
| புதன் அந்திரபலன் | 197 |
| புதனுக்குத் திரிபூசை | 47 |
| புதனுக்கு சட்பூசையும் குருவுக்குத் திரிபூசையும் | 48 |
| புத்திராட்டி களத்திரத்தின் சாதி | 123 |
| புத்திராட்டி | 124 |
| புத்திராட்டி தத்தபுத்திருடையவள் மிருகரூபமான புத்திரரைப்பெறுவது | 127 |
| புத்திரஆனி பத்தாமாணம் | 123 |
| புத்திராதிய அரிஷ்டம் | 180 |
| **பூ** | |
| பூததரிசனம் | 240 |
| **பெ** | |
| பெண்சகோதரம் | 110 |
| பெண்சகோதரம சகோதரமின்மை | 112 |
| **போ** | |
| பொதுப்படலம் | 57 |
| பொன்னைஞாண் | 232 |
| பொன்னேர்பூட்ட | 240 |
| பொன்னேர்பூட்ட எருவிடவிதைவிதைக்க | 241 |
| **ம** | |
| மகப்பேறு | 62 |
| மகாதிசைப்படலம் | 191 |
| மங்கிலியப்பொருத்தம் | 77 |
| மச்சினன் மாமிமரணமும் அதற்குக்காலமும் பிதாவுக்கு முன் மாதாவும் மாதாவுக்குமுன் பிதாவும் மரணம் | 115 |
| மதி அந்திரபலன் | 194 |
| மாணதிச்கு | 134 |
| மாணயேது | 182 |
| மறுவின்வலமிடமும் விலங்கின் கொம்பும் | 66 |
| மறுமைப்பலன் | 191 |
| மகேந்திரப்பொருத்தமும் ஸ்திரீதீர்க்கமும் | 81 |
| **மா** | |
| மாதா பிதா அனுகூலமாயிருக்க | 114 |
| மாதருபலன் | 113 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| மாரியளவு | 34 |
| மாரிதோற்றமும் வரவும் | 35 |
| மானுயோகம் கேசரியோகம் | 161 |
| மு | |
| முகூர்த்தப்படலம் | 76 |
| மூ | |
| மூலவர்க்கம் | 72 |
| மூலதாது அறியும்படி | 73 |
| மூன்றுமிடப்பலன் | 100 |
| மூன்றும்பாவம் | 101 |
| மே | |
| மேகவிகற்பம் | 34 |
| யா | |
| யாத்திரைப்படலம் | 253 |
| யாத்திரையும் யாத்திரையின் விகற்பமும் | 253 |
| யாத்திரைக்குத் தடையும் தடையின்மையும் | 254 |
| யாத்திரை செல்சாலம் | 254 |
| யாத்திரைச்கு நட்சத்திரம் | 256 |
| யாத்திரைக்கு திதிபட்சம் | 257 |
| யாத்திரைச்கு வாரபட்சணம் திக்குபட்சணம் காலபட்சணம் | 257 |
| யாத்திரை காலதோஷ நிவர்த்தி | 258 |
| யு | |
| யுகவருடம் அறியும்படி | 19 |
| யோ | |
| யோககாரணங்கள் அறியும்படி | 28 |
| யோகப்படலம் | 159 |
| யோக்கியாதிசலை | 25 |
| யோனிப்பொருத்தம் | 81 |
| யோனிப்பொருத்தமும் இராசிப்பொருத்தமும் | 82 |
| ரூ | |
| ரூபகளத்திரம் | 121 |
| வ | |
| வஜ்ரயோகமும் முசலகர்மயோகம் நளயோகம் சசியோகம் | 160 |
| வமிசட்சயயோகம் | 172 |
| வயதறியும்படி | 95 |
| வருடப்பிறப்பு | 33 |
| வனசஞ்சாரி | 133 |
| வா | |
| வாக்கியத்துருவம் | 23 |
| வாசியோகம் | 159 |
| வி | |
| வித்தியாரம்பம் | 234 |
| விபசாரத்தாற் சீவனம் | 131 |
| விபயமும் முதற்கந்தாயமும் | 36 |
| விரயபலன் | 155 |
| விருட்சப்பொருத்தம் | 85 |
| விவாகச்சக்கரம் | 87 |
| விநாசமின்மை களத்திரம் | 126 |
| வினவினது கைகூடும் காலம் | 66 |
| வே | |
| வேசியோகம் | 159 |
| வேதைக்கயிறு | 84 |
| வை | |
| வைதவ்வியள் பதிவிரதை | 130 |


பொருள் அட்டவணை முற்றிற்று.

# சிறந்த தமிழ் நூல்களின் விளம்பரம்

சுப்பிரமணியர் அகஸ்தியருக் குபதேசித்த

**கந்தர் நாடி சோதிடம்** விலை அணா 10.

இச்சோதிட புஸ்தகத்தின் அருமை அறிந்தவரே அறிவர் இதில் பன்னிரெண்டு வருஷராசிகளின் சக்கரங்களும், ஜாதகனுக்குப் பரிகாரம், தின பலன், லக்கினம் பலன்களும் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு ராசிக்கும் சக்கரம் கணிக்கப்பட்டு, அதன் பலனையும், மற்றும் பல விஷயங்களையும், தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சோதிடர்கள் மனப்பாடம் செய்தற் குறிய பல பாடங்கள் இதிலிருக்கின்றன.

**சொர்ப்பன சாஸ்திரம்** விலை அணா 12.

புதிய முறையில் எழுதப்பட்டது 216-பக்கங்கள் கொண்டது.

சொர்ப்பனங்களின் பலா பலன்களை அறிய இனி நீங்கள் எவரையும் தேடிச் செல்ல வேண்டியதில்லை. இந்த நூல் ஓர் அகராதிபோல் „அ" விலிருந்து ஆரம்பிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது. சாதாரணக் கல்வியறி வுள்ளவர்களும் சிறிதும் கஷ்டமின்றி எவ்விதச்சொர்ப்பனத்துக்கும் பலன் கூறலாம்.

**சோதிட அரிச்சுவடி** விலை ரூ. 1.

4-பாகக் கட்டிடம்

ஒருவருதவியு மில்லாமல் சோதிடத்தை நீங்களே சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம். ஜாதகங்கள் ஸ்புடமும் செய்யலாம். சோதிட சாத்திரத்தி லுள்ள எல்லாவிதக் கலை நுட்பங்களையும் தெரிந்துகொள்ளலாம். எல்லோரும் தெரிந்துகொள்ளும்படிச் சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

**அனுபோக ஜாதக ரகசியம்** விலை ரூ. 1.

முதல்பக்கம் கிரகசார சக்கரத்துடனும் இந்த ஜாதக ரகசியத்தை ஜோசியர்களும் சாதாரணமானவர்களும் சுலபமாக தெறிந்துக்கொள்ளுதற் காக ஜாதகம் கணிக்கவும், ராசி கணிக்கவும், அஷ்டவர்க்கம் கணிக்கவும், கோசாரம், பன்னிரு பலாபலன்களும், திசாபுத்தி அந்தர பலன்களும் கண்ணாடிபோல் விளக்கி எழுதி யிருக்கிறது. இந்த ஒரு புத்தகமே ஜோதிடத் திற்குப் போதுமானது.

**B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**

நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

ஜைனபா முனிவர் அருளிச்செய்த

## சினேந்திரமாலை, மூலமும்-உரையும் விலை ரூ 1.

இவ்வரிய சோதிடநூல் சோதிடருக்கு இன்றியமையாதது.

இதில் காண்டப் பொழிப்பு, கவிப்பிற்கெதிரிடை, இராசிகளுடைய கோட்களுடையதும் ஆகிய விழிப்புக்காலம், இராசிகளின் நோக்கம் கோட்களின் நோக்கம், நட்புக்கோட்கள், நட்பு உச்ச இராசிகள், கோட்களின் விரிவு, இராசிகளின திக்கு, திறம், குலம், வடிவு, தினகால கணிதம், வருஷாதி கால கணிதம், ஆரூடச்சக்கரம், சாம கோட்களின் ஆரூடச்சக்கரம், கரைத்துரை கோட்கள் சக்கரம் வாரச் சக்கரங்கள், மங்களவாரச் சக்கரங்கள் முதலிய வாரச்சக்கரங்களும், இவ், காலே சக்கரங்களும் அடங்கி யிருப்பதுடன், தாது காண்டம, மூலகாண்டம், சீவகாண்டம், சிந்தனைகாண்டம நலந் தீங்கு காண்டம் பிணிக்காண்டம், மரணகாண்டம உண்டிகாண்டம், கனவு காண்டம், சகுனகாண்டம், மங்களகாண்டம், காமகாண்டடம், மகம் மேரு காண்டம், சுரிகை காண்டம், சல்லியகாண்டம், கீழ் நீரகாண்டம், மரக்கால் வரவு காண்டம், முதலிப பல காண்டங்களா[illegible] வசனங்களாகவும் இருக்கின்றன.

## சோதிட பிரஞ்ஞானதீபிகை விலை ரூபா—2.

இந்நூலானது லக்னமுதல் 12-பாவங்களுக்கு முள்ள [illegible] களைச் சோதிஷம் அறிந்தவர்க்கும் அறியாவதர்க்கும் எளிதில் [illegible] இக் காட்டக்கூடிய ஒரு வசனநூலாக இருக்கிறது. இந்நூல் [illegible] வொரு மனிதரிடத்திலு மிருந்தால் அவரவர் வாழ்நாட்களில் [illegible] நன்மை தீமைகளைச் சுலபமாய்ச் சோதிடர்கள் உதவி யில்ல[illegible] அறிந்து கொள்ளலாம்.

## சாதகாலங்காரம் மூலமும்—விரிவுரையும் விலை ரூ[illegible]

பதினெண் மகரிஷிகளால் திரிகால வர்த்தமானங்களையு[illegible] ரும்படி சொல்லியருளிய சோதிட சாஸ்திரத்தினின்றும் சார[illegible] ராகிய கீரனூர் நடராஜரால் அருளிச்செய்யப்பட்ட சாதகால[illegible] என்னும் இவ்வரிய கிரந்தத்தை எல்லா ஜாதகாபிமானிகளு[illegible] வார்களானலும், இந்நூல் மூலபாடமா யிருப்பதால் தக்க வி[illegible] யொன்று வெளிப்படாமலிருந்தது யாவருக்கும் பெருங் [illegible] யிருந்தது. ஆனதுபற்றிச் சிலரின் வேண்டுகோளால் வி[illegible] டா. வடிவேலு முதலியாரவர்களால் இதற்கோர் விரிவுரை [illegible] பட்டுச், சுத்தமாய் அச்சிடப்பட்டிருக்கிறது.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ, 41, வெங்கடராமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை

## சிகிச்சாரத்ந தீப[illegible] விலை ரூ. 3-0.

[வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியது. வாலையந்திரப் படங்களுடன்]

இந் நூலாசிரியரான C. கண்ணுசாமிப் பிள்ளை யவர்கள் தென்னாடு முதல் வடநாடு வரையிலும் அனுசரித்து வரும் அரிய பெரிய பாகங்களையும், யூனானி வைத்திய முறைகளையும், பெரும் பொருள் செலவிட்டு முடித்துப் பயன் பெற்றவைகளாயுள்ள பாகங்களை யெல்லாம் ஒருங்கு தொகுத்து ஒவ்வொருவரும் எளிதில் உணரும் வண்ணம், தேக பஞ்ச பூதம், நாடி, ரோகநிதானம், செய்பாக விளக்கம், கியாழம், சூர்ணம், மாத்திரை, மெழுகு, லேகியம், கிருதம், செந்தூரம், பற்பம், தீநீர், திராவகம், ஆசவம், அரி[illegible]ம், பத்தியம் இன்னும் பல பாகங்களையும் இலட்சணங்களாக வ[illegible]ளார். இந்நூல் வைத்தியத் தொழிலைக் கற்க விரும்பும் மா[illegible]ளுக்கும் வைத்தியர்களுக்கும் மற்ற வனையோருக்கும் பெரும் நன்மையைத் தரத்தக்க தென்பது எவருமறிந்த உண்மை.

சிகிச்சாரத்ந தீபம் இரண்டாம் பாகமாகிய

## வைத்திய சிந்தாமணி விலை ரூ. 2-0.

[வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியது]

இந்த "வைத்திய சிந்தாமணி" என்னும் நூலானது பூர்வாசிரியர்களில் ஒருவராகிய பூகிமாமுனி என்பவரால் கூறப்பட்டது. இதனில் ரோக நிதானங்களை எறக்குறைய கூறி யிருப்பதினால் [illegible] ஆதாரவாகக் கொண்டு வசன காவியமாக எழுதினது மல்லாமல், சில இடங்களில் சமயத்திற் கேற்றவாறு மற்றும் சில கிரந்தங்களினின்று சிலது சேர்க்கப்பட்டும் ஒவ்வொரு ரோகங்களின் இறுதியில் ஆங்கிலேய மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள ரோக நிதான விஷயங்களை மதாந்தர மாசவும், அமைத்துக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு சிகிச்சைகளையும் சேர்த்து அநேக அருமை வாய்ந்த முறைகளுடன் எழுதப்பெற் றிருக்கின்றது.

## கண்ணுசாமியம் என்னும்

## வைத்திய சேகரம் விலை ரூ. 1-8

வைத்திய வித்வன்மணி C. கண்ணுசாமிப் பிள்ளை யவர்கள் தமது பெயர் உலகில் எக்காலத்தும் நிலைபெறுமாறு பரம ரகசியமாக தான் கையாண்டு வந்த பல அரிய பெரிய பாகங்களை யெல்லாம் சூரணம், மாத்திரை, லேகியம், எண்ணெய், தைலம், கிருதம், பற்பம், செந்தூரம், ஆக்கிரணம் முதலியவைகளை ஆங்காங்கு கைபாகம், செய்பாகம் முதலியவற்றுடன் எளிதில் உணரும்படி இப்புத்தகத்தில் எழுதியுள்ளார். இத்தகைய நூல் ஒவ்வொரு வைத்தியர்களுக்கும் மிக்க உதவியாக இருக்கு மென்பது திண்ணம்.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடாராமய்யர் தெரு, ஜீ. டி. சென்னை